முன்னுரை

எபிரெயருக்கு எழுதின நிருபத்தை வேதபண்டிதர்கள் வெகுவாய் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். வேத வாக்கியங்களெல்லாம் வேதஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. தெய்வீக அதிகாரத்தினாலேயே வேதவாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் தெய்வீக அதிகாரத்தை ஒரு சிலர் நம்புவதில்லை. இந்த நிருபம் தெய்வீக அதிகாரத்தோடு எழுதப்படவில்லையென்று அவர்கள் விவாதம்பண்ணுகிறார்கள்.

வேதாகமத்திலுள்ள எல்லா நிருபங்களும் தேவஆவியினாலேயே எழுதப்பட்டிருக்கிறது. எல்லா நிருபங்களுக்கும் தெய்வீக அதிகாரமுண்டு. எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் ஆரம்பம் முதல் முடிவு வரையிலும் தெய்வீக வெளிப்பாடு காணப்படுகிறது. ஆதித்திருச்சபையின் காலத்திலிருந்து, இக்காலம் வரையிலும், கிறிஸ்துவின் சபையார் எபிரெயருக்கு எழுதின நிருபத்தை, வேதாகமத்தில் ஒரு பகுதியாக அங்கீகரித்திருக்கிறார்கள். இதன் தெய்வீக அதிகாரத்திற்கு இதுவே பிரதான சான்று.

எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் ஆசிரியர் யார் என்று தெளிவாகத் தெரியவில்லை. மற்ற நிருபங்களில் உள்ளதுபோல, இந்த நிருபத்தின் ஆரம்பத்தில், இந்த நிருபத்தை எழுதிய ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆகையினால் இந்த நிருபத்தின் ஆசிரியர் யாராகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்களுக்குள் கருத்து வேறுபாடுள்ளது. அப்போஸ்தலர் பவுலே இந்த நிருபத்தின் ஆசிரியர் என்பது பொதுவான கருத்து. இது அனைவராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆதித்திருச்சபையின் காலத்தில், அப்போஸ்தலர் பவுலே இந்த நிருபத்தை எழுதினாரென்று நம்பினார்கள்.

ஆதித் திருச்சபையில் யூதமார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் ஏராளமானோர் இருந்தார்கள். அது வரையிலும் யூதமார்க்கத்திற்கும், கிறிஸ்தவ மார்க்கத்திற்கும் அதிக வித்தியாசம் காண்பிக்கப் படவில்லை. யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவ மார்க்கத்தை தனியாகப் பிரித்து உபதேசம் பண்ண வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். கிறிஸ்துவின் விசுவாசிகளோ சுவிசேஷத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தைவிட கிறிஸ்துவின் சுவிசேஷமே மேன்மையானது என்பதை எபிரெயருக்கு எழுதின நிருபம் தெளிவுபடுத்துகிறது.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற யூதர்கள், கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வரவேண்டும். கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றவேண்டும். விசுவாசிகளுக்கு பாடுகளும், உபத்திரவங்களும் வந்தாலும், கிறிஸ்துவுக்குச் சாட்சியாக ஜீவிக்கவேண்டும்.

எபிரெயருக்கு எழுதின நிருபத்தில் பல சத்தியங்கள் புரிந்துகொள்வதற்கு கடினமாகயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் கடினமான சத்தியங்களையும் நாம் புரிந்துகொள்ள முடியும். ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறவர். கடினமான சத்தியங்களைப் புரிந்துகொள்ளும்போது, அது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகுந்த ஆசீர்வாதமாகயிருக்கும்.

1 அதிகாரம்

நியாயப் பிரமாணத்தின் காலத்திற்கும், சுவிசேஷத்தின் காலத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசம் தெளிவுபடுத்தப்படுகிறது (எபி 1:1-3). இயேசுகிறிஸ்துவுக்கும் தேவதூதருக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது (எபி 1:4-14).

பூர்வகாலங்களில்
எபி 1:1

எபி 1:1. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன்,

பூர்வகாலங்கள் என்பது பழைய ஏற்பாட்டுக்காலத்தைக் குறிக்கிற பொதுவான வார்த்தை. எபிரெயருக்கு எழுதின நிருபத்தின் ஆசிரியர் சுவிசேஷத்தின் காலத்திற்கும், நியாயப்பிரமாணத்தின் காலத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைத் தெளிவு படுத்துகிறார். நியாயப்பிரமாணத்தின் காலத்தைவிட, சுவிசேஷத்தின் காலமே மேன்மையானது என்றும், மகிமை நிறைந்தது என்றும் உறுதிபண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் தம்மையும் தம்முடைய சித்தத்தையும் மனுஷருக்கு வெளிப்படுத்தினார். தம்முடைய மனதிலுள்ளதையும், விருப்பத்தையும் ஜனங்களுக்கு சொல்லுவதற்கு, தேவன் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தீர்க்கதரிசிகளைப் பயன்படுத்தினார். தீர்க்கதரிசிகள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். தேவனே அவர்களைத் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு தகுதிப்படுத்தினார். தேவனுடைய சித்தத்தை மனுஷருக்கு வெளிப்படுத்துவதே தீர்க்கதரிசன ஊழியம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து தீர்க்கதரிசிகள், பிதாக்களுக்கு, தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தினார்கள். "பிதாக்கள்" என்னும் வார்த்தை பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த ஜனங்களைக் குறிக்கிற பொதுவான வார்த்தையாகும். பழைய ஏற்பாட்டுக்காலத்து தீர்க்கதரிசிகள் பிதாக்களுக்கு, பங்குபங்காகவும், வகைவகையாகவும், தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தினார்கள்.

"பங்குபங்காகவும்" என்னும் வார்த்தைக்கு வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு விதங்களில் என்று பொருள். பழைய ஏற்பாட்டில் வெவ்வேறு காலங்கள் உள்ளன. முற்பிதாக்களின் காலம், நியாயாதிபதிகளின் காலம், இராஜாக்களின் காலம் என்பவை அவற்றில் சில. இந்தக் காலங்களில் தேவன் தம்முடைய சித்தத்தை, பங்குபங்காகவும், வகைவகையாகவும், தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக அக்காலத்து ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். மீட்பரைப்பற்றிய சத்தியத்தை கொஞ்சம் கொஞ்சமாக தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார்.

"வகை வகையாகவும்" என்னும் வார்த்தைக்கு "வெவ்வேறு விதமாக" என்று பொருள். தேவன் எல்லா ஜனங்களிடம் ஒரே மாதிரியாகவும், ஒரே விதமாகவும் தம்முடைய சத்தியத்தை வெளிப்படுத்துவதில்லை. அவர் பல்வேறு வழிகளை கடைப்பிடிக்கிறவர். தம்முடைய சித்தத்தை தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப்படுத்தும்போது, தமக்குப் பிடித்தமான வழியில் அதை வெளிப்படுத்துகிறார். வகைவகையாக வெளிப்படுத்துகிறார்.

இந்தக் கடைசி நாட்களில் எபி 1:2

எபி 1:2. இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

புதிய ஏற்பாட்டுக்காலம், "இந்தக் கடைசிநாட்கள்" என்று அழைக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்திலும், தேவன் தம்முடைய மனதையும், சித்தத்தையும் தம்முடைய ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்திலுள்ளவர்கள் புதிய வெளிப்பாடுகள் எதையும் எதிர்பார்க்கக்கூடாது. தேவனைப்பற்றிய வெளிப்பாடு ஒன்றுதான். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அவர் தம்மைப்பற்றி வெளிப்படுத்திய அதே சத்தியத்தைத்தான், புதிய ஏற்பாட்டுக்காலத்திலும் வெளிப்படுத்துகிறார்.

ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை, இன்னும் அதிகமாகவும், தெளிவாகவும் புரிந்துகொள்வதற்கு, நமக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவி கிடைத்திருக்கிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நமக்குக் கிடைத்திருக்கிற தெய்வீக வெளிப்பாடு இறுதியானது. இதற்குமேல் அதிகமான வெளிப்பாடு எதுவும் கொடுக்கப்படாது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் தம்முடைய சித்தத்தை தீர்க்கதரிசிகள் மூலமாக பிதாக்களுக்குத் தெரியப்படுத்தினார். புதிய ஏற்பாட்டுக்காலத்திலுள்ள நமக்கோ, தேவன் தம்முடைய சித்தத்தை, தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய், வெளிப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்களுக்கு, தேவனைப்பற்றிய வெளிப்பாட்டை, இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பெற்றுக்கொள்கிற சிலாக்கியம் கிடைக்கவில்லை. இந்த சிலாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கிற நமக்கோ கிறிஸ்துவானவர் அனுப்பப்பட்டிருக்கிறார். அவர் பிதாவின் செய்தியோடு நம்மிடத்தில் வந்திருக்கிறார்.

பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை சர்வத்திற்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். நம்முடைய கண்களால் காணமுடிகிறவை, காண முடியாதவை ஆகியயெல்லாவற்றையும் தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டே உண்டாக்கினார். வானங்களையும் பூமியையும் பிதாவானவர் கிறிஸ்துவைக்கொண்டே உண்டாக்கினார்.

பிதாவானவர், இயேசுகிறிஸ்துவைக் கொண்டே பழைய சிருஷ்டியையும், புதிய சிருஷ்டியையும் உண்டாக்கினார். பிதாவானவர் பழையதையும் புதியதையும் இயேசு கிறிஸ்துவைக்கொண்டே ஆளுகை செய்கிறார். இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தையின் வல்லமையினால், பிதாவானவர் சர்வகாரியங்களையும் தாங்குகிறார். சர்வ சிருஷ்டியின் பாரமும் இயேசுகிறிஸ்துவின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவரே சர்வசிருஷ்டிகளையும் ஆதரிக்கிறவர், பாதுகாக்கிறவர், பராமரிக்கிறவர். சர்வமும் கிறிஸ்துவின் ஆளுகைக்குட் பட்டிருக்கிறது. கிறிஸ்துவே சர்வத்திற்கும் சுதந்தரவாளியாகயிருக்கிறார்.

மகிமையின் பிரகாசம் எபி 1:3

எபி 1:3. இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.

இயேசுகிறிஸ்துவினுடைய ஆள் தத்துவத்தின் மகிமையை அப்போஸ்தலர் தெளிவுபடுத்துகிறார். இவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன். குமாரனாகிய இயேசுகிறிஸ்து, பிதாவினுடைய மகிமையின் பிரகாசமாகவும், அவருடைய தன்மையின் சொரூபமாகவும் இருக்கிறார். பிதாவின் சுபாவம் குமாரனிடத்தில் எவ்வித மாற்றமும் இல்லாமல், அப்படியே காணப்படுகிறது. குமாரனுடைய ஆள்தத்துவம் பிதாவினுடைய மகிமையாயிருக்கிறது. குமாரனிடத்தில் பிதாவினுடைய மகிமை பிரகாசிக்கிறது. அவருடைய தெய்வீக தன்மையின் சொரூபமாக குமாரன் விளங்குகிறார். பிதாவினிடத்தில் இருப்பதுபோலவே, குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் தெய்வீக தன்மை பரிபூரணமாக விளங்குகிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய ஆள்தத்துவத்தில் தெய்வத்துவமுள்ளவராக இருக்கிறார். அவர் தம்மை மாம்சத்தில் வெளிப்படுத்தினார். குமாரனுடைய ஆள்தத்துவம் பிதாவினுடைய சாயலுக்கும், ஆள்தத்துவத்திற்கும் ஒத்திருக்கிறது. வல்லமை, ஞானம், நன்மை ஆகியவற்றை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் தாங்கிக் கொண்டிருக்கிறார். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற நாமும், வல்லமையையும், ஞானத்தையும், நன்மையையும் தரித்துக்கொள்ளவேண்டும். குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவின் வல்லமையைப் பெற்றிருப்பது அவருடைய ஆள்தத்துவத்தின் மகிமையாயிருக்கிறது. தெய்வத்துவத்தின் பரிபூரண அம்சம் கிறிஸ்து இயேசுவுக்குள் வாசமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவினுடைய ஆள் தத்துவத்தில் தேவனுடைய மகிமை வெளிப் படுகிறது. அவருடைய மகிமையோடு, அவருடைய கிருபையும் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகிறார். தம்முடைய பாடுகளின் மூலமாய், இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணியிருக்கிறார். மனுக்குலத்தின் பாவங்களை நீக்குவதற்கு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே, பாவநிவாரணபலியாக மரித்தார். இயேசுகிறிஸ்துவின் பலியில் பிதாவாகிய தேவன் பூரண திருப்தியடைந்திருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்மாலே தாமே, நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணியிருக்கிறார். பாவத்திற்கு நிவாரணத்தை உண்டு பண்ணியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும் நிவாரணமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஆள்தத்துவத்திலும், சுபாவத்திலும் மகிமை நிறைந்தவர். ஆனாலும் பாடுகளை அனுபவிக்க தம்மையே ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

மனுஷருடைய பாவங்களினிமித்தமாய், ஒரு பாவமும் செய்யாத கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்தார். வேதனைகளை அனுபவித்தார். தம்முடைய திருஇரத்தத்தைச் சிந்தினார். கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்து அனுபவித்த பாடுகளும் அவருக்கு மகிமையாயிற்று. அவர் தம்நிமித்தமாக பாடுகளை அனுபவியாமல், மனுக்குலத்தின் பாவங்கள் நிமித்தமாக பாடுகளை அனுபவித்தார்.

இயேசு கிறிஸ்துவினுடைய பாடுகளினிமித்தமாய் தேவனுடைய மகிமை அவருக்குள் வெளிப்படுகிறது. அவருடைய பாடுகளின் மகிமையை நாம் தியானிக்கும்போது, அவர் உயர்த்தப்பட்டதினால் அவருக்கு உண்டாயிருக்கிற மகிமையையும் தியானிக்கவேண்டும். தெய்வத்துவமுள்ள இயேசுகிறிஸ்து, மனுஷரூபமெடுத்தார். இந்தப் பூமியில் பாடுகளை அனுபவித்தார். தாம் நிறைவேற்ற வேண்டிய ஊழியத்தை இந்தப் பூமியில் முடித்த பின்பு, அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்போது உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்.

இந்தக் கடைசி நாட்களில் பிதாவாகிய தேவன், மனுக்குலத்தோடு பேசுவதற்கு, தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே தெரிந்தெடுத்திருக்கிறார். இந்தக் கடைசி நாட்களில் பிதாவானவர், குமாரனாகிய கிறிஸ்து மூலமாக மாத்திரமே, நம்மோடு தம்முடைய சித்தத்தைப் பகிர்ந்து கொள்கிறார். இதனால் சுவிசேஷத்தின் காலம் மேன்மையுள்ளதாகவும், மகிமையுள்ளதாகவும் இருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் காலத்தைவிட, சுவிசேஷத்தின் காலம் உன்னதமானது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் மனுக்குலத்தோடு பேசினார். இக்கடைசி நாட்களில், சுவிசேஷத்தின் காலத்தில், பிதாவானவர், தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நம்மோடு பேசுகிறார்.

தேவதூதரைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவரானார் எபி 1 : 4-7

எபி 1:4. இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.

எபி 1:5. எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?

எபி 1:6. மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்.

எபி 1:7. தேவதூதரைக்குறித்தோ: தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது.

குமாரனாகிய இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டுக்காலத்து தீர்க்கதரிசிகளைவிட மேன்மையுள்ளவர். அவர்களைவிட மாத்திரமல்ல, தேவதூதரைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவர். இயேசுகிறிஸ்துவின் சுபாவமும், ஊழியமும் தேவதூதரின் சுபாவத்தையும், ஊழியத்தையும்விட மேன்மையுள்ளது.

இயேசுகிறிஸ்துவின் மேன்மையான சுபாவம் அவருடைய விசேஷித்த நாமத்தினால் உறுதிபண்ணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் நாமமானது தேவதூதரின் நாமத்தைவிட மேன்மையுள்ளது. பரிசுத்த வேதவாக்கியங்களில் இயேசுகிறிஸ்துவின் நாமம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் தேவதூதரைப் பார்க்கிலும் விசேஷித்த நாமத்தை சுதந்தரித்துக்கொண்டார். பரிசுத்த வேதாகமத்தில், ஏராளமான வசனங்கள், இயேசுகிறிஸ்துவின் சுபாவத்தையும் ஊழியத்தையும் பற்றி மேன்மையாகச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட மேன்மையான வார்த்தைகள் தேவதூதருக்குச் சொல்லப்படவில்லை.

"நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" (சங் 2:7) என்று பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சி கொடுக்கிறார். இப்படிப்பட்ட சாட்சி தேவதூதர்களில் யாருக்கும் சொல்லப்படவில்லை. இதனால் கர்த்தாகிய இயேசுகிறிஸ்து, தேவதூதரைப்பார்க்கிலும், விசேஷித்த நாமத்தை சுதந்தரித்துக்கொண்டார்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற இன்னும் அநேக வாக்கியங்கள், தேவதூதரைப்பற்றிச் சொல்லப்படவில்லை. "நான் அவருக்கு பிதாவாயிருப்பேன், அவர் எனக்கு குமாரனாயிருப்பார்" என்று பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரமே சொல்லுகிறார். இப்படிப்பட்ட விசேஷித்த வாக்கியத்தை அவர் தேவதூதர்களில் ஒருவருக்கும், ஒருபோதும் சொன்னதில்லை.

மேலும் பிதாவானவர், தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது "தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள்" என்று சொன்னார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே பிதாவாகிய தேவனுக்கு "முதற்பேறானவர்". அவர் "ஒரே பேறானவர்". இந்த வசனம் சங்கீதம் 97:7-ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "தேவர்களே நீங்களெல்லாரும் அவரைத் தொழுதுகொள்ளுங்கள்" (சங் 97:7).

மனுஷரில் சிலர் மற்ற மனுஷர்களை விட உயர்ந்தவர்களாயிருப்பார்கள். ஐசுவரியமுள்ள வர்களாகவும், அதிகாரமுள்ளவர்களாகவும், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்களெல்லோருமே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமைக்கும், சுபாவத்திற்கும் கீழானவர்கள். இவர்களெல்லோருமே கர்த்தரைத் தொழுதுகொள்ளவேண்டும்.

பிதாவானவர் தேவதூதரைப்பற்றிச் சொல்லும்போது "தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்" (எபி 1:7) என்று சொல்லுகிறார். ஆனால் பிதவானவர் குமாரனைப்பற்றிச் சொல்லும்போதோ, "தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது" (எபி 1:8) என்று சொல்லுகிறார்.

தேவன் தம்முடைய தூதர்களை காற்றுகளாக செய்கிறார். தம்முடைய ஊழியக்காரர்களை அக்கினி ஜுவாலைகளாகச் செய்கிறார். தேவதூதர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள். இவர்கள் தேவனுடைய சித்தத்தின்படியும், விருப்பத்தின்படியும், அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்ற தூதர்கள் எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். இதற்காகவே தேவன் அவர்களுக்கு வெளிச்சத்தையும் வைராக்கியத்தையும், ஆயத்தத்தையும், தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறார். தேவனுக்கு சந்தோஷமான காரியங்களை மாத்திரமே தேவதூதர்கள் செய்யவேண்டும். தேவனே இவர்களை சிருஷ்டித்தவர். ஆகையினால் தேவதூதர்கள் ஒருபோதும் தேவனைவிட மேன்மையானவர்களல்ல.

குமாரன்
எபி 1 : 8-12

எபி 1:8. குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

எபி 1:9. நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்றும்;

எபி 1:10. கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது;

எபி 1:11. அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழமையாய்ப்போம்;

எபி 1:12. ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது.

பிதாவானவர் தேவதூதரைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். வேதாகமத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி மகத்துவமான காரியங்கள் ஏராளமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு வேதத்திலிருந்து இரண்டு வசனப்பகுதிகள் மேற்கோளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. சங்கீதம் 45:6,7; 2. சங்கீதம் 102:25-27

"தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்; ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்" (சங் 45:6,7).

பிதாவானவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மெய்யான தெய்வத்துவத்தை அறிக்கை செய்கிறார். "தேவனே உம்முடைய சிங்காசனம்" என்னும் வாக்கியம் கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிதாவானவர் குமாரனை "தேவன்" என்று சொல்லும்போது, குமாரன் மெய்யான தேவனாகவே இருக்கிறார் (எபி 1:8).

குமாரனுடைய ராஜ்யத்தைப்பற்றியும் பிதாவானவர் சாட்சியாக அறிவிக்கிறார். குமாரனுக்கு ராஜ்யமும், சிங்காசனமும் உண்டு. அவருடைய ராஜ்யத்திற்கு செங்கோலும் உண்டு. அவருடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அநீதியிருக்காது. அக்கிரமம் இருக்காது. அது நீதியுள்ளதாகயிருக்கும். கண்ணியம் மிகுந்ததாகயிருக்கும்.

பிதாவானவர் குமாரனுடைய ராஜ்யத்தைப்பற்றிச் சொல்லும்போது, "உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்கு முள்ளது" என்று அறிக்கை செய்கிறார். கிறிஸ்துவின் ராஜ்யம் நித்தியமானது. அவர் நித்தியகாலமாக ஆளுகை செய்கிறவர். உலகப்பிரகாரமான ராஜ்யத்திற்கும் கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கும் வித்தியாசமுண்டு. அதுபோலவே கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கும், இப்பிரபஞ்சத்திலுள்ள சிங்காசனங்களுக்கும் வித்தியாசமுண்டு.

கிறிஸ்துவின் சிங்காசனம் நித்தியமானது, நிரந்தரமானது, என்றென்றைக்கு முள்ளது. இப்பிரபஞ்சத்தின் சிங்காசனங்களோ அநித்தியமானது, தற்காலிகமானது, ஒழிந்துபோகக்கூடியது. இப்பிரபஞ்சத்தின் சிங்காசனங்கள் தடுமாறும். சிங்காசனங்களுக்கு போட்டிகளும் பொறாமைகளும் உண்டாகும். இப்பிரபஞ்சத்தின் பலவான்களுக்குள் சிங்காசனங்களைப் பிடிப்பதற்காக சண்டைகளும் யுத்தங்களும் உண்டாகும். கிறிஸ்துவின் சிங்காசனமோ அவருக்கு மாத்திரமே உரியது. அது நித்தியகாலமாய் நிலைத்திருக்கக்கூடியது. அவருடைய ராஜ்யம் பரலோகத்தின் காலத்திலும் நிலைத்திருக்கும்.

பிதாவானவர் குமாரனுடைய ஆளுகையைப்பற்றி அறிக்கை செய்கிறார். அவருடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. அவர் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். நீதியாய் நடக்கிறவர். நீதியாய் நடப்பிக்கிறவர். அவர் நீதியான வழியில் தம்முடைய செங்கோலைப் பெற்றுக்கொண்டார். தாம் பெற்றுக்கொண்ட செங்கோலை நீதியுள்ள வழியிலேயே பயன்படுத்துவார். இயேசு கிறிஸ்து எல்லா நீதியையும் நிறை வேற்றுவதற்காகவே இந்தப் பூமிக்கு வந்தார். அக்கிரமங்களையும், மீறுதல்களையும், சாபங்களையும் ஒழிப்பதற்காக வந்தார். பாவத்தின் சாபத்தை நீக்குவதற்காக வந்தார். மனுஷரை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்காக வந்தார்.

குமாரனாகிய இயேசுகிறிஸ்து நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறார். பிதாவானவர் குமாரனை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார். இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராகயிருக்கிறார். பிதாவானவர் தாமே குமாரனாகிய கிறிஸ்துவை மத்தியஸ்த ஊழியத்திற்கு நியமித்திருக்கிறார். இந்த ஊழியத்தை அவருக்குப் பிரதிஷ்டை பண்ணி உறுதிசெய்திருக்கிறார். இயேசுகிறிஸ்து அபிஷேகம் பண்ணப்பட்டவர். "கிறிஸ்து" என்னும் பெயருக்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலிருந்த காலத்தில் அநேக பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தார். உபத்திரவங்களின் வழியாகக் கடந்து சென்றார். கல்வாரி சிலுவையில் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். குமாரனாகிய கிறிஸ்து பிதாவுக்கு பூரணமாய்க் கீழ்ப்படிந்தார். குமாரனுடைய பாடுகளினிமித்தமாகவும், வேதனைகளின் நிமித்தமாகவும் அவருக்கு சந்தோஷம் நியமிக்கப்பட்டிருக்கிறது. மகிமையின் கிரீடமும், சந்தோஷத்தின் கிரீடமும் கிறிஸ்துவின் சிரசின்மீது சூட்டப்பட்டது. மரணத்தின் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்தபின்பு, அவருக்கு மகிமையின் கிரீடம் சூட்டப்பட்டது.

பிதாவானவர் தம்முடைய குமாரனை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார். இயேசு கிறிஸ்துவின் அபிஷேகம், அவருடைய தோழரின் அபிஷேகத்தைவிட மேன்மையானது. கிறிஸ்துவின் அபிஷேகமே உன்னதமானது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்கிறவர்கள், அபிஷேகத்தின் ஒரு குறிப்பிட்ட அளவை மாத்திரமே பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பரிபூரணமாகப் பெற்றிருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இயேசுகிறிஸ்துவின்மீது, அளவில்லாமல், எவ்வித வரையறையுமில்லாமல், தாராளமாய் ஊற்றப்பட்டிருக்கிறது. பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, ஆனந்த தைலத்தினால், பரிபூரணமாக அபிஷேகம் பண்ணியிருக்கிறார்.

பிதாவானவர் இயேசுகிறிஸ்துவைப் பற்றி சொல்லியிருக்கிற சத்தியங்களை விவரிப்பதற்கு, எபிரெய நிருபத்தின் ஆசிரியர் சங்கீதம் 102:25-27 ஆகிய வசனங்களையும் இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார்.

"நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம்; அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை" (சங் 102:25-27).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சர்வவல்லமையுள்ளவர். இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டபோதும், அது தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் மாற்றப்பட்டபோதும், இயேசுகிறிஸ்துவின் சர்வ வல்லமை வெளிப்பட்டிருக்கிறது. இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டபோது, குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனோடிருந்தார். பிதவானவர் இந்தப் பூமியை சிருஷ்டித்தபோது, குமாரனும் தம்முடைய சர்வவல்லமையினாலே இந்தப் பூமியை சிருஷ்டித்தார். கிறிஸ்துவானவர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினார்.

இந்த உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே, குமாரனாகிய கிறிஸ்துவானவர் சர்வவல்லமையுள்ளவராகயிருந்தார். இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டபோது, இந்தப் பூமியை அஸ்திபாரப்படுத்தியபோது, கிறிஸ்துவின் சிருஷ்டிக்கும் வல்லமை கிரியை நடப்பித்தது. கிறிஸ்துவானவர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தியதோடு, வானங்களையும் சிருஷ்டித்தார். வானங்கள் கிறிஸ்துவினுடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது (எபி 1:10). வானங்களோடு, வானத்திலுள்ள சேனைகளும், தேவதூதர்களும் கிறிஸ்துவின் சிருஷ்டிப்பாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் எல்லா சிருஷ்டிகளையும்விட வல்லமையில் உயர்ந்தவராகயிருக்கிறார். அவரே சர்வவல்லமையுள்ளவர்.

கிறிஸ்துவானவர் தாம் சிருஷ்டித்த உலகத்தை மாற்றுகிறார். சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகம் அழிந்துபோகும். இயற்கையிலுள்ள எல்லா ஜீவராசிகளும் அழிந்துபோகும். இந்த உலகத்தில் பலவிதமான மாற்றங்கள் உண்டாகும். ஆனால் கர்த்தரோ நிலைத்திருப்பார். சிருஷ்டிக்கப்பட்டதை யெல்லாம் வஸ்திரம்போல பழமையாய்ப்போம் (எபி 1:11). மனுஷன் முதிர்வயதடைந்து மரித்துப்போகிறான். மனுஷனைப்போலவே மிருகங்களும் மரித்துப்போகிறது. தாவர வகைகளும், மரங்களும் பட்டுப்போகிறது. இந்த உலகமும் பழையதாகிறது. முதுமையடைகிறது. முடிவில் இந்த உலகமும் அழிந்துபோகப்போகிறது.

ஒரு வஸ்திரம் பழைமையாய்ப் போவதுபோல இந்தப் பூமியும் பழமையாய்ப்போகும். வஸ்திரத்தில் மாற்றமுண்டாவதுபோல பூமியிலும் மாற்றமுண்டாகும். பழைய வஸ்திரம் தன் அழகை இழந்துவிடும். தன் வலிமையையும் ஆற்றலையும் இழந்துவிடும். அதுபோலவே, சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகம் பழையதாய்ப் போகும்போது, தன் அழகை இழந்துபோகும். தன்னுடைய பெலத்தையும் இழந்துபோகும். இவையெல்லாம் இந்த உலகம் அழிந்துபோகும் என்பதற்கான அறிகுறிகள்.

மனுஷன் முதுமையடைந்து மரித்துப்போகிறான். ஆனால் இந்தப் பூமியோ வஸ்திரம்போல பழமையாய்ப் போகும். இந்தப் பூமி அழிந்துபோவதற்குப் பதிலாக இதில் மாற்றங்கள் உண்டாகும். கிறிஸ்துவானவர் இந்தப் பூமியை ஒரு சால்வையைப்போல சுருட்டுவார். அப்பொழுது இந்தப் பூமி மாறிப்போகும். கிறிஸ்துவோ மாறாதவராகயிருக்கிறார் (எபி 1:12). பழமையாய்ப்போன வஸ்திரம் அதற்குமேல் யாருக்கும் பயன்படாது. அதுபோலவே பாவத்தினால் கறைபடிந்திருக்கிற இந்த உலகம் ஆசீர்வாதத்தை இழந்துபோகும்.

பாவத்தின் விளைவினால் இந்தப் பூமியில் சாபங்கள் உண்டாயிற்று. ஏராளமான மாற்றங்கள் உண்டாயிற்று. பாவம் இந்த உலகத்தை அழிவுக்கு நேராக மாற்றுகிறது. தீமைக்கு நேராக மாற்றுகிறது. கிறிஸ்துவானவரோ இந்த உலகத்தை நன்மைக்கு நேராக மாற்றுகிறார். கிறிஸ்து மாறாதவர். சர்வசிருஷ்டிகளும் அழிந்துபோகும். ஆனால் கிறிஸ்துவோ நிலைத்திருப்பார்.

பிதாவானவர் குமாரனைப்பற்றி சாட்சியாகச் சொல்லும்போது, "உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை" என்று சொல்லுகிறார். கிறிஸ்து தமக்குதாமே மாறாதவராகயிருப்பார். காலங்கள் மாறலாம். மனுஷர்கள் மாறலாம். ஆனால் கிறிஸ்துவானவரோ எல்லா காலத்திலும், தம்முடைய பிள்ளைகளுக்கு மாறாதவராகவே இருப்பார். அவர் நிலைத்திருக்கிறவர். மாறாதவர். அவருடைய வருஷங்கள் முடிந்துபோவதில்லை.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும், கிறிஸ்துவானவர் நம்மை பாதுகாத்துப் பராமரிப்பதற்காக ஜீவனோடிருக்கிறார். நாம் மரித்துப்போன பின்பும், நம்மை பராமரிப்பதற்காக அவர் நித்தியகாலமாக ஜீவனோடிருப்பார். அவருடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை. நாம் இப்பிரபஞ்சத்தில் மரித்துப்போவோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ நித்தியகாலமாக ஜீவிக்கிறவர். நாம் மரித்துப்போனாலும், ஜீவனோடிருக்கிற இயேசுகிறிஸ்து, நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார். அங்கு நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம். அவரோடுகூட அங்கு நித்தியகாலமாக ஜீவிப்போம்.

பணிவிடை ஆவிகள்
எபி 1 : 13,14

எபி 1:13. மேலும், நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?

எபி 1:14. இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவ தூதர்களுக்கெல்லாம் மேன்மையுள்ளவர். பிதாவாகிய தேவன் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குச் சொன்ன மேன்மையான வாக்கியங்களை, அவர் தேவதூதர்களுக்குச் சொல்லவில்லை. பிதாவானவர் குமாரனிடம் "நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" (சங் 110:1) என்று சொன்னார். பிதாவானவர் இந்த வாக்கியத்தை தூதர்களில் ஒருவருக்கும், ஒருபோதும் சொன்னதில்லை.

இயேசுகிறிஸ்துவுக்கு சத்துருக்கள் இருந்தார்கள். மனுஷர் மத்தியிலேகூட அவருக்குச் சத்துருக்கள் இருந்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு சத்துருக்கள் இருப்பார்களென்றால் அதற்காக ஆச்சரியப்படக்கூடாது. நமக்குச் சத்துருக்கள் இருப்பது புதுமையான காரியமல்ல. கிறிஸ்துவானவர் மனுஷருக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை. தமக்குச் சத்துருவாகும்படி அவர் யாருக்கும் எந்தக் கெடுதியும் செய்யவில்லை. எல்லா மனுஷரையும் தமக்கு சிநேகிராக்கத்தக்கதாக, கிறிஸ்துவானவர் எல்லோருக்கும் நன்மையே செய்திருக்கிறார். ஆனாலும் கிறிஸ்துவுக்கு சத்துருக்கள் இருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் சத்துருக்கள் எல்லோரும் அவருக்கு பாதபடியாக்கிப் போடப்படுவார்கள். பிதாவாகிய தேவனே இதை நிறைவேற்ற பொறுப்பெடுத்திருக்கிறார். பிதாவானவர் இப்போதே கிறிஸ்துவினுடைய சத்துருக்களை அவருக்கு பாதபடியாக்கிப்போடுகிறார். ஆனாலும் கிறிஸ்துவின் சத்துருக்கள் இன்னும் பூரணமாய் அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு பூரண சங்காரம் நிச்சயமாகவே நியமிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சத்துருக்களுக்கு அழிவு நிச்சயம்.

தம்முடைய சத்துருக்களை பிதாவானவர் தமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், கிறிஸ்து தொடர்ந்து ஆளுகை செய்துகொண்டிருப்பார். சத்துருக்களின் போராட்டத்தினால் கிறிஸ்துவின் ஆளுகை ஒருபோதும் நின்றுபோகாது. குமாரனாகிய கிறிஸ்து தம்முடைய மகாபெரிய திட்டங்கள் எதையும் நிறைவேற்றாமல் பாதியிலேயே விட்டுவிடமாட்டார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யவேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியங்களை நிறைவேற்றவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய சத்துருக்கள்மீது நாம் ஜெயம்பெறவேண்டும். கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகராக நாம் யுத்தம்பண்ணவேண்டும்.

தேவ தூதர்கள் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் நமக்கு ஊழியம் செய்யும்படிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தேவதூதர்களெல்லோருமே, தங்கள் சுபாவங்களில் ஆவிகளாயிருக்கிறார்கள். அதிலும் அவர் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக அவர்கள் பணிவிடை செய்யவேண்டும். தேவனுடைய இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களுக்கு அவர்கள் பணிவிடை செய்யவேண்டும். இதற்காகவே தேவன் அவர்களை அனுப்பியிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இரட்சிப்புக்கு சுதந்தரவாளிகளாகயிருக்கிறோம். நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு சுதந்தராராகயிருக்கிறோம். கர்த்தருடைய குடும்பத்தில் அங்கத்தினர்களாகயிருக்கிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகளாகயிருப்பதினால், நாம் தேவனுடைய சுதந்தரவாளிகளாகவும் இருக்கிறோம். இது கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கு, ஊழியம் செய்யும்படிக்கு, தேவன் தேவதூதர்களை பணிவிடை ஆவிகளாக அனுப்பியிருக்கிறார். நமக்கு பணிவிடை செய்கிற பணிவிடை ஆவிகளுக்காக நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

2 அதிகாரம்

கிறிஸ்துவின் ஆள் தத்துவம் (எபி 2:1-4). கிறிஸ்துவானவர் தேவதூதர்களை விட மேன்மையுள்ளவராயிருக்கிறார் (எபி 2:5-9). சிலுவையைப்பற்றிய தவறான உபதேசங்கள் (எபி 2:10-15). இயேசுகிறிஸ்து மனுஷரூபமெடுத்ததும், அதற்கான காரணமும் (எபி 2:16-18).

கிறிஸ்துவின் ஆள்தத்துவம் எபி 2 : 1-4

எபி 2:1. ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.

எபி 2:2. ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க,

எபி 2:3. முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்,

எபி 2:4. அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்தஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரியதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்.

இயேசுகிறிஸ்து ஆள்தத்துவ பண்புள்ளவர். இந்த உபதேசத்தை புத்திமதிகளினாலும், விவாதங்களினாலும் நிருபத்தின் ஆசிரியர் உறுதிபண்ணுகிறார். இந்தக் கடைசி நாட்கள் சுவிசேஷத்தின் நாட்களாயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்போது சுவிசேஷத்தின் ஆளுகைக்குட்பட்டவர் களாகயிருக்கிறோம். சுவிசேஷத்தின் காலத்தில் ஜீவிக்கிற நாம், சுவிசேஷத்தின் ஆலோசனைகளுக்கும், வழிநடத்துதல் களுக்கும் கவனமாய்ச் செவிகொடுக்க வேண்டும்.

சுவிசேஷத்தின் மூலமாய் நாம் கேட்டவைகளை விட்டுவிலகக்கூடாது. அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும். சுவிசேஷத்தின் வசனங்களை நம்முடைய இருதயங்களில் ஏற்றுக்கொள்ளவேண்டும். வசனங்களை நேசிக்கவேண்டும். அவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். சுவிசேஷத்தின் வசனங்கள் நம்முடைய பேச்சுக்களையும், கிரியைகளையும் ஆளுகை செய்ய வேண்டும். சுவிசேஷத்தின் பிரகாரம் நாம் ஜீவிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

நாம் கேட்டவைகளை விட்டு விலகினால் நமக்கு பேராபத்து உண்டாகும். நம்முடைய இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால், நம்மால் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ள முடியாது. நம்முடைய மனதும், ஞாபகசக்தியும் கீறல் விழுந்த பாத்திரம் போலுள்ளது. இந்தப் பாத்திரத்தில் நாம் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும், அதில் தண்ணீர் தங்காது. ஒழுகும். கீறல் விழுந்த பாத்திரத்தை கவனமாய்க் கவனித்து, கீறலை அடைத்து, அதைப் பராமரிக்கவேண்டும். அதற்குப் பின்பே அந்தப் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றவேண்டும். அப்போதுதான் நாம் ஊற்றிய தண்ணீர் பாத்திரத்தில் நிலைத்து நிற்கும்.

நம்முடைய மனதும் ஞாபசக்தியும் கீறல் விழுந்த பாத்திரத்தைப்போல இருக்கிறது. நாம் எவ்வளவுதான் சத்தியங்களைக் கேட்டாலும் அதைச் சீக்கிரத்தில் மறந்துபோகிறோம். நாம் கேட்ட சத்தியங்களை மறந்துவிட்டோமென்றால் நமக்குத்தான் நஷ்டமுண்டாகும். நம்முடைய மனதிலிருந்து சுவிசேஷம் காணாமல் போய்விட்டால் நமக்கு எல்லாமே காணாமல் போய்விடும். நாம் சுவிசேஷத்தை இழந்துவிட்டால், எல்லாவற்றையும இழந்துவிடுவோம்.

நாம் கேட்ட சுவிசேஷ வசனங்களை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். கவனமாய்க் கவனிக்காவிட்டால் சத்தியங்கள் நம்முடைய மனதில் பதிந்திருக்காது. ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கேட்காதவர்கள், தாங்கள் கேட்டவற்றை சீக்கிரத்தில் மறந்துவிடுவார்கள். இவர்களுக்கு ஒன்றும் ஞானத்தில் இருக்காது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ சுவிசேஷ வசனங்களை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். நாம் கேட்ட சத்தியங்களை விட்டு விலகாதபடிக்கு ஜீவிக்கவேண்டும் (எபி 2:2).

சத்திய வசனங்களை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிப்பதும், நாம் கேட்ட வசனங்களை விட்டு விலகாதபடிக்கு ஜீவிப்பதும் நம்முடைய கடமை. இந்தக் கடமையை நாம் நிறைவேற்றவில்லையென்றால் நமக்கு தண்டனை உண்டு. கீழ்ப்படியாமைக்கு நீதியான தண்டனை வரும். தேவவசனம் தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்டது. அவர்களுடைய வசனமும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது (எபி 2:2).

தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனங்கள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. இந்த வசனங்கள் வாக்குத்தத்தம் போல இருக்கிறது. மனுஷர் தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்தாலும், கீழ்ப்படியாமல் போனாலும், கர்த்தருடைய வசனம் நீதியாயும், உண்மையாயும் இருக்கிறது. சத்திய வசனம் தன் கடமையைச் செய்யும்.

கர்த்தருடைய வசனத்திற்கு விரோதமான செய்கைகளுக்கு நீதியான தண்டனை வரும். அதுபோலவே கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படியாமற்போனாலும் நீதியான தண்டனை வரும். மனுஷன் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல், தன்னைத்தானே ஏமாற்றுகிறான். மெய்யாகவே தேவனுடைய வசனத்தை யாராலும் ஏமாற்றமுடியாது. வசனத்திற்கு யாராவது கீழ்ப்படியவில்லையென்றால், அந்த வசனமே கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியான தண்டனையைக் கொடுக்கும். தண்டனை நீதியாகயிருக்கும். பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்திற்கு இதற்குக் குறைவான தண்டனை எதுவும் நியமிக்கப்படவில்லை. கீழ்ப்படியாமைக்கு நீதியான தண்டனை உண்டாகும். அதே வேளையில் வசனத்திற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு, நீதியான வெகுமதியும் கிடைக்கும் (எபி 2:2).

நிருபத்தின் ஆசிரியர் இங்கு சுவிசேஷத்தை தெளிவாக விவரிக்கிறார். சுவிசேஷத்தைப்பற்றிச் சொல்லும்போது, "பெரிதான இரட்சிப்பு" (எபி 2:4) என்று சொல்லுகிறார். இது பெரிதான இரட்சிப்பாக இருப்பதினால், இதை யாராலும் பூரணமாக விவரிக்க முடியாது. இரட்சிப்பின் அர்த்தத்தை யாராலும் பூரணமாகப் புரிந்துகொள்ளவும் முடியாது. அந்த அளவுக்கு நம்முடைய ஆத்தும இரட்சிப்பு பெரிதான இரட்சிப்பாக இருக்கிறது.

தேவனுடைய கிருபையினாலே நம்முடைய மகாபெரிய பாவங்களிலிருந்தும், கொடூரமான அழிவுகளிலிருந்தும் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். அசுத்தத்தில் ஜீவித்தவர்களாகிய நாம், இரட்சிக்கப்பட்ட பின்பு மகாபரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாகயிருக்கிறோம். இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக பாவத்திலும் வேதனையிலும் சிக்கியிருந்த நாம், இரட்சிக்கப்பட்ட பின்பு பெரிதான சந்தோஷத்திற்கு பங்குள்ளவர்களாகயிருக்கிறோம். ஆகையினால் நம்முடைய ஆத்தும இரட்சிப்பு பெரிதான இரட்சிப்பாக இருக்கிறது.

மனுஷன் சுவிசேஷத்திற்கு விரோதமாக பாவம் செய்யக்கூடாது. நம்முடைய இரட்சிப்புக்கு விரோதமாக நாம் ஒன்றும் செய்யக்கூடாது. நம்முடைய ஆத்தும இரட்சிப்பு பெரிதான இரட்சிப்பு. இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிப்போமென்றால், நாம் சுவிசேஷத்திற்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களாகயிருப்போம். நம்மால் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளவே முடியாது.

பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருக்கிறவர்கள் தேவனுடைய இரட்சிக்கும் கிருபையை அவமரியாதை செய்கிறார்கள். தேவனுடைய இரட்சிக்கும் கிருபை இயேசுகிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தங்களுடைய ஆத்தும இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருக்கிறவர்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை அவமரியாதை செய்கிறார்கள். இரட்சிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதை ஏளனம்பண்ணுகிறார்கள். பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருக்கிறவர்கள் தங்கள் ஆத்தும இரட்சிப்பை அசட்டைபண்ணுகிறார்கள்.

சுவிசேஷத்தின் கிருபையை புறக்கணிக்கிறவர்கள் சுவிசேஷத்திற்கு விரோதமாகத் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட துன் மார்க்கமான பாவிகளுடைய கூட்டத்தில் நாம் பங்காளிகளாகயிராதவாறு மிகுந்த கவனத்தோடிருக்க வேண்டும். சுவிசேஷத்தின் கிருபையை நாம் அசட்டைபண்ணிவிடக்கூடாது.

பெரிதான இரட்சிப்பைக்குறித்து கவலையிற்றிருப்பவர்களுக்கு தண்டனை உண்டு. இந்தத் தண்டனையிலிருந்து இவர்களால் தப்பித்துக்கொள்ளவே முடியாது. தங்கள் ஆத்தும இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருக்கிறவர்களும், அதைப் புறக்கணிக்கிறவர்களும், அதை அசட்டைபண்ணுகிறவர்களும் ஏற்கெனவே ஆக்கினைக்குட்படுத்தப் படுகிறார்கள். அவர்கள் குற்றவாளிகளாக கருத்தப்பட்டு, நீதிக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வருகிற ஒவ்வொரு தண்டனையும் நீதியின் பிரகாரமாகவே இருக்கும்.

பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்று இருப்பவர்களால் தண்டனைக்கு தப்பித்துக்கொள்ளவே முடியாது. ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை பெறுவதற்கு இவர்களுக்கு வேறுவழியே இல்லை. சுவிசேஷத்தில் இரட்சிப்பின் திட்டம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற பெரிதான இரட்சிப்பை நாம் ஏற்றுக் கொள்ளும் போது, தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளலாம்.

பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்பவர்கள்மீது தேவனுடைய கோபாக்கினை வரும். தேவகோபாக்கினை அவர்கள்மீது தங்கியிருக்கும். அது அவர்களைவிட்டு நீங்கிப்போகாது. அவர்களுக்கு கிருபையின் வாசல்கள் அனைத்தும் அடைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக, கல்வாரி சிலுவையில் ஏற்கெனவே தம்மை பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமென்றால், நமக்கு மறுபடியும் இரட்சிப்பு உண்டாக்குவதற்கு, வேறொரு பலி எதுவும் செலுத்தப்படாது. நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமாக இனிமேல் வேறு எந்த பலியும் இல்லை. ஆகையினால் பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்பவர்கள் தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளமாட்டார்கள்.

சுவிசேஷம் முதலாவது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாகவே மனுஷருக்கு அறிவிக்கப்பட்டது (எபி 2:3). கிறிஸ்துவின் சுவிசேஷம் மனுஷர் மூலமாய் அறிவிக்கப்படவில்லை. இது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டது. ஆகையினால் நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை அசட்டை பண்ணுகிறவர்களும் தண்டனைக்குத் தப்பிக்கமாட்டார்கள். நாம் கர்த்தருக்குக் கொடுக்கிற மரியாதையை அவருடைய வார்த்தைக்கும் கொடுக்கவேண்டும். கர்த்தர் மூலமாய் நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். கர்த்தர் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுவதில்லை. அவர் அடையாளங் களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சுவிசேஷத்தை மனுஷர் மத்தியிலே அறிவிக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையை அற்புதங் களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார் (எபி 2:3).

அப்போஸ்தலர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய சுவிசேஷத்திற்கும் சாட்சிகளாயிருக்கிறார்கள். சுவிசேஷம் முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டது. அதன் பின்பு, அந்தச் சுவிசேஷத்தை அவரிடத்தில் கேட்ட அப்போஸ்தலர்கள் மூலமாகவும், சுவிசேஷகர்கள் மூலமாகவும், சுவிசேஷத்தின் சத்தியம் நமக்கு உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. சுவிசேஷம் தொடர்ந்து பிரசங்கம்பண்ணப்படுகிறது. அப்போஸ்தலர்களும், சுவிசேஷகர்களும் இயேசுகிறிஸ்துவுக்கு கண்ணாரக் கண்ட சாட்சிகளாகவும், அவருடைய வார்த்தைக்கு காதார கேட்ட சாட்சிகளாகவும் இருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்திற் குரியவைகளை அப்போஸ்தலருடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினால் அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார் (அப் 1:3).

கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் இந்த உலகத்திற்கு ஊழியம் செய்யவில்லை. அவர்கள் கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தார்கள். அவருடைய வார்த்தைகளை சாட்சியாக அறிவித்தார்கள். அவருக்குச் சாட்சியாக ஜீவித்தார்கள். கர்த்தருடைய அப்போஸ்தலரில் அநேகர் தங்கள் ஜீவனையும் பெரிதாக எண்ணாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையாய் அறிவித்தார்கள். அவர்களில் அநேகர் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார்கள். தாங்கள் பிரசங்கித்த கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை, தங்கள் இரத்தத்தினால் முத்திரையிட்டார்கள். இரத்தம் சிந்துதலோடு பாடுகளை அனுபவித்தார்கள். உலகம் இவர்களுக்கு சிநேகமாயிருக்கவில்லை. தங்கள் ஜீவியத்தில் எப்படிப்பட்ட நஷ்டம் வந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், தாங்கள் கிறிஸ்துவினிடத்தில் கேட்ட சுவிசேஷத்தை உண்மையாய் அறிக்கை செய்தார்கள்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தேவன் தாமே சாட்சி கொடுக்கிறார். கிறிஸ்துவுக்காக சாட்சிகளாகயிருந்த வர்களுக்கும் தேவன் தாமே சாட்சி கொடுக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷ வசனங்களை தேவன் தாமே அடையாளங் களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும் உறுதிபண்ணுகிறார். தேவன் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குச் சாட்சிகொடுக்கிறார்.

நம்முடைய விசுவாசத்தில் நாம் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். நம்முடைய நம்பிக்கைக்கு ஸ்திரமான அஸ்திபாரம் இருக்கவேண்டும். நம்முடைய ஜீவியம் சுவிசேஷத்தின்மீது நம்பிக்கையோடு கட்டியெழுப்பப்படவேண்டும். நாம் சுவிசேஷத்தை விசுவாசத்தோடும், உண்மையோடும் ஏற்றுக்கொண்டு, சுவிசேஷத்தின் வார்த்தைகளின்படி ஜீவிக்கவேண்டும்.

தேவனானவர் மோசேக்குத் தம்முடைய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தபோது அங்கு அடையாளங்களும் அற்புதங்களும் நடைபெற்றது. இப்போதோ, சுவிசேஷத்தை உறுதிபண்ணுவதற்கு தேவன் அதைவிட மேன்மையான அடையாளங்களையும் அற்புதங்களையும், பலத்த செய்கைகளையும் நடப்பிக்கிறார். நாம் சுவிசேஷத்தின் காலத்தில் ஜீவிக்கிறோம். இந்தக் காலத்தில் தம்முடைய சுவிசேஷத்தை எப்படி உறுதிபண்ணவேண்டுமோ, அப்படியே அதை தேவன் உறுதிபண்ணுகிறார். இதற்காக பலத்த அடையாளங்களையும், பெரிதான அற்புதங்களையும் தேவன் நடப்பிக்கிறார். தேவன் தாமே தம்முடைய சுவிசேஷத்திற்குச் சாட்சி கொடுக்கிறார். சுவிசேஷம் இவ்வளவு பெரிதானது. அதன் மூலமாய் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற இரட்சிப்பும் பெரிதானது. இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு தப்பித்துக்கொள்ள முடியாது.

தேவதூதரிலும் பெரியவர் எபி 2 : 5-9

எபி 2:5. இனிவரும் உலகத்தைக்குறித்துப் பேசுகிறோமே, அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை.

எபி 2:6. ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாக: மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?

எபி 2:7. அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான்.

எபி 2:8. சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை; அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்.

எபி 2:9. என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.

சுவிசேஷத்தின் சபை "இனிவரும் உலகம்" என்னும் வார்த்தையினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகம் தேவதூதர்களுக்கு கீழ்ப்படுத்தப்படவில்லை. புதிய உலகமாகிய "சுவிசேஷத்தின் உலகம்" இயேசுகிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகம் இயேசுகிறிஸ்துவுக்கு மாத்திரமே பூரணமாக கீழ்ப்படியவேண்டும். இவ்வளவு பெரிதான பொறுப்பை சுமப்பதற்கு தேவதூதர்களிடத்தில் பலமில்லை. முழுஉலகத்தையும் ஆளுகை செய்வதற்கு தேவதூதர்கள் பலவீனமானவர்களாக இருக்கிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனால் அபிஷேகம்பண்ணப் பட்டிருக்கிறவர். அவர் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறவர். அவரே ஆசீர்வாதமாகயிருக்கிறவர். இந்தச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதற்கு, நிருபத்தின் ஆசிரியர் சங்கீதம் 8:4-6 ஆகிய வசனங்களை இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார்.

"மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்" (சங் 8:4-6).

இந்த வசனங்கள் மனுக்குலத்தைப் பொதுவாகக் குறிக்கிறது. அதே வேளையில் இந்த வசனங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் விசேஷமாகக் குறிப்பிடுகிறது.

இந்த வசனங்கள் மனுப்புத்திரரைப் பற்றிச் சொல்லும்போது, தேவன் மனுஷர்மீது வைத்திருக்கிற அவருடைய பெரிதான அன்பும், கரிசனையும், பாதுகாப்பும் பராமரிப்பும், இந்த வசனங்களில் வெளிப்படுத்தப் படுகிறது. தேவன் மனுஷரை நினைக்கிறார். அவர் எப்போதுமே மனுஷரைப்பற்றிய சிந்தை யோடிருக்கிறார். தேவன் நம்மைப்பற்றி எப்போதும் நினைவுகூரும்போது, மனுஷராகிய நாம் அவரை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

தேவன் மனுஷரை விசாரிக்கிறார். மனுபுத்திரரை தேவன்தாமே வந்து சந்திக்கிறார். நாம் சாதாரண மனுஷராகயிருந்தாலும், சர்வஉலகத்திற்கும், சர்வசிருஷ்டிகளுக்கும் கர்த்தாதி கர்த்தராகயிருக்கிற தேவன் நம்மை வந்து சந்திப்பது நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். ஆவியானவர் நம்முடைய இருதயத்திற்குள் வந்து வாசம் பண்ணுகிறார். தேவன் நம்முடைய ஆவியில் பிரவேசிக்கிறார். தேவ ஆவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணுகிறார்.

தேவன் தம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் மனுஷனை அதிகாரியாக வைக்கிறார். தேவனே சர்வசிருஷ்டிகளையும் சிருஷ்டித்தவர். சர்வசிருஷ்டிகளுக்கும் மனுஷனே அதிகாரியாகயிருக்கிறான். இப்பிர பஞ்சத்திலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் தேவன் மனுஷனை தலைவனாக நியமித்திருக்கிறார். அவற்றிற்கு அவனை அதிகாரியாகவும் நியமித்திருக்கிறார்.

தேவன் மனுஷனை தம்முடைய மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டுகிறார். தேவன் மனுஷனுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரங்களையும், வல்லமைகளையும் உறுதிபண்ணும்விதமாக, அவர் மனுஷனுடைய தலையின்மீது முடிசூட்டுகிறார்.

தேவன் சகலத்தையும் மனுஷனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தியிருக்கிறார். எல்லா ஜீவராசிகள்மீதும் மனுஷனுக்கு அதிகாரமுள்ளது. மனுஷன் அவற்றை, தேவன் தனக்குக் கொடுத்திருக்கிற தெய்வீக அதிகாரத்தின்படி ஆளுகை செய்யலாம்.

இந்த நிருபத்தின் ஆசிரியர் சங்கீதம் 8:4-6-ஆவது வசனத்தை மேற்கோளாக எழுதும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் இந்த வசனங்களின் மூலமாய் விசேஷித்த வழியில் வெளிப்படுத்துகிறார். தேவன் மனுஷரை நினைப்பதும், மனுஷரை விசாரிப்பதும் தேவனுடைய சுத்தக்கிருபை. இதில் தேவனுடைய அன்பும், கரிசனையும் வெளிப்படுகிறது. தேவன் தம்முடைய கிருபையை நமக்கு இலவசமாகக் காண்பிக்கிறார்.

கிறிஸ்து ஆள்தத்துவப்பண்புடையவர். அவரிடத்தில் தெய்வத்துவமும் மனுஷத்துவமும் சேர்ந்து காணப்படுகிறது. கிறிஸ்துவின் மனுஷத்துவத்தை தேவன் தம்முடைய மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டுகிறார். கிறிஸ்துவின் மனுஷத்துவம் பரிபூரண பரிசுத்தமுள்ளது.

கிறிஸ்துவானவர் மனுக்குலத்திற்காக பாடுகளை அனுபவித்தார். உலகத்தின் பாவத்தை தம்மீது சுமந்தார். மனுக் குலத்தின் பாவங்களை மன்னிப்பதற்காக, தம்முடைய சுயஇரத்தத்தையே கல்வாரி சிலுவையில் சிந்தினார். தம்முடைய ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களை நீக்குவதற்காக தம்மையே பலியாகச் செலுத்தினார். சிலுவையில் கிறிஸ்துஇயேசு செலுத்திய பலியை, தேவன் அங்கீகரித்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவோ ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். கிறிஸ்துவானவர் இந்த உலகத்தில் பாடுகள் மிகுந்த சிலுவை மரணத்தின்நிமித்தம் தாழ்த்தப்பட்டார். ஆனால் தேவனோ கிறிஸ்துவைத் தம்முடைய மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டினார்.

இரட்சிப்பின் அதிபதி
எபி 2 : 10-13

எபி 2:10. ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப் படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது.

எபி 2:11. எப்படியெனில், பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்:

எபி 2:12. உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு எபி அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்;

எபி 2:13. நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தை உலகப்பிரகாரமான கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அது மிகவும் கொடூரமான மரணமாயிருக்கும். அக்காலத்து சமுதாயத்தில் சிலுவையானது ஒரு அவமானச் சின்னமாகவே கருதப்பட்டது. மரத்தில் தூக்கப்படுகிறவன் எவனும் சபிக்கப்பட்டவன். ஆனால் ஆவிக்குரிய ரீதியாகப் பார்க்கும்போது, சிலுவை மரணம் நமக்கு ஆசீர்வாதமானது. சிலுவை மரணமில்லாமல் நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு இல்லை.

இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவிக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். இயேசுகிறிஸ்துவே இரட்சிப்பின் அதிபதி. மனுஷருடைய இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுகிறிஸ்துவை உபத்திவரங்களினாலே பூரணப்படுத்துகிறது தேவனுக்கேற்றதாக இருந்தது. எல்லாவற்றிற்கும் தேவனே ஆரம்பமாகவும் முடிவுமாகவும் இருக்கிறார். அவரே தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர் (எபி 2:10). தாம் செய்த எல்லாவற்றிலும் தேவன் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்.

மனுஷருடைய மீட்பின் கிரியையில் தேவனுடைய மகத்துவம் வெளிப்படுகிறது. அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக வேண்டுமென்பது அவருடைய விருப்பம். புத்திரசுவிகாரத்தினாலும், மறு ஜென்மத்தினாலும் நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். இதன் மூலமாய் நாம் தேவனுடைய மகிமையில் கொண்டு வந்து சேர்க்கப்படுகிறோம். பரலோகத்தின் மகிமையே தேவனுடைய மகிமை.

தேவனுடைய பிள்ளைகள், ஒரு நேரத்தில், ஒரு இடத்தில், கொஞ்சம் பேராகவே இருப்பார்கள். அவர்கள் எல்லோரையும் ஒரிடத்தில் கொண்டு வந்து சேர்க்கும்போது அவர்களுடைய எண்ணிக்கை அநேகமாயிருக்கும். இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசு கிறிஸ்துவுக்கு தேவன் இந்தக் கனமான ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். அநேகம் பிள்ளைகளை தேவனுடைய மகிமையில் கொண்டு வந்து சேர்ப்பது கிறிஸ்துவின் ஊழியம்.

நாம் தேவனுடைய மகிமையில் கொண்டு வந்து சேர்க்கப்படவேண்டுமென்றால், நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டிருக்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் உபத்திரவங்களினால் நம்முடைய இரட்சிப்பு பூரணப்படுத்தப்படுகிறது. இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தையே நம்முடைய ஆத்துமாவுக்கு மீட்பின் கிரயமாகச் செலுத்தியிருக்கிறார்.

கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது. இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. இயேசுகிறிஸ்துவோ சிலுவையின் பாதை வழியாக தம்முடைய மகிமைக்குள் பிரவேசித்திருக்கிறார். பாடுகள் இல்லாமல் கிரீடம் இல்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இயேசு கிறிஸ்துவின் சிலுவையும், மகிமையும், ஒரு முன்மாதியாக இருக்கவேண்டும். தேவனுடைய பிள்ளைகள் எல்லோருமே மகிமையில் பிரவேசிப்பதற்கு, சிலுவை பாதையின் வழியாக கடந்துவர ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் சிலுவையினாலும், அவருடைய பாடுகளினாலும் நமக்கு அநேக ஆசீர்வாதங்கள் உண்டாயிருக்கிறது. கிறிஸ்துவின் மரணத்தினால் நாம் ஆவிக்குரிய அனுகூலங்களை ஏராளமாய்ப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்து தம்மை உபத்திரவங்களுக்கும், பாடுகளுக்கும், மரணத்திற்கும் ஒப்புக்கொடுத்ததினால், கிறிஸ்துவோடு நமக்குள்ள ஐக்கியம் மிகவும் நெருக்கமாகிறது. கிறிஸ்துவே நம்மை பரிசுத்தம் செய்கிறவர். நாமோ அவரால் பரிசுத்தம் செய்யப்படுகிறவர்கள். நாம் எல்லோருமே பிதாவாகிய தேவனாலே உண்டாயிருக்கிறோம் (எபி 2:11).

கிறிஸ்துவே நம்மைப் பரிசுத்தப் படுகிறவர். நம்முடைய இருதயத்தையும், சிந்தையையும், செயல்களையும் கிறிஸ்துவானவரே சுத்திகரிக்கிறார். நாம் எல்லோருமே பிதாவாகிய தேவனுக்குள் ஒன்றாயிருக்கிறோம். நாம் எல்லோரும் பரலோகத்தின் பிதாவுக்குரியவர்கள். நம் எல்லோருக்குமே இப்பிரபஞ்சத்தின் பிரகாரமாக, ஆதாம் பிதாவாகயிருக்கிறார். கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிக ளெல்லோருக்கும், ஒரே விதமான மாம்ச சுபாவமே இருக்கிறது. நம் எல்லோருக்குமே ஒரே ஆவியே இருக்கிறது. கிறிஸ்துவில் இருக்கிற அதே சிந்தையே நம்மிடத்திலும் இருக்கிறது. கிறிஸ்துவும், அவருடைய பிள்ளைகளாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறோம் (எபி 2:11).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமக்கும் தம்முடைய பிள்ளைகளுக்கும் இடையே இருக்கிற ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறார். அவர் நம்மை "சகோதரர்" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவும் அவருடைய பிள்ளைகளும் சகோதரராயிருக்கிறார்கள். பரலோகத்தின் பிரகாரமாகவும், இந்தப் பிரபஞ்சத்தின் பிரகாரமாகவும் கிறிஸ்துவும், அவருடைய விசுவாசிகளும் சகோதரராகவே இருக்கிறார்கள்.

அவர் நம்மை சகோதரரென்று சொல்ல வெட்கப்படவில்லை. கிறிஸ்துவைக்குறித்து அறிக்கை செய்வதற்கு நாம் வெட்கப்படவில்லையென்றால், அவரும் நம்மைக் குறித்து அறிக்கை செய்வதற்கு வெட்கப்படமாட்டார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மைக் குறித்து வெட்கப்படவில்லை. நம்மைத் தம்முடைய சகோதரரென்று அழைப்பதற்காக அவர் அவமானப்படவில்லை. அவரே மனப்பூர்வமாய் வெட்கப்படாமல், நம்மை சகோதரரென்று அழைக்கிறார்.

எபிரெய நிருபத்தின் ஆசிரியர் இந்தச் சத்தியத்தைத் தெளிவுபடுத்துவதற்கு மூன்று வசனங்களை மேற்கோளாகச் சொல்லுகிறார். அவற்றில் முதலாவது வசனம் சங்கீதம் 22:22 ஆகும். "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்" *(சங் 22:22)*.

கிறிஸ்துவுக்கு இந்தப்பிரபஞ்சத்தில் ஒரு சபை இருக்கவேண்டும். இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் இந்த சபையில் நிரம்பியிருக்கவேண்டும். இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை மனப்பூர்வமாகப் பின்பற்றவேண்டும். தங்களுடைய ஜீவியங்களை இயேசு கிறிஸ்துவின் பாதபடியில் ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்திருக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் ஒருவருக்கொருவர் சகோதரராயிருக்கிறார்கள். அதே வேளையில் அவர்கள் தங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் சகோதரராயிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சபை நடுவிலே, பிதாவின் நாமத்தை தெரியப்படுத்துவார். அவரைத் துதித்துப் பாடுவார் (எபி 2:12).

எபிரெய நிருபத்தின் ஆசிரியர் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தைத் தெளிவுபடுத்துவதற்காக, சங்கீதம் 18:2-ஆவது வசனத்தையும் இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார். "கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்" (சங் 18:2).

கிறிஸ்துவின் சகோதரராகிய நாமும் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கையாயிருக்க வேண்டும் (எபி 2:13). கிறிஸ்துவின் சகோதரர்கள் கிறிஸ்துவைப்போல பாடுகளை அனுபவிக்கவேண்டும். பிதாவின் சித்தத்திற்கு கிறிஸ்து உண்மையுள்ளவராயும் நம்பிக்கையுள்ளவராயும் இருந்ததுபோல, கிறிஸ்துவின் சகோதரராகிய நாமும் அவருக்கு உண்மையுள்ளவராயும் நம்பிக்கையுள்ளவராயும் இருக்கவேண்டும். கிறிஸ்து பிதாவாகிய தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறார்.

எபிரெய நிருபத்தின் ஆசிரியர் கிறிஸ்துவின் ஊழியத்தை விவரிப்பதற்கு ஏசாயா 8:18-ஆவது வசனத்தையும் இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார். "இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" (ஏசா 8:18).

பிதாவானவர் கிறிஸ்துவுக்குள் அவருடைய பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார். விசுவாசிகள் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் இரட்சிப்படும்போது, பிதாவாகிய தேவன் நம்மை, கிறிஸ்துவினிடத்தில் பிள்ளைகளாக ஒப்புக்கொடுக்கிறார். கிறிஸ்துவானவரும் நம்மை அன்போடு ஏற்றுக்கொள்கிறார். நம்மில் களிகூருகிறார். நம்மை பரலோகத்தின் மகிமைக்கு கொண்டுவந்து சேர்க்கிறார். அங்கு பிதாவினிடத்தில் நம்மை ஒப்புக்கொடுக்கிறார் (எபி 2:13).

மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் எபி 2 : 14-18

எபி 2:14. ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,

எபி 2:15. ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கும் அப்படியானார்.

எபி 2:16. ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்.

எபி 2:17. அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும் படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது.

எபி 2:18. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷரூபத்தில் அவதரித்தார். கிறிஸ்துவானவர் தெய்வத்துவமுள்ளவர். அவரோ மனுஷரூபமெடுத்து, மனுஷசாயலானார். மனுஷருடைய சுபாவத்தை தம்மீது ஏற்றுக்கொண்டார். இயேசுகிறிஸ்து மனுஷரைப்போலவே மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். அவர் மெய்யாகவே மனுஷரானார்.

கிறிஸ்துவானவர் தேவதூதருடைய சந்ததியில் அவதரிக்கவில்லை. அவர் தேவதூதருக்கு உதவியாக கைகொடுக்க வில்லை. இயேசுகிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியிலேயே மனுஷரூபமெடுத்தார். இதனால் அவர் ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாக கைகொடுத்தார் (எபி 2:16). தேவதூதருடைய சுபாவம், மனுஷருடைய பாவத்திற்கு, பாவநிவாரணபலியாக ஆகமுடியாது. ஆகையினால் கிறிஸ்துவானவர் மனுஷரூபமெடுத்து, மனுஷருடைய பாவத்திற்கு பாவநிவாரண பலியானார்.

இயேசுகிறிஸ்து ஆபிரகாமின் சந்ததியில் வந்தார். ஆபிரகாமின் சந்ததியாரிடம் காணப்படுகிற மாம்ச சுபாவம் இயேசுகிறிஸ்துவிடமும் காணப் படுகிறது. மாம்சசுபாவத்திலிருக்கிறவர்கள் பாவம் செய்து, பாடுகளை அனுபவிக்கிறார்கள். மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு ஏதுவாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஆபிரகாமின் சந்ததியில், ஒரு சாதாரண மனுஷராக அவதரித்தார். இதனால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய், பாவிகளில் பிரதான பாவிகளுக்கும் நம்பிக்கையும் உதவியும் கிடைத்திருக்கிறது.

இயேசுகிறிஸ்து மனுஷஅவதாரம் எடுத்ததற்கு ஒரு தெய்வீக நோக்கமுண்டு. ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்கிறதற்கு ஏதுவாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷரூபமெடுத்தார். மனுஷருடைய பாவங்களை நிவிரித்தி பண்ணுவதற்கு, மனுஷருக்கு ஒப்பான ரூபமுள்ளவர் பாவநிவாரண பலியாக செலுத்தப்பட வேண்டியது தேவனுடைய பார்வையில் அவசியமாயிற்று.

மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு, மனுஷரைவிட மேலான சிருஷ்டிகளோ, அல்லது மனுஷரைவிட தாழ்வான சிருஷ்டிகளோ பாவநிவாரண பலியாக செலுத்தப்படுவதை தேவன் அங்கீகரிக்கவில்லை. அது தேவனுடைய நீதிக்கு ஏற்றதாகவும் அமையவில்லை. ஆகையினால் தேவனுடைய நீதியின் பிரகாரம், மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு ஏதுவாக, மனுஷருக்கு ஒப்பான ஒருவர், பாவநிவாரண பலியாக செலுத்தப்பட வேண்டும் என்பது அவசியமாயிற்று.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷரூபமெடுத்து, ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாக கைகொடுத்தார். ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு ஏதுவாக, அவர் எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக ஆனார். மனுஷரானார். தெய்வத்துவமுள்ள இயேசு கிறிஸ்து, மனுஷத்துவமுள்ளவரானார். பூரண மனுஷரானார். எல்லாவிதத்திலும் மனுஷருக்கு ஒப்பானார் (எபி 2:17).

இயேசுகிறிஸ்து மரிக்கும்படியாகவே மனுஷனானார். மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தம்முடைய மரணத்தினால் அழிக்க வேண்டுமென்பது கிறிஸ்துவினுடைய சித்தம். மனுஷர் தங்களுடைய ஜீவியகாலமெல்லாம் மரணபயத்தினாலே பிசாசின் அடிமைத்தனத்திற்கு உள்ளானவர்களாயிருக் கிறார்கள். இவர்கள் யாவரையும் இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ண வேண்டுமென்பது கிறிஸ்துவின் சித்தம். இதற்காகவே தெய்வத்துவமுள்ள இயேசுகிறிஸ்து, மனுஷரூபமெடுத்து, மனுஷரைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்.

புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கு முன்பாக, பழைய ஏற்பாட்டுக்காலத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவநிவாரண பலியாக ஏராளமான பலிகளைச் செலுத்தினார்கள். நியாயப் பிரமாணத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினார்கள். ஆனால் தேவனோ, மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு பதிலிடாக அவற்றை அங்கீகரிக்கவில்லை. தேவனுடைய பார்வையில் பழைய ஏற்பாட்டுக்காலத்து பலிகளும், காணிக்கைகளும் மனுக்குலத்தின் பாவங்களுக்கு பதிலீடாகயில்லை.

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு மனுஷசரீரத்தை ஆயத்தம்பண்ணினார். மற்ற மனுஷரைப்போலவே, இயேசுகிறிஸ்துவின் சரீரத்தையும் மாம்சத்தினாலும் இரத்தத்தினாலும் ஆயத்தம்பண்ணினார் (எபி 2:14).

இந்தப் பிரபஞ்சத்தில் பிசாசானவனே முதலாவதாக பாவம் செய்தவன். இவனே மற்றவர்களை பாவம் செய்யுமாறு முதலாவதாக தூண்டியவன். பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தினால் மனுஷருக்கு மரணமுண்டாயிற்று. பிசாசானவன் மனுஷரை பாவம் செய்ய வைத்து, அவர்களை மரணத்திற்குட் படுத்துகிறான். மனுஷர்மீது மரணம் அதிகாரம் செலுத்துகிறது. பிசாசானவன் மரணத்திற்கு அதிகாரியாகயிருக்கிறான்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழித்தார். இதுவரையிலும் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து விடுதலைபண்ணினார். மனுஷருடைய ஆவிக்குரிய மரணத்தின்மீது பிசாசானவனுக்கு இனிமேல் அதிகாரமில்லை. இனிமேல் எந்த மனுஷனையும் பிசாசானவன் ஆவிக்குரிய மரணபயத்தினால் அடிமைப்படுத்த முடியாது.

மனுஷர் தங்களுடைய ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குட் பட்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரையும் விடுதலைபண்ண வேண்டுமென்பது இயேசுகிறிஸ்துவின் சித்தம். இதற்காகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்மைப் போலவே மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய மனுஷரானார். அவர் நமக்காக கல்வாரி சிலுவையிலே மரித்தார். தம்முடைய மரணத்தினால் மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனையும் அழித்தார். பிசாசானவன் அழிக்கப்பட்டதினால், இதுவரையிலும் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்களாகிய நமக்கு, கிறிஸ்துவின் மூலமாய் விடுதலை உண்டாயிற்று.

நம்முடைய ஆத்துமாவுக்கு கிறிஸ்துவின் மூலமாய் விடுதலை உண்டாயிற்று. கிறிஸ்து நமக்காக மரித்ததினால், நாம் இனிமேல் மரணபயத்திற்கு அடிமைகளாக இருக்கவேண்டியதில்லை. நம்முடைய மரணத்தைப்பார்த்து நாம் பயப்பட வேண்டியதில்லை. நாம் பாவிகளாகயிருக்கையில் நம்முடைய சரீர மரணம் நமக்கு சத்துருவாகயிருந்தது. நாம் கர்த்தருடைய பிள்ளைகளாக ஆனபின்போ, நம்முடைய மரணம் நமக்கு ஒரு சிநேகிதனாகயிருக்கிறது.

மரணம் நம்மோடு ஒப்புரவாக்கப்பட்ட சிநேகிதனாகயிருக்கிறது. நம்முடைய மரணம் இனிமேல் சாத்தானுடைய கையில் இல்லை. கிறிஸ்து நமக்காக மரித்ததினால், பிசாசானவன் இனிமேல் நம்முடைய மரணத்திற்கு அதிகாரியல்ல. நம்முடைய மரணம் கிறிஸ்துவின் கரத்திலுள்ளது. நாம் மரித்தபின்பு நமக்கு என்ன சம்பவிக்குமோ என்று நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மரணபயம் தேவையற்றது. நாம் இனிமேல் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்களல்ல. நாம் மரித்த பின்பு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்மை பரலோகத்தில் கூட்டிச்சேர்ப்பார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுக்கு உண்மையுள்ளவராகவும், மனுஷருக்கு இரக்கமுள்ளவராகவும் இருக்கிறார். தேவனுடைய தேவகாரியங்களைக்குறித்து கிறிஸ்துவானவர் நீதியுள்ளவராகவே இருக்கிறார். ஜனத்தின் பாவங்களை தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே நிவிர்த்தி செய்கிறார். மனுஷனுடைய காரியங்களைக் குறித்தோ, கிறிஸ்துவானவர் மனுஷருக்கு ஆதரவு கொடுக்கிறவராகவும், ஆறுதல் செய்கிறவராகவும் இருக்கிறார்.

கிறிஸ்துவானவர் இப்பூமியில் மனுஷரூபமெடுத்திருந்தபோது, அவர் சோதிக்கப்பட்டார். பாடுபட்டார். அவருக்கு சோதனை, பாடுகள், வேதனை, உபத்திரவம் என்றால் என்ன என்று தெரியும். அவர் சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, சோதிக்கப்படுகிற நம்மைப்போன்ற மனுஷருக்கு அவர் உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். நம்முடைய ஆத்தும வருத்தத்தை எப்படி நீக்குவது என்று அவருக்குத் தெரியும். ஏனெனில் அவரும் தம்முடைய ஆத்துமாவில் வருத்தடைந்திருக்கிறார்.

நம்முடைய வியாதிகளின் வேதனை எப்படியிருக்குமென்று இயேசுவுக்குத் தெரியும். அதே வியாதிகளினால் கிறிஸ்துவும் வேதனைகளை அனுபவித்திருக்கிறார். மனுஷருக்கு பாவத்தினால் வியாதி உண்டாகிறது. கிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யாதவர். ஆனாலும் மனுஷருடைய பாவத்தினிமித்தமாய், அவரும் மனுஷருடைய வியாதிகளின் வேதனைகளை அனுபவித்தார். பிசாசானவன் கிறிஸ்துவையும் சோதித்தான். இயேசுவின் ஆத்துமாவும் சில சமயங்களில் கலங்கிற்று.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு சோதனைகள் உண்டு. பாடுகள் உண்டு. நாம் சோதிக்கப்படும்போது நமக்கு உதவி தேவைப்படுகிறது. நாம் பாடுகளை அனுபவிக்கும்போது நமக்கு ஆறுதல் தேவைப்படுகிறது. நாம் ஆபத்துக்களைச் சந்திக்கும்போது நமக்கு உதவியும் ஆதரவும் தேவைப்படுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராகயிருக்கிறார் (எபி 2:18).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கிறார். தேவனுடைய சமுகத்தில் அவர் எல்லா விதத்திலும் தம்முடைய சகோதரராகிய மனுக்குலத்திற்காக, தேவனோடு ஒப்புரவானார். ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு ஏதுவாக கிறிஸ்துவானவர் தம்மையே பாவநிவாரண பலியாக செலுத்தினார். கிறிஸ்துவின் பாவநிவாரண பலியை, மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற பதிலீடாக, தேவன் அங்கீகரித்தார். கிறிஸ்துவானவர் தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தி, தேவனுடைய காரியங்களைக் குறித்து உண்மையுள்ளவராகயிருக்கிறார். அதேவேளையில் மனுஷருடைய காரியங்களைக் குறித்தோ இரக்கமும் கிருபையுமுள்ளவராகயிருக்கிறார்.

3 அதிகாரம்

கிறிஸ்துவானவர் நமக்கு பிரதான ஆசாரியராகயிருக்கிறார் (எபி 3:1-6). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய இருதயங்களை கடினப் படுத்தாதிருக்கவேண்டும் (எபி 3:7-11). நம்மிடத்தில் பொல்லாத இருதயம் இராதபடிக்கு நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (எபி 3:12-19).

பிரதான ஆசாரியர் எபி 3 : 1-6

எபி 3:1. இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்;

எபி 3:2. மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தது போல, இவரும் தம்மை ஏற்படுத்தின வருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.

எபி 3:3. வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அது போல மோசேயைப்பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

எபி 3:4. ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்.

எபி 3:5. சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்.

எபி 3:6. கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ள வராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப் போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகா பிரதான ஆசாரியராயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவருடைய மனதிலும் இந்த சிந்தனை இருதயத்தின் ஆழத்தில் பதிந்திருக்கவேண்டும். இந்த நிருபத்தின் ஆசிரியர், இந்த நிருபத்தை வாசிக்கிறவர்களை, "பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே" என்று அழைக்கிறார்.

நாம் இந்த நிருபத்தினுடைய ஆசிரியரின் சகோதரராகவும் இருக்கிறோம். கிறிஸ்துவினுடைய சகோதரராகவும் இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவிலே நாம் எல்லா பரிசுத்த வான்களுக்கும் சகோதரராகயிருக்கிறோம். நாம் சாதாரணமான, உலகப்பிரகார சகோதரரல்ல. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பரிசுத்த சகோதரர். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பதவியினாலோ, பட்டத்தினாலோ யாரும் பரிசுத்தராகிவிடுவதில்லை. நம்முடைய இருதயம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய ஜீவியமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய பேச்சும், செயலும், கிரியைகளும், நடத்தைகளும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அப்போதுதான் நாம் பரிசுத்த சகோதரராயிருப்போம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பரமஅழைப்புக்குப் பங்குள்ளவர்களாயிருக் கிறோம். தேவனுடைய கிருபையின் ஆதாரங்களில் பங்குபெறுகிறோம். கிருபையின் ஆவியானவரிடத்தில் பங்குள்ளவர்களாக யிருக்கிறோம். தேவகிருபை நமக்கு பரத்திலிருந்து வருகிறது. நாம் பரமஅழைப்புக்கு பங்குள்ளவர்களாகயிருப் பதினால், பரலோகம் இப்பிரபஞ்சத்திற்குள் இறங்கிவந்து, மனுஷருடைய ஆத்துமாவிற்குள் பிரவேசிக்கிறது.

இந்த நிருபத்தின் ஆசிரியர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசேஷித்த வார்த்தைகளினால் விவரிக்கிறார். அவருடைய விசேஷித்த நாமத்தையும், விசேஷித்த ஊழிய ஸ்தானத்தையும், விவரிக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய அப்போஸ்தராகயிருக்கிறார். நாம் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நிரம்பியிருக்கிறோம். நம்மிடத்திலுள்ள விசுவாசத்தை நம்பி ஜீவிக்கிறோம். இந்த விசுவாசத்தை அப்போஸ்தலராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். சத்தியத்தை வெளிப்படுத்துகிறவர் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு விசுவாசத்தின் சத்தியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அதனால் அவர் நமக்கு அப்போஸ்தலராகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து நம்முடைய அப்போஸ்தலர் மாத்திரமல்ல. அவர் பிரதான ஆசாரியராயும் இருக்கிறார். நம்முடைய ஊழியத்திற்கு அவரே பிரதான ஆசிரியர். பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து செலுத்திய பாவநிவாரண பலி தேவனுடைய பரிசுத்த சமுகத்தில் அங்கீகரிப்பட்டிருக்கிறது. நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, பிதாவின் சமுகத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவிலே மத்தியஸ்ராகயிருந்து, மத்தியஸ்த ஊழியத்தைச் செய்கிறார். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவது, பிரதான ஆசாரியருடைய பலியையும், அவர் நமக்காக பரிந்து பேசுவதையும் சார்ந்திருக்கிறது.

அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற இயேசுவானவர், கிறிஸ்துவாகவும் இருக்கிறார். இவரே அபிஷேகம்பண்ணப்பட்ட மேசியா. இவர் நம்முடைய இயேசுவாகயிருக்கிறார். நம்முடைய இரட்சகராகவும், பரமவைத்தியராகவும் இருக்கிறார்.

கர்த்தர் நமக்கு தம்முடைய ஊழியத்தில் ஒரு பங்கை பொறுப்பாய் ஒப்புக்கொடுத்திருக்கிறார். நாம் கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பார்க்கவேண்டும். கிறிஸ்துவானவரே நமக்கு ஊழியஸ்தானத்தையும், ஊழிய அந்தஸ்தையும் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் ஊழியம் மகிமை நிறைந்தது. அது உன்னதமானது. இயேசுகிறிஸ்துவே நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவர். அவரே நம்முடைய விசுவாசத்தை முடித்து வைக்கிறவர். நம்முடைய விசுவாசத்திற்கு இயேசுகிறிஸ்து காரணராகவும், ஆதாரமாகவும் இருக்கிறார். நம்முடைய ஜீவியத்திலும், ஊழியத்திலும் நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையே கவனித்துப் பார்க்கவேண்டும்.

நாம் இப்பிரபஞ்சத்தில் பரிசுத்த சகோதரராயிருக்கலாம். பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாயிருக்கலாம். கர்த்தருடைய ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்து கொண்டிருக்கலாம். நாம் எப்படிப் பட்டவர்களாகயிருந்தாலும், நாமும் இயேசு கிறிஸ்துவைக் கவனித்துப் பார்க்க வேண்டும். நாம் செய்கிற ஊழியத்தைவிட, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அதிகமாய் ஊழியம் செய்தவர். அவர் அப்போஸ்தலராகவும், பிரதான ஆசாரியராகவும் ஊழியம் செய்தவர்.

பரிசுத்த சகோதரராகிய நாம், கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பார்த்து, நம்முடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் ஆசீர்வாதம் பெறவேண்டும். கிறிஸ்துவைப் போல ஜீவிக்கவேண்டும் என்றும், அவரைப்போல உண்மையாய் ஊழியம் செய்யவேண்டும் என்றும், மேன்மையான தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் எப்போதும் நம்மையே கவனித்துக் கொண்டிருக்கக்கூடாது. நம்முடைய குடும்பத்தை மாத்திரம் எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கக்கூடாது. இயேசுவைக் கவனித்துப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நமக்குள் மெய்யான சந்தோஷம் இருக்கும். நாம் செய்கிற ஊழியம் ஜீவனுள்ளதாகயிருக்கும் (எபி 3:1).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அப்போஸ்தலராகவும், பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார். தம்மை இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினவருக்கு இயேசுகிறிஸ்து உண்மையுள்ள வராயிருக்கிறார் (எபி 3:2). மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராயிருந்தார். பழைய ஏற்பாட்டுக்காலத்து, யூதருடைய சபையில், மோசே தன்னுடைய ஊழியத்தை உண்மையாய் நிறைவேற்றினார்.

மோசேயைப்போலவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்மை ஊழியத்திற்கு ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். மோசே பழைய ஏற்பாட்டுக்காலத்தில் உண்மையுள்ள வராயிருந்தார். இயேசுகிறிஸ்துவோ புதியஏற்பாட்டுக் காலத்திற்குரியவர். இயேசுகிறிஸ்து தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ள வராயிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மோசேயைவிட அதிக மகிமையுள்ளவர். மேன்மையுள்ளவர். கிறிஸ்துவானவர் மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். கிறிஸ்துவே வீட்டை உண்டுபண்ணினவர். மோசே வீட்டிலுள்ள ஒரு அங்கத்தினர். கிறிஸ்துவானவர் தெய்வத்துவமுள்ளவர். அவர் சபையைத் திட்டமிட்டு, அதை தம்முடைய சித்தத்தின் பிரகாரம் வடிவமைத்திருக்கிறார். கிறிஸ்துவானவர் தம்முடைய சபையை கட்டியெழுப்பியிருக்கிறார். தம்முடைய தெய்வீக பிரசன்னத்தினால் சபையை முடிசூட்டியிருக்கிறார். தேவனுடைய வீட்டில் அவருடைய மெய்யான மகிமை தங்கியிருக்கிறது.

கிறிஸ்துவானவரே வீட்டை உண்டுபண்ணினவர். அவரே வீட்டிற்குத் தலைவராகயிருக்கிறார். மோசே தேவனுடைய வீட்டில் உண்மையுள்ள வராயிருந்து ஊழியம் செய்தார். கிறிஸ்துவானவரோ தேவனுடைய ஒரே பேறான நித்திய குமாரன். கிறிஸ்துவே சபையை ஸ்தாபித்தவர். சபை கிறிஸ்துவுக்கே உரியது. கிறிஸ்துவே தம்முடைய சபையை, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஆளுகை செய்கிறவர்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்கு பாத்திரராயிருக்கிறார். வீட்டை உண்டுபண்ணினவர், வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவர் (எபி 3:3). எந்த வீடும் ஒருவரால் உண்டாக்கப்படும். எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன். தேவனே தம்முடைய சபையாகிய வீட்டை உண்டுபண்ணினவர் (எபி 3:4).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமே அவருடைய வீடாகயிருக்கிறோம். நாம் அவருடைய வீடாயிருக்க வேண்டுமென்றால், நம்பிக்கையினால் உண்டாகும் தைரியத்தையும், மேன்மை பாராட்டலையும், நாம் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்துவின் வழியில் நாம் சிறிதுகாலம் சந்தோஷமாய் நடந்தால் போதாது. இயேசுகிறிஸ்துவை நாம் முடிவுபரியந்தம் விசுவாசிக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்தில் நாம் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கவேண்டும். முடிவுபரியந்தம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நாமும் அவருடைய வீடாயிருப்போம் (எபி 3:6).

எந்த வீடும் ஒருவரால் உண்டாக்கப்படும். எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன். நம்மை உண்டுபண்ணினவரும் தேவனே.

தேவனுடைய வீட்டிலே மோசே பணிவிடைக்காரராயிருந்தார். அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள வராயிருந்தார் (எபி 3:5). கிறிஸ்துவானவரோ தம்முடைய வீட்டை உண்டுபண்ணியவர். வீட்டை உண்டுபண்ணியவர், வீட்டைப் பார்க்கிலும் அதிகக் கனத்திற்குரியவர். இவ்வாறாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

வனாந்தரத்திலே
எபி 3 : 7-11

எபி 3:7. ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்,

எபி 3:8. வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.

எபி 3:9. அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள்.

எபி 3:10. ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி;

எபி 3:11. என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அப்போஸ்தலராகவும், பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார். கிறிஸ்துவானவர் இந்த ஊழியத்திற்கு தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராயிருந்தாலும், அவர் தேவனுடைய வீட்டிலே பணிவிடைக்காரராய் ஊழியம் செய்து உண்மையுள்ளவராயிருந்தார். இயேசுகிறிஸ்துவோ தேவனுடைய வீட்டை உண்டுபண்ணினவர். வீட்டை உண்டுபண்ணினவராகிய இயேசுகிறிஸ்து, மோசேயைப் பார்க்கிலும் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

இந்த நிருபத்தின் ஆசிரியர் இந்தச் சத்தியத்தைச் சொல்லிவிட்டு நமக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளையும் எச்சரிப்புக்களையும் சொல்லுகிறார். இதற்காக சங்கீதம் 95:7-11 ஆகிய வசனங்களை மேற்கோளாகச் சொல்லுகிறார்.

"அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" (சங் 95:7-11).

கர்த்தருடைய பிள்ளைகள் கிறிஸ்துவின் சத்தத்திற்கு உடனடியாக செவிகொடுக்கவேண்டும். அவருடைய சத்தத்தைக் கேட்கவேண்டும். அவருடைய வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இன்று அவருடைய சத்தத்தை நாம் கேட்போமானால், அவருடைய சத்தத்திற்கு இன்றே செவிகொடுத்துவிடவேண்டும். அவருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல் நம்முடைய இருதயங்களைக் கடினப்படுத்தக் கூடாது. இயேசு கிறிஸ்துவின் சத்தத்தை இன்று கேட்டு விட்டு, நாளைக்கு கீழ்ப்படியலாமென்று காலதாமதம்பண்ணக்கூடாது. ஒருவேளை நமக்கு "நாளைக்கு" என்னும் நாள் வாராமலேயே போய்விடலாம். இன்றே இரட்சணியநாள் (எபி 3:7).

இயேசு கிறிஸ்துவினுடைய சத்தத்தைக் கேட்டு, அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் நம்முடைய இருதயங்களைக் கடினப்படுத்தக்கூடாது. இயேசு கிறிஸ்துவின் ஆலோசனைகளுக்கும், அழைப்புக்களுக்கும் நம்முடைய செவிகளை அடைத்துக் கொள்ளக்கூடாது. நம்முடைய இருதயங்களைக் கடினப் படுத்துவதினால், நம்முடைய ஜீவியங்களில் ஏராளமான பாவங்கள் உற்பத்தியாகும். கீழ்ப் படியாமையும், இருதயக்கடினமும் அநேக பாவங்களுக்கு ஆதாரமாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள். ஆனால் கீழ்ப்படியவில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, கர்த்தருக்கு கோபமூட்டினார்கள். வனாந்தரத்தில் பிரயாணம் செய்த இஸ்ரவேல் ஜனங்கள் யூதர்களுக்கு பிதாக்களாகயிருக்கிறார்கள். நிருபத்தின் ஆசிரியர் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது "உங்கள் பிதாக்கள்" (எபி 3:9) என்று சங்கீதக்காரர் சொல்லுகிற வார்த்தையை இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார்.

இந்தச் சம்பவம் யாத்திராகமம் 17:2-7 ஆகிய வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி: நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார்கள். அதற்கு மோசே: என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள் என்றான். ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த்தவனமாயிருந்த படியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடு மாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர் என்றார்கள். மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்டு: இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே என்றான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக் கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாக கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான். இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்" (யாத் 17:2-7).

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே தேவனுக்கு கோபமூட்டினார்கள். சோதனை நாட்கள் பொதுவாக கோபமுண்டாகிற நாட்களாகவே இருக்கிறது. மற்றவர்கள் செய்கிற பாவங்கள் நமக்கு எச்சரிப்புக்களாக இருக்கவேண்டும். நம்முடைய பெற்றோரின் பாவங்களையும், அதற்காக அவர்கள் அனுபவிக்கிற தண்டனைகளையும் நாம் நினைவுகூரவேண்டும். அவர்களுடைய பாவமான முன்மாதிரிகளைப் பின்பற்றாமல், பாவங்களிலிருந்து விலகி ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும்.

யூதருடைய முற்பிதாக்கள் கர்த்தரை நம்பவில்லை. அவரைச் சோதித்தார்கள். மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். கர்த்தரை பரீட்சை பார்த்தார்கள். தேவனுடைய சத்தத்திற்கு இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே செவிகொடுக்கவில்லை. அவர்கள் நாற்பது வருஷகாலமாக வனாந்தரத்திலே பிரயாணம் செய்தார்கள். இந்த நாற்பது வருஷகாலம் முழுவதும் அவர்கள் தேவனுடைய கிரியைகளைக் கண்டார்கள் (எபி 3:9).

கர்த்தர்தாமே தம்முடைய பலத்த கரத்தினால், எகிப்தின் அடிமைத்தனத்தில் சிக்கியிருந்த இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து, மீட்டுக்கொண்டு வந்தார். செங்கடலைக் கடக்கச் செய்தார். வனாந்தரத்திலே அவர்களை வழிநடத்தினார். அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது தேவன் அவர்களுடைய தேவைகளையெல்லாம் சந்தித்து அவர்களை ஆதரித்தார். நாற்பது வருஷகாலமாக இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கிரியைகளைக் கண்டார்கள். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள். ஆனால் அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள். நாற்பது வருஷங்களாக அவர்கள் தேவனுக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்து வந்தார்கள்.

அவர்கள் தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்காமல், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தியதே, அவர்கள் செய்த பாவங்களுக்கு முக்கியமான காரணம். அவர்கள் தங்கள் இருதயங்களில் பாவம் செய்தார்கள். இருதயங்களினால் செய்த பாவங்கள் மேலும் பல பாவங்களை உற்பத்திபண்ணிற்று. ஆரம்பத்தில் இருதயத்தில் பாவம் செய்தவர்கள், பின்பு தங்கள் உதடுகளினாலும், வார்த்தைகளினாலும் பாவம் செய்தார்கள். இதற்கு பின்பு தங்கள் கிரியைகளிலும், ஜீவியங்களிலும், நடத்தைகளிலும் பாவம் செய்தார்கள். கர்த்தருடைய கிரியைகளை நாற்பது வருஷமாக கண்டிருந்தும், அவர்கள் கர்த்தரைத் தொடர்ந்து பரீட்சை பார்த்தார்கள். கர்த்தரைச் சோதித்தார்கள் (எபி 3:9).

வனாந்தரத்தில் பிரயாணம் செய்த இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய வழிகளை அறியாதவர்கள். தேவன் நாற்பது வருஷகாலமாக அவர்களோடு கூடயிருந்தார். அக்கினி ஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் தேவன் தம்முடைய பிரசன்னத்தை அவர்களுக்கு பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தினார். தேவன் அவர்களுக்கு முன்பாகச் சென்று அவர்களை வழிநடத்தினார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தேவனுடைய வழிகளை அறியாதவர்களாகயிருந்தார்கள்.

வனாந்தரத்தில் பிரயாணம் செய்த இஸ்ரவேலர்கள் தேவனுடைய பாதுகாப்பை அறிந்துகொள்ளவில்லை. அவருடைய பராமரிப்பை அறிந்துகொள்ளவில்லை. அவருடைய பிரமாணங்களையும் கட்டளைகளையும் அறிந்து கொள்ளவில்லை. தேவனோ அவர்கள் மீது நீடியபொறுமையுள்ளவராயிருந்தார். அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனங்களாயிருந்தார்கள். தேவனோ கீழ்ப்படியாத இஸ்ரவேல் புத்திரரை உடனடியாகத் தண்டித்துவிடவில்லை.

ஆனாலும் அவர்கள் தேவனைத் தொடர்ந்து சோதித்ததினாலும், தேவனை தொடர்ந்து பரீட்சை பார்த்ததினாலும், தேவன் அந்த சந்ததியை அரோசித்தார் (எபி 3:10). தேவன் நீடியபொறுமையுள்ளவராக இருந்தாலும், வனாந்தரத்தில் தமக்குக் கீழ்ப்படியாத சந்ததியை நியாயமாய் நியாயந்தீர்த்தார். பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பாவம் செய்து, தங்கள் பாவங்களின் சம்பளத்தை வனாந்தரத்திலேயே பெற்றுக் கொண்டார்கள்.

மனுஷர் தேவனுக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்யும்போது, அவர் மனுஷர்மீது எப்போதும் நீடியபொறுமையுள்ளவராயிருப் பதில்லை. தம்முடைய நீதியினிமித்தம் அவர் பாவம் செய்கிற மனுஷர்மீது கோபப்படுகிறார். தம்முடைய ஜனங்கள் தமக்கு விரோதமாகப் பாவம் செய்வதினால், தேவனுடைய இருதயம் துக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே தேவனுக்கு விரோதமாக நாற்பது வருஷங்களாக பாவம் செய்து, தேவனுடைய ஆவியானவரைத் துக்கப்படுத்தினார்கள்.

அவர்களுடைய பாவத்தினிமித்தமாய் அவர்களுடைய ஆவிகளும் துக்கமடைந்தது. தேவன் அவர்களை நீதியாய் நியாயந்தீர்க்கும்போது, அவர்களால் தண்டனையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய இருதயம் துக்கமடைந்தது.

பல சமயங்களில் தேவன் நீடியபொறுமையுள்ளவராயிருந்து, அவர்கள் செய்த பாவங்களினிமித்தம் அவர்களைத் தண்டிப்பதில்லை. அவர்களுக்குத் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார். அவர்கள் தேவனுடைய இரக்கத்தையும் அன்பையும் நினைத்து, தங்கள் இருதயத்தில் கலங்கினார்கள். தாங்கள் செய்த பாவங்களை நினைத்து துக்கப்பட்டார்கள்.

வனாந்தரத்திலே தேவனுக்கு கோபமூட்டின இஸ்ரவேல் ஜனங்கள், தம்முடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று தேவன் ஆணையிட்டார். அவர் இந்த ஆணையை தம்முடைய கோபத்திலே சொன்னார். நம்முடைய பாவங்களில் நாம் தொடர்ந்து ஜீவிப்போமென்றால், தேவகோபம் நமக்கு விரோதமாகப் பற்றியெறியும். நம்முடைய நிலமை தடுமாறும். நமக்கு தேவனுடைய சமுகத்தில் இளைப்பாறுதல் கிடைக்காது. பாவம் செய்தவர்கள் ஆத்தும இளைப்பாறுதல் இல்லாமல், எல்லா இடங்களுக்கும் நிலையில்லாமல் சுற்றி அலைகிறவர்களாக இருப்பார்கள். தேவனுடைய கோபாக்கினையின்கீழ் நமக்கு இளைப்பாறுதல் இல்லை (எபி 3:11).

எச்சரிக்கையாயிருங்கள் எபி 3 : 12-19

எபி 3:12. சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.

எபி 3:13. உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்.

எபி 3:14. நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்.

எபி 3:15. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே.

எபி 3:16. கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசேயினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்களல்லவா?

எபி 3:17. மேலும், அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்? பாவஞ் செய்தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே.

எபி 3:18. பின்னும், என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக்குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக்குறித்தல்லவா?

எபி 3:19. ஆதலால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற் போனார்களென்று பார்க்கிறோம்.

நிருபத்தின் ஆசிரியர் எபிரெயருக்கு சரியான எச்சரிப்புக்களைச் சொல்லுகிறார். "நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" என்று அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார். எபிரெயர்களாகிய யூதர்கள் தங்களுடைய நிலமையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். தங்களுக்குள்ளேயும், தங்களுக்கு வெளியேயும் இருக்கிற சத்துருக்களுக்கு விரோதமாக யூதர்கள் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். மற்றவர்கள் அழிந்துபோவது நமக்கு எச்சரிப்பாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்று.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகக்கூடாது. அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் நம்மிடத்தில் இருக்கக்கூடாது. இதுகுறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அவிசுவாசமுள்ள இருதயம் பொல்லாத இருதயமாயிருக்கிறது. நாம் தேவனைவிட்டு விலகிப்போவதற்கு அவிசுவாசமுள்ள இருதயமே காரணம். நம்முடைய இருதயம் பொல்லாததாயிருப்பதினால் அது தேவனைவிட்டுப் பிரிந்து பாவத்தோடு ஐக்கியமாகிறது. தேவனிடத்தில் நாம் வைத்திருக்கிற விசுவாசம் நமக்குள்ளே குறைந்துபோகுமென்றால், நாம் தேவனைவிட்டு விலகிப்போய்விடுவோம் *(எபி 3:12)*.

அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழியும் இந்த நிருபத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. நமக்கு நாளையதினம் என்பது நிச்சயமில்லாத ஒருநாள். நாளையதினத்திற்கு நாம் அதிகாரியல்ல. ஆகையினால் நாம் எதை செய்தாலும் அதை இன்றே செய்துவிடவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் நீக்கவேண்டிய காரியங்களையும், சேர்த்துக் கொள்ளவேண்டிய காரியங்களையும் இன்றே செய்து முடித்துவிடவேண்டும்.

பாவத்தின் வஞ்சனையினாலே நம்முடைய இருதயம் கடினப்பட்டுப்போய் விடக்கூடாது. இதற்காக கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோரும், இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லவேண்டும். காலதாமதம் செய்வோமென்றால் பாவம் நம்மை வஞ்சித்துவிடும். சத்துரு நமக்கு அநேக காரியங்களை வாக்குப் பண்ணுவான். ஆனால் ஒன்றையும் நிறைவேற்றமாட்டான். பாவமும் பிசாசின் கிரியைதான். பாவம் நமக்கு அநேக சந்தோஷங்களை ஆசையாய் வாக்குப்பண்ணும். ஆனால் ஒன்றும் நிறைவேறாது. நமக்கு சந்தோஷமும் கிடைக்காது. சமாதானமும் கிடைக்காது. பாவத்தின் வஞ்சனையினால் நம்முடைய இருதயம் கடினப்பட்டுப்போகும். நாம் ஒரு பாவம் செய்யும்போது, அந்தப் பாவம் நமக்குள் வேரூன்றி, அதுவே நம்முடைய சுபாவமாக மாறிவிடும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் பொல்லாத இருதயத்திற்குப் பதிலாக நல்ல இருதயம் இருக்கிறது. அவர்களுடைய இருதயம் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போவதில்லை. கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறவர்கள், அந்த நம்பிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும். நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை, முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருக்கிறோம். இது கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இயேசு கிறிஸ்துவிலும், அவர் இதுவரையிலும் செய்து முடித்திருக்கிற கிரியைகளிலும், அவரால் செய்யப்போகிற கிரியையிலும் நாம் பங்குள்ளவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவினிடத்தில் நாம் பங்குள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றால், நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும் *(எபி 3:14)*.

நம்முடைய சுயமுயற்சியினாலே, நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை, நம்மால் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ள முடியாது. நமக்கு இந்த விஷயத்தில் தேவனுடைய உதவியும் ஒத்தாசையும் தேவைப்படுகிறது. தேவனுடைய சர்வவல்லமையானது, நமக்கு உதவி செய்யும்போது, நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை, நம்மால் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ள முடியும். தேவன்தாமே நம்முடைய விசுவாசத்தை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ள உதவிசெய்வார்.

தேவனுடைய ஆவியானவர், நம்மை தேவனுடைய வழிகளில் வழிநடத்துகிறார். நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளை விசுவாசத்தோடு பின்பற்றுகிறோம். அவரைப் பின்பற்றுகிற நாம் இடையில் அவரைவிட்டுப் பிரிந்துபோய்விடக்கூடாது. ஜீவனுடைய தேவனைவிட்டு வழிவிலகி போய்விடக்கூடாது. முடிவுபரியந்தம் நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ள தேவஆவியானவர் தாமே நமக்கு உதவிசெய்வார்.

ஏராளமான விசுவாசிகள், தாங்கள் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில், அதிக உற்சாகத்தோடிருப்பார்கள். அவர்களுடைய விசுவாசமும் சிறப்பாக இருக்கும். கர்த்தருக்காக துடிப்பாய் ஊழியம் செய்வார்கள். இந்த வேகமும், விருவிருப்பும், துடிப்பும் முடிவுபரியந்தம் நிலைத்து நிற்கவேண்டும். ஆனால் சில விசுவாசிகளோ ஆரம்பத்தில் வேகம் காண்பித்துவிட்டு, பின்பு சோர்ந்து போய்விடுவார்கள். சிலர் விசுவாசத்தை விட்டே விலகிப்போய்விடுவார்கள். சிலரிடத்தில் இரட்சிப்பின் சந்தோஷமே இருக்காது. ஜீவனற்றவர்கள்போல இருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே கர்த்தருக்கு கோபமூட்டினார்கள். கர்த்தருடைய சத்தத்தைக்கேட்டும், அதற்குக் கீழ்ப்படியாமல், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள். எல்லோரும் கர்த்தருக்கு கோபமூட்டவில்லை. எல்லோரும் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தவில்லை. ஒரு சிலர் மாத்திரமே கர்த்தருக்கு கோபமூட்டினார்கள். அவர்கள் மாத்திரமே தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள். தேவனுக்கு பயந்து, அவருக்குக் கீழ்ப்படிகிற ஜனங்கள், எல்லா காலத்திலும், எல்லா தேசங்களிலும் நீதியாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் (எபி 3:15,16).

கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கமாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு பரலோகத்தில் பங்குமில்லை, பாத்தியமுமில்லை. வனாந்தரத்திலே பாவம் செய்தவர்கள், வனாந்தரத்திலேயே செத்துப்போனார்கள். அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்று.

தமக்கு விரோதமாக கீழ்ப்படியாத ஜனங்கள் நிமித்தமாய், தேவன் தம்முடைய இருதயத்தில் துக்கமடைந்தார். அவர் தம்முடைய ஆவியில் கலங்கினார். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டும், அவருக்குக் கீழ்ப்படியாமல், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தின ஜனங்களை நினைத்து கர்த்தர் துக்கப்பட்டார். அவருடைய இருதயம் வேதனையடைந்தது. அவர்கள் தேவனைக் கோபமூட்டினார்கள். அவர்கள் மனந்திரும்புவதற்கு கர்த்தர் அநேக வாய்ப்புக்களைக் கொடுத்தார். ஆனால் அவர்களோ மனந்திரும்பாமல், கர்த்தருக்கு விரோதமாகத் துணிகரமாய்ப் பாவம் செய்தார்கள்.

4 அதிகாரம்

கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற நமக்கு சுவிசேஷத்தின் மூலமாய் அநேக சிலாக்கியங்கள் உண்டாயிருக்கிறது. மோசேயின் காலத்தில், யூதமார்க்கத்து சபையின் மூலமாய் யூதர்களுக்குக் கிடைத்த சிலாக்கியத்தைவிட, நாம் இப்போது பெற்றுக்கொள்கிற சிலாக்கியம் அதிகம் (எபி 4:1-4). பழைய ஏற்பாட்டுக்காலத்து யூதர்கள் விசுவாசமில்லாமல் சுவிசேஷத்தைக் கேட்டார்கள். அதனால் அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை (எபி 4:4-8).

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள். அவரை விசுவாசியாதவர்கள் கிறிஸ்துவின் இளைப்பாறுதலில் பிரவேசிக்கமாட்டார்கள் (எபி 4:3-10). கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் விசுவாச முள்ளவர்களாகவும், கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருக்கவேண்டும் (எபி 4:11-16).

இளைப்பாறுதல்
எபி 4 : 1-10

எபி 4:1. ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்.

எபி 4:2. ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை.

எபி 4:3. விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்; அவருடைய கிரியைகள் உலகத்தோற்றமுதல் முடிந்திருந்தும்: இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்.

எபி 4:4. மேலும், தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று ஏழாம்நாளைக் குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்.

எபி 4:5. அன்றியும், அவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை என்றும் அந்த இடத்திலேதானே சொல்லியிருக்கிறார்.

எபி 4:6. ஆகையால், சிலர் அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற காரியமாயிருக்கிறபடியினாலும், சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள் கீழ்ப்படியாமையினாலே அதில் பிரவேசியாமற் போனபடியினாலும்,

எபி 4:7. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள் என்று வெகுகாலத்திற்குப் பின்பு தாவீதின் சங்கீதத்திலே சொல்லி யிருக்கிறபடி, இன்று என்று சொல்வதினாலே பின்னும் ஒருநாளைக் குறித்திருக்கிறார்.

எபி 4:8. யோசுவா அவர்களை இளைப் பாறுதலுக்குட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக்குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரே.

எபி 4:9. ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது.

எபி 4:10. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.

சுவிசேஷத்தின் காலத்தில், கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு மேன்மையான சிலாக்கியம் உண்டாயிருக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குட் பட்டவர்களுக்கு உண்டாயிருந்த சிலாக்கியங்களைவிட, இப்போது கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டாயிருக்கிற சிலாக்கியம் மிகவும் மேன்மையானது. தேவனுடைய இளைப்பாறுதலில் நாம் பிரவேசிப்போம் என்னும் வாக்குத்தத்தம் நமக்கு உண்டு. இது ஆவிக்குரிய இளைப்பாறுதல். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பூமியிலிருந்து பரமேறிப்போனபோது, தம்முடைய கடைசி வாக்குத்தத்தமாக இதை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

கிறிஸ்துவானவர் நமக்குக் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவருடைய இளைப்பாறுதலில் நாம் பிரவேசிக்க வேண்டும். இளைப்பாறுதலில் பிரவேசிக்காமல் நாம் பின்வாங்கிப்போய் விடக்கூடாது. இதனிமித்தம் நாம் மிகவும் ஜாக்கிரதையாய் ஜீவிக்கவேண்டும். தேவன் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தை நாம் அடையாமல் போய்விடுவோமோ என்னும் பயம் நம்மிடத்தில் காணப்படவேண்டும்.

தேவன் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற இளைப்பாறுதல் பரிபூரணமான இளைப்பாறுதல். இது பரலோகத்தில் உண்டாயிருக்கிற நித்திய இளைப்பாறுதல். இந்த இளைப் பாறுதலில் நாம் பிரவேசிக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஜனங்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதுபோலவே, பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுவிசேஷம் ஒன்றுதான். அவர்கள் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்டதுபோல, நாமும் அதே சுவிசேஷத்தைப் பெற்றிருக்கிறோம். சுவிசேஷம் அவர்களுக்குப் பரிசுத்தமாயிருந்ததுபோல, நமக்கும் பரிசுத்தமாயிருக்கிறது. சுவிசேஷத்தில் வித்தியாசமில்லை.

ஆனாலும் பழைய ஏற்பாட்டுக்காலத்து யூதர்களுக்கு சுவிசேஷத்தினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டார்கள். ஆனால் அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. அவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டார்கள். விசுவாசமில்லாதவர்களுக்கு ஒன்றும் பிரயோஜனப்படாது (எபி 4:2).

பழைய ஏற்பாட்டுக்காலத்து யூதர்களுக்கு சுவிசேஷத்தின் வசனம் பிரசங்கிக்கப்பட்டதுபோல, நமக்கும் பிரசங்கிக்கப்பட்டிருக்கிறது. நாமோ சுவிசேஷ வசனத்தை விசுவாசத்தோடு கேட்கிறோம். ஆகையினால் நாம் கேட்ட வசனம் நமக்கு பிரயோஜனப்படுகிறது. கிறிஸ்துவின் வசனத்தை விசுவாசித்தவர்களாகிய நாமோ கிறிஸ்துவின் இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம். தேவனுடைய வசனத்தினால் தெய்வீக ஞானத்தைப் பெற்றுக் கொள்கிறோம். பிரயோஜனமில்லாமல் வசனத்தைக் கேட்டவர்களைவிட, வசனத்தைக் கேட்டு பிரயோஜனப்பட்டவர்களே பாக்கியவான்கள்.

சுவிசேஷ வசனத்தைக் கேட்டு பிரயோஜனப்படாதவர்கள், தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகப்பெரிய நஷ்டத்தை அடைகிறார்கள். பிரயோஜனப் படாதவர்கள் நஷ்டமடைகிறார்கள். சுவிசேஷத்தினால் நமக்கு பிரயோஜனம் உண்டாகவில்லையென்றால் அது சுவிசேஷத்தின் குறைவு அல்ல. நம்முடைய விசுவாசத்தில்தான் குறைவு இருக்கிறது. நாம் அவிசுவாசத்தோடு சுவிசேஷ வசனத்தைக் கேட்டால் நமக்கு பிரயோஜனம் உண்டாகாது.

நாம் கேட்கிற சுவிசேஷத்தின் வசனங்களை விசுவாசத்தோடு நம்முடைய ஆத்துமாவில் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆத்துமாவில் விசுவாசம் இல்லையென்றால், நாம் கேட்கிற வசனத்தினால் நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. நாம் கேட்கிற ஒவ்வொரு வசனத்தோடும் விசுவாசத்தை இணைக்கவேண்டும். நாம் வசனத்தைக் கேட்கும்போதே, வசனத்திற்குக் கீழ்ப்படிந்து, அதன் பிரகாரமாக ஜீவிக்கவேண்டும். நாம் கேட்ட வசனத்தின் பிரகாரம் பேசவேண்டும். கிரியை நடப்பிக்கவேண்டும் (எபி 4:2).

சுவிசேஷத்தின் மூலமாய் பிரயோஜனப் பட்டவர்களிடத்தில், பரிசுத்தமான பயம் நிரம்பியிருக்க வேண்டும். அவர்களிடத்தில் பக்தி வைராக்கியம் காணப்படவேண்டும். பயபக்தியோடு ஜீவிக்கவேண்டும். விசுவாசத்தினால் தங்களுடைய ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறவர்கள், அவிசுவாசத்தினால் தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை இழந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை இழந்துபோவோமென்றால் நம்முடைய நிலமை பரிதாபமானதாகயிருக்கும். ஆகையினால் நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய வாக்குத்தத்தை அடையாமல், பின்வாங்கிப் போகிறவர்களாக காணப்படக்கூடாது. நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

சுவிசேஷத்தின் மூலமாய் நாம் ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய அவிசுவாசத்தின் மூலமாய் இரட்சிப்பை இழந்துபோவோமென்றால் நம்முடைய நிலமை பரிதாபமாகயிருக்கும். ஆகையினால் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைக் குறித்தும், நாம் பெற்றிருக்கிற இரட்சிப்பைக் குறித்தும் மிகுந்த ஜாக்கிரதையாய் ஜீவிக்கவேண்டும். நாம் பெற்றுக்கொண்டதை இழந்துபோவோமோ என்னும் பரிசுத்தமான பயம் நம்மிடத்தில் காணப்படவேண்டும்.

நமக்கு எல்லாம் தெரியும் என்று ஆணவத்தோடிருப்போமென்றால், நமக்கு அழிவு நிச்சயம். தன்னை நிற்கிறவன் என்று சொல்லுகிறவன், கீழே விழாதிருக்கும்படி எச்சரிக்கையோடிருக்க வேண்டும். எச்சரிப்பில்லாமல், பயபக்தியில்லாமல், விசுவாசமில்லாமல், பரிசுத்தமில்லாமல், எல்லாம் நமக்கு நல்லபடியாகவே நடக்குமென்று யூகத்தில் முன்னேறிச் செல்வோமென்றால், நமக்கு அழிவு நிச்சயம். இப்படிப்பட்டவர்கள் அழிவின் பாதையில்தான் முன்னேறிச் செல்வார்கள். யூகம் வேறு. விசுவாசம் வேறு.

சுவிசேஷத்தின் வசனங்களை உண்மையாகவே விசுவாசிக்கிறவர்களுக்கு தெய்வீக ஆசீர்வாதமுண்டு. கிறிஸ்துவின் வசனங்களை விசுவாசித்தவர்களாகிய நாமே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம் (எபி 4:3). இந்தச் சத்தியம் மெய்யானது. கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர் இந்தச் சத்தியத்தை ருசிபார்த்திருக்கிறார்கள். ஆசீர்வாதம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்தின் வசனத்தை விசுவாசித்து, கிறிஸ்துவின் இளைப் பாறுதலில் பிரவேசித்திருக்கிறார்கள்.

தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நமக்கு தேவனுடைய உதவி உண்டு. நம்முடைய கிரியைகளையெல்லாம் முடிப்பதற்கும், அதன்பின்பு நம்முடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு உதவிசெய்வார். தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்ததுபோல, அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஆவிக்குரிய ஓய்வை நியமித்திருக்கிறார்.

யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்தில் இளைப்பாறுதலுக்காக வழிநடத்திச் சென்றார். அது உலகப்பிரகாரமான இளைப்பாறுதல். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ நமக்கு நித்திய இளைப்பாறுதலை வாக்குப் பண்ணியிருக்கிறார் (எபி 4:8). இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தில் பிரவேசித்ததினால் உண்டான இளைப்பாறுதலைவிட, மேன்மையான ஆவிக்குரிய இளைப்பாறுதல் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிமேல்தான் வரப்போகிறது. இயேசுகிறிஸ்துவின் வசனங்களை விசுவாசிக்கிறவர்கள் மாத்திரமே அந்த ஆவிக்குரிய நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள். தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்ததுபோல, கர்த்தரை விசுவாசிக்கிற பரிசுத்தவான்களும் தங்களுடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பார்கள் (எபி 4:10). விசுவாசிகள் தங்களுடைய ஆவிக்குரிய ஓட்டத்தை விசுவாசத்தோடும், பொறுமையோடும் ஓடிமுடித்து, நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்கள்.

சுவிசேஷத்தின் வசனத்தை விசுவாசமில்லாமல் கேட்டால், நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. விசுவாசியாதவர்கள் ஆவிக்குரிய இளைப்பாறுதலில் ஒருபோதும் பிரவேசிப்பதில்லை. சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள்கூட, தாங்கள் கேட்ட சுவிசேஷத்தை விசுவாசியாமற் போனபடியினாலும், வசனங்களுக்கு கீழ்ப்படியாமல் போனபடியினாலும், கிறிஸ்துவின் இளைப்பாறுதலில் பிரவேசியாமல் போய்விட்டார்கள் (எபி 4:6).

சுவிசேஷத்தின் வசனங்களை விசுவாசியாதவர்கள் ஆவிக்குரிய இளைப்பாறுதலில் பிரவேசிக்கமாட்டார்கள். இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். இனிவரப்போகிற பரலோக ஜீவியத்தில் தேவனுடைய மகிமையையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். கர்த்தரை விசுவாசியாதவர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிப்பதில்லை. பரலோகம் தேவனுடைய ஜனங்களுக்காகவே ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறது.

கர்த்தரை விசுவாசியாதவர்களோ பாவத்தில் ஜீவித்து, கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கமுடியாமல், நித்தியகாலமாய் இளைப்பாறுதல் இல்லாமல் அவதிப்படுவார்கள். ஆகையினால் இன்று நாம் கர்த்தருடைய சத்தத்தை கேட்கும்போது, நம்முடைய இருதயங்களைக் கடினப்படுத்தக்கூடாது (எபி 4:7).

ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்
எபி 4 : 11-16

எபி 4:11. ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.

எபி 4:12. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

எபி 4:13. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

எபி 4:14. வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்.

எபி 4:15. நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப் பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

எபி 4:16. ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

நாம் இந்தப் பூமியிலிருக்கும்போதும் நமக்கு கிறிஸ்துவுக்குள் இளைப்பாறுதல் உண்டு. பரலோகத்திலிருக்கும்போதும் நமக்கு அவருக்குள் அங்கு இளைப்பாறுதல் உண்டு. இந்த இளைப்பாறுதலில் எவ்வாறு பிரவேசிப்பது என்று இந்த நிருபத்தின் ஆசிரியர் ஆலோசனை சொல்லுகிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். நாம் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்க வேண்டுமென்றால், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, நாமும் நம்முடைய கிரியைகளை முடித்து, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கவேண்டும் (எபி 4:10).

கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற கிரியைகளைச் செய்து முடிக்கவில்லையென்றால், நம்மால் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கமுடியாது. கிரியை செய்கிறவர்களுக்கு மாத்திரமே இளைப்பாறுதல் நியமிக்கப்பட்டிருக்கிறது. இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கிரியைகளை செய்து முடிப்பது மாத்திரமே ஒரே வழி. வேறு வழி எதுவுமில்லை. கிரியை செய்யாதவர்கள் இனிமேல் இளைப்பாறுதலில் பிரவேசிக்கமாட்டார்கள். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நமக்கு தேவன் நியமித்திருக்கிற கிரியைகளைச் செய்து முடிப்பதற்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்குமாறு நாம் மற்ற விசுவாசிகளுக்கு ஆலோசனை சொல்லவேண்டும். நாம் சுவிசேஷத்தின் காலத்தில் ஜீவிக்கிறோம். இது கிரியை செய்கிற காலம். இளைப்பாறுகிற காலம். இந்தக் காலம் இனிமேல் வரப்போகிறது. கிரியை செய்கிற காலத்தில் இளைப்பாறக்கூடாது. எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. நாம் ஒவ்வொன்றையும் அதற்குரிய காலத்தில் நேர்த்தியாய்ச் செய்து முடிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய கீழ்ப்படியாமையினால் விழுந்துபோய்விடக்கூடாது. நம்முடைய கண்களுக்கு முன்பாக ஏராளமான பரிசுத்தவான்கள் தங்கள் விசுவாச ஜீவியத்தில் விழுந்துபோயிருக்கிறார்கள். அந்தப் பரிதாபமான சம்பவத்தை நம்முடைய கண்களால் பார்த்திருக்கிறோம். மற்றவர்கள் விழுந்துபோனதைப் பார்த்து நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அவர்களுடைய ஜீவியத்தின் மூலமாய் நாம் எச்சரிப்பு பெறவேண்டும். பாவத்தைவிட்டு விலகி வரவேண்டும். கீழ்ப்படியாமையை நம்முடைய இருதயத்திலிருந்து நீக்கிப்போடவேண்டும்.

கீழ்ப்படியாமையில் விழுந்துபோகாமல் எச்சரிக்கையாயிருந்தால்தான், தேவன் நமக்கு நியமித்திருக்கிற இளைப்பாறுதலில் நம்மால் பிரவேசிக்க முடியும். ஆகையினால் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் (எபி 4:11).

நாம் கிறிஸ்துவின் இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு தேவனுடைய வார்த்தையானது நமக்கு மிகவும் உதவியாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தை ஜீவனும் வல்லமையுமுள்ளது. பாவிகளுடைய மனச்சாட்சியோடு தேவனுடைய வார்த்தை பேசுகிறது. அவர்களுடைய மனச்சாட்சியை உணர்த்துகிறது. ஆத்துமாவின் காயங்களுக்கு காயம் கட்டுகிறது. இருதயத்தை ஊடுருவிப் பாய்கிறது. தேவனுடைய வார்த்தை பாவிகளுடைய மனச்சாட்சியை திருத்துகிறது. குணப்படுத்துகிறது.

தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது. அது நம்முடைய பாவங்களை மிகுந்த வல்லமையோடு உணர்த்துகிறது. நம்முடைய மனந்திரும்புதலும் வல்லமையுள்ளதாயிருக் கிறது. நமக்கு வல்லமையுள்ள ஆறுதலைத் தருகிறது. தேவனுடைய வார்த்தை சாத்தானுடைய ராஜ்யத்தை நிர்மூலம்பண்ணுகிற வல்லமையுள்ளது. சாத்தானுடைய ராஜ்யம் கீழே விழுந்து நொறுங்கும்போது, அதன் அழிவுக்கு மேலே, தேவனுடைய வார்த்தை, கிறிஸ்துவின் ராஜ்யத்தை வல்லமையோடு கட்டியெழுப்புகிறது.

தேவனுடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயிருக்கிறது. எந்தப் பட்டயத்தினாலும் வெட்ட முடியாததை, தேவனுடைய வார்த்தை என்னும் கருக்குள்ள பட்டயம் வெட்டிப்போடுகிறது. மிகவும் நுணுக்கமாக வெட்டுகிறது. வெட்டுவதற்கு கடினமானதையும் தேவனுடைய வார்த்தை வெட்டுகிறது. நம்முடைய ஜீவியத்தின் எந்தெந்தப் பகுதிகளையெல்லாம் நுணுக்கமாய் வெட்டவேண்டுமோ, அந்தப் பகுதிகளை யெல்லாம் தேவனுடைய வார்த்தை என்னும் கருக்குள்ள பட்டயம் நுணுக்கமாய் வெட்டி நமக்கு உதவிசெய்கிறது.

தேவனுடைய வார்த்தை ஆத்துமாவையும், ஆவியையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாக யிருக்கிறது. நம்முடைய ஆத்துமாவில் இயல்பான சுபாவம் நிரம்பியிருக்கும். நம்முடைய உணர்ச்சிகள் நமக்குள் நீண்டகாலமாக தங்கியிருக்கும். நமக்குள் சுயபெருமையும், பெருமையின் ஆவியும் காணப்படலாம். தேவனுடைய வார்த்தை பெருமையுள்ள ஆவியை தாழ்மையுள்ள ஆவியாக மாற்றுகிறது. ஆத்துமாவையும் ஆவியையும் உருவக்குத்தி, இவ்விரண்டையும் பிரிக்கிறது. நம்முடைய ஆவி கீழ்ப்படியாமையுள்ள ஆவியாயிருக்கும்போது, தேவனுடைய வார்த்தை அதை உருவக்குத்தி, அதை கீழ்ப்படிதலுள்ள ஆவியாக மாற்றுகிறது. நம்மிடத்தில் காணப்படுகிற பெருமையை அகற்றி, அங்கு தாழ்மையைக் கொண்டுவருகிறது.

தேவனுடைய வார்த்தை கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இந்த உலகத்தின் ஆசாபாசங்களுக்கு மரித்திருக்கவேண்டும். நம்முடைய பாவங்களை சிலுவையில் அறையவேண்டும். இப்படிப்பட்ட நுணுக்கமான அறுவை சிகிச்சையின் வழியாக நம்முடைய ஆவியும், ஆத்துமாவும் உட்பிரவேசிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை நம்மைப் பக்குவப்படுத்துகிறது. நம்முடைய பாவங்களை சிலுவையில் அறைவதற்கு நம்மை சம்மதிக்க வைக்கிறது. பரிசுத்தத்தின் பாதையில் நம்மை வழிநடத்துகிறது.

தேவனுடைய வார்த்தை இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறது. பாவியான மனுஷனுக்குள் பாவமான நினைவுகள் இருக்கும். அவனுடைய யோசனைகளும் பாவமாகவே இருக்கும். பாவியினுடைய இருதயத்தில் பாவமும் அசுத்தமும் நிரம்பியிருக்கும். தன்னுடைய பாவசுபாவங்கள் யாருக்கும் தெரியாமல் மறைவாகயிருக்கிறது என்று பாவிகள் நினைக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையோ மனுஷருடைய மறைவான பாவங்களை வெளியே கொண்டுவருகிறது. வெளியரங்கமாகாத மறைபொருள் எதுவுமில்லை. பாவியினுடைய இருதயத்திற்குள் இருக்கும் பாவமான நினைவுகளையும் யோசனைகளையும், தேவனுடைய வார்த்தை அவனுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறது (எபி 4:12).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சர்வஞானமுள்ளவர். அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. தேவனுடைய பார்வையிலிருந்து யாரும் மறைவாகயிருக்க முடியாது. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயும் இருக்கிறது. நம்முடைய இருதயத்தின் சிந்தனைகள் யாருக்கும் தெரியாமல் நமக்குள் மறைவாகயிருக்கும் என்று நாம் நினைப்போம். ஆனால் தேவனுடைய பார்வைக்கு மறைவானது எதுவுமில்லை. எல்லாம் அவருக்கு வெளியரங்கமாயிருக்கிறது.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். நம்முடைய இருதயத்தின் நினைவுகளை அவர் அறிந்திருக்கிறார். தேவன் சர்வஞானமுள்ளவராகயிருக்கிற படியினால், நம்மால் தேவனுக்கு முன்பாக எதையும் மறைக்க முடியாது. நம்மைக் குறித்து அவருக்கு நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நம்முடைய பேச்சுக்கள், நம்முடைய கிரியைகள் எல்லாவற்றையும் குறித்து நாம் அவருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். தேவனுடைய சர்வஞானம் நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்வதற்கும், தேவனுடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிவதற்கும் நமக்கு உதவிபுரிகிறது (எபி 4:13).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். இவர் வானங்களின் வழியாய் பரலோகத்திற்கு போனவர். இயேசுகிறிஸ்து தேவனுடைய ஒரே பேறான குமாரன். பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பூமியிலே தம்முடைய ஆசாரிய ஊழியத்தின் ஒரு பகுதியை மாத்திரம் நிறைவேற்றினார். அவர் நமக்காக கல்வாரி சிலுவையில் தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து மரித்தார். இது அவருடைய ஆசாரிய ஊழியத்தின் ஒரு பகுதி.

மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ஆசாரிய ஊழியத்தின் மற்றொரு பகுதியை பரலோகத்தில் நிறைவேற்றுகிறார். பிதாவின் சமுகத்திற்கு முன்பாக அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் மத்தியஸ்தராகயிருந்து, மத்தியஸ்த ஊழியம் செய்கிறார்.

கிறிஸ்துவின் மேன்மையும் மகத்துவமும் அவருடைய நாமத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து நமக்கு பரமவைத்தியராகவும், நம்முடைய ஆத்தும இரட்சகராகவும் இருக்கிறார். தம்மூலமாக தேவனிடத்தில் வருகிற எல்லோரையும் இரட்சிப்பதற்கு, இயேசுகிறிஸ்துவானவர் உலக இரட்சகராகயிருக்கிறார் (எபி 4:14).

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னும் மகாபிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். நம்முடைய விசுவாசத்திலிருந்து வழிவிலகிப்போய்விடக் கூடாது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்துவிடக்கூடாது.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து மகா பிரதான ஆசாரியராகயிருக்கிறார். அதே வேளையில் அவர் நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார். அவர் தம்மிடத்தில் வருகிற யாரையும் புறம்பே தள்ளுவதில்லை. நம்முடைய பிரதான ஆசாரியர் கிருபையுள்ளவர், இரக்கமுள்ளவர், மனதுருக்கமுள்ளவர். தம்முடைய ஜனங்களைக் குறித்து பரிதபிக்கிறவர் (எபி 4:15).

இயேசுகிறிஸ்து நம்முடைய பலவீனங்களை அறிந்து வைத்திருக்கிறார். அதைக் குறித்து பரிதபிக்கிறார். அவர் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். அதே வேளையில் அவர் நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கிறார். நமக்காக இரக்கம் காண்பிக்கிறார்.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து பாவமில்லாதவர். அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டவர். ஆனாலும் அவர் ஒரு பாவமும் செய்யவில்லை. பாவமில்லாத வராயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் (எபி 4:15).

நமக்குச் சோதனைகள் வரும்போது சோர்ந்து போகிறோம். சில சமயங்களில் அதிர்ச்சியடைகிறோம். சில சமயங்களில் சோதனைகளுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து பாவம் செய்து விடுகிறோம். வேறு சில சமயங்களில் சோதனைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுக்காவிட்டாலும், விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போய்விடுகிறோம்.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவும் நம்மைப்போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார். ஆனால் அவரிடத்தில் எந்தவிதமான பாவமும் காணப்படவில்லை. பிசாசு அவரைச் சோதித்தான். தமக்கு வந்த எல்லா சோதனைகளிலும், இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் செய்யாமல், சத்துருவை ஜெயித்தார். சோதனைகளை மேற்கொண்டார். நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து பாவமில்லாதவர்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவின் சமுகத்திற்கு முன்பாக வருகிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இந்தச் சிலாக்கியத்தை நாம் கவனமாயும், பயபக்தியோடும் பயன்படுத்தவேண்டும். முதலாவதாக நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும் (எபி 4:14). நாம் ஒருபோதும் கிறிஸ்துவை மறுதலித்துவிடக்கூடாது. மனுஷருக்கு முன்பாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுவதற்கு வெட்கப்படக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருக்கு சாட்சிகளாயிருக்கவேண்டும். நம்முடைய சாட்சிகளைக் காத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய விசுவாசத்தையும், நற்சாட்சியையும், உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கவேண்டும்.

தேவனுடைய கிருபாசனத் தண்டையிலே தைரியமாய்ச் சேரமுடியும் என்று நம்மை நாமே உற்சாகப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவன் நியாயாசனத்தில் வீற்றிருந்து நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். அவரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை. பட்சபாதமில்லாமல் தீர்ப்பு செய்கிறவர். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நியாயாசனத்தில் வீற்றிருந்தாலும், அந்த நியாயாசனத்திற்கு அருகாமையில், ஒரு கிருபாசனத்தையும் ஸ்தாபித்திருக்கிறார்.

தேவனுடைய நியாயாசனத்தில் அவருடைய நீதி ஆளுகை செய்கிறது. தேவனுடைய கிருபாசனத்தில் அவருடைய கிருபை ஆளுகைசெய்கிறது. தேவன் தம்முடைய கிருபாசனத்தில் நியாயம் விசாரிக்கும்போது, தம்முடைய சுயாதீன ஆளுகையின் பிரகாரமாகவும், தம்முடைய தெய்வீக வல்லமையின் பிரகாரமாகவும், தம்முடைய கிருபையின் பிரகாரமாகவும் அவர் நமக்குத் தீர்ப்பு செய்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய கிருபாசனத்தில் அவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அவருடைய சகாயம் செய்யும் கிருபையையும் பெற்றுக்கொள்ளலாம். நாம் தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக நிற்பது நமக்கு நல்லது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக அடிக்கடி வந்து சேரவேண்டும். நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரவேண்டும் (எபி 4:14).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவனுடைய கிருபையும் இரக்கமும் தேவைப்படுகிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு தேவனுடைய இரக்கம் தேவை. நம்முடைய ஆத்துமாக்களை சுத்தப்படுத்துவதற்கு தேவனுடைய கிருபை தேவை. நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவருடைய கிருபாசனத்தண்டையிலே சேரவேண்டும். நாம் தேவனுடைய கிருபாசனத் தண்டையிலே தைரியமாயும், பயபக்தியுடன் கூடிய விடுதலையோடும் வந்து சேரவேண்டும். தேவனுடைய கிருபாசனத்தண்டையில் எதையும் சந்தேகப்படக்கூடாது. அவரிடத்தில் விசுவாசத்தோடு கேட்கவேண்டும்.

தேவனுடைய கிருபாசனத் தண்டையில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கிருபையும் இரக்கமும் காத்திருக்கிறது. தெய்வீக பயத்தோடும், பயபக்தியோடும் கிருபாசனத்தண்டையில் சேரவேண்டும். நம்மிடத்தில் பயபக்தியுடன் கூடிய தைரியம் இருக்கவேண்டும். நாம் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக, நியாயம் விசாரிக்கப்படுவதற்கு இழுத்துவரப்படவில்லை. தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக, அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்காக வந்திருக்கிறோம்.

தேவன் தாமே தம்முடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாய் வந்து சேருமாறு நமக்கு அன்பான அழைப்பு கொடுத்திருக்கிறார். தேவனுடைய கிருபாசனத்தில் அவருடைய கிருபை ஆளுகை செய்கிறது. அங்கு அவருடைய அன்பு நிரம்பியிருக்கிறது. தேவனுடைய இரக்கத்தையும், சகாயம் செய்யும் அவருடைய கிருபையையும் நாம் அங்கு பெற்றுக்கொள்ளலாம். ஆகையினால் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாய்ச் சேரக்கடவோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் தேவனுடைய பரிசுத்த சமுகத்திற்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்கிறார். நம்முடைய பிரதான ஆசாரியரே நம்முடைய நம்பிக்கைக்கு ஆதரமாயிருக்கிறவர். தேவனுடைய கிருபாசனத்தண்டையில் நாம் சேருவதற்கு, நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவானவரே நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறார்.

கிறிஸ்துவைச் சார்ந்து, தேவனுடைய கிருபாசனத்தண்டையில், பயபக்தியோடும், கிறிஸ்துவின் நிமித்தமாய் கிடைத்திருக்கிற தைரியத்தோடும் சேர்த்து, தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும். நமக்கு ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிற இடத்திற்குச் சென்று, அங்கு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கிருபாசனத்தில் தேவனுடைய கிருபையும் இரக்கமும் நமக்குக் கிடைக்கும். நியாயாசனத்தில் நீதியும் நியாயத்தீர்ப்பும் கிடைக்கும்.

5 அதிகாரம்

கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தை இந்த நிருபத்தின் ஆசிரியர் விவரமாக எழுதுகிறார். பிரதான ஆசாரியரிடத்தில் பொதுவாக காணப்படுகிற சுபாவங்களை ஆசிரியர் விவரிக்கிறார் (எபி 5:1-3). தேவனே பிரதான ஆசாரியரை அந்தக் கனமான ஊழியத்திற்கு அழைக்கவேண்டும் (எபி 5:4-6). பிரதான ஆசாரிய ஊழியம் செய்கிறவர்களிடத்தில் காணப்படவேண்டிய தகுதிகள் (எபி 5:7-9). கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியம் (எபி 5:6,7,10). யூதர்கள் கேள்வியிலே மந்த முள்ளவர்களாகயிருக் கிறார்கள். ஆகையினால் ஞானத்தை அவர்களுக்கு விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கிறது (எபி 5:11-14).

பிரதான ஆசாரியன் எபி 5 : 1-3

எபி 5:1. அன்றியும், மனுஷரில் தெரிந்து கொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காக தேவகாரியங்களைப் பற்றி நியமிக்கப்படுகிறான்.

எபி 5:2. தானும் பலவீனமுள்ளவனான படியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான்.

எபி 5:3. அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிட வேண்டியதுபோல், தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது.

பிரதா ஆசாரியனிடத்தில் ஒரு சில சுபாவங்கள் பொதுவாக இருக்க வேண்டும். அவர் மனுஷரில் தெரிந்து கொள்ளப்பட்டவராகயிருக்க வேண்டும். நம்மைப்போல பிரதான ஆசாரியரும் ஒரு மனுஷராகவே இருக்கவேண்டும். தேவன் தம்முடைய சமுகத்தில் பாவசுபாவமுள்ள மனுஷனை தாராளமாக அங்கீகரிப்பதில்லை. தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தேவன் மனுஷரில் யாரைத் தெரிந்துகொள்கிறாரோ, அவர் மாத்திரமே தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக வரவேண்டும். இவ்வாறு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதான ஆசாரியன் மாத்திரமே, தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக, நம்பிக்கையோடு பிரவேசிக்கமுடியும்.

பிரதான ஆசாரியன் மனுஷருக்காக தேவகாரியங்களை விசாரிக்கவேண்டும். தேவனுடைய மகிமைக்காகவும் மனுஷருடைய நன்மைக்காகவும் அவர் ஊழியம் செய்யவேண்டும். பிரதான ஆசாரியன் மனுஷருடைய பாவங்களுக்காக தேவனுடைய சமுகத்தில் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவேண்டும்.

மனுஷரிடத்தில் இருப்பது எல்லாமே தேவனுக்குரியது என்பதை அங்கீகரிப்பதற்காக, பிரதான ஆசாரியன் தேவனுடைய சமுகத்தில் காணிக்கைகளை செலுத்துகிறார். நம்மிடத்தில் இருப்பது எல்லாவற்றையும் நாம் தேவனிடமிருந்தே பெற்றுக்கொள்கிறோம். நாம் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக செலுத்துகிற காணிக்கைகளை மனப்பூர்வமாய்ச் செலுத்தவேண்டும். காணிக்கைகளைச் செலுத்தவேண்டுமென்று யாரும் நம்மைக் கட்டாயம்பண்ணக்கூடாது. தேவனுடைய சமுகத்தில் நாம் மனப்பூர்வமாகவும், உதாரத்துவமாகவும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவேண்டும் (எபி 5:1).

மனுஷருடைய பாவங்களுக்காக பிரதான ஆசாரியன் தேவனுடைய சமுகத்தில் பலிகளைச் செலுத்துகிறார். கிறிஸ்துவானவர் நமக்காக காணிக்கைகளைச் செலுத்தும்படியாகவும், பலிகளைச் செலுத்தும்படியாகவும், பிரதான ஆசாரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய நற்கிரியைகளை கிறிஸ்துவானவர் தேவனுடைய சமுகத்தில் எடுத்துச் சொல்லுகிறார். அதே வேளையில் நம்முடைய பாவமான துர்க்கிரியைகளை, கிறிஸ்துவானவர் தம்முடைய பாவநிவாரண பலியின் மூலமாய், தேவனுடைய சமுகத்தில் நீக்கிப்போடுகிறார்.

பிரதான ஆசாரியன் அறியாதவர்களுக்கு இரங்கத் தக்கவராயிருக்கிறார். பிரதான ஆசாரியருடைய இருதயத்தில் அறியாத ஜனங்களுக்காக இரக்கம் இருக்கவேண்டும். அவர்களுக்கு தேவனுடைய ஆலோசனையைப் போதிக்கிற விருப்பம் இருக்கவேண்டும். சத்தியத்தை உடனே புரிந்துகொள்ள முடியாதபடி, ஜனங்கள் மந்த சுபாவமுள்ளவர்களாக யிருந்தாலும், பிரதான ஆசாரியர் அவர்களுக்கு நீடிய பொறுமையோடு சத்தியத்தை உபதேசம்பண்ணவேண்டும்.

பிரதான ஆசாரியன் நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவராயிருக்க வேண்டும். வழிவிலகிப்போனவர்களை தேவனுடைய நீதியின் பாதைக்கு அழைத்து வரவேண்டும். வழிதப்பிப்போனவர்கள்மீது அன்பும், இரக்கமும், கரிசனையும் காண்பிக்கவேண்டும். ஒரு சிலர் தங்கள் பாவத்தினாலும் துன்மார்க்கத்தினாலும் நெறிதப்பிப்போய்விடுவார்கள். இவர்களை நீதியின் பாதைக்குத் திரும்பவும் அழைத்து வருவது பிரதான ஆசாரியருடைய ஊழியம். தேவனிடத்திலுள்ளதுபோல, பிரதான ஆசாரியரிடத்திலும் நீடிய பொறுமையும் மனதுருக்கமும் இருக்கவேண்டும்.

பிரதான ஆசாரியனும் மற்ற மனுஷரைப் போலவே பலவீனமுள்ளவராயிருக்கிறார். அதினிமித்தம், அவர் ஜனங்களுடைய பாவங்களுக்காக பலியிடவேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது (எபி 5:3).

மகா பிரதான ஆசாரியர் எபி 5 : 4-6

எபி 5:4. மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.

எபி 5:5. அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்.

எபி 5:6. அப்படியே வேறொரு இடத்திலும்: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு ஏதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ளவராயிருக்கிறார். கிறிஸ்து தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டார். அதனால் அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.

பிரதான ஆசாரியரின் ஊழியம் கர்த்தருடைய சமுகத்தில் கனமான ஊழியமாயிருக்கிறது. இந்த ஊழியத்திற்கு எந்த ஒரு மனுஷனும் தானாய் ஏற்படுகிறதில்லை. தேவன் ஆரோனை பிரதான ஆசாரியனுடைய ஊழியத்தைச் செய்யுமாறு அழைத்தார். ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, யாரும் பிரதான ஆசாரியனுடைய ஊழியத்திற்கு தகுதியுள்ளவர்களாயிருப்பதில்லை.

பிரதான ஆசாரியருடைய ஊழியம் மிகவும் கனமானது. இவர்கள் தேவனுடைய சமுகத்தில், தேவகாரியங்களை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய பரிசுத்தமான பிரசன்னத்தை எதிர்பார்க்கிறவர்களாக இருக்கவேண்டும். இவர்கள்மீதும், இவர்களுடைய ஊழியங்கள் மீதும் தேவனுடைய ஆசீர்வாதம் தங்கியிருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை மாத்திரமே தேவன் இந்தக் கனமான ஊழியத்திற்கு ஏற்படுத்துகிறார்.

யாரும் தங்கள் சுயமுயற்சியினால் பிரதான ஆசாரிய ஊழியத்திற்கு ஏற்படுகிறதில்லை. அவ்வாறு யாராவது, தேவனுடைய அழைப்பு இல்லாமல், தங்களைத் தாங்களே பிரதான ஆசாரியராக நியமித்துக்கொண்டால், அவர்கள் மூலமாய் ஜனங்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகாது. சாபமே உண்டாகும் (எபி 5:4).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகாபிரதான ஆசாரியராகயிருக்கிறார். பிரதான ஆசாரியராகிறதற்கு அவர் தம்மைத்தாமே உயர்த்தவில்லை. இயேசுகிறிஸ்து தெய்வத்துவமுள்ளவர். தேவமகிமை நிரம்பியவர். அவர் தம்முடைய மகிமையினால் தம்மைத்தாமே ஆசாரிய ஊழியத்திற்கு உயர்த்த முடியும். ஆனால் கிறிஸ்துவோ பிரதான ஆசாரியராகிறதற்கு தம்மைத்தாமே உயர்த்தவில்லை. பிதாவானவர் தம்மை அனுப்பாமல் கிறிஸ்துவானவர் எங்கும் போகவில்லை (எபி 5:5).

பிதாவானவரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பிரதான ஆசாரிய ஊழியத்திற்கு உயர்த்தியிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே இந்த ஊழியத்திற்கு உயர்த்தாதபோது, மனுஷர் யாரும் தங்களைத்தாங்களே இந்த ஊழியத்திற்கு உயர்த்தக்கூடாது. இந்தக் கனமான ஊழியத்திற்கு தாங்கள் தகுதியுள்ளவர்கள் என்று நினைத்து, மனுஷர் யாரும் தங்களைத் தாங்களே பிரதான ஆசாரிய ஊழியத்திற்கு நியமித்துக்கொள்ளக்கூடாது.

பிரதான ஆசாரியருடைய ஊழியம் கர்த்தருடைய சமுகத்தில் செய்யப்பட வேண்டிய ஊழியம். இது தேவ காரியங்களைப்பற்றிய ஊழியம். ஆகையினால் பிரதான ஆசாரியருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள் மிகுந்த பயபக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

பிரதான ஆசாரிய ஊழியம் செய்வதற்கு தேவன் ஆரோனை அழைத்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ ஆரோனைவிட பெரியவர். பிதாவானவர் குமாரனாகிய கிறிஸ்துவிடம், "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" என்று சொன்னார் (எபி 5:5). இப்படிப்பட்ட ஆசீர்வாதமான வார்த்தைகளை தேவன் ஆரோனுக்குச் சொல்லவில்லை. இயேசுகிறிஸ்து தம்முடைய அழைப்பிலும் உயர்ந்தவராகவும், உன்னதமானவராகவும் இருக்கிறார்.

தேவன் இயேசுகிறிஸ்துவினிடத்தில் "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" (எபி 5:6) என்றும் சொல்லியிருக்கிறார். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை, பிரதான ஆசாரியருடைய ஊழியத்திற்கு அழைக்கும்போது, ஆரோனுடைய ஊழியத்தைவிட, மேன்மையான ஊழியத்தைச் செய்யுமாறு இயேசுவை அழைத்தார். ஆரோனுடைய ஆசாரிய ஊழியம் தற்காலிகமானது. ஆனால் கிறிஸ்துவோ என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார். கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியம் நித்தியமானது (எபி 5:6).

பொதுவாக பிரதான ஆசாரியர்களும் பலவீனமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். அதினிமித்தம் அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாயிருக்கிறது. அவர்கள் ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டும். தங்களுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டும். ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யாதவர். அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை. ஆகையினால் தம்முடைய பாவங்களுக்காக பலியிடவேண்டிய அவசியம் மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவுக்கு இல்லை.

மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரதான ஆசாரியர்
எபி 5 : 7-9

எபி 5:7. அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,

எபி 5:8. அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,

எபி 5:9. தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியராக தம்முடைய ஊழியத்தைச் செய்கிறார். இயேசு கிறிஸ்துவின் பாவநிவாரண பலியினால் நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. கிறிஸ்துதாமே மாம்சத்தில் வெளிப்பட்டார். அவர் தேவனுடைய குமாரனாக இருந்தாலும், மனுஷகுமாரனாக இந்தப் பூமியிலே அவதரித்தார். நம்மைப்போலவே அவரும் ஒரு சாதாரண மனுஷரானார்.

இயேசுகிறிஸ்து மாம்சத்தில் இருந்த காலத்தில் அவர் தம்மைத்தாமே மரணத்திற்கு கீழ்ப்படுத்தினார். அவர் சோதிக்கப்பட்டார். அவருக்கு பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று. அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவருடைய சரீரத்தைக் காயப்படுத்தினார்கள். கல்வாரி சிலுவையில் அவர் நமக்காக தம்முடைய திருஇரத்தத்தைச் சிந்தினார்.

இயேசுகிறிஸ்து சிலுவையிலே மரணத்தை ருசிபார்த்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு மரணம் நேரிடாதவாறு, பிதாவாகிய தேவன் அவரை இரட்சித்திருக்க முடியும். ஆனால் பிதா, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மரணத்திலிருந்து இரட்சிக்கவில்லை. கிறிஸ்து மரணத்தை ருசிபார்த்தார். பிதாவும் கிறிஸ்துவின் மரணத்தை அங்கீகரித்தார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்க வேண்டுமென்பதற்காக, தம்மையே ஜீவபலியாக செலுத்தினார். தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ள பிதாவை நோக்கி, தம்முடைய ஜீவனுக்காக அவர் ஜெபம்பண்ணவில்லை. தம்முடைய ஜீவனை மனப்பூர்வமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்து நமக்காக பாவநிவாரண பலியாக சிலுவையிலே மரித்திருக்கவில்லையென்றால், மனுக்குலத்தாராகிய நமக்கு இரட்சிப்பு இல்லை.

பிதாவாகிய தேவனும் நம்மீது கிருபையுள்ளவராகயிருக்கிறார். குமாரனாகிய கிறிஸ்து, சிலுவையிலே மரணத்தின் பாத்திரத்திலே வேதனையோடு மரணத்தைப் பருகியபோது, பிதாவானவர், நமக்காக, தம்முடைய ஒரே பேறான குமாரனுடைய மரணத்தை அங்கீகரித்தார். மரணத்தின் பாத்திரத்தை இயேசுகிறிஸ்துவை விட்டு பிதாவானவர் நீக்கிப்போடவில்லை. இயேசுகிறிஸ்து மரணத்தின் பாத்திரத்திலே பானம்பண்ணியிருக்கவில்லையென்றால், மனுக்குலத்திலுள்ள நாம் ஒவ்வொருவரும், மரணத்தின் பாத்திரத்திலே பானம்பண்ணவேண்டும். மரணத்தின் வண்டல்களை நாம் பானம்பண்ண வேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ள பிதாவை நோக்கி, நமக்காக விண்ணப்பம்பண்ணினார். பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார். இயேசுகிறிஸ்து பல சமயங்களில் பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபம்பண்ணியிருக்கிறார். ஆனால் இந்த ஜெபமோ கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய வேதனையில் பிதாவை நோக்கி ஏறெடுத்த ஜெபமாகும்.

கல்வாரி சிலுவையிலே வேதனைகளை அனுபவிப்பதற்கு முன்பாகவும், இயேசுகிறிஸ்து கெத்சமனே தோட்டத்திலே, வேதனையோடும் வியாகுலத்தோடும் ஜெபம்பண்ணினார். இயேசுகிறிஸ்துவின் விண்ணப்பமும் வேண்டுதலும் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் கலந்திருந்தது.

இயேசுகிறிஸ்துவின் ஜெபம் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. நாம் பல சமயங்களில் சம்பிரதாயத் திற்காக ஏனோதானோவென்று ஜெபம்பண்ணுகிறோம். நம்முடைய ஜெபங்களில் ஜீவன் இருப்பதில்லை. எதையோ நினைத்துக்கொண்டு, மற்றவர்கள் பார்க்கவேண்டுமென்பதற்காக ஜெபம்பண்ணுகிறோம். நாம் ஜெபிக்கும்போது நம்முடைய இருதயம் நம்முடைய ஜெபத்தில் பங்குபெறுவதில்லை. ஜெபத்தில் நாம் கண்ணீர் விடுவதுமில்லை. நம்முடைய ஜெபம் கண்ணீரில்லாத உலர்ந்த ஜெபமாகயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் பயபக்தியோடு விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார். கிறிஸ்துவினுடைய பயபக்தியினிமித்தம் அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது. அவர் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், பிதாவாகிய தேவன் அவருடைய ஜெபத்தை செவிகொடுத்து கேட்டார். கிறிஸ்துவானவர் மரணத்தின் பாதையில் கடந்து வரும்போது, பிதாவினிடத்தில் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி வேண்டுதல் செய்தார். பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் வண்ணமாக, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருந்த இயேசுகிறிஸ்துவை உயிரோடு எழுப்பினார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்சத்தில் இருந்த நாட்களில் மெய்யாகவே மரித்தார். மரணத்தை ருசிபார்த்தார். பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு சரீர மரணத்திலிருந்து விடுதலை கொடுக்கவில்லை. கிறிஸ்துவானவர் தம்முடைய சரீர மரணத்தின் வேதனையை பூரணமாய் அனுபவிக்க, பிதாவானவர் அனுமதி கொடுத்தார். இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாயிருந்தும், பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். தம்முடைய சரீர மரணத்திலும் இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்தார்.

மனுஷராகிய நமக்கு சரீரத்தில் பல வியாதிகள் வருகிறது. நோய்கள் வருகிறது. நம்முடைய வியாதிகளும் நோய்களும் பல சமயங்களில் சொஸ்தமாகிறது. நோய்களிலிருந்து நமக்கு விடுதலை உண்டாகிறது. நம்முடைய சரீரமரணத்திலிருந்து நமக்கு விடுதலை கிடைக்கவேண்டுமென்றால், நாம் நம்முடைய சரீரமரணத்தின் வழியாக கடந்து செல்லவேண்டும். நம்முடைய சரீரத்தில் நாம் மரிக்காமல், நம்முடைய சரீரமரணத்திலிருந்து நமக்கு விடுதலை இல்லை.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன். அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். தேவனுடைய புத்திசுவிகார பாக்கியத்தினால், நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகயிருக்கிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகளாகயிருந்தாலும் இப்பிரபஞ்சத்தில் நமக்கும் பாடுகள் உண்டு. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே இந்தப் பிரபஞ்சத்தில் பாடுகள் பட்டார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் பாடுகள் வழியாகக் கடந்துசெல்ல ஆயத்தமாயிருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்சத்திலிருந்த நாட்களில் பிதாவுக்குக் கீழ்ப்படிந்தார். கீழ்படியாமையின் குணம் கிறிஸ்துவிடத்தில் சிறிதுமில்லை. கிறிஸ்துவானவருடைய கீழ்ப்படிதலின் விசேஷித்த குணம், அவருடைய மரணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சிலுவையில் கிறிஸ்துவானவர் மரண வேதனையை அனுபவித்தபோதும், அவர் பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து, தம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய ஜீவியத்தில் பாடுகளும் வேதனைகளும் வரும். துன்பங்கள் வரும். இவையெல்லாவற்றையும் நாம் சந்திக்கும்போது தேவனுடைய சித்தத்திற்கு மிகுந்த மனத்தாழ்மையோடு நாம் கீழ்ப்படியவேண்டும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பாடுகளை சகித்துக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்து பாடுகளை அனுபவித்து பூரணரானார். குமாரன் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து பூரணரானார். கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால், அவருக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய ஜீவன் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு கிறிஸ்துவானவர் காரணராயிருக்கிறார் (எபி 5:9). கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மாத்திரமே இரட்சிப்பு உண்டு. அவர் உலக இரட்சகராகயிருந்தாலும், மனுக்குலத்திலுள்ள அனைவரையும் இரட்சிக்கவேண்டும் என்னும் விருப்பமுள்ளராகயிருந்தாலும், தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு மாத்திரமே இரட்சிப்பைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகளைக் கேட்டு, கிறிஸ்துவுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படியவேண்டும். அவர் நம்மை ஆளுகை செய்கிறவராக உயர்த்தப்பட்டிருக்கிறார். நம்முடைய ஆத்துமாவை மீட்கிற இரட்சகராகயிருக்கிறார். அவரே நம்முடைய ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். இயேசுகிறிஸ்து யாருக்கெல்லாம் ராஜாவாகவும், கர்த்தாவாகவும் இருக்கிறாரோ, அவர்களுக்கு மாத்திரமே அவர் இரட்சகராகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவரே நம்முடைய ஜீவியத்தை ஆளுகை செய்யவேண்டும். நாம் அவருக்கு கீழ்ப்படியவேண்டும். அவருக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் அவர் இரட்சிப்பைக் கொடுக்கிறார். தமக்கு கீழ்ப்படிகிறவர்கள் யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு கிறிஸ்துவானவர் காரணராகயிருக்கிறார்.

பலமான ஆகாரம்
எபி 5:10-14

எபி 5:10. மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்.

எபி 5:11. இந்த மெல்கிசேதேசக்கைப் பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம்; நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்.

எபி 5:12. காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத் தக்கவர்களானீர்கள்.

எபி 5:13. பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.

எபி 5:14. பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத் தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.

நிருபத்தின் ஆசிரியர் மெல்கிசேதேக்கைப்பற்றி விஸ்தாரமாய் பேசவேண்டுமென்று விரும்புகிறார். அவருடைய ஆசாரியத்துவம் நித்திய ஆசாரியத்துவமாகும். நம்முடைய மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் ஆள்தத்துவமும், அவருடைய ஊழியமும் மிகப்பெரிய சத்தியமாகயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு மெல்கிசேதேக்காகயிருக்கிறார். ஆனால் அவரைப்பற்றி ஆசிரியர் விரிவாகப் பேசவில்லை. "நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால் அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்" (எபி 5:11) என்று சொல்லி, மெல்சேதேக்கைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லாமல் சுருக்கமாகச் சொல்லுகிறார்.

கேள்வியில் மந்தமுள்ளவர்கள் சுவிசேஷ பிரசங்கத்தை கடினமாக்குவார்கள். இவர்களுக்கு சுவிசேஷத்தை எவ்வளவு எளிமையாகப் போதித்தாலும் புரிந்துகொள்ளமாட்டார்கள். இவர்களிடத்தில் ஓரளவு விசுவாசம் இருக்கும். ஆனாலும் இவர்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களாயிருப் பார்கள். இவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவது மிகவும் கடினமாகயிருக்கும்.

இயல்பாகவே இவர்களுக்கு ஆவிக்குரிய வளர்ச்சி இருக்கவேண்டும். காலத்தைப் பார்த்தால் இவர்கள் போதகர்களாயிருக்க வேண்டியவர்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டு பல வருஷமாயிற்று. ஆனால் வயதிற்கேற்ற வளர்ச்சியில்லை. இவர்களிடத்தில் காணப்படுவது இயற்கையான குறைபாடு. அதே வேளையில் இது ஆவிக்குரிய குறைபாடாகவும் இருக்கிறது. இவர்களுக்கு சுவிசேஷம் அதிகமாய்ப் பிரசங்கம் பண்ணப்பட்டிருக்கிறது. இவர்கள் ஏராளமான சுவிசேஷ உபதேசங்களை கேட்டிருக்கிறார்கள். தாங்கள் கேட்ட உபதேசங்களையே இவர்கள் மற்றவர்களுக்குப் போதிக்கலாம். ஒரு போதகரைப்போல இவர்கள் இப்போது ஊழியம் செய்யலாம். ஆனால் இவர்களிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சி போதுமான அளவு இல்லை (எபி 5:12).

இவர்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூலஉபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. தேவனுடைய உபதேசங்களில் சிலவற்றை நாம் ஆரம்பத்தில், அடிப்படை உபதேசங்களாக உபதேசிக்கவேண்டும். விசுவாசத்தில் புதிதாகப் பிரவேசிப்பவர்களுக்கு ஆரம்ப உபதேசம் தேவை. அவர்களுக்கு கடினமாக சத்தியங்களை உபதேசிக்க முடியாது. புரிந்துகொள்வதற்கு மிகவும் எளிமையான சத்தியங்களை, அவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில், எளிமையாகப் போதிக்கவேண்டும். அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டிய அடிப்படை உபதேசங்களைப் போதிக்கவேண்டும் (எபி 5:12).

சபையில் விசுவாசிகள் வித்தியாசமாகயிருப்பார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் வித்தியாசம் இருக்கும். ஒரு சிலர் ஆவிக்குரிய குழந்தைகளாயிருப்பார்கள். வேறு சிலரோ ஆவிக்குரிய காரியங்களில் நன்றாக வளர்ச்சி பெற்றிருப்பார்கள். நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்போது, அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற பிரகாரம் பிரசங்கம்பண்ணவேண்டும். சுவிசேஷத்தில் இரண்டுவிதமான சத்துக்கள் உள்ளன. ஒன்று பால், மற்றொன்று பலமான ஆகாரம். இவ்விரண்டுமே சுவிசேஷத்தில்தான் இருக்கிறது.

ஆவிக்குரிய குழந்தையாயிருக்கிறவர்கள் பாலை மாத்திரமே உண்பார்கள். பால் உண்கிறவன் குழந்தையாயிருக்கிறான். அவன் நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான் (எபி 5:13). இவர்களால் பலமான ஆகாரத்தை உண்ணமுடியாது. இப்படிப்பட்ட விசுவாசிகளுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூலஉபதேசங்களை மாத்திரமே போதிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆரம்ப உபதேசங்களை மாத்திரமே அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் குழந்தைகளைப் புறக்கணித்துவிடுவதில்லை. ஆவிக்குரிய குழந்தைகளையும் இயேசுகிறிஸ்து நேசிக்கிறார். அவர்களையும் தம்மோடு சேர்த்துக்கொள்கிறார். அவர்களுக்குத் தேவையான மென்மையான ஆகாரத்தை அவர்களுக்குப் போஜனமாகக் கொடுக்கிறார்.

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறவர்கள் பலமான ஆகாரத்தை உண்ணத் தக்கவர்களாயிருப்பார்கள். இவர்களுக்கு நன்மை தீமை இன்னதென்று பகுத்தறியத்தெரியும். அதற்குரிய பயற்சி பெற்றிருப்பார்கள். நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிவதற்கு முயற்சி செய்வார்கள். இதற்குரிய ஞானேந்திரியங்களை உடையவர்களாயிருப்பார்கள். இவர்கள் பூரண வயதுள்ளவர்கள் (எபி 5:14). இவர்கள் நீதியின் வசனத்தில் பழக்கமுள்ளவர்கள். தேவனுடைய வாக்கியங்களின் ஆழமான சத்தியங்களை இவர்களுக்கு உபதேசிக்கலாம். இவர்கள் கிறிஸ்துவின் பாடசாலையில் உயர்கல்வி பெறுகிறவர்கள்.

ஒவ்வொரு விசுவாசிக்கும் ஆவிக்குரிய போஜனம் தேவை. தேவனுடைய வசனமே நமக்கு போஜனமாயிருக்கிறது. நம்முடைய கிருபையின் ஜீவியத்திற்கு வேதவசனமே போஜனம் கொடுக்கிறது. பால், பலமான ஆகாரம் ஆகியவற்றை இயற்கையான போஜனமாகவும், ஆவிக்குரிய போஜனமாகவும் நாம் தியானம் பண்ணலாம். நம்முடைய சரீரத்திற்கு போஜனம் தேவைப்படுவதுபோல, நம்முடைய ஆத்துமாவுக்கும் போஜனம் தேவைப்படுகிறது.

மனுஷன் பாவம் செய்து, தன்னுடைய ஆத்துமாவுக்கு போஜனம் கொடுக்காமல் அதை பட்டினியாகப் போட்டுவிடுகிறான். தேவனோ தம்முடைய கிருபையினாலே, பசியாகவும் பட்டினியாகவும் பரிதபிக்கும் ஆத்துமாவுக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கிறார். நம்முடைய ஆத்துமா ஆரம்பத்தில் ஆவிக்குரிய பாலை மாத்திரமே உண்ணும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்ப நிலையில், நாம் பாலுண்கிற குழந்தையைப்போலவே இருக்கிறோம். பாலை மாத்திரமே நம்முடைய சரீரம் ஜீரணம் செய்யும்.

நாம் குழந்தையாயிருக்கும்போது நம்மால் பலமான ஆகாரத்தை ஜீரணிக்கமுடியாது. சிறிது சிறிதாக நம்முடைய ஜீவியத்தில் ஆகாரத்தை கூட்டிக்கொள்வோம். பாலை உண்பதற்குப் பதிலாக பலமான ஆகாரத்தை உண்ணப்பழகுவோம். புதிய சுவைகளைப் புரிந்துகொள்வோம். எது நல்ல சுவை என்றும், எது தீய சுவை என்றும் வித்தியாசம் காண்போம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர்ச்சி பெறும்போது, ஆவிக்குரிய பால் நன்க்குப் போதுமான போஜனமாகயிருக்காது. நமக்குப் பலமான ஆகாரம் தேவை. நம்மால் நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிய முடியும்.

சுவிசேஷத்தின் சத்தியத்தைப் பூரண வயதுள்ளவர்களுக்கு பிரசங்கம்பண்ணும்போது, அவர்கள் நம்முடைய பிரசங்கத்திலிருந்து பலமான ஆகாரத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களுக்கு நன்மையானது எது என்றும், சத்தியமானது எது என்றும் தெரியும். நன்மை எது என்றும், தீமை எது என்றும் தெரியும். அவர்களுக்கு எல்லாவற்றையும் பகுத்தறியத்தெரியும். இதற்குரிய பயிற்சி பெற்றிருக்கிறார்கள். பகுத்தறிய முயற்சி பண்ணுகிறார்கள். ஞானேந்திரியங்களை உடையவர்களாயிருக்கிறார்கள் (எபி 5:14).

6 அதிகாரம்

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் போட்ட அஸ்திபாரத்தையே திரும்பவும் போடக்கூடாது. பூரணராகும்படி கடந்துபோகவேண்டும் (எபி 6:1-8). தேவன் அநீதியுள்ளவரல்ல. ஆகையினால் நாம் அசதியாயிராமல் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் (எபி 6:9-20).

மூல உபதேசங்கள் எபி 6 : 1-3

எபி 6:1. ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம்,

எபி 6:2. ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக.

எபி 6:3. தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்.

கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேசங்கள் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரமாகயிருக்கிறது. இந்த அஸ்திபாரத்தையே நாம் மறுபடியும் மறுபடியும் போட்டுக் கொண்டிருப்போமென்றால், நமக்கு ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாகாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பூரணராகும்படி கடந்துபோகவேண்டும். கிறிஸ்துவைப்பற்றி சொல்லிய மூலஉபதேசங்களாகிய அஸ்திபாரங்களை மறுபடியும் போடாமல், அந்த அஸ்திபாரத்தின்மீது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அப்போதுதான் நம்மால் பூரணராகும்படி கடந்துபோக முடியும் (எபி 6:2).

கிறிஸ்துவைப்பற்றி சொல்லிய மூலஉபதேசங்களை நாம் மறந்துவிடக்கூடாது. நம்முடைய இருதயத்திலிருந்து மூலஉபதேசங்கள் காணாமல் போய்விடக்கூடாது. அதே வேளையில் நாம் எப்போதும் மூலஉபதேசங்களை மாத்திரம் தியானித்துக்கொண்டிருக்கவும் கூடாது. மூலஉபதேசங்களில் திருப்தியடைந்து, அதிலேயே தங்கிவிடவும் கூடாது. அஸ்திபாரத்தைப் போட்டபின்பு, அதன்மேல் கட்டிடத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அஸ்திபாரம் போட்டால் மாத்திரம் போதும் என்று நினைத்தால், நம்மால் கட்டிடத்தைக் கட்டியெழுப்பவே முடியாது.

ஒரு சிலர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமாயிருப்பார்கள். ஆனால் வேறு சிலரோ புதுபெலனைப் பெற்றுக்கொள்வார்கள். ஆவிக்குரிய காரியங்களில் நன்றாய்த் தேர்ச்சிபெறுவார்கள். பூரணராகும்படி கடந்துபோவார்கள். வளர்ச்சி பெறுகிறவர்களுக்கு தேவையான திடமான ஆகாரத்தைப் போஜனமாகக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய வளர்ச்சிகேற்ற சத்தியங்களை அவர்களுக்கு உபதேசம்பண்ணவேண்டும். அவர்களுக்கு எப்போதும் பாலை மாத்திரம் உண்ணக்கொடுப்போமென்றால், அவர்களால் ஆரோக்கியமாய் வளர்ச்சி பெறமுடியாது. அவர்களுக்குத் தேவையான பலமான ஆகாரத்தையும் கொடுக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரம் போடும்போது, கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேச வசனங்கள் நமக்குத் தேவையாயிருக்கிறது. இந்த உபதேசங்களே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரம். இந்த அஸ்திபாரத்தின்மீது நம்முடைய ஆவிக்குரிய கட்டிடத்தை கட்டியெழுப்ப வேண்டும். கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேசங்கள் சிலவற்றை இந்த நிருபத்தின் ஆசிரியர் வரிசையாகச் சொல்லுகிறார். அவற்றின் விவரம் வருமாறு :

கிறிஸ்துவைப்பற்றி சொல்லிய மூலஉபதேசங்களை நாம் மறந்துவிடக்கூடாது. நம்முடைய இருதயத்திலிருந்து மூலஉபதேசங்கள் காணாமல் போய்விடக்கூடாது. அதே வேளையில் நாம் எப்போதும் மூலஉபதேசங்களை மாத்திரம் தியானித்துக்கொண்டிருக்கவும் கூடாது. மூலஉபதேசங்களில் திருப்தியடைந்து, அதிலேயே தங்கிவிடவும் கூடாது. அஸ்திபாரத்தைப் போட்டபின்பு, அதன்மேல் கட்டிடத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அஸ்திபாரம் போட்டால் மாத்திரம் போதும் என்று நினைத்தால், நம்மால் கட்டிடத்தைக் கட்டியெழுப்பவே முடியாது.

ஒரு சிலர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமாயிருப்பார்கள். ஆனால் வேறு சிலரோ புதுபெலனைப் பெற்றுக்கொள்வார்கள். ஆவிக்குரிய காரியங்களில் நன்றாய்த் தேர்ச்சிபெறுவார்கள். பூரணராகும்படி கடந்துபோவார்கள். வளர்ச்சி பெறுகிறவர்களுக்கு தேவையான திடமான ஆகாரத்தைப் போஜனமாகக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய வளர்ச்சிகேற்ற சத்தியங்களை அவர்களுக்கு உபதேசம்பண்ணவேண்டும். அவர்களுக்கு எப்போதும் பாலை மாத்திரம் உண்ணக்கொடுப்போமென்றால், அவர்களால் ஆரோக்கியமாய் வளர்ச்சி பெறமுடியாது. அவர்களுக்குத் தேவையான பலமான ஆகாரத்தையும் கொடுக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரம் போடும்போது, கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேச வசனங்கள் நமக்குத் தேவையாயிருக்கிறது. இந்த உபதேசங்களே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரம். இந்த அஸ்திபாரத்தின்மீது நம்முடைய ஆவிக்குரிய கட்டிடத்தை கட்டியெழுப்ப வேண்டும். கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேசங்கள் சிலவற்றை இந்த நிருபத்தின் ஆசிரியர் வரிசையாகச் சொல்லுகிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல் 2. தேவன் பேரில் வைக்கும் விசுவாசம் 3. ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம் 4. கைகளை வைக்குதல் 5. மரித்தோரின் உயிர்த்தெழுதல் 6. நித்திய நியாயத்தீர்ப்பு என்பனவாகும்.

நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு, மறுபடியும் பாவஜீவியத்திற்கு திரும்பிப் போய்விடக்கூடாது. மறுபடியும் பாவம் செய்கிறவர்கள், தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மறுபடியும் அஸ்திபாரம் போடுகிறவர்கள். செத்த கிரியைகளுக்கு நீங்கலாகி மனந்திரும்புவது, ஒரு அடிப்படை சத்தியம். மனந்திரும்பவில்லை யென்றால் நமக்கு இரட்சிப்பு இல்லை. நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பிய பின்பு, பரிசுத்தத்திற்கு நேராகக் கடந்துசெல்லவேண்டும். மறுபடியும் மறுபடியும் பாவம் செய்து, மனந்திரும்புவோமென்றால், நம்மால் பரிசுத்தத்தின் பாதையில் முன்னேறிச் செல்லவே முடியாது. நாம் மறுபடியும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அஸ்திபாரத்தைப் போடுகிறவர்களாக யிருப்போம். நம்முடைய மனந்திரும்புதலை ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக்கொள்வது அவசியம். பாவம் செய்துதான் நாம் மனந் திரும்பவேண்டும் என்னும் அவசியமில்லை. நம்முடைய பரிசுத்த ஜீவியத்தில் முன்னேறிச் சென்றும், நம்முடைய மனந் திரும்புதலைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

தேவன் பேரில் வைக்கும் விசுவாசமும் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேச வசனங்களில் ஒன்றாகும். செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதலும், தேவன் பேரில் வைக்கும் விசுவாசமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இவ்விரண்டையும் வெவ்வேறாகப் பிரிக்க முடியாது. இவ்விரண்டு உபதேசமும் சேர்ந்தேயிருக்கும். நாம் கிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைக்காமல் செத்த கிரியைகளுக்கு மனந்திரும்ப முடியாது. அதே வேளையில் செத்த கிரியைகளுக்கு மனந்திரும்பாமல், நம்மால் தேவன் பேரில் விசுவாசம் வைக்கவும் முடியாது.

கிறிஸ்துவைப்பற்றி சொல்லிய மூலஉபதேச வசனங்களில், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசமும் முக்கியமான பங்காகும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஞானஸ்நான நியமம் அஸ்திபாரமாகயிருக்கிறது. நாம் ஒவ்வொரு நாளும் ஞானஸ்நானம் எடுக்கவேண்டிய அவசியமில்லை. அடிக்கடி ஞானஸ்நானம் எடுக்கிறவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் அஸ்திபாரத்தை மறுபடியும் மறுபடியும் போடுகிறார்கள். ஞானஸ்நான உபதேசம் அடிப்படையானது. நாம் தினமும் ஞானஸ்நானம் எடுப்பதில்லை. என்றாலும் நாம் ஏற்கெனவே பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தை, மறந்துவிடக்கூடாது. ஞானஸ்நானத்தின் அர்த்தத்தை புறக்கணித்துவிடக்கூடாது. நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது, தேவனோடு செய்து கொண்ட உடன்படிக்கையை விட்டு நாம் விலகிப்போய்விடக்கூடாது.

நாம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது, நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிற ஊழியக்காரர் நம்மீது கைகளை வைத்து ஜெபித்து, நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார். ஒவ்வொரு நாளும் நமக்கு இப்படி ஒரு ஊழியக்காரர், நம்மீது கைகளை வைத்து ஜெபிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. இது கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேசம்.

கைகளை வைக்குதல் என்பது, நம்மை ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணிய சம்பவமாகவும் இருக்கலாம். அந்த வேளையில் பெரிய ஊழியக்காரர்கள் நம்மீது கைகளை வைத்து ஜெபித்து, நம்மை ஊழியத்திற்கு பிரதிஷ்டை செய்தார்கள். நாம் ஒவ்வொரு நாளும் ஊழியம் செய்யும்போது, நம்மீது யாராவது பெரிய ஊழியக்காரர் கைகளை வைத்து பிரதிஷ்டைபண்ணவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. இது மூலஉபதேசம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு இது அஸ்திபாரம். நாம் கர்த்தருடைய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டதை மறந்துவிடாமல், அதை நினைவுகூரவேண்டும். பிரதிஷ்டையை புதுப்பித்துக்கொள்ளலாம். திரும்பவும் பிரதிஷ்டை என்னும் அஸ்திபாரத்தை மறுபடியும் போடக்கூடாது.

மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு ஆகியவையும் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேச வசனங்களாகும். நாம் மூலஉபதேசங்களைவிட்டு ஒருபோதும் விலகிப்போய்விடக்கூடாது. ஏனென்றால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மூலஉபதேசங்களே அஸ்திபாரம். அஸ்திபாரத்தின்மீதுதான் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அஸ்திபாரமில்லாமல் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டியெழுப்பினால், அது நிலைத்து நிற்காது. ஆகையினால் நமக்கு அஸ்திபாரம் அவசியம். கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேசம் அவசியம். ஆனால் அஸ்திபாரம் மாத்திரம் நமக்குப் போதாது. அஸ்திபாரத்தை மாத்திரம் மறுபடியும் மறுபடியும் போட்டால் போதாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். பூரணராகும்படி கடந்துபோகவேண்டும் *(எபி 6:1,2)*.

எபிரெயர்கள் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூலஉபதேச வசனங்களின் அஸ்திபாரத்தின்மீது தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டியெழுப்பவேண்டும். இந்த விஷயத்தில், நிருபத்தின் ஆசிரியர் அவர்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார். "தேவனுக்குச் சித்தமானால் இப்படியே செய்வோம்" (எபி 6:3). என்று சொல்லுகிறார். இப்படியே செய்யவேண்டும் என்னும் எண்ணம் நம்முடைய இருதயத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய சுயமுயற்சியினால் இவற்றை செய்ய முடியாது. நமக்கு தேவனுடைய உதவிகளும் ஒத்தாசைகளும் தேவை. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கு தேவனுடைய கிருபை தேவை. தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள நாம் அவரையே சார்ந்திருக்கவேண்டும். இதை உறுதிபண்ணும்விதமாக, நிருபத்தின் ஆசிரியர், "தேவனுக்குச் சித்தமானால்" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு என்ன செய்ய வேண்டுமென்று பிரசங்கம்பண்ணினால் மாத்திரம் போதாது. ஊழியக்காரர்கள் அவர்களுக்கு முன்பாக சாட்சியோடு நடந்துபோகவேண்டும். விசுவாசிகளைவிட்டு தூரமாக விலகிப்போய்விடக்கூடாது. அவர்களோடு சேர்ந்து கூடப்போகவேண்டும். அவர்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஊழியக்காரர்கள் உதவிபுரியவேண்டும். ஊழியக்காரர்களும் தங்களுடைய ஆவிக்குரிய கடமைகளை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். நிருபத்தின் ஆசிரியர் இதை விவரிப்பதற்காக, "இப்படியே செய்வோம்" என்று தன்னையும் சேர்த்து சொல்லுகிறார்.

மறுதலித்துப்போனவர்கள்
எபி 6 : 4-8

எபி 6:4. ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,

எபி 6:5. தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,

எபி 6:6. மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்.

எபி 6:7. எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும்.

எபி 6:8. முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப் படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி இருக்கவேண்டும். பூரணராகும்படி கடந்துபோகவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் விசுவாச ஜீவியம். கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தைவிட்டு ஒருபோதும் விலகிப்போய்விடக்கூடாது. ஆனால் ஒரு சிலர் ஆரம்பத்தில் கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஓரளவு முன்னேறிச் செல்கிறார்கள். ஆனால் அதன்பின்போ அவர்கள் விசுவாசத்தில் விழுந்துவிடுகிறார்கள். கிறிஸ்துவை மறுதலித்துவிடுகிறார்கள். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் முழுவதுமாய்ப் பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். நித்திய அழிவைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இரட்சிக்கப்பட்டவர்கள் பிரகாசிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனைப்பற்றிய அறிவைப் பெற்றிருக்கிறார்கள். தெய்வத்துவத்தைப் பற்றிய வெளிப்பாடு இவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பரலோகத்தின் இரகசியங்களை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். தேவனைப்பற்றியும், தெய்வத்துவத்தைப்பற்றியும் இவர்களுக்கு தெய்வீக ஞானம் இருக்கிறது. பரலோகத்தைப்பற்றி இவர்களுக்கு ஞானம் இருந்தாலும், இவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்காமல் பின்வாங்கிப் போய்விடுகிறார்கள். கிறிஸ்துவை மறுதலித்துப்போனவர்கள், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், தங்கள் பிரகாசத்தை இழந்துபோகிறார்கள்.

இரட்சிக்கப்பட்டவர்கள் பரம ஈவை ருசிபார்த்திருக்கிறார்கள். சந்தையில் காய்கறிகளை வாங்குகிறவர்களில்சிலர், ஒவ்வொன்றாகச் சோதித்துப் பார்க்கிறார்கள். அதன் விலையை நிர்ணயம்பண்ணுகிறார்கள். அதன் சுவையை சோதித்துப் பார்க்கிறார்கள். ஆனால் முடிவில் ஒன்றும் வாங்காமல், வெறும் கையோடு சந்தையிலிருந்து வெளியேறி விடுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப் பற்றிக் கொள்கிறவர்கள் பரம ஈவை ருசிபார்த்தவர்கள். அவரை விட்டு விலகிப்போகிறவர்களோ, பரம ஈவை ருசிபார்த்தும், அதைப் பெற்றுக்கொள்ளாமல், வெறுமையாய்ப் போய்விடுகிறவர்கள்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றிருக்கலாம். ஆவியானவரின் வரங்களையும் பெற்றிருக்கலாம். அப்போஸ்தலருடைய காலங்களில், இரட்சிக்கப்படாதவர்கள் கூட, ஆவியானவரின் வரங்களைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் கருத்து சொல்லுகிறார்கள். கிறிஸ்துவில் தாங்கள் வைத்திருக்கிற விசுவாசத்தை மறுதலித்துப்போனவர்கள், பரிசுத்த ஆவியைப் பெற்றும், அதின் பெலன்களை அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறார்கள்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்திருக்கிறார்கள். தேவனுடைய சத்திய வசனங்களை சந்தோஷமாகக் கேட்டு, தங்களுடைய இருதயத்தில் பதியவைத்துக்கொண்டார்கள். சிறிதுகாலம் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்துவை மறுதலித்த பின்பு, கிறிஸ்துவின் வசனம் அவர்களுடைய இருதயத்தில் வாசம்பண்ணவில்லை. தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்தும் அவர்களுக்குப் பிரயோஜனமில்லாமல் போயிற்று.

கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிபார்த்திருக்கிறார்கள். பரலோகத்தில் பிரவேசிப்போம் என்னும் நம்பிக்கை இவர்களிடத்தில் இருந்தது. நம்முடைய விசுவாசத்தில் முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால் மாத்திரமே நம்மால் பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியும். விசுவாசத்தை விட்டு மறுதலித்துப்போனால், பரலோகம் நமக்கு அந்நியமாகிவிடும். நம்மால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. மாய்மாலக்காரர்கள்கூட, பரலோகத்தின் பாதையில் சிறிது தூரம் செல்லுகிறார்கள். ஆனால் இவர்களாலும் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. சிறிது தூரம் பரலோகத்தின் பாதையில் சென்றபின்பு, கிறிஸ்துவை மறுதலித்துவிடுகிறவர்கள், பரலோகத்திற்கு எதிர் திசையில் போகிறார்கள் (எபி 6:5).

இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அதன்பின்பு மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள். யூதர்கள் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள். இயேசுவுக்கு விரோதமாக யூதர்கள் குற்றம் சொன்னார்கள். இயேசுவைச் சிலுவையில் அறைந்தபோது, தாங்கள் தேவனுடைய நீதியை நிறைவேற்றுவதாக யூதர்கள் நினைத்தார்கள்.

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அதன்பின்பு அவரை மறுதலித்துப் போனவர்கள், யூதர்களைப்போல, இவர்களும் இயேசுவைச் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள். இயேசுகிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைவதற்காக சந்தோஷப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவுக்கு வெளிப்படையாக அவமானத்தைக் கொடுக்கிறார்கள். கர்த்தரைப் பின்பற்றிவிட்டு, அவரை மறுதலித்துப்போகிறவர்கள், கிறிஸ்துவை எல்லோருக்கும்

நிலமோ முட்செடிகளையும், முட்பூண்டுகளையும் முளைப்பிக்கிறது. இது தாகாத நிலம். சபிக்கப்படுகிறதற்கு ஏற்ற நிலம். சுட்டெரிக்கப்படுவதுதான் அதின் முடிவு. இவ்விரண்டு நிலங்களும் தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடிக்கிறது. பயிரிடுகிறவர்கள் இவ்விரண்டு நிலத்திலும் பயிரிடுகிறார்கள். ஆனால் நல்ல நிலம் மாத்திரமே பயிரை முளைப்பிக்கிறது. பயிரிடுகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறது. கெட்ட நிலமோ பிரயோஜனமற்றது. இதில் பயிரிடுகிறவர் ஏதோ ஒன்றை பயிரிடுகிறார். ஆனால் இதில் வேறொன்று முளைக்கிறது. அவர் எதிர்பார்த்தது முளைக்காமல், எதிர்பாராது முளைக்கிறது (எபி *6:7,8*).

விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை ருசித்துப்பார்க்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையைப் பானம்பண்ணுகிறார்கள். நிலம் தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடிப்பதுபோல, விசுவாசிகளும் தங்களுக்குப் போதிக்கப்படுகிற வசனத்தைப் பானம்பண்ணுகிறார்கள்.

கெட்ட நிலத்தில் நாம் பயிரிட்ட பயிர் வளராது. அது நாம் எதிர்பார்த்த கனி தராது. அதற்குப் பதிலாக, அந்த நிலத்தில், நாம் பயிரிடாத முள்செடிகளும், முள்பூண்களும் முளைக்கிறது. இப்படிப்பட்ட நிலங்கள் நமக்கு தாகாது. இது நமக்கு தேவையற்றது. கனிகொடாத நிலத்தை நாம் புறக்கணிக்கவேண்டும். தேவனும் இப்படிப்பட்ட நிலத்தை சபிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அதன்பின்பு அவரை மறுதலித்துப்போகிறவர்கள் கெட்ட நிலத்தைப் போன்றவர்கள். இவர்களுடைய முடிவும் சாபமாகவே இருக்கும். சுட்டெரிக்கப்படுவது கெட்ட நிலத்தின் முடிவு. கிறிஸ்துவை மறுதலித்துப் போனவர்களுக்கும் இப்படிப்பட்ட முடிவே வரும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவகிருபையில் வளர்ச்சி பெறவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிச் செல்லவேண்டும். நாம் பரிசுத்தத்தில் முன்னேறவில்லையென்றால், பாவத்தில் முன்னேறிப்போவோம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் முன்னேறிப்போகவில்லையென்றால், பின்நோக்கிப் போய்கொண்டிருப்போம். ஆகையினால் கர்த்தரிடத்தில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவை மறுதலித்துப் போனவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற சாபத்தையும், அழிவையும் சிந்தித்துப்பார்த்து, மிகுந்த ஜாக்கிரதையாய் ஜீவிக்கவேண்டும்.

தேவன் அநீதியுள்ளவரல்லவே எபி 6 : 9,10

எபி 6:9. பிரியமானவர்களே, நாங்கள் இப்படிச் சொன்னாலும், நன்மையானவைகளும் இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம்.

எபி 6:10. ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.

நிருபத்தின் ஆசிரியர் எபிரெயருக்கு எச்சரிப்பான சில வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தரை மறுதலித்துப்போனவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம் என்றும் சொல்லுகிறார். அதே வேளையில் அவர்களைப்பற்றி சில நம்பிக்கையான வார்த்தைகளையும் எழுதுகிறார். நம்முடைய கிரியைகளினால் நாம் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. ஆனாலும் நம்முடைய ஆத்தும இரட்சிப்போடு ஒரு சில கிரியைகள் இணைந்தே இருக்கிறது. இந்தக் கிரியைகளையும், நம்முடைய ஆத்தும இரட்சிப்பையும் வேறு பிரிப்பது இயலாத காரியம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இரட்சிப்பின் செய்தியை ஜனங்களுக்கு அறிவிக்கிறார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். அதற்காக அவர்களுக்கு எச்சரிப்பின் செய்தியையும் சொல்லுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு நல்ல நம்பிக்கைகள் உண்டு. நல்ல நம்பிக்கையையுடைவர்கள், தாங்கள் நம்புகிற நம்பிக்கைக்கு பாத்திரவான்களாய் ஜீவிக்கவேண்டும். இரட்சிப்புக்குரிய காரியங்களை நிறைவேற்ற வேண்டும். நன்மையானவைகளை செய்யவேண்டும்.

ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் விழுந்துவிட்டால், நம்முடைய நம்பிக்கையும் விழுந்துவிடும். நாம் நம்புவது ஒன்றும் நமக்குக் கிடைக்காது. நமக்கு ஏமாற்றமே உண்டாகும். ஆகையினால் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம், நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். பயத்தோடும், பக்தியோடும், நடுக்கத்தோடும் இரட்சிப்புக்குரிய காரியங்களை நிறைவேற்றவேண்டும் (எபி 6:9).

நிருபத்தின் ஆசிரியர் எபிரெயரைப்பற்றி நல்ல வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர்களை உற்சாகப்படுத்துகிறார். தேவனுடைய நாமத்தினிமித்தம் அவர் அவர்கள்மீது அன்பும் கிருபையும் காண்பிக்கிறார். அவர்களிடத்தில் பரிசுத்தமான அன்பும், நற்கிரியைகளும் காணப்படுகிறது. அவர்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்து நன்மை செய்கிறார்கள். தேவனிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பினிமித்தமாகவே, நாம் நற்கிரியைகளைச் செய்கிறோம். நற்காரியங்களுக்கு கர்த்தர் நிமித்தமாகவே பங்குள்ளவர்களாகயிருக்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் செய்கிற நற்கிரியைகளைப் புகழ்ந்து சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அவர்களை பெருமைப்படுத்துவதற்காக அல்ல, நற்கிரியைகளை அவர்கள் தொடர்ந்து செய்யவேண்டுமென்பதற்காக அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும்.

தம்முடைய நாமத்தினிமித்தம், நாம் செய்கிற எல்லா நற்காரியங்களையும் கர்த்தர் நோக்கிப் பார்க்கிறார். தமது நாமத்திற்காக நாம் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை அவர் எப்போதும் நினைவுகூருகிறார். அவற்றை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்ல (எபி 6:10). நாம் செய்த ஒவ்வொரு நற்கிரியையையும் நினைவுகூர்ந்து, அதற்கேற்ற பலனை நமக்குக் கொடுக்கிறார்.

நாம் தேவனிடத்திலிருந்து கிருபையுள்ள வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றால், நம்முடைய அன்பின் பிரயாசங்களில் நாம் தொடர்ந்து நற்கிரியைகளைச் செய்யவேண்டும். பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். நம்முடைய திராணிக்கேற்ற பிரகாரமாகவும், அதற்கு மிஞ்சியும் நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும். சமயம் கிடைக்கும்போதெல்லாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும். நற்கிரியைகளைச் செய்வதற்கு சமயங்களைத் தேடிப்பார்க்கவேண்டும். அதற்கேற்ற சமயங்களை உண்டுபண்ணவேண்டும்.

வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்கள் எபி 6 : 11,12

எபி 6:11. நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து,

எபி 6:12. உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.

கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாய்ச் செய்யவேண்டும். நம்மிடத்தில் நன்மையானவைகளும், இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உண்டாயிருக்கவேண்டும். நம்முடைய ஊழியத்தை பயபக்தியோடு நிறைவேற்றவேண்டும். அப்போதுதான் நாம் நம்புகிற ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கும். நமக்குள் நம்பிக்கையும் நிச்சயமுமுண்டாகும்.

நமக்குள் நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகவேண்டும். இதற்காக கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் யாவரும், முடிவுபரியந்தம், நற்கிரியைகளைச் செய்வதில் ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டும். நம்பிக்கையின் நிச்சயமும், நம்பிக்கையின் பூரண நிச்சயமும் ஒன்றுதான். இவ்விரண்டுமே ஒரே நம்பிக்கை தான். இவை இரண்டும் தன்மையில் ஒன்று, ஆனால் அளவில் வித்தியாசமானவை. நமக்குள் நம்பிக்கையின் பூரண நிச்சயம் உண்டாகவேண்டுமென்றால், நாம் மிகுந்த ஜாக்கிரதையைக் காண்பித்து நற்கிரியை செய்யவேண்டும். நாம் ஆரம்பித்த நற்கிரியையை முடிவுபரியந்தம் ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டும் (எபி 6:12).

நம்பிக்கையின் பூரண நிச்சயத்தை எப்படி பெற்றுக்கொள்வது என்றும், அதை முடிவுபரியந்தம் எப்படி காத்துக்கொள்வது என்றும் நிருபத்தின் ஆசிரியர் ஆலோசனை சொல்லுகிறார். நாம் அசதியாயிருக்கக்கூடாது. சும்மாயிருப்பதை விரும்பக்கூடாது. சோம்பலுள்ளவர்களாயிருக்கக் கூடாது. நற்கிரியைகளைச்செய்ய வாய்ப்பு வரும்போது, அதைப் பயன்படுத்தாமல் அசட்டையாயிருக்கக்கூடாது.

நமக்கு முன்பு கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர் நம்பிக்கையின் பூரண நிச்சயத்தைப் பெற்றிருக்கிறார்கள். நாம் அவர்களை முன்மாதிரியாக நோக்கிப் பார்த்து, அவர்களைப் பின்பற்றவேண்டும். அவர்கள் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும், நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொண்டார்கள். வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரிக்கவேண்டுமென்றால், நம்மிடத்தில் விசுவாசமும் நீடிய பொறுமையும் இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் நமக்கு முன்பாக ஓடிய கர்த்தருடைய பரிசுத்தவான்களை பின்பற்றவேண்டும் (எபி 6:14).

ஆபிரகாம்
எபி 6 : 13-17

எபி 6:13. ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின போது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு:

எபி 6:14. நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார்.

எபி 6:15. அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.

எபி 6:16. மனுஷர் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள்; உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு.

எபி 6:17. அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.

தேவனுடைய வாக்குத்தங்களெல்லாம் சத்தியமானது. தாம் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றுவதற்கு தேவன் வல்லவராகயிருக்கிறார். தேவனுடைய வாக்குத்தத்தம் அவருடைய ஆணையினால் உறுதிபண்ணப்படுகிறது. கர்த்தர் யாரை ஆசீர்வதிக்கிறாரோ அவர்களை அவர் மேலும் மேலும் ஆசீர்வதிக்கிறார். தம்முடைய ஆசீர்வாதத்தை ஆணையிட்டு உறுதிபண்ணுகிறார்.

தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். தம்முடைய வாக்குத்தத்தத்தை உறுதிபண்ணும்படி ஆணையிட சித்தங்கொண்டார். தேவன் ஆணையினாலே தம்முடைய வாக்குத்தத்தத்தை ஸ்திரப்படுத்துகிறார். உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகலவிவாதத்திற்கும் முடிவாகயிருக்கிறது. மனுஷர் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள். தேவன்தாமே ஆணையிடுவதற்கு, அவரைவிட பெரியவர் யாருமில்லை. ஆகையினால் தேவன் தமது பேரிலே தானே ஆணையிட்டார் (எபி 6:13).

தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணி, அதை ஆணையிட்டபோது, "நிச்சயமாகவே நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்" (எபி 6:14) என்று சொன்னார். ஆபிரகாமும் வாக்குத்தத்தம் நிறைவேற பொறுமையாய்க் காத்திருந்தார். காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றுக்கொண்டார்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட காலத்திற்கும், அது நிறைவேறும் காலத்திற்கும் இடையே இடைவெளி உண்டாயிற்று. சில சமயங்களில் இந்த இடைப்பட்டகாலம் குறுகிய காலமாகயிருக்கும். சில வேளைகளில் இந்த இடைவெளி நீண்டகாலமாகக் கூடயிருக்கலாம். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், பொறுமையோடு காத்திருக்க பழகிக்கொள்ளவேண்டும். தேவன் தாம் வாக்குப்பண்ணினதை நிச்சயமாய் நிறைவேற்றுவார். சில சமயங்களில் உடனே நிறைவேற்றுவார். சில சமயங்களில் காலதாமதம் உண்டாகலாம். காலதாமதம் ஏற்படும்போது விசுவாசிகள் பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதற்கும், அது நிறைவேறுவதற்கும் இடைப்பட்ட காலம், விசுவாசிகளாகிய நமக்கு பரீட்சையின் காலமாகயிருக்கிறது. பொறுமையோடு காத்திருக்கிறவர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை நிச்சயமாகவே பெற்றுக்கொள்வார்கள். ஆபிரகாம் பொறுமையோடு காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றுக்கொண்டதுபோல, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் பொறுமையோடு காத்திருந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

பொதுவாக மனுஷர் ஆணையிடும்போது தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள். இவ்வாறு ஆணையிடுவதே பொதுவான பழக்கம். ஏனெனில் உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகலவிவாதத்திற்கும் முடிவாயிருக்கிறது. ஒரு சிலர் கர்த்தர் பேரில் ஆணையிடுவார்கள். தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணினபோது, தாம் பண்ணின வாக்குத்தத்தத்தை உறுதிபண்ணுவதற்கு ஆணையிட சித்தங்கொண்டார். ஆனால் ஆணையிடும்படிக்கு தேவனுக்கு தம்மைவிட பெரியவர் ஒருவருமில்லை. ஆகையினால் தேவன் தமது பேரிலே தானே ஆணையிட்டார். தேவன் வாக்குத்தத்தம் பண்ணி, அதை ஆணையிட்டு உறுதிபண்ணும்போது, அவர் அதை ஒருபோதும் மறப்பதில்லை. தேவன் ஆணையிட்டது, அவருக்கு சித்தமான காலத்தில் நிறைவேறும்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் அவருடைய நித்திய ஆலோசனையில் ஆரம்பமாயிற்று. தேவனுடைய வாக்குத்தத்தம் மாறாதது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை சுதந்தரித்துக் கொள்கிறவர்களுக்கு தேவனுடைய சித்தம் தெரிந்திருக்கவேண்டும். அவர் தம்முடைய ஆலோசனையின் மாறாத நிச்சயத்தை, தம்முடைய பிள்ளைகளுக்கு வெளிப்படுத்த சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர் தம்முடைய ஆலோசனைகளை மாற்றவேண்டிய அவசியம் எதுவும் உண்டாகாது. ஏனெனில் தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை, ஓர் ஆணையினாலே ஸ்திரப்படுத்தியிருக்கிறார் (எபி 6:17).

பொய்யுரையாத தேவன்
எபி 6 : 18-20

எபி 6:18. நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.

எபி 6:19. அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.

எபி 6:20. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நாம் தாராளமாய் நம்பலாம். அவருடைய வாக்குத்தத்தத்தை நாம் உறுதியாய்த் தரித்திருக்கலாம். அவர் எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன். சுவிசேஷங்களினால் நமக்கு நிறைந்த ஆறுதல் உண்டாகும்படிக்குச் செய்திருக்கிறார். நாம் வாக்குத்தத்திற்கு சுதந்தரவாளிகளாகயிருக்கிறோம். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி, நாம், கர்த்தருடைய சமுகத்தில் அடைக்கலமாய் ஓடிவந்திருக்கிறோம். கர்த்தருடைய சமுகத்தில் யாரெல்லாம் மனத்தாழ்மையோடும், மனந்திருந்திய இருதயத்தோடும் ஓடிவருகிறார்களோ, அவர்களெல்லோருக்குமே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அடைக்கலமாகயிருக்கிறார் (எபி 6:18).

தம்மிடத்தில் ஓடிவந்த நமக்கு நிறைந்த ஆறுதல் உண்டாகவேண்டுமென்பது தேவனுடைய விருப்பம். இதுவே அவருடைய சித்தம். தம்மை விசுவாசிக்கிறவர்கள் நிறைந்த ஆறுதலடையவேண்டுமென்று தேவன் கரிசனையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பல சோதனைகளும், வேதனைகளும், பாடுகளும், உபத்திரவங்களும் வரலாம். இவையெல்லாவற்றிற்கும் மத்தியிலும், கர்த்தருடைய ஆறுதலே நமக்கு ஆதரவாயிருக்கிறது. இந்த உலகம் கொடுக்கிற ஆறுதல் பலவீனமானது. கர்த்தர் கொடுக்கிற ஆறுதலோ பலமுள்ளது. கர்த்தருடைய ஆறுதல் நிறைவானது (எபி 6:18).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு நம்பிக்கையாகவும் ஆறுதலாகவும் இருக்கிறார். நாம் இந்த உலகத்தில் கடலில் பிரயாணம்பண்ணுகிற கப்பலைப்போல இருக்கிறோம். புயல்காற்றில் கப்பல் தத்தளிப்பதுபோல, நாமும் இப்பிரபஞ்சத்தில் தத்தளிக்கிறோம். எல்லா கப்பல்களும் துறைமுகத்தை நோக்கிப்போகும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பரலோகமே நாம் போகவேண்டிய துறைமுகம். நாம் போகும் பாதையில் நமக்கு நங்கூரம் வேண்டும். அப்போதுதான் கடல் கொந்தளிக்கும்போது, நம்முடைய கப்பலைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கமுடியும். சுவிசேஷத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கிற நம்பிக்கையே நம்முடைய ஆத்தும நங்கூரம். இந்த நங்கூரம் நிலையும் உறுதியுமானது.

சுவிசேஷத்தின் மூலமாய் வருகிற நம்பிக்கை உறுதியானது. இந்த நம்பிக்கை தேவனுடைய மெய்யான கிரியை. ஆகையினால் இது நிலையானது. சுவிசேஷத்தில் நமக்கு மாய்மாலமான நம்பிக்கை எதுவும் சொல்லப்படவில்லை. உறுதியில்லாத வாக்குத்தத்தம் எதுவும் சுவிசேஷத்தில் இல்லை. சுவிசேஷத்திலுள்ள வாக்குத்தங்களெல்லாம் நிலையும் உறுதியுமானது.

தேவனுடைய வாக்குத்தத்தம் மாறாதது. அவருடைய நோக்கமும் விருப்பமும் மாறாதது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை என்ன நோக்கத்தோடு கொடுத்திருக்கிறாரோ, அந்த நோக்கமும் மாறாது. சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு உண்டாகிற நம்பிக்கை நிலையும், உறுதியும், திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமுமாயிருக்கிறது. இந்த நங்கூரம் அஸ்திபாரத்தை நன்றாகப் பிடித்துக்கொள்ளும். எவ்வளவு பெரிய புயல்காற்றாக இருந்தாலும், கப்பலை தத்தளிக்க விடாமல், உறுதியாக நிலைத்திருக்கச் செய்யும்.

கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் மீது நாம் நம்பிக்கை வைக்கும்போது, அந்த நம்பிக்கை நம்முடைய ஆத்துமாவுக்கு நங்கூரமாயிருக்கிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எத்தனை போராட்டங்கள் வந்தாலும், நம்முடைய ஆத்தும நங்கூரம், நம்மை விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்கிறது.

BELLWETHER INTERNATIONAL

எபிரெயர் – விரிவுரை
HEBREWS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

நங்கூரத்தை மணலில் நிறுத்தினால் அது உறுதியாகயிராது. நங்கூரம் மணலை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாது நங்கூரம் நிலையாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டுமென்றால் அது திரைக்குள்ளாகப் போகவேண்டும். கடலின் ஆழத்திலுள்ள வேர்களை நங்கூரம் பற்றிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் அந்த நங்கூரம் உறுதியாயிருக்கும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கு முன்மாதிரியாக, நமக்கு முன்னால் ஓடினவர். அவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நமக்கு நித்திய பிரதான ஆசாரியராய் நியமிக்கப்பட்டிருக்கிறார். பிதாவாகிய தேவனே அவருக்கு இந்தக் கனமான ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம் எல்லோருக்கும் அஸ்திபாரமாகவும், ஆத்தும நங்கூரமாகவும் இருக்கிறார். அவர் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். கடலின் ஆழத்தில் நங்கூரம் திரைக்குள்ளாகப் போகிறதுபோல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிரதான ஆசாரியராய், மகாபரிசுத்த ஸ்தலத்திலுள்ள திரைக்குள் பிரவேசித்திருக்கிறார். அவரே நம்முடைய நம்பிக்கைக்கு நிலையும் உறுதியுமான நங்கூரமாயிருக்கிறார்.

விசுவாசிகளின் நம்பிக்கை இயேசுகிறிஸ்துவின்மீது நிலைத்திருக்க வேண்டும். அவரே நம்முடைய ஆத்துமாவிற்கு நங்கூரமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அசைக்கப்படுவதில்லை. அவர் மகாபரிசுத்த ஸ்தலத்திலுள்ள திரைக்குள் பிரவேசித்து, பிதாவாகிய தேவனிடம் நமக்காகப் பரிந்து பேசுகிறார். நம்முடைய நித்திய பிரதான ஆசாரியர், தேவனிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே கிறிஸ்துவானவர் மத்தியஸ்தராயிருக்கிறார்.

7 அதிகாரம்

நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய ஆத்தும இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, அவர் நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிறார். மெல்கிசேதேக்கைப் பற்றிய விவரம் (எபி 7:1-3). ஆரோனின் ஆசாரியத்துவத்தைவிட மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் மேன்மையானது (எபி 7:4-10). கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார். அவர் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டார். இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார் (எபி 7:11-28).

மெல்கிசேதேக்கு
எபி 7 : 1-3

எபி 7:1. இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்.

எபி 7:2. இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்; இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அருத்தமாம்.

எபி 7:3. இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.

பழைய ஏற்பாட்டில், ஆதியாகமம் புஸ்தகத்திலும் (ஆதி 14:18-24), சங்கீதம் புஸ்தகத்திலும் (சங் 102:4). மெல்சேதேக்கைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சம்பவங்களைத் தவிர மெல்கிசேதேக்கைப்பற்றி வேதாகமத்தில் வேறு எங்கும் சொல்லப்படவில்லை. மெல்கிசேதேக்கைப்பற்றிய அநேக காரியங்கள் இன்னும் அறியாத இரகசியமாகவே இருக்கிறது.

வேதபண்டிதர்கள் மெல்கிசேதேக்கைப் பற்றி மூன்று காரியங்களை பொதுவாகச் சொல்லுகிறார்கள் அவையாவன : 1. இவர் நோவாவின் குமாரனாகிய சேம் என்பவர். யூதமார்க்கத்து ரபீமார்களில் பிரசித்திப் பெற்ற ஒருவர் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். 2. இயேசுகிறிஸ்துவே மெல்கிசேதேக்கு என்று கிறிஸ்தவ ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். 3. இவர் கானானிய ராஜா. சாலேம் தேசத்தில் ஆட்சிபுரிந்தவர் என்பது இவரைப்பற்றிச் பொதுவாகச் சொல்லப்படும் கருத்து ஆகும்.

மெல்கிசேதேக்குக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் அநேக ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அவையாவன:

1. மெல்கிசேதேக்கு ஒரு ராஜாவாயிருந்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் ராஜாவாகயிருக்கிறார். மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜா. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ சர்வலோகத்திற்கும் ராஜாதி ராஜாவாகயிருக்கிறார்.

2. மெல்கிசேதேக்கு நீதியின் ராஜாவாகயிருந்தார். மெல்கிசேதேக்கு என்னும் பெயருக்கு "நீதியின் ராஜா" என்று பொருள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ நீதியும் நியாயமுள்ள ராஜாவாகயிருக்கிறார்.

3. மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவாகயிருந்தார். சாலேமின் ராஜா என்னும் பெயருக்கு "சமாதானத்தின் ராஜா" என்று அர்த்தம். இவரே முதலாவதாக வந்த நீதியின் ராஜா. இவரே முதலாவதாக ஆட்சிபுரிந்த சமாதானத்தின் ராஜா. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நீதியின் ராஜாவாகவும், சமாதானத்தின் ராஜாவாகவும் இருக்கிறார்.

4. மெல்கிசேதேக்கு உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார்.

5. வேதாகமத்தில் மெல்கிசேதேக்கின் வம்சவரலாறு சொல்லப்படவில்லை (எபி 7:3). இவர் தகப்பனும் தாயும், வம்சவரலாறும் இல்லாதவர். இவருக்கு நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் இல்லை. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பானவராயிருக்கிறார். என்றென்றைக்கும் ஆசாரியராய் நிலைத்திருக்கிறார். இவர் கிறிஸ்துவுக்கு அடையாளமானவர். கிறிஸ்துவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார்.

6. ஆபிரகாம் ராஜாக்களை முறியடித்து வந்தார். அப்போது மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோய் அவரை ஆசீர்வதித்தார் (எபி 7:1). மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவாகயிருந்தாலும், அவர் ஒரு ஆசாரியராக ஆபிரகாமை சந்தித்து, அவரை ஆசீர்வதிக்கிறார். மெல்கிசேதேக்கைப்போலவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தம்முடைய ஜனங்களை சந்திக்கிறார். நம்மை உற்சாகப்படுத்துகிறார். தம்முடைய பிள்ளைகளின் பலத்தைப் புதுப்பிக்கிறார். தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.

7. ஆபிரகாம் மெல்கிசேதேக்கிற்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தார் (எபி 7:2). ஆபிரகாமிடம் தசமபாகம் வாங்குவதற்கு மெல்கிசேதேக்கு பாத்திரராக எண்ணப்பட்டார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ அவரிடமிருந்து ஏராளமான ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவுக்கு நம்முடைய அன்பையும், மரியாதையையும், நன்றியையும் காண்பிக்கவேண்டும். கர்த்தருக்கு நம்முடைய துதிகளையும், ஸ்தோத்திரங்களையும், தசமபாகங்களையும் செலுத்தவேண்டும்.

8. மெல்கிசேதேக்கு தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவராய், என்றென்றைக்கும் ஆசாரியராக நிலைத்திருக்கிறார் (எபி 7:3). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற, நித்திய பிரதான ஆசாரியராயிருக்கிறார். தம்முடைய பயபக்தியிலும், அதிகாரத்திலும் கிறிஸ்துவானவர் தேவனுடைய சாயலைப்பெற்றிருக்கிறார்.

பெரியவராயிருக்கிற மெல்கிசேதேக்கு
எபி 7 : 4-10

எபி 7:4. இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்.

எபி 7:5. லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின் அரையிலிருந்துவந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளைபெற்றிருக்கிறார்கள்.

எபி 7:6. ஆகிலும், அவர்களுடைய வம்சவரிசையில் வராதவனாகிய இவன் ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான்.

எபி 7:7. சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான், அதற்குச் சந்தேகமில்லை.

எபி 7:8. அன்றியும், இங்கே மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள்; அங்கேயோ, பிழைத்திருக்கிறான் என்று சாட்சிபெற்றவன் வாங்கினான்.

எபி 7:9. அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோன போது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்,

எபி 7:10. தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆரோனின் சந்ததியில் வந்தவர்கள் மாத்திரமே பிரதான ஆசாரியராக அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். மெல்கிசேதேக்கு ஆரோனுடைய சந்ததியில் வராவிட்டாலும், அந்தச் சந்ததியில் வருகிற மற்ற பிரதான ஆசாரியரைவிட, மிகவும் பெரியவராயிருக்கிறார். ஆபிரகாம் கோத்திரத்தலைவனாகயிருந்தாலும், அவரும் மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் கொடுத்தார். கொள்ளையிடப்பட்ட பொருள்களில் ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்து, அவருடைய ஆசாரிய ஊழியத்தை அங்கீகரித்தார் (எபி 7:4).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் லேவியின் புத்திரர் மாத்திரமே ஆசாரியத்துவ ஊழியத்தைச் செய்தார்கள். இவர்கள் மாத்திரமே ஆபிரகாமின் சந்ததியாரிடத்தில், நியாயப்பிரமாணத்தின்படி, தசமபாகம் வாங்குகிறதற்கு கட்டளை பெற்றிருக்கிறார்கள் (எபி 7:3). ஆனால் மெல்கிசேதேக்கிற்கோ லேவியானவனும் தசமபாகம் கொடுத்தார். மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு போனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தான்.

லேவியானவன் தசமபாகம் வாங்குகிறான். ஆனாலும் லேவியானவனும் ஆபிரகாமின் மூலமாய் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது (எபி 7:9,10).

லேவியானவனே மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் கொடுத்ததினால், லேவியினுடைய ஆசாரிய ஊழியத்தைவிட, மெல்கிசேதேக்கின் ஆசாரிய ஊழியம் மேன்மையானதாயிருக்கிறது. லேவியானவனைவிடவும் மெல்கிசேதேக்கு உயர்ந்தவராயிருக்கிறார்.

மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தார். இவர் ஆபிரகாமுடைய வம்சவரலாற்றில் வராதவர். ஆபிரகாமோ தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றவர். ஆனாலும் மெல்கிசேதேக்கு ஆபிகாரமின் கையில் தசமபாகம் வாங்கி, தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்ற ஆபிரகாமை ஆசீர்வதித்தார் (எபி 7:6).

சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான் (எபி 7:7). அதற்கு சந்தேகமில்லை. சிறியவராகிய ஆபிரகாம், பெரியவராகிய மெல்கிசேதேக்கினாலே ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார். ஆபிரகாம் மிகுந்த ஐசுவரியமுள்ளவர். தேவனுடைய ஆசீர்வாதம் அவரிடத்தில் தங்கியிருக்கிறது. அவருக்கு திரளான ஆடுமாடுகள் இருந்தது. விளைச்சல் நிலங்கள் இருந்தது. ஆபிரகாமை ஆசீர்வதிப்பதாக தேவனும் வாக்குப்பண்ணி, தம்முடைய வாக்குத்தத்தத்தை முத்திரையிட்டிருக்கிறார். ஆனாலும் மெல்கிசேதேகிற்கு ஆபிரகாமை ஆசீர்வதிக்கிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இதனால் ஆபிரகாமின் மகிமையைவிட மெல்கிசேதேக்கின் மகிமை அதிக மேன்மையுள்ளதாயிருக்கிறது. மெல்கிசேதேக்கைவிட ஆபிரகாம் சிறியவராயிருந்தபடியினால், பெரியவராகிய மெல்கிசேதேக்கு, சிறியவராகிய ஆபிரகாமை ஆசீர்வதித்தார்.

லேவியின் கோத்திரத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற ஆசாரியர்கள் மரித்துப்போவார்கள். மரணம் இவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. லேவியின் வம்சத்தார் மரிக்கிற மனுஷராயிருந்தாலும், தசமபாகம் வாங்குகிறார்கள். ஆனால் மெல்கிசேதேக்கோ நாட்களில் துவக்கமும் ஜீவனின் முடிவும் இல்லாதவர். தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவராய், அவர் என்றென்றைக்கும் ஆசாரியராய் நிலைத்திருக்கிறார். மெல்கிசேதேக்கு பிழைத்திருக்கிறார் என்று சாட்சி பெற்றவர். அவ்வளவு பெரிய மெல்கிசேதேக்கு, ஆபிரகாமிடத்திலிருந்து தசமபாகம் வாங்குகிறார் (எபி 7:8).

லேவிகோத்திர ஆசாரிய முறைமை
எபி 7 : 11,12

எபி 7:11. அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்; அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?

எபி 7:12. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாகும்.

இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தார்கள். இந்த முறைமைக்குட்பட்டு நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள். லேவி கோத்திர ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாகவில்லை. லேவி கோத்திர ஆசாரிய முறைமை ஆரோனுடைய கோத்திர முறைமையின்படி உண்டாயிற்று. ஆனால் ஆரோனுடைய ஆசாரிய ஊழியத்தின் மூலமாய் பரிபூரண படுதல் உண்டாகவில்லை. ஆகையினால் வேறொரு ஆசாரியர் எழும்ப வேண்டியதாயிற்று. இந்த ஆசாரிய ஊழியம் ஆரோனுடைய முறைமையின்படி உண்டாக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி உண்டாயிற்று. லேவி கோத்திர ஆசாரிய முறைமைக்குப் பதிலாக வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டியதாயிற்று (எபி 7:11).

மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படியான ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாகும். லேவி கோத்திர ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் லேவி கோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள். லேவி கோத்திர ஆசாரியத்துவம் மாற்றப்பட்டதினால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாயிற்று. மெல்கிசேதேக்கினுடைய ஆசாரிய முறைமையினாலே நமக்கு பூரணப்படுதல் உண்டாயிருக்கிறது (எபி 7:12).

இயேசுகிறிஸ்துவின் ஆசாரியத்துவம்
எபி 7 : 13-25

எபி 7:13. இவைகள் எவரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவர் வேறொரு கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே; அந்தக் கோத்திரத்தில் ஒருவனாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லையே.

எபி 7:14. நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.

எபி 7:15. அல்லாமலும், மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்று சொல்லியிருப்பதினால், மேற்சொல்லியது மிகவும் பிரசித்தமாய் விளங்குகிறது.

எபி 7:16. அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல்,

எபி 7:17. நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்.

எபி 7:18. முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது.

எபி 7:19. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்.

எபி 7:20. அன்றியும், அவர்கள் ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார்.

எபி 7:21. ஆனதால், இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டது எவ்வளவு விசேஷித்த காரியமோ,

எபி 7:22. அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்.

எபி 7:23. அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக்கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்.

எபி 7:24. இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்.

எபி 7:25. மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

ஆசாரியத்துவமும் நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாயிற்று. நியாயப்பிரமாணத்தின் காலம் முடிந்துபோய், இப்போது சுவிசேஷத்தின் மூலமாய் உண்டாகிற கிருபையின் காலம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் காலத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்கு பூரணப்படுதல் உண்டாகவில்லை. கிருபையின் காலத்தில் ஜீவிக்கிற மெய்யான விசுவாசிகளுக்கு பூரணப்படுதல் நியமிக்கப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசாரியர்கள் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். லேவி கோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டுத்தான் இஸ்ரவேல் ஜனங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் லேவி கோத்திர ஆசாரிய முறைமையினால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பூரணப்படுதல் உண்டாகவில்லை. இதனால் தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக லேவி கோத்திரத்து ஆசாரிய முறைமை மாற்றப்பட்டிருக்கிறது. லேவி கோத்திரத்திலிருந்து ஆசாரியரை எழுப்புவதற்குப் பதிலாக, வேறொரு கோத்திரத்திலிருந்து தமக்குப் பிரியமான ஆசாரியரை எழுப்புவது தேவனுடைய சித்தமாயிற்று. ஆசாரிய முறைமைக்குரிய கோத்திரம் மாற்றப்பட்டதினால், ஆசாரியத்துவத்தின் பிரமாணமும் மாற்றப்பட்டிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து லேவி கோத்திரத்தில் தோன்றவில்லை. அவர் யூதா கோத்திரத்தில் தோன்றினார். யூதா கோத்திரத்தைக் குறித்து, மோசே ஆசாரியத்துவத்தை பற்றி ஒன்றும் சொல்லவில்லை. லேவி கோத்திர ஆசாரிய முறைமையினால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பூரணப்படுதல் உண்டாகவில்லை. அதனால் ஆசாரியத்துவம் மாற்றப்பட்டது. லேவி கோத்திரத்து ஆசாரியத்துவம், இப்போது யூதா கோத்திரத்தில் தோன்றிய இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவுக்கு முன்பு, யூதாகோத்திரத்தில் ஒருவரும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லை (எபி 7:13). யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆசாரிய ஊழியம் செய்வார்கள் என்று மோசேயும் சொல்லவில்லை (எபி 7:14).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து லேவி கோத்திரத்து முறைமையின்படி ஆசாரியராகவில்லை. அவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார். நியாயப்பிரமாணமானது மாம்ச சம்பந்தமான கட்டளையாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகவில்லை (எபி 7:14). அவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராயிருக்கிறார். மெல்கிசேதேக்கிற்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தையின் பிரகாரமாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நித்திய ஆசாரியராயிருக்கிறார் (எபி 7:15,16).

ஆசாரியர்களுடைய ஊழியத்திலும், ஆசாரியர்களை நியமனம் செய்வதிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்கள் ஆரோனுடைய முறைமையின்படி எழுப்பப்பட்டார்கள். இயேசுகிறிஸ்துவோ மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியரானார். இயேசுகிறிஸ்து என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார். அவர் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார் (எபி 7:17). இயேசுகிறிஸ்துவும் அவருடைய சுவிசேஷமும் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையுடையதாயிருக்கிறது. கிறிஸ்து நித்தியமானவர். அவருடைய சுவிசேஷமும் நித்தியமானது.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ மனுஷருடைய பிரமாணத்தினால் ஆசாரியராகவில்லை. அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே அவர் ஆசாரியரானார். இயேசுகிறிஸ்துவிடத்தில் அழியாத ஜீவன் இருக்கிறது. அவரிடத்தில் அழியாத நித்திய வல்லமையும் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவே நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிறார். ஜனங்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக பிரதான ஆசாரியர் தேவனுடைய சமுகத்தில் பாவநிவாரண பலியைச் செலுத்தவேண்டும். அதன்பின்பு அவர் தேவனுடைய சமுகத்தில் ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணவேண்டும்.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை நீக்குவதற்காக, தம்மையே பாவநிவாரண பலியாக செலுத்தியிருக்கிறார். இப்போது அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்து, நமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து செலுத்திய பாவநிவாரண பலியையும், அவருடைய பரிந்துபேசுகிற ஊழியத்தையும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் விசுவாசிக்கிறோம். இந்தச் சத்தியத்தை விசுவாசிக்கிற எல்லோருக்கும், பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து நித்திய ஜீவனை கொடுத்து ஆசீர்வதிக்கிறார்.

ஆரோனுடைய முறைமையின்படி உண்டாக்கப்பட்ட ஆசாரியத்துவ ஊழியத்திற்கும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆசாரிய ஊழியத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டதுபோல, நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாயிற்று. ஆசாரியத்துவ ஊழியத்தின் வல்லமையிலும் மாற்றமுண்டாயிருக்கிறது. லேவி கோத்திர ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாகவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவின் ஆசாரிய ஊழியமோ நமக்கு ஜீவனையும், நம்பிக்கையையும் தருகிறது.

நியாயப்பிரமாணத்தின் கட்டளை பலவீனமுள்ளதாயிருந்தது. அது பலனற்றதாயிருந்தது. ஆரோனின் ஆசாரிய முறைமையினால் பூரணப்படுதல் உண்டாகவில்லை. ஆகையினால் நியாயப்பிரமாணத்தினால் உண்டான முந்திய கட்டளை மாற்றப்பட்டது (எபி 7:18).

நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமே நமக்கு நம்பிக்கையைத் தருகிறது. அதுவே நமக்கு அதிக நன்மையைக் கொடுக்கிறது. அதிக நன்மையை வருவிக்கிற சுவிசேஷமே நம்மைப் பூரணப்படுத்துகிறது. அந்த நம்பிக்கையினாலே நாம் தேவனிடத்திலே சேருகிறோம் (எபி 7:19). கிறிஸ்துவின் மூலமாய் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பும், நம்முடைய ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பும் உண்டாயிருக்கிறது. நம்முடைய எல்லா நம்பிக்கைக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஆதாரமாயிருக்கிறார். இந்த நம்பிக்கையினால் நமக்கு தேவனுடைய சமுகத்தில் கிட்டிச் சேருகிற வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. தேவனோடு ஐக்கியமாயிருக்கிற சிலாக்கியமும் நமக்கு உண்டாயிருக்கிறது.

தேவன் பழைய ஏற்பாட்டுக்காலத்தில், ஆரோனுடைய முறைமையின்படி ஆசாரியரை அழைத்ததற்கும், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி, இயேசுகிறிஸ்துவை ஆசாரியராக அழைத்ததற்கும் வித்தியாமிருக்கிறது. ஆசாரியத்துவமும், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட்டதுபோல, ஆசாரிய ஊழியத்திற்கு அழைக்கப்படுவதும் மாற்றப்பட்டிருக்கிறது. ஆரோனுடைய முறைமையின்படியான ஆசாரியர்கள், ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள். அவர்களை ஆசாரியராக்குவதற்காக, தேவன் ஆணையிடவில்லை.

பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவை ஆசாரியராக்கும்போது, "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" என்று ஆணையிட்டார் (எபி 7:20).

இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டிருக்கிறார். இது ஒரு விசேஷித்த காரியம். இது ஒரு விசேஷித்த உடன்படிக்கை. இந்த உடன்படிக்கையின் காலமும் மாற்றப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தின் காலம் நியாயப்பிரமாணத்தின் காலத்தைவிட மேன்மையானது. சுவிசேஷத்தின் காலம் பூரணமானது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஆள்தத்துவத்தில் தெய்வீக சுபாவத்தையும், மனுஷசுபாவத்தையும் ஒன்றாய் இணைத்திருக்கிறார். இதன் மூலமாய் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே ஒப்புரவாகுதலை உறுதிசெய்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய நித்திய உடன்படிக்கையில், பிதாவாகிய தேவனையும் மனுக்குலத்தையும், தம்முடைய மத்தியஸ்த ஊழியத்தினால் இணைக்கிறார் (எபி 7:21,22).

ஆசாரியரின் எண்ணிக்கையிலும் மாற்றமுண்டாயிருக்கிறது. ஆரோனுடைய முறைமையின்படி ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆசாரியரும் தன்தன் காலத்தில்தான் ஆசாரிய ஊழியம் செய்வார். எல்லா ஆசாரியருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆசாரியர் மரித்தபின்பு, அவருடைய ஸ்தானத்தில் ஆசாரிய ஊழியம் செய்வதற்கு மற்றொரு ஆசாரியரை ஏற்படுத்தவேண்டும். இவ்வாறாக ஆரோனுடைய முறைமையின்படி ஏராளமானோர் ஆசாரியராக்கப்பட்டிருக்கிறார்கள் (எபி 7:23).

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி, இயேசுகிறிஸ்து, அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படி ஆசாரியரானார். இயேசுகிறிஸ்து என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறார். இவர் மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவர். ஆரோனுடைய முறைமையின்படி ஆசாரியரானவர்களோ, மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களாயிருந்தார்கள். இயேசுகிறிஸ்துவோ நித்திய காலமாய் நிலைத்திருக்கிறவர். அவரே ஆதியும் அந்தமுமாயிருக்கிறவர் (எபி 7:24).

இயேசுகிறிஸ்து என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்குப் பதிலாக இன்னொருவர் ஆசாரியராக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்துவின் ஆசாரிய ஊழிய ஸ்தானம் காலியாகப் போவதில்லை. அவர் தம்முடைய ஆசாரிய ஊழியத்தைவிட்டு விலகிப்போகப்போவதில்லை. நமக்காக பிதாவின் சமுகத்தில் பரிதபிக்கிற ஆசாரியர் நமக்கு உண்டு. நம்முடைய மகா பிரதான ஆசாரியர், பிதாவின் சமுகத்தில் எப்போதும் நமக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். நாம் சிறிது நேரம்கூட, நமக்கு ஆசாரிய ஊழியம் செய்கிற பிரதான ஆசாரியர் இல்லாமல், தனித்திருக்க வேண்டிய அவசியமில்லை (எபி 7:24).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் சேருகிறோம். நமக்காக பிதாவின் சமுகத்தில் வேண்டுதல் செய்யும்படிக்கு, கிறிஸ்துவானவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார். அவர் நம்மை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயும் இருக்கிறார் (எபி 7:25). நம்முடைய ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து, நம்முடைய மகா பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, பரலோகத்திலே, பிதாவின் சமுகத்தில், எப்போதும் நமக்காகப் பரிந்துப் பேசிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்து நம்மை இரட்சிக்க சித்தமுள்ளவர். அவர் நம்மை முற்று முடிய இரட்சிக்க வல்லவராகவும் இருக்கிறார் (எபி 7:25). இயேசுகிறிஸ்து கொடுக்கிற இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் அவர் மூலமாய் தேவனிடத்திற்கு வரவேண்டும் (எபி 7:25).

நமக்கேற்ற பிரதான ஆசாரியர் எபி 7 : 26-28

எபி 7:26. பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்.

எபி 7:27. அவர் பிரதான ஆசாரியர்களைப் போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார்.

எபி 7:28. நியாயப்பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது; நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணமான குமாரனை ஏற்படுத்துகிறது.

ஆரோனுடைய முறைமையின்படி ஆசாரியர்களாக்கப்பட்ட ஆசாரியர்களின் தகுதிகளுக்கும், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின் தகுதிகளுக்கும் வித்தியாசம் உண்டாயிருக்கிறது. நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்தரும், குற்றமற்றவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார். இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார் (எபி 7:26).

பாவிகளாகயிருக்கிற நமக்கு பிரதான ஆசாரியர் ஒருவர் தேவைப்படுகிறார். அவர் தேவனிடத்தில் நமக்காகப் பரிந்து பேசவேண்டும். நம்முடைய பாவங்களுக்காக அவர் பாவநிவாரண பலி செலுத்தவேண்டும். அவர் செலுத்துகிற பலியையும், அவருடைய பரிந்து பேசுகிற ஊழியத்தையும் பிதாவாகிய தேவன் அங்கீகரிக்கவேண்டும். நம்மை தேவனுடைய சமுகத்தில் ஒப்புரவாக்குவதற்கு, பரிபூரண நீதியுள்ள பிரதான ஆசாரியர் நமக்குத் தேவைப்படுகிறார்.

பாவமுள்ள பிரதான ஆசாரியரால் நம்மை தேவனுக்கு முன்பாக ஒப்புரவாக்க முடியாது. ஆரோனின் முறைமையின்படி ஏற்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியர்கள், முன்பு தங்கள் சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டும். இந்தப் பலியை அவர்கள் ஒருதரம் மாத்திரம் செலுத்தினால் போதாது. அவர்கள் நாடோறும் பலியிடவேண்டும்.

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருக்கிறார். ஆகையினால் அவர் தம்முடைய சொந்த பாவங்களுக்காக பலியிடவேண்டிய அவசியமில்லை. இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே பலியிட்டார். இதை ஒரே தரம் செய்து முடித்தார். கிறிஸ்துவானவர் நாடோறும் தம்மை பலியிட வேண்டிய அவசியமில்லை. அவர் பரிசுத்தர். அவரிடத்தில் பாவம் வாசமாயிருக்கவில்லை. அவர் மனுஷருக்கோ தேவனுக்கோ ஒரு தீங்கும் செய்யவில்லை. அவர் நம்முடைய பாவங்களை தம்மீது ஏற்றுக்கொண்டாலும், அவரிடத்தில் ஒரு குற்றமும் காணப்படவில்லை. அவர் தம்மை பாவத்திற்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அவருடைய சரீரத்தின் எந்த அவயவமும் பாவகாரியங்களில் ஈடுபடவில்லை. அவர் பாவிகளுக்கு விலகினவராகயிருக்கிறார் (எபி 7:27).

இயேசுகிறிஸ்து மனுஷரூபமெடுத்தவர். அவர் மெய்யாகவே மனுஷனாகயிருந்தார். அவருடைய மனுஷத்துவம் மெய்யானது. ஆனாலும் மனுக்குலத்திலுள்ள மற்ற மனுஷரைவிட, இயேசுகிறிஸ்து விசேஷித்தவராயிருந்தார். அவர் பரிசுத்த ஆவியினாலே, உற்பத்தி பண்ணப்பட்டவர். கன்னிகையின் வயிற்றில் பிறந்தவர்.

இயேசுகிறிஸ்து வானங்களிலும் உயர்ந்தவராயிருக்கிறார். பிதாவின் வலதுபாரிசத்திற்கு அவர் உயர்த்தப்பட்டார். இயேசுகிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பரிபூரணமாயிருக்கிறது. தேவனுடைய பரிபூரணமான சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும், இயேசுகிறிஸ்து மகாபிரதான ஆசாரியராக ஊழியம் செய்கிறார். பிதாவாகிய தேவன் அங்கீகரிக்கும்படியாக ஆசாரிய ஊழியம் செய்கிறார்.

நியாயப்பிரமாணமானது பலவீனமுள்ள மனுஷர்களை பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது. ஆரோனின் முறைமையின்படி ஆசாரியர்களாக்கப்பட்டவர்களெல்லோருமே பலவீனமுள்ள மனுஷர்கள். இயேசுகிறிஸ்துவோ நியாயப் பிரமாணத்திற்கு முன்பே பிரதான ஆசாரியராக ஏற்படுத்தப்பட்டவர். இயேசுகிறிஸ்து என்றென்றைக்கும் பூரணராயிருக்கிறவர். அவர் தேவனுடைய ஆணையோடே விளங்கிய வசனத்தினால் பிரதான ஆசாரியராக ஏற்படுத்தப்பட்டவர்.

இயேசுகிறிஸ்து பூரணராகயிருக்கிற படியினால், அவரிடத்தில் எந்தப் பாவமுமில்லை. ஆகையினால் மற்ற பிரதான ஆசாரியர்களைப்போல, கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த பாவங்களுக்காக நாடோறும் பலியிடவேண்டியதில்லை. தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் யாரும் மத்தியஸ்த ஊழியம் செய்யவேண்டிய தேவையில்லை.

தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில்தான், மனுஷருடைய பாவத்தினிமித்தமாய், பகை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் மனுஷருக்கும் தேவனுக்கும் இடையே ஒப்புரவாகுதல் நடைபெறவேண்டும். இயேசுகிறிஸ்துவுக்கு தேவனுடைய இரக்கம் தேவையில்லை. ஆனாலும் கிறிஸ்துவானவர் தேவனுடைய இரக்கத்திற்காகப் பரிந்து பேசுகிறார். அவர் தமக்காகப் பரிந்து பேசாமல், நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக, அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார். நமக்கு தேவனுக்கும் இடையில் மத்தியஸ்த ஊழியம் செய்கிறார்.

பெலவீனமுள்ள மனுஷர்களாகயிருக்கிற பிரதான ஆசாரியர்கள், தேவனிடத்தில் தங்களுக்காகப் பரிந்து பேசவேண்டும். தங்களுடைய பாவங்களுக்காக பலி செலுத்தவேண்டும். நாடோறும் பலியிடவேண்டும். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவோ என்றென்றைக்கும் பூரணராகயிருக்கிறார். அவர் தம்மைத்தாமே பலியிட்டதினால், ஒரே தரம் ஜனங்களுடைய பாவங்களுக்காக, தம்மையே பாவநிவாரண பலியாக செலுத்தி, மனுஷருக்கு பாவநிவாரணத்தை செய்து முடித்திருக்கிறார். (எபி 7:28).

8 அதிகாரம்

கிறிஸ்துவின் ஆசாரியத்துவம். நிருபத்தின் ஆசிரியர் ஏற்கெனவே இதற்கு முந்திய அதிகாரத்தில் சொல்லியதை மறுபடிமாக இந்த அதிகாரத்தில் சுருக்கமாகச் சொல்லுகிறார் (எபி 8:1,2). ஆசாரிய ஊழியத்தின் முக்கியமான அம்சங்கள் (எபி 8:3-5). கிறிஸ்துவினுடைய ஆசாரியத்துவத்தின் மேன்மையும் மகிமையும் (எபி 8:6-13).

மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருள் எபி 8 : 1-5

எபி 8:1. மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய்,

எபி 8:2. பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.

எபி 8:3. ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது.

எபி 8:4. பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்; ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே.

எபி 8:5. இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்.

கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மேன்மையானது. அது மகிமையானது. இந்தச் சத்தியத்தை நிருபத்தின் ஆசிரியர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். தான் ஏற்கெனவே சொன்னதை, இங்கு மறுபடியுமாகச் சொல்லுகிறார். கிறிஸ்துவில் நமக்கு அநேக ஆசீர்வாதங்கள் உண்டு. நமக்கு ஒரு பிரதான ஆசாரியர் உண்டு. மற்ற ஜனங்களுக்கு இல்லாத சிலாக்கியம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்குக் கிடைத்திருக்கிறது. நமக்கு இப்படிப்பட்ட பிரதான ஆசாரியர் கிடைத்திருப்பது, நமக்குக் கிடைத்திருக்கிய பெரிய சிலாக்கியம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பிரதான ஆசாரியர்கள் இருந்தார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் மகாபிரதான ஆசாரியருக்கு நிழலைப்போல இருந்தார்கள். கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள பரிசுத்தவான்களாகிய நாமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை, மகாபிரதான ஆசாரியராக, பிரத்தியட்சமாகப் பெற்றிருக்கிறோம். பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரதான ஆசாரியர்கள் நிழலாயிருந்தார்கள். கிறிஸ்துவோ பிரத்தியட்சமானவராகயிருக்கிறார்.

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார் (எபி 8:1). இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய்க் கீழ்ப்படிந்தார். சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். தமக்கு முன்பாக தம்மைத் தாழ்த்தின, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு, பிதாவாகிய தேவன், தம்முடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கும் மேன்மையைக் கொடுத்திருக்கிறார். தாழ்மையுள்ளவர்கள் உயர்த்தப்படுவார்கள். பெருமையுள்ளவர்கள் தாழ்த்தப்படுவார்கள்.

நம்முடைய பிரதான ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலே ஆசாரிய ஊழியம் செய்கிறார். இந்தப் பரிசுத்த ஸ்தலம் மனுஷரால் ஸ்தாபிக்கப்படவில்லை. இது கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டது. கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டதே மெய்யான கூடாரம். மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்டது மெய்யான கூடாரத்திற்கு அடையாளம். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்தில், ஆசாரிய ஊழியம் செய்கிறார் (எபி 8:2).

ஆசாரிப்பு கூடாரத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று வெளிப்பிரகாரம். மற்றொன்று உட்பிரகாரம். வெளிப்பிரகாரத்தில் பலிபீடம் உள்ளது. ஆசாரியர்கள் வெளிப்பிரகாரத்திலுள்ள பலிபீடத்தில் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தினார்கள். இயேசுகிறிஸ்துவின் பாவநிவாரண பலிமரணம், வெளிப்பிரகாரத்திலுள்ள பலிபீடத்தில் செலுத்தப்பட்ட பலிக்கு ஒப்பாயிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்தில் உட்பிரகாரம் ஒன்று உள்ளது. இது பரிசுத்த ஸ்தலம். திரைச்சீலை வெளிப்பிரகாரத்திற்கும் உட்பிரகாரத்திற்கும் நடுவிலிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, பரலோகத்தில் பிதாவின் சமுகத்திற்கு முன்பாக, நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். நம்முடைய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவானவர், திரைக்குள் பிரவேசித்து, தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திலே, ஆசாரிய ஊழியம் செய்கிறார். நமக்காகப் பரிந்து பேசுகிறார். நம்மை தேவனோடு ஒப்புரவாக்குகிறார்.

இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தப்படி மனுக்குலத்திற்காக தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தினார். இயேசுகிறிஸ்துவின் பலிமரணத்தை தேவனும் அங்கீகரித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சரீரம் மெய்யான கூடாரமாயிருக்கிறது. இந்தக் கூடாரம் மனுஷரால் ஸ்தாபிக்கப்படவில்லை. இது கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டது. இயேசுகிறிஸ்து மனுஷராகயிருந்தாலும், பரிசுத்த ஆவியினாலே உற்பத்தியானவர். இவர் மனுஷரால் ஸ்தாபிக்கப்படவில்லை.

இயேசுகிறிஸ்து தம்முடைய சரீரத்தில் பாவநிவாரண பலியை செலுத்திய பின்பு, இப்போது தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திலே ஆசாரிய ஊழியம் செய்கிறார். இந்தப் பரிசுத்த ஸ்தலம் பரலோகத்திலுள்ளது. பிதாவாகிய தேவன் மகாபரிசுத்த ஸ்தலத்திலே, தம்முடைய மகத்துவ ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். கிறிஸ்துவானவரோ பிதாவினுடைய மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவுக்கு பரலோகத்திலே உயர்ந்ததும், உன்னதமானதுமான ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோகத்தின் மேன்மையை கிறிஸ்துவானவர் அனுபவிக்கிறார். பிதாவானவர் குமாரனை கனப்படுத்துகிறார். மேன்மைப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவோ கனமுள்ளவராகயிருந்தாலும், அவர் பிதாவின் சமுகத்தில், தம்முடைய ஜனங்களுக்காக ஆசாரிய ஊழியம் செய்கிறவருமாயிருக்கிறார். இப்படிப்பட்ட பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு (எபி 8:2).

நிருபத்தின் ஆசிரியர் பிரதான ஆசாரியருடைய ஊழியத்தின் தன்மையை விவரிக்கிறார். ஒவ்வொரு பிரதான ஆசாரியரும் காணிக்கைகளையும், பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் நம்முடைய மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று, நம்முடைய மகாபிரதான ஆசரியராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது (எபி 8:3).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்துகிறார். நம்முடைய பாவங்களுக்கு மீட்பின் கிரயமாக, நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய திருஇரத்தத்தையே சிந்தினார். இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தின் மூலமாய் நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே பாவநிவாரண பலியைச் செலுத்தினார். அதன் பின்பு, இப்போது, கிறிஸ்துவானவர், தம்முடைய பிரதான ஆசாரிய ஊழியத்தை பரலோகத்தில் செய்துகொண்டிருக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பூமியிலே பாவநிவாரண பலியை செலுத்திய பின்பு, அவர் பரலோகத்திற்குச் சென்று, அங்கு பிதாவினிடத்தில் தம்முடைய நீதியை வெளிப்படுத்துகிறார். அங்கு நமக்காகப் பரிந்து பேசுகிறார். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே இன்னும் இருப்பாரானால், அவர் ஆசாரியராயிருக்கமாட்டார் (எபி 8:4). அவர் லேவிகோத்திரத்து முறைமையின் பிரகாரம் ஆசாரியராயிருக்கமாட்டார். இயேசுகிறிஸ்து பரிபூரணமான பிரதான ஆசாரியர். மற்ற பிரதான ஆசாரியர்களோ குறைவுள்ளவர்கள். கிறிஸ்துவோ நிறைவானவர்.

இந்தப் பூமியிலுள்ள பிரதான ஆசாரியர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது (எபி 8:5). சீனாய் மலையிலே தேவன், தனக்குக் காண்பித்த மாதிரியின்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணினார் (எபி 8:5). தனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படி எல்லாவற்றையும் செய்ய மோசே எச்சரிக்கையாயிருந்தார். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்ட கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்யவில்லை. அவர் பரிசுத்தஸ்தலத்திலும், கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியம் செய்கிறார் (எபி 8:2).

விசேஷித்த உடன்படிக்கை
எபி 8 : 6-13

எபி 8:6. இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.

எபி 8:7. அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே.

எபி 8:8. அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங் காலம் வருகிறது.

எபி 8:9. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எபி 8:10. அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.

எபி 8:11. அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.

எபி 8:12. ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எபி 8:13. புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் ஆசாரியத்துவ ஊழியம் மேன்மையானது. உன்னதமானது. இயேசுகிறிஸ்து விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார். இந்த நிருபத்தின் ஆசிரியர் முதலாம் உடன்படிக்கையையும், இரண்டாம் உடன்படிக்கையையும் விரிவாக எழுதுகிறார். முதலாம் உடன்படிக்கை பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கொடுக்கப்பட்ட உடன்படிக்கை. இரண்டாம் உடன்படிக்கை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் புதியஏற்பாட்டுக் காலத்திலுள்ள நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் உடன்படிக்கையே விசேஷித்த உடன்படிக்கை. இந்த உடன்படிக்கை தேவனுடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, இந்த விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார். அவர் தேவனுடைய சமுகத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிற, முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார் (எபி 8:6).

நிருபத்தின் ஆசிரியர் முதலாம் உடன்படிக்கையான பழைய உடன்படிக்கையின் தன்மையைப் பற்றி விவரிக்கிறார். முதலாம் உடன்படிக்கை சீனாய் மலையில் ஸ்தாபிக்கப்பட்டது. தேவன் இந்த உடன்படிக்கையை யூதாதேசத்து முற்பிதாக்களோடு ஏற்படுத்தினார். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். நம்முடைய கர்த்தராகிய தேவன், இஸ்ரவேல் ஜனத்தாருடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்தார். அவர்களை விடுவித்து கொண்டு வரும்படிக்கு, தேவன் அவர்களுடைய கையைப் பிடித்த நாட்களிலே, அவர்களோடு இந்த முதலாம் உடன்படிக்கையை உண்டுபண்ணினார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ அந்த உடன்படிக்கையில் நிலைநிற்கவில்லை. இதனால் கர்த்தரும் அவர்களை புறக்கணித்துவிட்டார் (எபி 8:9).

முதலாம் உடன்படிக்கை பிழையுள்ளதாயிருந்தது. அது பிழையில்லாததாயிருந்திருக்குமானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டியது இருந்திருக்காது (எபி 8:7). இஸ்ரவேல் ஜனங்கள் முதலாம் உடன்படிக்கையிலே நிலைநிற்கவில்லை. அதனால் தேவன் அவர்களைப் புறக்கணித்தார். அவர்களை குற்றப்படுத்தினார். இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் வருகிறது என்று கர்த்தர் அவர்களிடத்தில் சொன்னார் (எபி 8:8).

முதலாம் உடன்படிக்கையினுடைய தன்மை பூரணமானதுதான். உடன்படிக்கையில் எந்தவிதமான பிழையும் இல்லை. அந்த உடன்படிக்கையைத் தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின்படிதான் கொடுத்தார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ அந்த உடன்படிக்கையிலே நிலைநிற்கவில்லை. உடன்படிக்கையில் ஒரு குற்றமுமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள்தான் குற்றம் செய்தார்கள். தேவன் அவர்களைக் குற்றப்படுத்தினார். அவர்களோடு புதுஉடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் வரும் என்று அறிக்கை செய்தார். முதலாம் உடன்படிக்கை குறைவானதல்ல. ஆனாலும் சுவிசேஷத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, முதலாம் உடன்படிக்கையானது குறைவானதாகவே இருக்கிறது.

முதலாம் உடன்படிக்கை உறுதியுள்ளதாகயில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் அந்த உடன்படிக்கையிலே நிலைநிற்கவில்லை. தேவன் தம்முடைய உடன்படிக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறவர்களை ஆசீர்வதிக்கிறார். அதே வேளையில் தம்முடைய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படியாமல், அதில் நிலைநிற்காமல் போனவர்களையோ, தேவனும் புறக்கணித்துவிடுகிறார். தம்முடைய நுகத்தை ஏற்க மறுக்கிற ஜனங்களை கர்த்தர் குற்றப்படுத்துகிறார். அவர்களைப் புறக்கணித்துவிடுகிறார்.

பழைய உடன்படிக்கை பழமையாய்ப் போயிற்று. அது பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது (எபி 8:11). இரண்டாம் உடன்படிக்கை புதுஉடன்படிக்கையென்று சொல்லப்படுவதினால், முதலாம் உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையாயிற்று. தேவன் முந்தினதை பழமையாக்கினார். நீதியின் சூரியன் பிரகாசமாக ஒளி கொடுக்கும்போது, சிறிய விளக்கின் வெளிச்சம் மங்கிப்போகும். சூரியனுடைய பிரகாசத்திற்கு முன்பாக, சிறிய விளக்கால் பிரகாசமாய் எரிய முடியாது. முதலாம் உடன்படிக்கையான பழைய உடன்படிக்கை உருவழிந்துபோக காலம் சமீபித்திருக்கிறது.

நிருபத்தின் ஆசிரியர் முதலாம் உடன்படிக்கையை விவரிக்கிறார். இந்த உடன்படிக்கை நமக்கு புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் பிழை எதுவுமில்லை. முதல் உடன்படிக்கையைவிட இரண்டாம் உடன்படிக்கை மேன்மையானது, உன்னதமானது. இரண்டாம் உடன்படிக்கை எல்லாம் அம்சங்களிலும் பரிபூரணமாயிருக்கிறது. சகலமும் ஒழுங்கும் கிரமமுமாயிருக்கிறது (எபி 8:7).

முதலாம் உடன்படிக்கையில் மனுஷருடைய கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் உடன்படிக்கைக்கு தேவனுடைய கிருபையே ஆதாரம். இரண்டாம் உடன்படிக்கை விசேஷித்த உடன்படிக்கை. இது தேவனுடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது (எபி 8:6). இரண்டாம் உடன்படிக்கையின் பிரகாரம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முக்கியமான ஆசாரிய ஊழியத்தைப் பெற்றிருக்கிறார். சுவிசேஷத்தின் உடன்படிக்கை இயேசுகிறிஸ்துவின் நல்ல கரத்தில் பாதுகாப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் கரத்திலிருப்பதே நமக்கு மெய்யான பாதுகாப்பு.

இரண்டாம் உடன்படிக்கை தேவனுடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. புதிய உடன்படிக்கையின் பிரகாரம் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிபுரிகிறார். கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம். கர்த்தருடைய கிருபையினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நாம், நீதியின் கிரியைகளைச் செய்கிறோம். நற்கிரியைகளைச் செய்கிறோம்.

இரண்டாம் உடன்படிக்கையில் தேவனுடைய கிருபை நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. தேவனுடைய கிருபையில் நாம் தொடர்ந்து நிலைத்திருக்கலாம் என்னும் நம்பிக்கை நமக்குள் உண்டாயிருக்கிறது. பரலோகத்தில் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கும் சிலாக்கியமும் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் தேவன் நமக்குக் கொடுக்கும் விசேஷித்த வாக்குத்தத்தங்களாகும். இரண்டாம் உடன்படிக்கை தேவனுடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இந்த உடன்படிக்கை விசேஷித்த உடன்படிக்கையாகும் (எபி 8:6).

இரண்டாம் உடன்படிக்கை புதிய உடன்படிக்கை. இது எப்போதுமே புதிதாயிருக்கும். தேவன் தாமே முந்தின முதலாம் உடன்படிக்கையை பழமையாக்கினார். அது பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது. முதலாம் உடன்படிக்கையாகிய பழைய உடன்படிக்கை உருவழிந்துபோக காலம் சமீபித்திருக்கிறது (எபி 8:13).

இரண்டாம் உடன்படிக்கையோ நித்தியமானதாகவும், புதிதானதாகவும் இருக்கிறது. இது ஒருபோதும் பழமையாய்ப் போவதில்லை. இது உருவழிந்து போவதில்லை. தேவன் தாமே தம்முடைய விசேஷித்த வாக்குத்தத்தங்களினால் புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்திருக்கிறார். அவர் தம்முடைய தெய்வீக வல்லமையினால் புதிய உடன்படிக்கையைக் காத்துக்கொள்வார்.

தேவன் தம்முடைய பிள்ளைகளோடு இரண்டாம் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இந்த உடன்படிக்கையிலுள்ள அம்சங்களெல்லாம் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் நடுவே ஞானஸ்நானத்தினாலும், கர்த்தருடைய பந்தியினாலும் முத்திரையிடப்பட்டிருக்கிறது.

தேவன் முதலாவது உடன்படிக்கையை தம்முடைய ஜனங்களுக்கு கற்பலகைகளில் எழுதினார். இப்போதோ தம்முடைய இரண்டாவது உடன்படிக்கையின் பிரமாணங்களை அவர்களுடைய மனதில் வைத்து, அவர்களுடைய இருதயங்களில் எழுதுகிறார். தேவனுடைய பிரமாணத்திற்கு, அவருடைய பிள்ளைகளின் ஆத்துமாக்கள் கற்பலகைகளாகயிருக்கிறது. நம்முடைய தேவனாகிய கர்த்தர், நம்முடைய இருதயங்களின் கற்பலகைகளில், தம்முடைய பிரமாணங்களை எழுதுகிறார்.

தேவன் தம்முடைய உடன்படிக்கையின் மூலமாய், தம்முடைய ஜனங்களோடு மிகவும் நெருங்கி வருகிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் இடையிலுள்ள ஐக்கியம் மகிமை நிறைந்ததாகயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய தேவனாகயிருப்பார். அவர்கள் தேவனுடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் நம்முடைய தேவனாயிருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். அவர் நம்மை நேசிப்பதற்காக நம்முடைய தேவனாயிருக்கிறார். நாம் எல்லா காரியங்களிலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். கர்த்தரைக் கனப்படுத்தவேண்டும். அவருடைய உடன்படிக்கைக்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தர் நம்முடைய தேவனாகயிருக்கும்போது, அவர் நமக்காக தம்முடைய கடமைகளை நிறைவேற்றுவார். நாம் அவருடைய ஜனமாயிருக்கும்போது, நாமும் அவருக்காக நம்முடைய கடமைகளை நிறைவேற்றவேண்டும். நம்முடைய சுயபலத்தினால், நம்மால் பல காரியங்களைச் செய்ய முடியாது. தேவனுக்குச் சித்தமான பிரகாரம் நாம் ஜீவிப்பதற்கு, தேவனுடைய உதவி தேவைப்படுகிறது. தேவனுடைய உதவிகளையும், ஒத்தாசைகளையும் பெற்றுக்கொண்டு, நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

கர்த்தர் நம்முடைய தேவனாயிருக்கிறார். நாம் அவருடைய ஜனமாயிருக்கிறோம். இந்த உறவு ஒரு தெய்வீக உறவு. தேவனே இந்த உறவை நம்மோடு முதலாவதாக ஸ்தாபித்திருக்கிறார். இந்த உறவை தேவன் தம்முடைய கிருபையினால் உறுதிபண்ணுகிறார். நாம் தேவனுடைய ஜனமாயிருப்பதற்கு அவருடைய கிருபை நம்மை தகுதிப்படுத்துகிறது. அவருடைய கிருபை நமக்குப் போதுமானதாயிருக்கிறது. நாம் தேவனிடத்தில் அன்புகூருவதற்கும், தேவனுக்காக ஊழியம் செய்வதற்கும் தேவகிருபை நம்மைத் தகுதிப்படுத்துகிறது. தேவகிருபையே நம்முடைய இருதயத்தில் அன்பையும், ஊழிய வாஞ்சையையும் நிரப்புகிறது.

கர்த்தருடைய ஜனமாயிருக்கிற நாம், தேவனுடைய கிருபையில் பெருகவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். தேவனோடு இன்னும் நெருக்கமான ஐக்கியத்திற்குள் வரவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளில் சிறியவர்கள் முதற்கொண்டு, பெரியவர்கள் வரைக்கும், எல்லாரும் அவரை அறிந்துகொள்ளவேண்டும் (எபி 8:11). தேவனைப்பற்றிய சத்தியங்களை நம்முடைய அயலாருக்கு நாம் போதிக்கவேண்டும். அவர்களும் நம்மைப்போல கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சி பெறவேண்டும் என்று விரும்பி, நாம் அவர்களுக்கு சத்தியங்களைப் போதிக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், யூதமார்க்கத்தின் ரபீமார்கள், தேவனுடைய பிரமாணத்தை ஜனங்களுக்கு அதிகமாய்ப் போதித்தார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை அதிகமாய் உபதேசிக்க வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

எல்லாரும் தம்மை அறிவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையால் "கர்த்தரை அறிந்துகொள்" என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை (எபி 8:11). கிறிஸ்துவைப்பற்றிய சத்தியம் எல்லா ஜனங்கள் மத்தியிலும் கடந்து வரும். சிறியவர்களும் பெரியவர்களும், ஆண்களும் பெண்களும், இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிந்திருப்பார்கள். இது ஒரு ஆசீர்வாதமான காலம். இப்படிப்பட்ட காலம் வெகுசீக்கிரத்தில் வரவேண்டுமென்று, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லோரும் கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும்.

கர்த்தர் தம்முடைய இரண்டாம் உடன்படிக்கையின் பிரகாரம் மனுஷருடைய பாவங்களை கிருபையாய் மன்னிக்கிறார். அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பார் (எபி 8:12). நம்முடைய சுயமுயற்சியினாலோ அல்லது நாம் செய்த நற்கிரியையினாலோ நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை. தேவன் தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார்.

கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிப்பது பூரணமான மன்னிப்பாயிருக்கிறது. அவர் எல்லாவிதமான பாவங்களையும், அநியாயங்களையும், அக்கிரமங்களையும் மன்னிக்கிறார். தேவன் நம்முடைய பாவங்களை மன்னிப்பது இறுதியானது. அது நிரந்தரமானது. நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் தேவன் மன்னித்துவிட்டதினால், இனிமேல் அவற்றை நினைக்கமாட்டார். நம்முடைய பாவங்களை அவர் மறுபடியும் நினைத்து, நம்மைத் தண்டிக்கமாட்டார். தேவனுடைய கிருபையும் இரக்கமும் மாறாதது. அவை நித்தியமானது.

பழைய உடன்படிக்கையில் தேவன் மனுஷருடைய பாவங்களை இவ்வளவு தாராளமாய் மன்னிக்கவில்லை. அவர்களுடைய அநியாயங்களை தேவன் கிருபையாய் மன்னிக்கவில்லை. அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் தேவன் நினைத்துப் பார்த்து, அவர்களை எச்சரித்தார். கீழ்ப்படியாதவர்களைத் தண்டித்தார். ஆனால் கிருபையின் காலத்தில் ஜீவிக்கிற நமக்கோ முந்தின உடன்படிக்கையை பழமையாக்கி, நமக்கு புது உடன்படிக்கையைக் கொடுத்திருக்கிறார். பழைய உடன்படிக்கை பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது. அது உருவழிந்துபோக காலம் சமீபித்திருக்கிறது (எபி 8:13).

பழைய உடன்படிக்கை பழமையாக்கப்பட்டதற்காக நாம் கர்த்தரைத் துதிக்கிறோம். அவர் நம்மோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருப்பது அவருடைய சுத்தகிருபை. புதிய உடன்படிக்கையின் பிரகாரம் கர்த்தர் நம்முடைய அநியாயங்களையும், அக்கிரமங்களையும் கிருபையாய் மன்னிப்பதற்காக, கர்த்தருடைய சமுகத்தில் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர் நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நினையாமல் மறந்துவிடுவதற்காக, அவரை நன்றிடன் துதிக்கவேண்டும். அவருடைய கிருபைகளையும், இரக்கங்களையும், அவர் நமக்குச் செய்கிற நன்மைகளையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. தேவனுடைய இரக்கங்களையும், மன்னிக்கும் கிருபையையும் நாம் எப்போதும் நம்முடைய நினைவில் வைத்திருக்கவேண்டும்.

9 அதிகாரம்

ஆசரிப்புக்கூடாரம் (எபி 9:1-5). ஆசரிப்புக்கூடாரத்தில் ஆராதனையும், ஊழியமும் (எபி 9:6-7). ஆசரிப்புக்கூடாரத்தின் ஆவிக்குரிய அர்த்தம் (எபி 9:8-28).

ஆசரிப்புக்கூடாரம் எபி 9 : 1-5

எபி 9:1. அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் உடையதாயிருந்தது.

எபி 9:2. எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும்.

எபி 9:3. இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது.

எபி 9:4. அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன.

எபி 9:5. அதற்கு மேலே மகிமையுள்ள கேருபீன்கள் வைக்கப்பட்டுக் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தன; இவைகளைக் குறித்து விவரமாய்ப்பேச இப்பொழுது சமயமில்லை.

நிருபத்தின் ஆசிரியர் ஆசரிப்புக்கூடாரத்தைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார். ஆசரிப்புக்கூடாரம் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாம் பாகத்திற்கு பரிசுத்த ஸ்தலம் என்று பெயர். இரண்டாம் பாகத்திற்கு மகாபரிசுத்த ஸ்தலம் என்று பெயர். ஆசரிப்புக்கூடாரத்தின் முதலாம் பாகம் உட்பிரகாரமென்றும், இரண்டாம் பாகம் வெளிப்பிரகாரமென்றும் அழைக்கப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேவஆராதனையில் பயன்படுத்துகிற பரிசுத்த பணிமுட்டுகள் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்தின் முதலாவது பகுதி வெளிப்பிரகாரம். இது பரிசுத்த ஸ்தலம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் ஒரு குத்துவிளக்கு இருக்கிறது. இந்தக் குத்துவிளக்கு எரிந்துகொண்டிருக்கவேண்டும். இதில் எண்ணெய் நிரம்பியிருக்க வேண்டும். பரிசுத்த ஸ்தலத்திலுள்ள குத்துவிளக்கு எப்போதும் எரிந்துகொண்டிருக்க வேண்டுமென்பது பிரமாணம்.

பரிசுத்தஸ்தலத்தில் ஜன்னல்கள் இல்லை. இங்கு வேறு வழியாய் வெளிச்சம் வருவதற்கும் வாய்ப்பில்லை. ஆகையினால் குத்துவிளக்கின் வெளிச்சம் தேவையாயிருக்கிறது. பரிசுத்த ஸ்தலத்திற்கு குத்துவிளக்கு மாத்திரமே வெளிச்சம் தருகிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ நீதியின் சூரியனாகயிருக்கிறார். அவரே மகிமையின் பிரகாசமாகயிருக்கிறார். கிறிஸ்துவின் ஒளி பூரணமானது. பரிசுத்த ஸ்தலத்திலுள்ள குத்துவிளக்கின் வெளிச்சத்தோடு, கிறிஸ்துவின் வெளிச்சத்தை ஒப்பிடும்போது, கிறிஸ்துவின் வெளிச்சம் மேன்மையானது, பரிசுத்தமானது, பிரகாசமானது, பரிபூரணமானது.

பரிசுத்த ஸ்தலத்தில் மேஜையும் தேவசமுகத்தப்பங்களும் இருந்தன. குத்துவிளக்கிற்கு நேர் எதிராக மேஜை வைக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய மேஜைக்கு நாம் இருட்டில் வரக்கூடாது. வெளிச்சத்தில்தான் வரவேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு வெளிச்சமாகயிருக்கிறார். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது, அவருடைய வெளிச்சம் நமக்குக் கிடைக்கவேண்டும். கர்த்தருடைய பந்தியில் அவருடைய சரீரத்திற்கு அடையாளமாகயிருக்கிற அப்பத்தைப் புசிக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவே ஜீவ அப்பமாகயிருக்கிறார். பிதாவின் வீட்டில் நம் எல்லோருக்கும் போதுமான அளவு அப்பம் இருக்கிறது. இன்னும் மீதமும் இருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து, நமக்கு அன்றாடம் தேவைப்படுகிற, அன்றன்றுள்ள அப்பங்களை புதிதாய்ப் பெற்றுக்கொள்ளலாம். அதிலும் விசேஷமாக, கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குபெறும்போதெல்லாம், நமக்கு அவருடைய அப்பத்தைப் புசிக்கும் சிலாக்கியம் கிடைக்கிறது (எபி 9:2).

ஆசரிப்புக்கூடாரத்தின் இரண்டாம் திரைக்குள்ளே மகாபரிசுத்த ஸ்தலம் என்னப்பட்ட கூடாரம் இருந்தது. இந்தக் கூடாரத்தில் என்ன இருந்தது என்பதை நிருபத்தின் ஆசிரியர் எழுதுகிறார் (எபி 9:3).

இதிலே பொன்னால் செய்த தூபகலசம் இருந்தது. இந்த தூபகலசத்தில் தூபபலிகள் செலுத்தப்படும். இந்தத் தூபகலசம் ஒருவேளை பொன்னால் செய்யப்பட்ட பலிபீடமாகவும் இருக்கலாம். இந்த பலிபீடத்தின்மீது தூபபலி செலுத்துவது வழக்கம் (எபி 9:4).

மகாபரிசுத்த ஸ்தலத்திலே முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கை பெட்டி இருந்தது. இந்த உடன்படிக்கை பெட்டியில் என்னென்ன பொருட்களெல்லாம் இருந்தன என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் இருந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷகாலமாக பிரயாணம் செய்தபோது தேவன் அவர்களை அற்புதமாய்ப் போஷித்தார். அவர்களுக்கு மன்னாவைப் புசிக்கக் கொடுத்தார். இதற்கு அடையாளமாக உடன்படிக்கை பெட்டியிலே, ஒரு பொற்பாத்திரத்தில் மன்னா வைக்கப்பட்டிருந்தது.

கர்த்தர் தங்களை வனாந்தரத்தில் போஷித்ததை இஸ்ரவேல் ஜனங்கள் மறந்துவிடக்கூடாது. கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், பராமரிப்பையும் அவர்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. தங்களுடைய தேவைக்கு அவர்கள் கர்த்தரையே நம்பவேண்டும். அவர்களுடைய உள்ளத்தில் விசுவாசம் இருக்கவேண்டும். அவிசுவாசம் காணப்படக்கூடாது. இதற்கு அடையாளமாக உடன்படிக்கை பெட்டியிலுள்ள பொற்பாத்திரத்தில், மன்னா வைக்கப்பட்டிருந்தது.

மகாபரிசுத்த ஸ்தலத்திலுள்ள உடன்படிக்கை பெட்டியில், ஆரோனுடைய தளிர்த்தகோல் வைக்கப்பட்டிருந்தது. இது தேவனுடைய கோல். இந்தக் கோலைக்கொண்டு மோசேயும் ஆரோனும் அநேக அற்புதங்களைச் செய்தார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவிப்பதற்காக, ஆரோனும் மோசேயும், பார்வோனுடைய அரமனையில் இந்தக் கோலை பயன்படுத்தினார்கள். இந்தக் கோல் கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவாகிய கோலின் மூலமாய், கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார்.

உடன்படிக்கை பெட்டியிலே, உடன்படிக்கையின் கற்பலகைகள் இருந்தன. இந்தக் கற்பலகைகளில் தேவனுடைய பிரமாணம் எழுதப்பட்டிருந்தது. தேவன் தம்முடைய பரிசுத்த பிரமாணத்தைப் பாதுகாப்பார். தம்முடைய வார்த்தையில் அவர் உண்மையுள்ளவராயிருப்பார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் தேவனுடைய பிரமாணங்களை நம்முடைய இருதயங்களில் எழுதவேண்டும். அவற்றிற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்த, உடன்படிக்கை பெட்டிக்கு மேலே கிருபாசனம் இருந்தது (எபி 9:5). கிருபாசனம் உடன்படிக்கை பெட்டியை மூடியிருந்தது. இதுவும் பொன்னால் செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கை பெட்டி எவ்வளவு அகலமாக இருந்ததோ, கிருபாசனமும் அவ்வளவு அகலமாகயிருந்தது.

உடன்படிக்கை பெட்டியில் உடன்படிக்கையின் கற்பலகைகள் இருந்தது. இந்தக் கற்பலகைகள் எவ்வளவு அகலமாகயிருந்ததோ, கிருபாசனமும் அவ்வளவு அகலமாகயிருந்தது. கிருபாசனம் கிறிஸ்துவுக்கு அடையாளம். கிறிஸ்துவின் நீதிக்கு அடையாளம். தேவனுடைய பிரமாணத்திற்கு கிறிஸ்துவானவர் போதுமானவராகயிருக்கிறார். நம்முடைய மீறுதல்கள் எல்லாவற்றையும் கிறிஸ்துவானவர் மூடுகிறவராகயிருக்கிறார். மகிமையுள்ள கேரூபின்கள் கிருபாசனத்தை நிழலிட்டிருந்தது. இவை தேவனுடைய பரிசுத்த தூதர்களுக்கு அடையாளம்.

ஆசரிப்புக்கூடாரத்தில் ஆராதனை முறைமைகள் எபி 9 : 6,7

எபி 9:6. இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள்.

எபி 9:7. இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்.

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள உட்பிரகாரத்திலும், வெளிப்பிரகாரத்திலும் ஆராதனை நடைபெறுகிறது. சாதாரண ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை முறைமைகளை நிறைவேற்றினார்கள். இவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தில் மாத்திரம் பிரவேசிப்பார்கள். ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு, ஆசாரியர்கள், முதலாம் கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள் (எபி 9:6). முதலாம் கூடாரத்தில் ஆசாரியர்களைத் தவிர வேறு யாரும் பிரவேசிக்கக்கூடாது. ஆசாரியர்களும் முதலாம் கூடாரத்தில் மாத்திரமே பிரவேசிக்க முடியும்.

இரண்டாம் கூடாரமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்தில் எல்லா ஆசாரியர்களும் பிரவேசிக்கமுடியாது. பிரதான ஆசாரியர் மாத்திரமே இரண்டாம் கூடாரத்திலே பிரவேசிக்க முடியும். அதுவும் வருஷத்திற்கு ஒருதரம் மாத்திரமே பிரவேசிக்க முடியும் (எபி 9:7). ஆசரியர்களோ ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாம் கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள் (எபி 9:6). சாதாரண ஆசாரியர்கள், மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு அனுமதியில்லை. மீறி பிரவேசித்தால், அவர்களுக்கு மரணமுண்டாகும்.

இரண்டாம் கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மாத்திரம் பிரவேசிக்க முடியும். இயேசுகிறிஸ்து மாத்திரமே தம்முடைய சுயநீதியினாலும், சுயபரிசுத்தத்தினாலும் பரலோகத்திற்குள் பிரவேசிக்கிறார். மனுஷர் யாராலும் தங்கள் சுயநீதியினாலோ, சுயபரிசுத்தத்தினாலோ பரலோகத்திற்குள் பிரவேசிக்கமுடியாது. பிரதான ஆசாரியனும் தன்னுடைய சுயபரிசுத்தத்தினாலும், தன்னுடைய சுயநீதியினாலும் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது. பிரதான ஆசாரியர் இரத்தத்தோடே பிரவேசிக்க வேண்டும். அந்த இரத்தத்தை தனக்காகவும், ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் பாவநிவாரண பலியாக செலுத்தவேண்டும் (எபி 9:7).

தேவனுடைய கிருபையுள்ள பிரசன்னத்திற்குள் நம்முடைய சுயமுயற்சியினால் பிரவேசிக்க முடியாது. இயேசுகிறிஸ்துவின் இரத்தமில்லாமல் நம்மாலும் தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க முடியாது. பிரதான ஆசாரியர், மகாபரிசுத்த ஸ்தலத்திலே, தான் கொண்டு போன இரத்தத்தை தனக்காகவும், ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும், பாவநிவாரண பலியாகச் செலுத்தினார்.

நமக்கோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தியிருக்கிறார். நம்மை மீட்பதற்காக கிறிஸ்துவானவர் தம்முடைய சுயஇரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்களிலிருந்து நமக்கு இரட்சிப்பு உண்டாயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், கிறிஸ்துவின் இரத்தத்தினாலேயே, தேவனுடைய பரிசுத்த சமுகத்திற்கு முன்பாக பிரவேசிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

பிரதான ஆசாரியன் மகாபரிசுத்த ஸ்தலத்திலே, இரத்தத்தை தன்னுடைய பாவங்களுக்காகவும், ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் செலுத்தவேண்டும். கிறிஸ்துவானவரோ ஆரோனுடைய முறைமையின்படி ஆசாரியராகவில்லை. அவர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராக்கப்பட்டவர். அவர் உன்னதமான பிரதான ஆசாரியர். அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை. ஆகையினால் தம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்துவானவர் இரத்தம் செலுத்த வேண்டிய அவசியம் எதுவுமில்லை. இயேசுகிறிஸ்து ஒரு பாவமும் செய்யாதவராகயிருந்தாலும், நம்முடைய பாவங்களினிமித்தமாய் அவர் பாவமானார். நம் நிமித்தமாய் அவர் சாபமானார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தேவனுடைய பரிசுத்தமான சமுகத்தில், ஜனங்களுக்காக பரிந்து பேசவேண்டும். மற்றவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்று ஜெபிப்பதற்கு முன்பாக, கிறிஸ்துவின் இரத்தம் தங்கள்மீது தெளிக்கப்படவேண்டுமென்றும், தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றும், ஊழியக்காரர்கள் முதலாவதாக தங்களுடைய பாவமன்னிப்புக்காக ஜெபம்பண்ணவேண்டும்.

ஆரோனுடைய முறைமையின்படி பிரதான ஆசாரியரானவர், ஆசாரிப்புக்கூடாரத்திலுள்ள இரண்டாம் கூடாரமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, தன்னுடைய பாவங்களுக்காக, தான் கொண்டு சென்ற இரத்தத்தைச் செலுத்தினார். பிரதான ஆசாரியர்களுடைய பாவங்கள் மாத்திரம் மன்னிக்கப்பட்டால் போதாது. ஜனங்களுடைய பாவங்களும் மன்னிக்கப்படவேண்டும். அதற்காகவே அவர் பிரதான ஆசாரியராய் ஊழியம் செய்கிறார். பிரதான ஆசாரியர் தன்னுடைய பாவங்களுக்காக இரத்தம் செலுத்திய பின்பு, ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் அவர் இரத்தம் செலுத்தவேண்டும்.

நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ நம்மை மறந்துவிடவில்லை. நம்முடைய ஜனங்களுக்காக அவர் தம்முடைய இரத்தத்தை மறக்காமல் செலுத்துகிறார். தம்முடைய பாடுகளினிமித்தமாகவும், மரணத்தினிமித்தமாகவும், தாம் சிந்திய திருஇரத்தத்தின் மூலமாகவும், நமக்கு பாவமன்னிப்பு கிடைக்கவேண்டுமென்று பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். தேவனுடைய பரிசுத்த சமுகத்தில் கிறிஸ்துவானவர் தம்முடைய ஜனங்களின் பாவங்களுக்காக, தம்முடைய சுயஇரத்தத்தையே பாவநிவாரண பலியாக செலுத்துகிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்கு பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுவதினால் நமக்கு தேவனுடைய கிருபையும் இரக்கமும் கிடைக்கிறது. கிறிஸ்துவானவர் தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவிலே மத்தியஸ்தராக ஊழியம் செய்வதினால், தேவனுக்கும் நமக்கு நடுவிலுள்ள பகை நீங்கிற்று. சமாதானம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ஜனங்களின் பாவங்களுக்காக தம்முடைய இரத்தத்தையே செலுத்தி, நமக்காகப் பரிந்து பேசி, ஆசாரிய ஊழியம் செய்கிறார்.

பரிசுத்த ஸ்தலத்திற்கு போகிற மார்க்கம்
எபி 9 : 8-10

எபி 9:8. அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்.

எபி 9:9. அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாம்.

எபி 9:10. இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.

மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்போது கிருபையின் காலத்தில் ஜீவிக்கிறோம். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக பிரவேசிக்க நமக்கு பெரிதும் விசாலமுமான கதவு திறந்திருக்கிறது. இந்தச் சிலாக்கியம் நமக்கு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிற்று. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார் (எபி 9:8).

முதலாம் கூடாரம் நிற்குமளவும், இரண்டாம் கூடாரத்திற்கு போகிற மார்க்கம் தடைபண்ணப்பட்டிருக்கிறது. முதலாம் கூடாரத்தில் ஆசாரியர்கள் எல்லோரும் நித்தமும் பிரவேசிக்கலாம். இரண்டாம் கூடாரத்திலோ பிரதான ஆசாரியன் மாத்திரம், வருஷத்திற்கு ஒருதரம், இரத்தத்தோடே பிரவேசிக்கலாம்.

முதலாம் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது. முதலாம் கூடாரத்திலே காணிக்கைகளும் பலிகளும் செலுத்தப்பட்டன. இவற்றால் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியை பூரணப்படுத்தக்கூடாமற்போயிற்று (எபி 9:9). இதனால் முதலாம் கூடாரத்திலே ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு நித்தமும் பிரவேசிக்கிற ஆசாரியர்களினால், இரண்டாம் கூடாரத்திலே பிரவேசிக்க முடியவில்லை.

அவர்கள் பலிகளைச் செலுத்தினாலும், அவர்களுடைய மனச்சாட்சி பூரணப்படுத்தப்படவில்லை. அவர்கள் செலுத்திய பலிகளினால், அவர்களுடைய மனச்சாட்சியை, பூரணப்படுத்த முடியவில்லை. தேவனுடைய கோபத்திற்கு முன்பாக ஆசாரியர்களால் நிற்கமுடியாது. அவர்களுடைய மனச்சாட்சி பூரணமில்லாமல் இருக்கிறது. ஒருவேளை அவர்களுக்கு தண்டனை கிடைக்காமல் தற்காலிகமாக தப்பிக்கலாம். ஆனாலும் அவர்களுடைய பாவங்களிலிருந்து அவர்களுக்கு மீட்பு உண்டாகவில்லை. பிரதான ஆசாரியர், ஆசாரியர்களுடைய தப்பிதங்களுக்காகவும், மகாபரிசுத்த ஸ்தலத்திலே, இரத்தத்தைச் செலுத்தினார்.

பழைய ஏற்பாட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற நியமங்களெல்லாம் நித்திய நியமங்களல்ல. போஜனபானங்களும் பலவித ஸ்நானங்களும் சரீரத்திற்கேற்ற சடங்குகளாகவே இருந்தன. இவை நிரந்தரமான தேவைகள் அல்ல. சீர்திருத்தல் உண்டாகும் காலம் இனிமேல் வரப்போகிறது. சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும் இந்த சடங்குகள் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறது (எபி 9:10).

பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்டுள்ள சடங்குகளெல்லாம் நித்தியமானவையல்ல. இவற்றை நித்தியகாலமாய் நிறைவேற்றவேண்டும் என்பது தேவனுடைய திட்டமுமல்ல. இது ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும், தற்காலிகமாக கட்டளையிடப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த ஜனங்களைவிட, சுவிசேஷத்தின் கீழ் இருக்கிற நமக்கு மேன்மையான சிலாக்கியங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நமக்கு சீர்திருத்தல் உண்டாகும் காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நன்மைகளைப் பற்றிக்கொள்ளவேண்டும். நன்மைகளைப் பற்றிக்கொள்ளாதவர்களை தீமைகள் பற்றிக்கொள்ளும் (எபி 9:10).

கிறிஸ்துவினுடைய இரத்தம் எபி 9 : 11-14

எபி 9:11. கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும்,

எபி 9:12. வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

எபி 9:13. அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி, பரிசுத்தப்படுத்துமானால்,

எபி 9:14. நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, ஆரோனுடைய முறைமையின்படி நியமிக்கப்பட்ட எல்லா பிரதான ஆசாரியரிலும் மேன்மையுள்ளவராயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவே மகத்துவமுள்ள பிரதான ஆசாரியர். கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டிருக்கிறார் (எபி 9:11). வரப்போகிற காரியங்களை பழைய ஏற்பாடு நிழலைப்போல வெளிப்படுத்தியிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறுகிறது. பழைய ஏற்பாட்டில் நிழலாயிருந்தவைகள், புதிய ஏற்பாட்டில் பிரத்தியட்சமாயிருக்கிறது.

எல்லா நன்மைகளும் இனிமேல் வரப்போகிறது. வாக்குத்தங்களெல்லாம் நிறைவேறும்போது எல்லா நன்மைகளும் வரும். இவையெல்லாமே இயேசுகிறிஸ்துவின் மூலமாயும், அவருடைய ஆசாரிய ஊழியத்தின்மூலமாயும் வரும். வரப்போகிற எல்லா நன்மைகளும் பரலோகத்திலிருந்து வரும். இவை இரண்டு ஏற்பாடுகளையும் பூரணப்படுத்தும். மகிமையின் காலம் கிருபையின் காலத்தைப் பூரணப்படுத்தும்.

ஆசரிப்புக்கூடாரம் மனுஷருடைய கையினால் செய்யப்பட்டது. இது சிருஷ்டி சம்பந்தமானது. நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து கையினால் செய்யப்பட்ட இந்தக் கூடாரத்தின் வழியாக மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிக்கவில்லை. அவர் பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாக மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்தார். இயேசுகிறிஸ்துவின் சரீரமே பெரிதும் உத்தமுமான கூடாரம்.

இயேசுகிறிஸ்துவின் சரீரம் கையினால் செய்யப்படவில்லை. அவர் பரிசுத்த ஆவியினால் உற்பத்தியானார். இயேசுகிறிஸ்து மானிட சரீரத்தைப் பெற்றுக்கொண்டார். ஆயினும் நாம் நம்முடைய சரீரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், கிறிஸ்துவானவர் தம்முடைய சரீரத்தைப் பெற்றுக்கொண்டதற்கும் வித்தியாசமுண்டு. மனுஷராகிய நாம் சிருஷ்டி சம்பந்தப்பட்டவர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ சிருஷ்டிகர். நம்முடைய மாம்ச சரீரம் அழிவுக்குரிய கூடாரம். கிறிஸ்துவின் சரீரமோ பெரிதும் உத்தமுமான கூடாரம்.

பிரதான ஆசாரியர் மகாபரிசுத்த ஸ்தலத்திலே வருஷத்திற்கு ஒருதரம் பிரவேசிப்பார். அங்கு பிரவேசிக்கும்போது அவர் வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினால் தனக்காகவும், ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்வார். இயேசுகிறிஸ்துவோ வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டிருக்கிறார். இவர் ஆரோனின் முறைமையில் ஏற்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியரைப்போல அல்ல. இவர் தம்முடைய சொந்த இரத்தத்தினால் ஒரே தரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். நித்திய மீட்பை உண்டுபண்ணுவதற்கு, இயேசுகிறிஸ்து வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தை செலுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர் தம்முடைய சொந்த இரத்தத்தையே, பாவநிவாரண பலியாகச் செலுத்தி, நமக்கு நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ மகாபரிசுத்த ஸ்தலத்திலே ஒரே தரம் மாத்திரமே பிரவேசித்திருக்கிறார். நமக்கு சாதாரண மீட்பை உண்டுபண்ணாமல், நித்திய மீட்பை உண்டுபண்ணினார். ஆரோனுடைய முறைமையின்படி ஏற்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியர்களோ, வருஷந்தோறும், வருஷத்திற்கு ஒருதரம் பிரவேசித்து ஜனங்களுக்கு மீட்பை உண்டுபண்ணினார்கள். அது நித்திய மீட்பு அல்ல. ஒரு வருஷத்திற்கு மாத்திரமே அவர்களுக்கு மீட்பு உண்டாயிற்று. இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சொந்த இரத்தத்தை, பாவநிவாரண பலியாக செலுத்தி, நமக்காக நித்திய மீட்பை உண்டுபண்ணியிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்கள் பலிகளைச்செலுத்தினார்கள். அவற்றின் இரத்தத்தினுடைய பெலனை பரிசுத்த ஆவியானவர் தெளிவுபடுத்துகிறார். காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தினால் சரீர சுத்தி உண்டாகும். நம்முடைய மாம்சம் சுத்திகரிக்கப்படும். நியாயப்பிரமாண முறைமையின்படி, நம்முடைய சரீரத்தில் தீட்டு உண்டாயிருக்குமானால், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம், அந்தத் தீட்டுக்களை நீக்கி, நம்முடைய சரீரத்தை சுத்தப்படுத்தும். இவைகளின் இரத்தம் சரீர சுத்தி உண்டாகும்படி நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது (எபி 9:13). இந்த இரத்தத்தோடு தீட்டுப்பட்டவர்கள்மேல் கடாரியின் சாம்பலும் தெளிக்கப்படும்போது, அவர்களுக்கு சரீர சுத்தி உண்டாகிறது. இந்த இரத்தம் அவர்களை சரீர சுத்தி உண்டாகும்படி பரிசுத்தப்படுத்துகிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தமோ, காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைவிட மேன்மையானது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் பரிசுத்தமானது. நம்முடைய சகல பாவங்களையும் போக்கக்கூடியது. காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றினுடைய இரத்தத்தைவிட, கிறிஸ்துவின் இரத்தம் அதிக பெலனுள்ளது.

இயேசுகிறிஸ்து மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிப்பதற்காக காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவைகளை பலியாக செலுத்தவில்லை. அவர் நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். தம்மையே உலகத்தின் பாவத்தை நீக்குவதற்கு, பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் பழுதில்லை. பாவமில்லை. பாவத்தின் கறைகளும் இல்லை.

இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தம் நம்முடைய பாவங்களை நீக்குவதற்கு அதிக பெலனுள்ளது. கிறிஸ்துவினுடைய இரத்தம், நம்முடைய மனச்சாட்சியை, செத்த கிரியைகளற சுத்திகரிக்கிறது. நம்முடைய ஆத்துமாவையும் மனச்சாட்சியையும் சுத்தப்படுத்துகிறது. ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு, கிறிஸ்துவினுடைய இரத்தம், நம்முடைய மனச்சாட்சியை சுத்திகரிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கிருபையுள்ள பெலத்தினால், நம்முடைய ஆத்துமா புதிதாக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைவிட எல்லாவிதத்திலும் மேன்மையானது.

புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர்
எபி 9 : 15-22

எபி 9:15. ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

எபி 9:16. ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும்.

எபி 9:17. எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே.

எபி 9:18. அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை.

எபி 9:19. எப்படியெனில், மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்ன பின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார்மேலும் தெளித்து:

எபி 9:20. தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான்.

எபி 9:21. இவ்விதமாக, கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்தான்.

எபி 9:22. நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.

சுவிசேஷம் தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு உடன்பாடு. ஒரு உடன்படிக்கையில் இரண்டு அல்லது மூன்றுபேர், ஒரு காரியத்தைக் குறித்து, தங்களுக்குள் ஒத்துப்போவார்கள். தாங்கள் அங்கீகரிக்கிற விஷயத்தை, உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் உறுதிபண்ணிக்கொள்வார்கள். ஒரு சிலர் மரண சாதனத்தை எழுதுவார்கள். அந்த சாதனத்தை எழுதினவர் மரித்த பின்பு, அந்த மரணசாதனம் உறுதிப்படும். மரணசாதனத்தை எழுதியவர் உயிரோடிருக்கையில் அதற்கு பெலனில்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே ஏராளமான அக்கிரமக்காரியங்கள் நடைபெற்றது. மனுஷர்கள் பாவம் செய்தார்கள். அவர்களுடைய அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரணமடைந்தார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். இதற்காக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஜனங்கள் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக பாவம் செய்தார்கள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்குக் கீழ்ப்படியாமல் மீறினார்கள். நியாயப்பிரமாணமானது முதலாம் உடன்படிக்கையாயிருக்கிறது. நியாயப்பிரமாணத்திற்கு மீறி நடந்தவர்களுடைய அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு இயேசுகிறிஸ்து தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தினார்.

தேவன் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய சுதந்தரத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய நித்திய சுதந்தரத்தை நாம் பெற்றுக்கொள்வதற்காக தேவனாகிய கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். புதுஉடன்படிக்கையின் பிரகாரம் நமக்கு இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை, நாம் அடைந்துகொள்வதற்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபி 9:15).

புதுஉடன்படிக்கை பெலனுள்ளதாயிருக்க வேண்டுமென்றால், கிறிஸ்து மரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. நிருபத்தின் ஆசிரியர் இந்தச் சத்தியத்தை இரண்டு விவாதங்களில் உறுதிபண்ணுகிறார். ஜனங்களில் அநேகர் மரணசாதனம் எழுதுகிறார்கள். எங்கே மரணசாதனம் உண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும். மரணம் உண்டான பின்பே மரணசாதனம் உறுதிப்படும். மரணசாதனத்தை எழுதியவர் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லை (எபி 9:16,17).

முதலாம் உடன்படிக்கை இரத்தத்தோடு பிரதிஷ்டைபண்ணப்பட்டது. மோசே நியாயப்பிரமாணத்தின்படி சகல ஜனங்களுக்கும் எல்லா கட்டளைகளையும் சொன்னார். அதன்பின்பு இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தை, தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடும்கூட எடுத்து, புஸ்தகத்தின்மேலும், ஜனங்களெல்லார் மேலும் தெளித்தார் (எபி 9:18,19). இவ்விதமாக கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின்மேலும் மோசே இரத்தத்தைத் தெளித்தார் (எபி 9:21).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவன் இளங்காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தத்தை பாவநிவாரண பலியாக அங்கீகரித்தார். பழைய உடன்படிக்கையின் காலத்தில், இளங்காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தத்தினால் தேவனுடைய கிருபை வெளிப்படுத்தப்பட்டது. இந்த இரத்தத்தினால் கிருபையின் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

மோசே நியாயப்பிரமாணத்தின்படி சகல ஜனங்களுக்கும் எல்லா கட்டளைகளையும் சொன்னார். அதன்பின்பு இரத்தத்தைத் தெளித்தார். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சம் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது (எபி 9:22). மோசே புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார் மேலும், இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தெளித்து, "தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே" (எபி 9:20) என்று சொன்னார்.

இயேசுகிறிஸ்துவின் பாவம் மனுஷருடைய சகல பாவங்களையும், அக்கிரமங்களையும் நீக்கும். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மீதும் தெளிக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் நம்மீது தெளிக்கப்படவில்லையென்றால், அந்த இரத்தத்தினால் நமக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை. மோசே இஸ்ரவேல் ஜனங்களெல்லார்மேலும் இரத்தத்தைத் தெளித்து, "தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே" என்று சொன்னார். கிறிஸ்துவின் இரத்தம் நம்மீது தெளிக்கப்பட வேண்டும். அதுவே நமக்கு புதுஉடன்படிக்கையின் இரத்தமாயிருக்கிறது.

மோசே இளங்காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தத்தை உடன்படிக்கை புஸ்தகத்தின் மேலும், ஜனங்களெல்லார் மேலும் தெளித்தார். அதன் பின்பு, அதே விதமாக, கூடாரத்தின்மேலும், ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்தார் (எபி 9:21). ஆசரிப்புக்கூடாரத்தில் செலுத்தப்படுகிற பலிகள், ஆசாரிய ஊழியங்கள் ஆகியவையெல்லாம் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தின் மூலமாகவே நடைபெறவேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரத்தமே புதுஉடன்படிக்கையின் இரத்தம். மோசே, முதலாம் உடன்படிக்கையை, காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தினால் பிரதிஷ்டைபண்ணினார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ இரண்டாம் உடன்படிக்கையாகிய புதுஉடன்படிக்கையை, தம்முடைய சொந்த இரத்தத்தினால் பிரதிஷ்டைபண்ணுகிறார்.

மெய்யான பரிசுத்தஸ்தலம்
எபி 9 : 23-29

எபி 9:23. ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே.

எபி 9:24. அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.

எபி 9:25. பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை.

எபி 9:26. அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்.

எபி 9:27. அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,

எபி 9:28. கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகளுக்கு சாயலாயிருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்திலுள்ளவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டும். இந்தப் பூமியிலுள்ள தேவனுடைய வாசஸ்தலம் பரலோகத்தின் சாயலாயிருக்கிறது. தேவன் தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்தில் தம்முடைய ஜனங்களோடு ஐக்கியமாயிருக்கிறார். இப்போது பரலோகமே பூமியில் வந்து இறங்கியதுபோல இருக்கிறது. தேவனும் மனுஷரும் பரிசுத்த ஸ்தலத்தில் ஐக்கியமாயிருப்பது பரலோகத்தின் சாயலுக்கு ஒப்பாயிருக்கிறது.

கையினால் செய்யப்பட்ட ஆசரிப்புக்கூடாரம் மெய்யான பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமாயிருக்கிறது. மெய்யான பரிசுத்த ஸ்தலமே மேன்மையானது. பரலோகத்திலுள்ளவைகளை விசேஷித்த பலிகளால் சுத்திகரிக்கவேண்டும். பரலோகத்தின் காரியங்களை சுவிசேஷத்தின் மூலமாக நாம் பெற்றுக்கொள்கிறோம். பரலோகத்தின் காரியங்கள் கிருபையில் ஆரம்பமாகிறது. அது தேவனுடைய மகிமையில் பரிபூரணப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் பலியானது நியாயப்பிரமாணத்தைவிட எல்லா வகையிலும் மேன்மையானது.

நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு கையினால் செய்யப்பட்ட ஆசரிப்புக்கூடாரமே பரிசுத்த ஸ்தலம். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து கையினால் செய்யப்பட்ட பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிக்கவில்லை. அவர் பரலோகத்தில் இப்போது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் (எபி 9:24).

பிரதான ஆசாரியர் ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே, அந்நிய இரத்தத்தோடே, வருஷந்தோறும் பிரவேசிப்பார். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்கு பிரவேசிப்பதில்லை.

ஆரோனின் முறைமையின்படி நியமிக்கப்பட்ட பரிசுத்த ஆசாரியர்கள் அந்நிய இரத்தத்தோடே பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்கள். காளை, வெள்ளாட்டுகடா ஆகியவற்றின் இரத்தத்தை தங்களுடைய பாவங்களுக்காகவும் ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் செலுத்தினார்கள். நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ தம்மையே பலியாக செலுத்தினார். நம்முடைய பாவங்களை மீட்பதற்காக தம்முடைய இரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தினார்.

இயேசுகிறிஸ்து அநேகந்தரம் தம்மை பலியிடவில்லை. அவர் தம்மைத்தாமே ஒரே தரம் மாத்திரமே பலியாக செலுத்தினார். தம்மைத்தாமே பலியாக செலுத்திய கிறிஸ்துவானவர், பரலோகத்திலே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.

நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்கிறவர்களுக்கு அந்நிய இரத்தம் தேவைப்படுகிறது. காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தம் தங்களுடைய பாவங்களை நீக்கும் என்று பழைய உடன்படிக்கையில் இருந்தவர்கள் விசுவாசித்தார்கள். புதுஉடன்படிக்கையில் உள்ள நமக்கோ, இயேசுகிறிஸ்துவின் இரத்தமே நம்முடைய பாவங்களை நீக்குகிற பாவநிவாரண பலி இரத்தமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களைப் போக்குவதற்கு தம்முடைய சொந்த இரத்தத்தையே பலியாக செலுத்தினார்.

ஆரோனின் முறைமையின்படி நியமிக்கப்பட்ட பிரதான ஆசாரியர்கள் வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து அந்நிய இரத்தத்தை செலுத்தினார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோ, தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக, அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்கு பிரவேசிக்கவில்லை. இயேசுகிறிஸ்து அப்படி செய்யவேண்டுமானால், உலகம் உண்டானது முதற்கொண்டு, அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருந்திருக்கும். அவர் அநேகந்தரம் சிலுவையில் அறையப்பட வேண்டியதாயிருந்திருக்கும். அவர் அநேகந்தரம் சிலுவையில் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்து மரிக்க வேண்டியதாயிருந்திருக்கும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ அநேகந்தரம் பாடுபடவில்லை. அவர் அநேகந்தரம் சிலுவையில் அறையப்படவில்லை. அவர் அநேகந்தரம் தம்முடைய ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்து மரிக்கவில்லை. அவர் நம்முடைய பாவங்களை நீக்கும் பொருட்டாக, இந்தக் கடைசிக்காலத்திலே, ஒரே தரம் மாத்திரமே வெளிப்பட்டார். ஒரே தரம் மாத்திரமே பாடுபட்டார். ஒரே தரம் மாத்திரமே சிலுவையில் அறையப்பட்டார். ஒரே தரம் மாத்திரமே தம்முடைய ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்து மரித்தார். அவர் தம்மைத்தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் பொருட்டாக, ஒரே தரம் மாத்திரமே பலியாக செலுத்தினார்.

பிரதான ஆசாரியர் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்கள். இது நியாயப்பிரமாணத்திலுள்ள குறைவை வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவோ ஒரே தரம் மாத்திரமே தம்மைத்தாமே பலியிட்டு, தேவனுடைய சமுகத்தில் பிரவேசித்தார். கிறிஸ்துவினுடைய பலி பூரணமானது என்னும் சத்தியத்தை இது வெளிப்படுத்துகிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தை ஒரே தரம் சிந்தினாலும், அது மனுக்குலத்திலுள்ள எல்லாருடைய பாவங்களைப் போக்குவதற்கும் போதுமானதாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்து உலகம் உண்டானது முதற்கொண்டு, அநேகந்தரம் பாடுபட்டு, தம்மைத்தாமே அநேகந்தரம் பலியிடவில்லை. அவர் மனுக்குலத்தின் பாவங்களை நீக்கும் பொருட்டாக, தம்மைத்தாமே ஒரே தரம் பலியிடுவதற்காக, இந்தக் கடைசி காலத்திலே, ஒரே தரம் மாத்திரமே தம் மாம்சத்தில் வெளிப்பட்டார் (எபி 9:20).

காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தம் மனுஷருடைய பாவங்களை நீக்குவதற்கு போதுமானதாகயில்லை. அந்த இரத்தம் பெலனற்றிருந்தது. இயேசுகிறிஸ்துவின் இரத்தமோ பரிசுத்தமானது. மனுஷருடைய பாவங்களை நீக்கும் வல்லமையுள்ளது. இயேசுகிறிஸ்து ஒரு தரம் மாத்திரமே தம்மைப் பலியிட்டார். ஒரு தரம் மாத்திரமே தம்முடைய இரத்தத்தை சிந்தினார். கிறிஸ்துவின் இரத்தம் மனுக்குலத்தின் எல்லா பாவங்களையும் முடிவுக்குக் கொண்டு வருகிறது.

தேவன் மனுஷரைக்குறித்து ஒரு தெய்வீக சித்தங்கொண்டிருக்கிறார். ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் தேவனால் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி 9:27). எல்லா மனுஷரும் ஒரு தரம் மரிக்கவேண்டும். பரிசுத்தவான்களும் மரிக்கவேண்டும். பாவிகளும் மரிக்கவேண்டும். பரிசுத்தவான்களுக்கு அவர்களுடைய மரணம் ஆறுதலான சம்பவம். ஆனால் துன்மார்க்கருக்கோ அவர்களுடைய மரணம் பயங்கரமானது. பரிசுத்தவான்களுடைய மரணம் அவர்களுக்கு சந்தோஷம் கொடுக்கிறது. துன்மார்க்கருடைய மரணமோ அவர்களுக்கு சோகத்தையும் துக்கத்தையும் கொடுக்கிறது. பாவத்தில் மரிக்கிறவர்கள் நரகத்திற்குப் போவார்கள். கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

துன்மார்க்கர் மரித்த பின்பு, அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிற்கவேண்டும். துன்மார்க்கர் மரிக்கவேண்டுமென்பதும், அதன் பின்பு அவர்கள் நியாயத்தீர்ப்பு அடையவேண்டும் என்பதும் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது. இது மாறாத நியமனம். தேவன் மனுஷரைக்குறித்து கொண்டிருக்கிற தம்முடைய சித்தத்தில் ஒரு போதும் மாறுவதில்லை.

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்தும் சித்தங்கொண்டிருக்கிறார். அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கும்படிக்கு கிறிஸ்துவானவர் ஒரே தரம் பலியிடப்பட வேண்டுமென்பது பிதாவாகிய தேவனுடைய சித்தம். இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த பாவங்களுக்காக பலியிடப்படவில்லை. அவரிடத்தில் பாவமில்லை. அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டார். அவர் நமக்காக பாவமானார். நம் நிமித்தமாக அவர் சாபமானார். அநேகருடைய பாவங்களை சுமந்து தீர்க்கிற ஆக்கினைத்தீர்ப்பு கிறிஸ்துவின்மீது சுமத்தப்பட்டது. இதற்காக அவர் ஒரே தரம் பலியிடப்பட்டார்.

இயேசுகிறிஸ்து இரண்டாந்தரம் தரிசனமாக வேண்டுமென்பதும் பிதாவானவருடைய சித்தம். தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி, இயேசுகிறிஸ்து இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். முதலில் இயேசுகிறிஸ்து பாவமான மாம்சசரீரத்தில் வெளிப்பட்டார். இரண்டாந்தரமோ அவர் பாவமில்லாமல் தரிசனமாவார். தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு கிறிஸ்துவானவர் இரட்சிப்பை அருளுவார். தம்முடைய பிள்ளைகளின் பரிசுத்தத்தையும், சந்தோஷத்தையும் நிறைவாக்குவார் (எபி 9:28).

10 அதிகாரம்

நியாயப்பிரமாணத்து முறைமையின்படி நியமிக்கப்பட்ட ஆசாரியத்துவ ஊழியமும், பலிமுறைகளும் குறைவுள்ளவைகள் (எபி 10:1-4). இயேசுகிறிஸ்துவின் ஆசாரியத்துவமும் ஊழியமும் மேன்மையானது, உன்னதமானது (எபி 10:7-18). கர்த்தருடைய சமுகத்தில் விசுவாசிகளுக்கு மேன்மையான சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமைகளை உண்மையாய்ச் செய்யவேண்டும்.

நியாயப்பிரமாணம் எபி 10 : 1-4

எபி 10:1. இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.

எபி 10:2. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலி களைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?

எபி 10:3. அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது.

எபி 10:4. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.

நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிருக்கவில்லை. அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது. அது கிறிஸ்துவானவர் நமக்குக் கொடுக்கிற ஆசீர்வாதங்களே நன்மையான காரியங்கள். இந்த நன்மைகள் இன்னும் வரவில்லை. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவித்த ஜனங்கள் இந்த நன்மைகளை முழுமையாய்க் கண்டு பிடிக்கவில்லை. பழைய ஏற்பாட்டுக்காலத்து ஜனங்கள் அந்த நன்மைகளை பிரத்தியட்சமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அந்த நன்மைகளின் நிழலை மாத்திரம் பெற்றுக்கொண்டார்கள். சுவிசேஷத்தின் காலத்தில் ஜீவிக்கிற நாமோ, கிறிஸ்துவின் மூலமாய் வருகிற நன்மைகளை பிரத்தியட்சமாய்ப் பெற்று அனுபவிக்கிறோம். அந்த நன்மைகளின் பொருளைப் பெற்றிருக்கிறோம்.

நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளுக்கு பொருளாய் இருக்கவில்லை. அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது. தேவனுடைய கிருபையானது அவருடைய அநாதி தீர்மானத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. நியாயப்பிரமாணம் தேவனுடைய தெய்வீக திட்டத்தை முழுமையாய் விளக்கவில்லை, அதன் நிழலை மாத்திரம் விளக்குகிறது. நியாயப்பிரமாணத்தின் மூலமாக தேவனுடைய கிருபையின் திட்டத்தைப் பூரணமாய்ப் புரிந்துகொள்ள முடியாது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்கள், வருஷந்தோறும் இடைவிடாமல் ஒரே விதமான பலிகளைச் செலுத்தினார்கள். அந்தப் பலிகள், அவைகளை செலுத்த வருகிற ஆசாரியர்களை ஒருக்காலும் பூரணப் படுத்தமாட்டாது (எபி 10:1). சுவிசேஷத்தின் காலத்தில் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிருக்கிற பாவநிவாரணம் பூரணமாயிருக்கிறது. நம்முடைய பாவங்கள் முழுமையாய் மன்னிக்கப்படுகிறது.

ஏற்கெனவே மன்னிக்கப்பட்ட பாவத்திற்கு, நாம் மறுபடியும் மன்னிப்பு பெறவேண்டிய அவசியமில்லை. அதே வேளையில் நாம் புதிதாக எந்தப் பாவமும் செய்துவிடாதவாறு மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும். நம்முடைய மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும், ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்கள் வருஷந்தோறும் ஒரேவிதமான பலிகளைச் செலுத்தினார்கள். அந்தப் பலிகள் அவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தவில்லை. ஆகையினால் தங்களிடத்தில் இன்னும் பாவங்கள் உண்டு என்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களிடத்தில் இருக்கிறது. ஆகையினால் ஆசரிப்புக்கூடாரத்தில் பலிகளைச் செலுத்துவதை நிறுத்தாமல், வருஷந்தோறும் இடைவிடாமல் தொடர்ந்து பலிகளைச் செலுத்திவருகிறார்கள் (எபி 10:2).

ஆசாரியர்கள் வருஷந்தோறும் இடைவிடாமல் ஒரேவிதமான பலிகளைச் செலுத்தும்போது, தங்களிடத்தில் பாவங்கள் உண்டு என்று நினைவுகூருகிறார்கள். அவர்களிடத்தில் பாவங்கள் உண்டு என்று அவர்களுடைய மனச்சாட்சியும் அவர்களுக்கு உணர்த்துகிறது. ஆகையினால் வருஷந்தோறும் இடைவிடாமல் ஒரேவிதமான பலிகளைச் செலுத்துகிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, தம்மைத்தாமே, ஒரே தரம் பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். அவருடைய பலி பூரணமானது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களெல்லாவற்றையும் முற்றிலுமாக நீக்கி நம்மைச் சுத்தப்படுத்துகிறது. ஆகையினால் இயேசுகிறிஸ்து அநேகந்தரம் சிலுவையில் மரிக்கவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று (எபி 10:3).

காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யாது (எபி 10:4). இவைகளின் இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்திருக்குமானால், ஆசாரியர்கள் வருஷந்தோறும் இடைவிடாமல் இந்தப் பலிகளைச் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்யவில்லை. ஆகையினால் ஆசாரியர்கள் வருஷந்தோறும் இடைவிடாமல், தங்களுடைய பாவங்களை நிவாரணம் செய்வதற்கு, காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றை பலியாகச் செலுத்தி, அவற்றின் இரத்தத்தை பாவநிவாரண பலியாகச் செலுத்தினார்கள். ஆனாலும் இவைகளுடைய இரத்தம் மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாது. கிறிஸ்துவின் இரத்தமோ நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும் வல்லமையுள்ளது.

கர்த்தருக்குப் பிரியமானதல்ல எபி 10 : 5,6

எபி 10:5. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்;

எபி 10:6. சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்.

தேவன் பலியையும் காணிக்கையையும் விரும்பவில்லை. சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரண பலிகளும் தேவனுக்குப் பிரியமானதல்ல. இவற்றினால் மனுஷருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. தேவனும் இந்தப் பலிகளை அங்கீகரிக்கவில்லை. தாவீது இந்தச் சத்தியத்தை சங்கீதம் புஸ்தகத்தில் முன்னறிவித்துச் சொல்லியிருக்கிறார். "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும் நீர் கேட்கவில்லை" (சங் 40:6). மோசேயின் நியாயப்பிரமாணம் பழையதாய்ப் போயிற்று. இது நீக்கிப்போடவேண்டிய காலம் வந்திருக்கிறது.

புஸ்தக சுருள்
எபி 10 : 7-11

எபி 10:7. அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்.

எபி 10:8. நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக் குறித்து மேற்சொல்லியபடி: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலி களையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்னபின்பு:

எபி 10:9. தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்.

எபி 10:10. இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.

எபி 10:11. அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு, இயேசுகிறிஸ்துவே பிரதான ஆசாரியராகயிருக்கிறார். அவரே நம்முடைய பாவங்களைப் போக்குகிற மெய்யான பாவநிவாரண பலியாகவும் இருக்கிறார். பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து தெய்வீக சித்தங்கொண்டிருக்கிறார். குமாரனைக் குறித்து பிதாவினிடத்தில் ஒரு நோக்கமுண்டு. பிதாவானவர் குமாரனைக்குறித்து வாக்குப்பண்ணுகிறார். குமாரனைக்குறித்து பிதாவானவர் கொண்டிருக்கிற சித்தங்கள் புஸ்தகச் சுருளிலே எழுதியிருக்கிறது (எபி 10:7).

தாவீது இந்தச் சத்தியத்தை முன்னறிவிக்கும்போது, "அப்பொழுது நான், இதோ வருகிறேன், புஸ்தகச் சுருளிலே என்னைக் குறித்து எழுதியிருக்கிறது" (சங் 40:7) என்று சொன்னார். பிதாவாகிய தேவன் குமாரனுக்கு ஒரு சரீரத்தை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். சரீரம் என்பது மாம்ச சரீரத்தையும், மனுஷசுபாவத்தையும் குறிக்கிற வார்த்தை. குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய்க் கீழ்ப்படிந்தார். கிறிஸ்துவானவர் நம்முடைய ஆத்தும மீட்பராகயிருக்கிறார். அவர் நமக்காக பிதாவின் சமுகத்தில் பரிந்து பேசுகிற ஊழியத்தைச் செய்கிறார்.

குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்தின்படி செய்ய எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார். பிதாவானவருக்கு சர்வாங்க தகனபலிகளும் பாவநிவாரண பலிகளும் பிரியமானதாயில்லை. அவர் பலியையும் காணிக்கையையும் விரும்பவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்தின்படி, தம்மையே பாவநிவாரண பலியாக செலுத்த வருகிறார். காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாது. தேவன் பாவநிவிர்த்திக்காக இவற்றின் இரத்தங்களை அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் பிதாவானவர், மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை அங்கீகரிக்கிறார். குமாரனும் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்தின்படி, தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்க வருகிறார்.

இயேசுகிறிஸ்துவைக் குறித்து புஸ்தகச் சுருளிலே எழுதியிருக்கிறது. புஸ்தகச் சுருள் என்பது பரிசுத்த வேதாகமத்தைக் குறிக்கிற வார்த்தை. வேதவாக்கியங்களெல்லாம் நமக்கு இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுகிறது. வேதத்தில் எழுதப்பட்டிருக்கிற வசனங்கள் நமக்கு அந்நியமானவையல்ல. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேதவசனங்களெல்லாம் நமக்குச் சொந்தமானவை. தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு நாம் கிறிஸ்துவின் மூலமாய் பூரண சுதந்தரவாளிகளாகயிருக்கிறோம்.

காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தம் நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டது. இந்தப்பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரண பலிகளையும் பிதாவாகிய தேவன் விரும்பவில்லை. இந்தப் பலிகளில் அவர் பிரியப்படவில்லை. இந்தப் பலிகள் அவருக்கு பிரியமானதாகவும் இல்லை. பிதாவானவர் குமாரனைக்குறித்து தெய்வீக சித்தங்கொண்டிருக்கிறார். குமாரனும் பிதாவின் சித்தத்திற்கு பூரணமாய்க் கீழ்ப்படிகிறார். இந்தச் சம்பவத்தை தாவீது சங்கீதத்தில் இவ்வாறு முன்னறிவிக்கிறார்

"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான்: இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது: என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" (சங் 40:6-8).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்தின்படி செய்ய வருகிறார். நியாயப்பிரமாணத்தின்படி நியமிக்கப்பட்ட ஆசாரிய ஊழியத்தை நீக்கிப்போடுவதற்காக வருகிறார். பிதாவானவர் நியாயப்பிரமாணத்தின்படி ஸ்தாபிக்கப்பட்ட ஆசாரிய ஊழியத்தில் பிரியப்படவில்லை. நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டு வருகிற பலியையும், காணிக்கையையும் தேவன் விரும்பவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், குமாரனாகிய இயேசுகிறிஸ்து, பிதாவுக்குப் பிரியமான பலியையும் காணிக்கையையும் செலுத்துவதற்காக வருகிறார்.

குமாரனாகிய இயேசுகிறிஸ்து முதலாவதை நீக்கிப்போட்டு, இரண்டாவதை நிலை நிறுத்துவதற்காக வருகிறார். முதலாவது என்பது நியாயப்பிரமாணத்தின்படி நியமிக்கப்பட்ட ஆசாரிய ஊழிய முறைமையாகும். இரண்டாவது என்பது இயேசுகிறிஸ்துவின் மகாபிரதான ஆசாரிய ஊழியம். இவர் நியாயப்பிரமாணத்து முறைமையின்படி பிரதான ஆசாரியராக நியமிக்கப்படாமல், மெல்கிசேதேக்கின் முறைமையின்படி பிரதான ஆசாரியராக நியமிக்கப்பட்டார். கிறிஸ்துவானவரே நமக்கு மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். தம்முடைய ஆசாரியத்துவ ஊழியத்தையும், சுவிசேஷத்தையும் நித்தியமாக ஸ்தாபிப்பதற்கு இயேசுகிறிஸ்து வந்தார் (எபி 10:9).

இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் தேவனுடைய சித்தத்தின்படி பலியிடப்பட்டது. நாம் தேவனுடைய சித்தத்தின்படி பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தினார். பிதாவானவர் தம்முடைய சித்தத்தின்படி கிறிஸ்துவின் பலியில் பிரியமடைந்து, அதை ஏற்றுக்கொண்டார் (எபி 10:9). தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, கிறிஸ்துவின் பலியினால், பிதாவானவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.

நியாயப்பிரமாண முறைமையின்படி நியமிக்கப்பட்ட ஆசாரியன் நாடோறும் ஆராதனை செய்யவேண்டும். அவன் ஒரே விதமான பலிகளை அநேகந்தரம் செலுத்தினான். ஆனால் அந்தப் பலிகளினால் பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்ய முடியவில்லை. இயேசுகிறிஸ்துவோ தம்மைத்தாமே ஒரே தரம் மாத்திரமே பலியாகச் செலுத்தினார். தேவனுடைய சித்தத்தின்படி தம்மை பாவநிவாரண பலியாகச் செலுத்தினார். கிறிஸ்துவினுடைய பலியினால் நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். ஆசாரியர்களுடைய பலிகளினால் நம்மை பரிசுத்தப்படுத்த முடியவில்லை (எபி 10:11). தேவனுடைய சித்தம் மனுஷருடைய ஆத்துமாவுக்குப் பிரயோஜனமும் அநுகூலமுமாயிருக்கிறது.

ஒரே பலி
எபி 10 : 12-14

எபி 10:12. இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து,

எபி 10:13. இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்.

எபி 10:14. ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.

கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் பரிபூரணமானது. பரிபூரண பெலனுள்ளது. நியாயப்பிரமாண முறைமையின்படி ஸ்தாபிக்கப்பட்ட ஆசாரிய ஊழியம் குறைவுள்ளது. பெலனற்றது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பரிபூரண நிலமையை அடையவேண்டுமென்று விரும்பினால், இயேசுகிறிஸ்துவை நம்முடைய பிரதான ஆசாரியராக ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர் மாத்திரமே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் பரிபூரண நிலமைக்கு நம்மை அழைத்துச் செல்லக்கூடியவர்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனுஷருடைய பாவங்களுக்காக தம்மையே ஒரே தரம் பாவநிவாரண பலியாகச் செலுத்தினார். இப்போது தேவனுடைய வலதுபாரிசத்தில், என்றென்றைக்கும் உட்கார்ந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்தார். கல்வாரி சிலுவையில் தம்மைத் தாழ்த்தினார். பிதாவாகிய தேவனோ இயேசுகிறிஸ்துவை உயர்த்தினார். தம்முடைய வலது பாரிசத்தில் என்றென்றைக்கும் உட்கார்ந்திருக்கிற சிலாக்கியத்தை அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

பிதாவின் வலதுபாரிசம் அதிகாரத்தின் ஸ்தானம். வலது கை கொடுக்கிற கையாகவும், பெற்றுக் கொள்கிற கையாகவும் இருக்கிறது. வலது கையே கிரியை செய்கிற கை. பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருப்பது மேன்மையான சிலாக்கியம். பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, தம்முடைய வலதுபாரிசத்தில் என்றென்றைக்கும் உட்காரும்படிக்கு உயர்த்தியிருக்கிறார்.

இந்தப் பூமியிலே இயேசுகிறிஸ்து அநேக பாடுகள் பட்டார். வேதனைகளை அனுபவித்தார். இயேசுகிறிஸ்து பட்ட பாடுகளுக்காக, பிதாவாகிய தேவன் தம்முடைய வலதுபாரிசத்தில் அவரை உட்காரச் செய்திருக்கிறார். அவருடைய பாடுகளினிமித்தம் அவருக்கு இங்கு வெகுமதியைக் கொடுத்திருக்கிறார். சிலுவைக்குப்பின்பு மேன்மை உண்டாகிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் பாடுகளை அனுபவித்தபோது, அவர் ஒருபோதும் தம்முடைய சித்தத்திலிருந்து வழிவிலகிச் செல்லவில்லை. தம்முடைய பிள்ளைகளுக்கு பாவமன்னிப்பும், ஆசீர்வாதமும் உண்டாக வேண்டுமென்பதற்காக, இயேசுகிறிஸ்து சிலுவையின் பாடுகளையும் வேதனைகளையும் சகித்துக்கொண்டு, நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஜீவனையே பாவநிவாரண பலியாகச் செலுத்தினார்.

பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற இயேசுகிறிஸ்துவுக்கு பரிபூரண ஆறுதலும் இளைப்பாறுதலும் உண்டாயிருக்கிறது. குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் என்றென்றைக்கும் உட்கார்ந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கும் சத்துருக்கள் இருக்கிறார்கள். இது மெய்யான சத்தியம். கிறிஸ்துவின் சத்துருக்கள் நரகத்தில்தான் இருப்பார்கள் என்றுதான் பொதுவாக நாம் நினைப்போம். ஆனால் அவருடைய சத்துருக்கள் இந்தப் பூமியிலும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு விரோதமாகவும் சில சமயங்களில் சத்துருக்கள் எழும்புகிறார்கள். சத்துருக்களைப் பார்த்து நாம் ஆச்சரியப்படக்கூடாது, பயப்படக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சத்துருக்கள் இருப்பது புதுமையான காரியமல்ல. கிறிஸ்துவுக்கே சத்துருக்கள் இருக்கும்போது, நமக்கு சத்துருக்கள் தாராளமாயிருப்பார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தம்முடைய சத்துருக்களை, தமது பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார். கிறிஸ்து எதிர்பார்க்கிற பிரகாரம், அவருடைய சத்துருக்கள் மெய்யாகவே அவருடைய பாதபடியாக்கிப் போடப்படுவார்கள். கிறிஸ்துவின் சத்துருக்கள் அவருடைய பாதபடியாக்கிப் போடப்படும்போது, நம்முடைய சத்துருக்களும் நமக்கு பாதபடியாக்கிப் போடப்படுவார்கள் (எபி 10:13).

காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாது. ஆசாரியர்கள் நியாயப்பிரமாண முறைமையின்படி, வருஷந்தோறும் இடைவிடாமல் பலி செலுத்தினார்கள். ஒரே விதமான பலிகளைச் செலுத்தினார்கள். அந்தப் பலிகள் அவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, தம்முடைய ஒரே பலியினாலே, நம்மை என்றென்றைக்கும் பூரணப் படுத்தியிருக்கிறார். பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை கர்த்தர் பூரணப்படுத்துகிறார் (எபி 10:14).

பரிசுத்த ஆவியானவர்
எபி 10 : 15-18

எபி 10:15. இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சிசொல்லுகிறார்; எப்படியெனில்:

எபி 10:16. அந்த நாட்களுக்குப்பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்தபின்பு,

எபி 10:17. அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்.

எபி 10:18. இவைகள் மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லையே.

கிறிஸ்துவின் ஊழியத்திற்கு பரிசுத்த ஆவியானவரும் சாட்சி சொல்லுகிறார். இது பற்றி எரேமியா தீர்க்கதரிசி முன்னறிவித்துச் சொல்லியிருக்கிறார்.

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்வேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்".

"அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன்,அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்".

"இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே 31:31-34).

தேவன் தம்முடைய ஜனங்கள்மீது தம்முடைய ஆவியை ஊற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். மேலும் தம்முடைய நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவார். தேவன் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பார் (எபி 10:16,17).

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் ஜனங்களுடைய பாவம் மன்னிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான இரத்தம் மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்யக்கூடியது. காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தமோ மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. ஆகையினால் இனி பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லை (எபி 10:18). இயேசுகிறிஸ்துவின் பாவநிவாரண பலியே மனுக்குலத்திலுள்ள எல்லோருடைய பாவங்களையும் போக்குவதற்குப் போதுமானதாயிருக்கிறது.

நியாயப்பிரமாணத்தின்படி ஸ்தாபிக்கப்பட்ட ஆசாரிய ஊழியத்தினாலோ, அல்லது ஆசாரியர்கள் செலுத்துகிற பாவநிவாரண பலிகளினாலோ நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை. அவற்றால் நம்முடைய பாவங்கள் நிவிர்த்தியாவதில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அவை நிவிர்த்தியாகிறது (எபி 10:18).

பரிசுத்த ஸ்தலம்
எபி 10 : 19-21

எபி 10:19. ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,

எபி 10:20. அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,

எபி 10:21. தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,

சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு அநேக ஆசீர்வாதங்களும், சிலாக்கியங்களும் உண்டாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிப்பதற்கு நமக்குத் தைரியமுண்டாயிருக்கிறது. இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய், புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினார். இதுவே சுவிசேஷத்தின் மார்க்கம். இந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசிப்பதற்கு, கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியமுண்டாயிருக்கிறது (எபி 10:19,20).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகாஆசாரியராயிருக்கிறார். தேவன் இந்தப் பூமியிலே மனுஷரோடு வாசம்பண்ணவேண்டும் என்று சித்தங்கொண்டிருக்கிறார். மேலும் பரலோகத்திலே மனுஷர் தம்மோடு வாசம்பண்ணவேண்டுமென்றும் தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். பாவத்தில் விழுந்துவிட்ட மனிதனால், தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடியாது.

நாம் தேவனோடுகூட வாசம்பண்ண வேண்டுமென்றால் நமக்கு ஒரு பிரதான ஆசாரியர் தேவைப்படுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய மகாபிரதான ஆசாரியர். நாம் பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிப்பதற்கு, இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமேயல்லாமல், நம்மால் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடியாது.

இயேசுகிறிஸ்து உண்டுபண்ணியிருக்கிற மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு, அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கிறது. நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுகிறிஸ்து மாத்திரமே நமக்கு ஒரே வழியாக இருக்கிறார். அவர் புதிதும் ஜீவனுமான வழியாக இருக்கிறார். நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாய், பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தால் நமக்கு ஜீவன் உண்டு. நாம் இயேசுகிறிஸ்து இல்லாமல், பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தால் நமக்கு மரணம் உண்டு.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து ஜீவனுள்ளவர். அவர் நித்தியகாலமாக ஜீவிக்கிறவர். அவர் கல்வாரி சிலுவையிலே, தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்து மரித்தார். ஆனாலும் அவர் இப்போதும் ஜீவனுள்ளவராகவே இருக்கிறார். கிறிஸ்து ஜீவனுள்ளவராகயிருப்பதினால் அவருடைய மார்க்கமும் ஜீவனுள்ள மார்க்கமாகயிருக்கிறது. கிறிஸ்துவின் ஜீவனுள்ள மார்க்கத்தின் வழியாய் பிரவேசிக்கிற நமக்கு ஜீவன் உண்டாயிருக்கிறது. பரிசுத்த ஸ்தலத்திலே இயேசுகிறிஸ்துவின் வழியாய்ப் பிரவேசிக்கும்போது நமக்கு ஜீவனும், ஜீவனுள்ள நம்பிக்கையும் கிடைக்கிறது.

இயேசுவானவர் பரிசுத்த ஸ்தலத்திலே தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் பிரவேசித்தார். மாம்சமாகிய திரை என்பது அவருடைய மனுஷசரீரத்தைக் குறிக்கிற வார்த்தை. நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களுக்காக, தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தினார். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்பதற்கு, தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தையே, மீட்பின் கிரயமாகச் செலுத்தினார். அவருடைய இரத்தத்தினால் நமக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் பரலோகத்திற்குள் பிரவேசிக்கிறோம். கிறிஸ்துவின் மரணமே நமக்கு ஜீவனுள்ள மார்க்கமாயிருக்கிறது.

வாக்குத்தத்தம்பண்ணினவர்
எபி 10 : 22,23

எபி 10:22. துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

எபி 10:23. அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் மூலமாய் அநேக ஆசீர்வாதங்களும், சிலாக்கியங்களும் உண்டாயிருக்கிறது. அதே வேளையில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்கவேண்டும். தேவனுக்கு அருகாமையில் வரவேண்டும். பரிசுத்த ஸ்தலத்திலே சரியான வழியில் பிரவேசிக்கவேண்டும்.

நாம் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம். இரட்சிக்கப்பட்டிருக்கிற நம்முடைய ஜீவியத்தில் தேவனுடைய சுபாவங்கள் நிரம்பியிருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்குள் புதுப்பிக்கப்படவேண்டும். நாம் தேவனோடு நெருக்கமாகவும் ஐக்கியமாகவும் இருக்கவேண்டும். நாம் தேவனுடைய சமுகத்தில் நித்திய காலமாக வாசம்பண்ணும் வரையிலும் அவருடைய சமுகத்தில் நெருங்கி சேர்ந்து கொண்டேயிருக்கவேண்டும். தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு நாம் குறுக்கு வழியைத் தேடக்கூடாது. தேவன் நியமித்திருக்கிற சரியான வழியில் மாத்திரமே நாம் கர்த்தருடைய சமுகத்திற்குள் வரவேண்டும்.

இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய், நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, நமக்கு புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டுபண்ணியிருக்கிறார். அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கிறது. தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்கிற நாம் சுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். நம்முடைய இருதயத்தைச் சாதாரணமாகப் பார்க்காமல், ஆராய்ந்து பார்க்கிறார். நம்முடைய இருதயத்திலுள்ள பரிசுத்தத்தைப் பார்க்கிறார். நம்முடைய இருதயத்தில் துர்மனச்சாட்சி இருக்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய இருதயம் சுத்திகரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

நம்முடைய இருதயம் உண்மையுள்ள இருதயமாகயிருக்கவேண்டும். நாம் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடிருக்க வேண்டும். அவிசுவாசம் தேவனுக்கு விரோதமான பாவம். நம்முடைய அவிசுவாசத்தை எல்லாம் நம்மைவிட்டு நீக்கிவைத்துவிட்டு, உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும், நாம் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிக்க வேண்டும். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.

நம்மிடத்தில் துர்மனச்சாட்சி இருக்கக்கூடாது. துர்மனச்சாட்சி எல்லாம் நம்மைவிட்டு நீங்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய மனச்சாட்சி சுத்திகரிக்கப்படவேண்டும். துர்மனச்சாட்சி பாவத்தினால் உண்டாகிறது. துர்மனச்சாட்சியுள்ளவர்கள் மேலும் மேலும் பாவம் செய்வார்கள். நாம் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

நம்முடைய சரீரங்கள் சுத்த ஜலத்தினால் கழுவப்பட்டிருக்கவேண்டும். இது தண்ணீர் ஞானஸ்நானத்தையும் குறிக்கலாம். இது பரிசுத்த ஆவியானவருடைய சுத்திகரிக்கும் கிரியையையும் குறிக்கலாம். நம்முடைய மாம்சமும் சுத்திகரிக்கப்பட வேண்டும். நம்முடைய ஆவியும் சுத்திகரிக்கப்பட வேண்டும். நம்மிடத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் சுத்த ஜலத்தாலும், பரிசுத்த ஆவியினாலும் கழுவப்படவேண்டும் (எபி 10:22).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்க வேண்டும். நம்முடைய விசுவாசத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளவேண்டும். நமக்கு ஆவிக்குரிய சத்துருக்கள் இருக்கிறார்கள். அந்த விரோதிகள் நம்முடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அழித்துப்போட முயற்சி செய்வார்கள். விசுவாசத்தை நம்மைவிட்டு நீக்கிப்போடுவதற்கு சத்துரு எல்லா சதி வேலைகளையும் செய்வான். ஆகையினால் நம்முடைய விசுவாசத்தை நாம் உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும். நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில், நாம் அசைவில்லாமல் உறுதியாயிருக்க வேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஆட்டங்காணக்கூடாது. நம்முடைய விசுவாசம் நிலையுள்ளதாயிருக்கவேண்டும். அதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கவேண்டும். அசைய ஆரம்பித்தால், கீழே விழுந்துவிடவும் வாய்ப்பு உண்டு. விசுவாசத்தில் அசைகிறவர்கள், விசுவாசத்தைவிட்டு விலகிப்போகிற ஆபத்தில் சிக்கிக்கொள்வார்கள்.

நம்முடைய தேவனே நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியவர். வாக்குத்தத்தம் பண்ணியவர் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்வார். வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவரிடத்தில் பொய் எதுவுமில்லை. கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு சுதந்தரவாளிகளாகிய நம்மிடத்திலும் பொய் இருக்கக்கூடாது. நாம் கர்த்தருக்கு பல காரியங்களை வாக்குபண்ணியிருப்போம். பல காரியங்களைப் பொருத்தனை செய்திருப்போம். சிலவற்றில் உண்மையுள்ளவர்களாயிருப்போம். பல காரியங்களில் உண்மையில்லாதவர்களாகக் கூட இருந்திருப்போம். நாம் தேவனிடத்தில் பண்ணிய பொருத்தனைகளை சார்ந்திருப்பதற்குப் பதிலாக, கர்த்தர் நம்மிடத்தில் பண்ணியிருக்கிற வாக்குத்தத்தங்களை சார்ந்து கொள்ளவேண்டும். ஏனெனில் வாக்குத்தத்தம்பண்ணின நம்முடைய கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

சபை கூடிவருதல்
எபி 10 : 24,25

எபி 10:24. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து;

எபி 10:25. சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் விசுவாசத்தில் அசைவில்லாமல் உறுதியாயிருக்க வேண்டும். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் தரித்திருக்கவேண்டும். நீடிய பொறுமையோடும், விடா முயற்சியோடும் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு, விசுவாசத்தோடு ஜீவிக்கவேண்டும். அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்கவேண்டும் (எபி 10:24). விசுவாசிகளாகிய நாம் நம்மைக் கவனிப்பதோடு பிறரையும் கவனிக்கவேண்டும். நமக்கு நன்மை செய்வதுபோல பிறருக்கும் நன்மை செய்யவேண்டும். மற்றவர்கள்மீது அன்புகூரவேண்டும். மற்றவர்களுக்கு நாம் நற்கிரியைகளைச் செய்யவேண்டும்.

சபை கூடிவருதலை நாம் விட்டுவிடக்கூடாது. ஆதித்திருச்சபையின் காலத்தில்கூட ஒரு சிலர் சபை கூடிவருதலை விட்டுவிட்டார்கள். பரிசுத்தவான்களின் ஐக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். பரிசுத்தவான்கள் கூடிவரும்போது ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய காரியங்களில் உதவியாயிருக்க முடியும். ஒருவருக்கொருவர் ஆவிக்குரிய காரியங்களில் புத்திசொல்லலாம். நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்வதற்கு பரிசுத்தவான்களின் புத்திமதிகள் மிகவும் பிரயோஜனமாயிருக்கும் (எபி 10:25).

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சிநேகமாயிருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய காரியங்களில் நாம் எச்சரிப்போடிருக்கவேண்டும். அதே வேளையில் மற்ற விசுவாசிகளுடைய ஆவிக்குரிய காரியங்களையும் கவனித்துப் பார்க்கவேண்டும். பக்திவைராக்கியத்தோடு அவர்களுக்கும் புத்திசொல்லவேண்டும். நம்மைப்பற்றிய பக்திவைராக்கியம் நம்மிடத்தில் காணப்படுவதுபோல, மற்றவர்களைப்பற்றிய பக்தி வைராக்கியமும் நம்மிடத்தில் காணப்படவேண்டும். ஒருவருக்கொருவர் புத்திசொல்லுவதே மெய்யான சிநேகம்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாள் நமக்கு சமீபித்து வருகிறது. அந்த நாளானது சமீபித்து வருகிறதை நாம் அதிகமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள் ஒவ்வொன்றாய் நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. அவருடைய வருகையின் காலம் சமீபித்திருக்கிறது. தம்முடைய வருகைக்கு அடையாளமாக தேவன் சொன்ன காரியங்களெல்லாம் ஒவ்வொன்றாய் நிறைவேறிக்கொண்டு வருகிறது.

நாம் எல்லோருமே நியாயம் விசாரிக்கப்பட வேண்டிய நாள் மிகவும் சமீபத்திலிருக்கிறது. ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சரீர மரணநாள் நமக்கு சமீபமாயிருக்கிறது. நம்முடைய மரணநாளும், கிறிஸ்துவினுடைய நியாயத்தீர்ப்பின் நாளும் சமீபித்து வருகிறதை நாம் பார்க்கிறோம். இதையெல்லாம் பார்க்கும்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பக்திவைராக்கியம் அதிகரிக்கவேண்டும். மிகுந்த எச்சரிப்போடும் கவனத்தோடும் ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவின் நாள் சமீபமாயிருப்பதினால், கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஒருவருக்கொருவர் அதிகமாய்ப் புத்திசொல்லிக்கொள்ள வேண்டும்.

மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்கள்
எபி 10 : 26-31

எபி 10:26. சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல்,

எபி 10:27. நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.

எபி 10:28. மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே;

எபி 10:29. தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.

எபி 10:30. பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்.

எபி 10:31. ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே.

கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தை விட்டு விலகிப்போவது மிகப்பெரிய பாவம். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். இனிமேல் பாவம் செய்யக்கூடாது. சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனிமேல் நமக்கு இராது. நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்மை பலியாகச் செலுத்தியிருக்கிறார். நம்முடைய பாவங்களை நீக்குவதற்காக அவர் ஒரே தரம் சிலுவையிலே பாவநிவாரண பலியாக மரித்தார். நாம் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பும், நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்யக்கூடாது. அப்படி பாவம் செய்தால், நம்முடைய துணிகரமான பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனிமேல் இல்லை (எபி 10:26).

நிருபத்தின் ஆசிரியர் இந்த வசனத்தில் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்கள் என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார். இந்த வாக்கியம் விசுவாசத்தில் பின்வாங்கிப்போவதைக் குறிக்கிற வார்த்தை. இது பூரணமான பின்வாங்குதல். முடிவான பின்வாங்குதல். இதற்குமேலும் பின்வாங்குவதற்கு ஒன்றுமில்லை. சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, ஒருவர் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவராயிருப்பாரென்றால், அவர் நம்முடைய ஒரே இரட்சகரான இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிறார். மேலும் நம்முடைய இரட்சிப்புக்கு ஒரே வழியாக நியமிக்கப்பட்டிருக்கும் சுவிசேஷத்தையும் மறுதலிக்கிறார். சுவிசேஷம் நித்திய ஜீவனுக்கேற்ற வார்த்தைகள். இவர் ஏற்கெனவே கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசித்து, இப்போது மறுதலித்துவிட்டு, தன்னுடைய விசுவாச ஜீவியத்தில் பின்வாங்கிப்போயிருக்கிறார் (எபி 10:26).

கர்த்தரை மறுதலிக்கிறவர்களுடைய நிலமை மிகவும் பரிதாபமாகயிருக்கும். இவர்கள் துணிகரமாகவும் மனப்பூர்வமாகவும் பாவம் செய்கிறார்கள். இயேசுகிறிஸ்து இவர்களுடைய பாவங்களுக்கு ஏற்கெனவே மரித்துவிட்டார் (எபி 10:26).

இவர்களுடைய பாவங்களை நீக்குவதற்கு இனிமேல் பாவநிவாரண பலி எதுவும் செலுத்தப்படப்போவதில்லை. இப்படிப்பட்ட பாவிகளை இரட்சிப்பதற்கு வேறு எந்த கிறிஸ்துவும் இவர்களுக்காக மரிக்கப்போவதில்லை. நாம் சுவிசேஷத்தின் காலத்தில் ஜீவிக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசிக்கிறோம். கிறிஸ்துவானவர் தம்முடைய கிருபையினால் நம்மை இரட்சித்திருக்கிறார். நம்முடைய இரட்சராகிய கிறிஸ்துவை மறுதலித்துவிடுவோமென்றால், நமக்கு அடைக்கலம் கொடுக்கிற இரட்சகர் வேறொருவருமில்லை (எபி 10:26).

சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு, நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாய் இருப்போமென்றால், நமக்கு நியாயத்தீர்ப்பு வரும். இந்த நியாயத்தீர்ப்பு நமக்கு பயங்கரமானதாகயிருக்கும். கர்த்தரை மறுதலிக்கிறவர்கள் தங்களுக்கு நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்கவேண்டும். தேவனுடைய கோபாக்கினை விரோதிகளைப் பட்சிக்கும். நாம் கிறிஸ்துவைவிட்டு விலகிப்போய்விடுவதினால், நாமும் கிறிஸ்துவுக்கு சத்துருக்களாகயிருப்போம். நம்மைப் பட்சிப்பதற்கு தேவனுடைய கோபாக்கினை நம்மீது வரும் (எபி 10:27).

ஒரு சிலர் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தரோ அவர்கள் மரித்த பின்பு, நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்களை தண்டிக்கலாம் என்று பொறுமையோடு காத்திருப்பதில்லை. அவர்கள் இப்பிரபஞ்சத்தில் துணிகரமாய்ப் பாவம் செய்யும்போதே, கர்த்தர் அவர்களை இங்கே தண்டிக்க ஆரம்பித்துவிடுகிறார். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்தும். தங்களுக்குத் தண்டனை வருமோ என்றும், அது உடனே வந்துவிடுமோ என்றும் அவர்கள் பயத்தோடிருப்பார்கள். தேவனுக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களுக்கும், கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போகிறவர்களுக்கும் நியாயத்தீர்ப்பு வரும் என்னும் பயம் அவர்களுடைய இருதயத்தில் இருக்கும் (எபி 10:27).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஜனங்கள் மோசேயினுடைய பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவித்தார்கள். அக்காலத்தில் ஒரு சிலர் மோசேயின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல், அதைத் தள்ளிவிட்டார்கள். அவர்கள் இரக்கம் பெறமாட்டார்கள். இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே, அவர்களுடைய குற்றம் உறுதிபண்ணப்பட்டது. மோசேயினுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட்டார்கள். அவர்கள் இரக்கமில்லாமல் செத்துப் போனார்கள் (எபி 10:28).

மோசேயினுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் போனவர்களுக்கு தண்டனை வந்ததுபோலவே, கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் போகிறவர்களுக்கும் தண்டனை நிச்சயம் வரும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்துவிட்டு, தங்கள் விசுவாசத்தில் பின்வாங்கிப் போகிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பும், கோபாக்கினையும் வரும் (எபி 10:29).

கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் போகிறவர்கள் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை தங்கள் காலின்கீழ் மிதித்துப்போடுகிறார்கள். தங்களை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணுகிறார்கள். இவர்கள் கிருபையின் ஆவியை நிந்திக்கிறார்கள். தாங்கள் இரட்சிக்கப்பட்ட போது கிறிஸ்துவின் இரத்தத்தை இவர்கள் மேன்மையானதாக எண்ணினார்கள். அது பரிசுத்தமானது என்று சொன்னார்கள். அது தங்களுடைய பாவத்தை நீக்குவதற்காக சிந்தப்பட்ட இரத்தம் என்று சொன்னார்கள். அது தங்களை மீட்கும் கிரயம் என்றும் சொன்னார்கள். ஆனால் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப்போன பின்போ, அவருடைய இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணுகிறார்கள் (எபி 10:29).

கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போகிறவர்கள் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறார்கள். ஆவியானவருக்கு எதிர்த்து நிற்கிறார்கள். ஆவியானவர் தங்களுக்கு காண்பித்த கிருபைகளையெல்லாம் மறந்து விடுகிறார்கள். இதனால் இவர்கள் கிருபையின் ஆவியை நிந்திக்கிறார்கள். கிருபையின் ஆவியை நிந்திப்பது துணிகரமான பாவம். இது மிகவும் கொடிதான பாவம். சுவிசேஷத்தின் மூலமாய் தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை மறுதலிக்கிறவர்கள் கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவான்களாயிருப்பார்கள் (எபி 10:29).

தேவன் நீதியுள்ளவர். அவர் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். தேவனுடைய நீதியின் சுபாவம் உபாகமம் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நிருபத்தின் ஆசிரியர் இதை இங்கு மேற்கோளாகச் சொல்லுகிறார்.

"பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது; ஏற்றகாலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்; அவர்களுடைய ஆபத்துநாள் சமீபமாயிருக்கிறது; அவர்களுக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்துவரும். கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து, அவர்கள் பெலன் போயிற்றென்றும், அடைக்கப்பட்டவர்களாவது விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லையென்றும் காணும்போது, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்" (உபா 32:35,36).

கிருபையின் ஆவியை நிந்திக்கிறவர்கள் கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவான்களாயிருப்பார்கள். தேவனுடைய கோபாக்கினை விரோதிகளைப் பட்சிக்கும். கர்த்தர் தமக்கு விரோதமாக பாவம் செய்தவர்களை நீதியாய்த் தண்டிப்பார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு துன்மார்க்கருக்கு பயங்கரமானதாகயிருக்கும் (எபி 10:30).

கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார். தம்முடைய சபையிலுள்ள விசுவாசிகளையும் நியாயந்தீர்ப்பார். பழிவாங்குதல் எனக்குரியது என்றும், நானே பதிற்செய்வேன் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். தேவனுடைய கிருபையினால் நாம் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்கிறோம். கிருபையின் ஆவியை நிந்திக்கிறவர்கள்மீது தேவனுடைய கொடிதான ஆக்கினை வரும். தேவன் தம்முடைய கோபாக்கினையினால் பின்வாங்கிப் போகிறவர்களைப் பட்சித்துப்போடுவார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தேவனுடைய இரக்கத்தையும் அவருடைய நீதியையும் எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டும். அவருடைய கிருபையை விட்டு விலகிப்போய்விடக் கூடாது. கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போய்விடக்கூடாது. மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். தேவன் நீதியுள்ளவர். அவர் ஜீவனுள்ளவர். ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும் (எபி 10:31).

முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள் எபி 10 : 32-34

எபி 10:32. முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே.

எபி 10:33. நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப் பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள்.

எபி 10:34. நான் கட்டப்பட்டிருக்கையில் நீங்கள் என்னைக்குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளவேண்டும். நாம் இரட்சிக்கப்பட்ட நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தோம். பாடுகளின் வழியாகவும், உபத்திரவங்களின் வழியாகவும் பொறுமையோடு முன்னேறிச் சென்றோம். கிறிஸ்துவுக்காக பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்த அந்த நாட்களை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். இரட்சிக்கப்பட்ட அந்த நாட்களில் நாம் பிரகாசமாக்கப்பட்டிருந்தோம். நம்முடைய மனக்கண்கள் பிரகாசமாகயிருந்தது (எபி 10:32).

இப்பிரபஞ்சம் பாவத்தினால் இருளடைந்திருக்கிறது. நாமோ கர்த்தருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டு, அவருடைய தயவினால் பிரகாசமாக்கப்பட்டோம். பாவத்தின் இருளில் ஜீவிக்கிறவர்கள் சாத்தானோடு ஒத்துப்போகிறார்கள். இப்பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷம் தரிக்கிறார்கள். பாவத்தில் மூழ்கியிருக்கிறவர்களை சாத்தான் தொந்தரவு பண்ணமாட்டான். பாவிகள் சாத்தானுக்கு மனப்பூர்வமாய் ஊழியம் செய்கிறவர்கள். பாவம் செய்கிறவர்கள்மீது சாத்தான் பிரியமாயிருக்கிறான்.

தேவனுடைய கிருபை வெளிச்சமாயிருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் பாவத்தின் இருள் நிரம்பியிருந்தாலும், தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்கிறவர்கள் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். இப்பிரபஞ்சம் இருளாயிருந்தாலும், கர்த்தருடைய பிள்ளைகள் இந்தப் பிரபஞ்சத்தில் பிரகாசமாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த உலகத்திற்கு ஒளியாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார்கள்.

நாம் பிரகாசமாகயிருப்பதை சத்துரு விரும்புவதில்லை. அவன் அந்தகாரத்தின் அதிபதி. கர்த்தருடைய கிருபையைப்பெற்று, இப்பிரபஞ்சத்தில் பிரகாசமாயிருக்கிற நமக்கு எதிராக, அந்தகாரத்தின் அதிபதி வல்லமையாய் யுத்தம்பண்ணுகிறான். சாத்தான் மூலமாய் நமக்கு உபத்திரவங்களும், மிகுந்த போராட்டங்களும் உண்டாகிறது.

கர்த்தருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிற நாமோ, நாம் இரட்சிக்கப்பட்ட காலத்தில் சாத்தானுடைய உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டங்களைச் சகித்தோம். அப்படிப்பட்ட முந்தின நாட்களை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். அக்காலத்தில் நாம் பாடுகளையும் வேதனைகளையும், உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்துக்கொண்டோம் (எபி 10:32). அந்த முந்தின நாட்களை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் இரட்சிக்கப்பட்ட நாட்களில் சத்துரு நம்மை நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் வேடிக்கையாக்கினான். நம்முடைய நல்ல நடத்தையை களங்கப்படுத்தினான். நற்கிரியைகளை செய்ய முடியாதபடி நமக்கு நிந்தைகளையும் உபத்திரவங்களையும் கொடுத்தான். நாம் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். கிறிஸ்துவுடன்கூட பரலோகத்தின் ஆசீர்வாதங்களுக்கு நாம் உடன் சுதந்திரர்கள். விசுவாசிகளாகிய நாம் நம்முடைய மேன்மையையும், சிலாக்கியத்தையும் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கர்த்தர் நம்மோடுகூடயிருக்கும்போதுதான் நம்மால் உபத்திரவங்களையும், போராட்டங்களையும், நிந்தைகளையும் சகித்துக்கொள்ள முடியும். நாம் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுவோமென்றால், நமக்கு பெலமுமில்லை. பாதுகாப்புமில்லை.

கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருக்குமே பாடுகளும் உபத்திரவங்களும் உண்டு. எல்லா விசுவாசிகளும் மிகுந்த போராட்டத்தைச் சகித்துக் கொள்கிறார்கள். நிந்திக்கப்படுகிறார்கள். பாடுகளும் வேதனைகளும் நமக்கு மட்டும்தான் வருகிறது என்று சோர்ந்து போய்விடக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருக்குமே பாடுகளும் வேதனைகளும் உண்டு. நாம் மற்ற விசுவாசிகளுக்கு பங்காளிகளாக யிருக்கிறோம். அவர்களுடைய ஆசீர்வாதங்களிலும், சிலாக்கியங்களிலும் நாம் அவர்களுக்குப் பங்காளிகளாகயிருக்கிறோம். அதே வேளையில் அவர்கள் அனுபவிக்கிற உபத்திரவங்களிலும், போராட்டங்களிலும், நிந்தைகளிலும் நாம் அவர்களுக்குப் பங்காளிகளாகயிருக்கிறோம். நாம் அனுபவிக்கிற பாடுகளை அவர்களும் அனுபவிக்கிறார்கள். அவர்கள் அனுபவிக்கிற நிந்தைகளை நாமும் அனுபவிக்கிறோம் (எபி 10:33).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சுயநலவாதிகளாகயிருக்கக்கூடாது. நம்மிடத்தில் சுயநலத்தின் ஆவி இருக்கக்கூடாது. மனதுருகும் ஆவி இருக்கவேண்டும். நம்மைப்போல மற்ற விசுவாசிகள் துன்பப்படும்போது, நாம் அவர்களுக்காக மனதுருகவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே ஒரே சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோம். கிறிஸ்துவே நம் எல்லோருக்கும் தலையாகயிருக்கிறார். விசுவாசிகளெல்லோரும் தேவனுடைய குடும்பத்தில் பிள்ளைகளாகயிருக்கிறோம். நம்முடைய குடும்பத்தில் ஒருவருக்கு கஷ்டம் வரும்போது, அந்தக் குடும்பத்திலுள்ள நாமும் கஷ்டப்படுகிறவர் களுக்கு பங்காளிகளாகயிருக்கிறோம். சரீரத்தின் ஒரு அவயவம் பாடுகளை அனுபவிக்கும்போது, சரீரத்தின் மற்ற அவயவங்களும் அதோடுகூட பாடுகளை அனுபவிக்கும் (எபி 10:33).

நிருபத்தின் ஆசிரியர் இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தி னிமித்தமாய் கட்டப்பட்டிருந்தார். மற்ற விசுவாசிகள் இவரைக் குறித்து பரிதபித்தார்கள். இவருக்கு இரக்கம் காண்பித்தார்கள். விசுவாசிகள் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் சத்தியத்தை அறியும் அறிவைப் பெற்றுக்கொள்கிறார்கள். இப்பிரபஞ்சம் நமக்கு நித்திய உலகமல்ல. இங்கு நமக்கு பாடுகளும், உபத்திரவங்களும், நிந்தைகளும், போராட்டங்களும் நிரம்பியிருக்கிறது. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். அங்கு அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் நமக்கு வைக்கப்பட்டிருக்கிறது. சத்தியத்தை அறியும் அறிவை உடையவர்கள் இந்த ஆசீர்வாதத்தின் இரகசியத்தையும் அறிந்துகொள்கிறார்கள். இதினிமித்தமாய் விசுவாசிகள் தங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய் கொள்ளையிடக் கொடுக்கிறார்கள் (எபி 10:34).

இப்பிரபஞ்சத்தில் தங்களுக்கு நிந்தைகளும் உபத்திரவங்களும் வந்தாலும், பரலோகத்தில் தங்களுக்கு அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரமும் உண்டு என்பதை அறிந்து, விசுவாசிகள் இப்பிரபஞ்சத்தின் பாடுகளை பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள். பரலோகத்தில் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற சந்தோஷமே மெய்யான சந்தோஷம். கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும், பரலோகத்தின் சந்தோஷத்தை எதிர்பார்த்து, இங்கு பாடுகளை பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண்டும். உபத்திரவங்களின் மத்தியிலும், வேதனைகள் மத்தியிலும் சந்தோஷமாய் ஜீவிக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

இப்பிரபஞ்சத்தின் சந்தோஷம் மெய்யான சந்தோஷமல்ல. நம்முடைய மெய்யான சந்தோஷம் பரலோகத்தில்தான் இருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் சந்தோஷம், பரலோகத்தின் சந்தோஷத்திற்கு நிழலாயிருக்கிறது. பரலோகத்தின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, இந்தப் பிரபஞ்சத்தில் நாம் எதை வேண்டுமானாலும் இழப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். பரலோகத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, இப்பிரபஞ்சத்திலுள்ள நம்முடைய ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக்கொடுத்தாலும், நமக்கு நஷ்டம் எதுவுமில்லை (எபி 10:34).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவித்தாலும், கர்த்தருக்காக ஜீவிக்கவேண்டும். இப்பிரபஞ்சத்தில் நமக்கு சந்தோஷம் இருந்தாலும், பரலோகத்தின் சந்தோஷத்தையே எதிர்நோக்கி ஜீவிக்கவேண்டும். உலகத்தின் காரியங்கள் அநித்தியமானது. பரலோகத்தின் காரியங்களோ நித்தியமானது. பரலோகத்தில் எல்லாமே நமக்கு அதிக மேன்மையுள்ளதாயிருக்கும். விசுவாசிகளாகிய நாம் இந்தச் சத்தியத்தை நம்முடைய இருதயத்தில் எப்போதும் பதிய வைத்திருக்கவேண்டும். இந்தச் சத்தியத்தைத் தியானித்துக்கொண்டிருக்க வேண்டும். இந்தச் சத்தியத்தை அறியும் அறிவு நம்மிடத்தில் தெளிவாக இருக்குமென்றால், இப்பிரபஞ்சத்தில் நமக்கு வருகிற பாடுகளையும், வேதனைகளையும், போராட்டங்களையும் மிகுந்த பொறுமையோடு சகித்துக்கொள்ளலாம் (எபி 10:34).

தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் எபி 10 : 35-37

எபி 10:35. ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.

எபி 10:36. நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.

எபி 10:37. வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்.

விசுவாசிகள் தங்களுடைய தைரியத்தை விட்டுவிடக்கூடாது. கிறிஸ்துவில் நமக்கு தைரியமுண்டாயிருக்கிறது. இந்த தைரியம் நமக்கு மிகுந்த பலனுக்கேதுவானது (எபி 10:35). நாம் விசுவாசிக்கிறவர் இன்னாரென்பதை அறிந்திருக்கவேண்டும். நாம் இப்பிரபஞ்சத்தில் யாருக்காக பாடுகளை அனுபவிக்கிறோம் என்பதையும் அறிந்திருக்கவேண்டும். நாம் எதற்காக உபத்திரவங்களையும், நிந்தைகளையும் சகித்துக்கொள்கிறோம் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். நம்முடைய நம்பிக்கையை விட்டுவிலகிப்போய்விடக் கூடாது. விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருக்கவேண்டும்.

நம்மிடத்தில் ஆவிக்குரிய தைரியம் இருக்கவேண்டும். இது பரிசுத்தமான தைரியம். கர்த்தர் நம்மிடத்திலுள்ள பரிசுத்தமான தைரியத்திற்கு மிகுந்த வெகுமதிகளைக் கொடுப்பார். இப்பிரபஞ்சத்தில் நாம் ஜீவிக்கும்போது, நமக்குள் பரிசுத்தமான தைரியம் இருக்கும்போது, கர்த்தர் நமக்கு பரிசுத்தமான சமாதானத்தையும் பரிசுத்தமான சந்தோஷத்தையும் கொடுத்து நம்மை ஆசீர்வதிப்பார். இப்பிரபஞ்சத்தில் மாத்திரமல்ல, இனிமேல் நாம் பிரவேசிக்கப்போகிற பரலோகத்திலும் நமக்கு வெகுமதிகளைக் கொடுப்பார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பொறுமை அவசியம் வேண்டியதாயிருக்கிறது. நாம் தேவனுடைய சித்தத்தின்படி கிரியை நடப்பிப்பதற்கு பொறுமை நமக்குத்தேவை. மேலும் தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதை பெற்றுக்கொள்வதற்கும் நமக்கு பொறுமை வேண்டியதாயிருக்கிறது (எபி 10:36). பொறுமையில்லாமல் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் வெற்றி பெறாது. தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, நாம் தேவனுடைய சித்தத்தின்படி செயல்புரிய வேண்டும். தேவனுடைய சித்தத்தின்படி நாம் செயல்படவில்லையென்றால், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட எதையும் நம்மால் பெற்றுக்கொள்ள முடியாது.

நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்த பின்பு, நமக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நமக்குப் பொறுமை தேவை. வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம் வரைக்கும் நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். நாம் தேவனுடைய காத்திருக்கும் ஊழியக்காரர்களாக ஊழியம் செய்யவேண்டும். தேவன் தம்முடைய பிள்ளைகளெல்லோருக்குமே ஊழியம் கொடுக்கிறார். நாம் கர்த்தருடைய தோட்டத்திலே வேலை செய்கிற ஊழியக்காரராயிருக்கவேண்டும். எஜமானுடைய சித்தத்தின்படி வேலை செய்யவேண்டும். வேலை செய்து முடித்த பின்பு, தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்வோம். அதைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் பொறுமையோடு காத்திருக்கிற ஊழியக்காரராயிருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் வருகை சீக்கிரமாயிருக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மறுபடியும் வருவார். அவர் சீக்கிரத்தில் வருவார். இன்னும் கொஞ்சக்காலத்தில் வருவார். அவர் தாமதம் பண்ணார் (எபி 10:37). இயேசுகிறிஸ்துவின் வருகை சீக்கிரத்தில் வரப்போவது நம்முடைய பொறுமைக்கு உதவியாகயிருக்கும். தேவன் தமக்கு ஒரு நாளை குறித்திருக்கிறார். அந்த நாளில் அவர் நிச்சயமாய் வருவார். அதற்குமேல் அவர் தாமதம் பண்ணமாட்டார். ஆகையினால் கிறிஸ்துவினுடைய வருகையை எதிர்பார்த்து, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்
எபி 10 : 38,39

எபி 10:38. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.

எபி 10:39. நாமோ கெட்டுப் போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவரை விசுவாசிக்கிறவர்களா யிருக்கிறோம். கர்த்தர் பேரில் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் ஆசீர்வாதம் பெறுவார்கள். தெய்வீக சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தரைப் பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போகிறவர்கள்மீது தேவகோபாக்கினை வரும்.

கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போகிறவர்கள் கெட்டுப்போகிறார்கள். கெட்டுப்போகிறவர்களின் முடிவு அழிவு. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கெட்டுப்போகிறவர்களல்ல. நாம் கெட்டுப் போக பின்வாங்குகிறவர்களுமல்ல. நம்முடைய ஆத்தும ஈடேற, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம் (எபி 10:39).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சத்தில் போராட்டங்களும் நிந்தைகளும், உபத்திரவங்களும், பாடுகளும் உண்டு. நமக்கு எவ்வளவு சோதனைகள் வந்தாலும் நீதிமான்களாகிய நாம் விசுவாசத்தினால் பிழைக்கிறோம். விசுவாசம் நமக்கு ஜீவனையும் பெலனையும் தருகிறது. நாம் கர்த்தரை நம்புகிறோம். கர்த்தரை சார்ந்து ஜீவிக்கிறோம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமே ஆதாரமாயிருக்கிறது. நம்முடைய விசுவாசத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலிருந்து நாம் பின்வாங்கிப்போய்விடக்கூடாது. பின்வாங்கிப் போகிறவர்கள்மேல் கர்த்தருடைய ஆத்துமா பிரியமாயிராது (எபி 10:38).

பின்வாங்கிப்போகிறவர்கள்மேல் தேவனுடைய கோபாக்கினை வரும். அவர்கள் தங்களுக்கு வரும் நியாயத்தீர்ப்பை பயத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் சந்தோஷமுமில்லை. சமாதானமுமில்லை.

நிருபத்தின் ஆசிரியர் தன்னையும் மற்ற எபிரெயர்களோடு சேர்த்து, "நாமோ கெட்டுப்போக பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" (எபி 10:39) என்று சொல்லுகிறார். நாம் கர்த்தரை விசுவாசத்தோடு பற்றிக் கொண்டவர்களாகயிருக்கலாம். நாம் கர்த்தருக்காக அதிகமாய் ஊழியம் செய்யலாம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நல்ல வளர்ச்சி பெற்றிருக்கலாம். ஆனாலும் நாம் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்கவேண்டும். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் உயர்ந்த நிலமைக்குப் போனபின்பு, நம்முடைய விசுவாசத்தை விட்டு விலகிப்போனால், அழிவுக்கு நேராகத்தான் போவோம். யுகட்டுப் போக பின்வாங்குகிறவர்களாயிருப்போம். தேவனைவிட்டு எவ்வளவு அதிகமாய்ப் பின்வாங்கிப்போகிறோமோ, அவ்வளவு அதிகமாய் அழிவுக்கு சமீபமாயிருப்போம் (எபி 10:39).

நம்முடைய பாடுகளிலும் வேதனைகளிலும் பொறுமையோடும் விசுவாசத்தோடும் முன்னேறிச் செல்லவேண்டும். உபத்திரவங்களைப் பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண்டும். சத்துருவுக்கு விரோதமாக விசுவாசத்தோடு போராடவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவன் நம்மைப் பாதுகாப்பதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். அவருடைய கிருபை நமக்குப் போதுமானது. நம்முடைய நிந்தையிலும், பாடுகளிலும் நாம் தேவனுடைய கிருபையை அனுபவிக்கிறோம்.

ஒரு தரம் தேவகிருபையை அனுபவித்தவர்கள், இனிமேல் வரப்போகிற பாடுகளுக்கும் தேவனுடைய கிருபை போதுமானது என்று விசுவாசத்தோடிருப்பார்கள். கர்த்தரைப் பற்றும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப் போகமாட்டார்கள். நாம் விசுவாசத்தினாலே பிழைக்கிறவர்களாயிருந்தால், விசுவாசத்தில் மரிக்கிறவர்களாயும் இருப்போம். கர்த்தரை விசுவாசிக்கிறவர்களுடைய ஆத்துமா, கர்த்தருடைய கரத்தில் எப்போதும் பத்திரமாகயிருக்கும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கெட்டுப்போக பின்வாங்குகிறவர்களாய் இருக்கக்கூடாது. நம்முடைய ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாய் இருக்கவேண்டும் *(எபி 10:39)*.

11 அதிகாரம்

கிருபையின் சுபாவமும் அதன் கனிகளும். விசுவாசத்தின் விளக்கம் (எபி 11:1-3). பழைய ஏற்பாட்டுக்காலத்தில் விசுவாசத்தினால் பிழைத்தவர்கள் (எபி 11:4-38). சுவிசேஷத்தின் காலத்தில் வாழ்கிற நாம் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்களைவிட, பாக்கியவான்கள் (எபி 11:39,40).

விசுவாசம்
எபி 11 : 1-3

எபி 11:1. விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

எபி 11:2. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்.

எபி 11:3. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப் பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப் படுகிறவைகளால் உண்டாகவில்லை யென்றும் அறிந்திருக்கிறோம்.

நிருபத்தின் ஆசிரியர் விசுவாசத்திற்கு இரண்டு பகுதிகளாக விளக்கம் சொல்லுகிறார். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியாயிருக்கிறது. விசுவாசமும் நம்பிக்கையும் எப்போதும் சேர்ந்தே இருக்கும். நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதையே நம்புகிறோம். பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் நமக்கு அநேக வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். தாம் கொடுத்த வாக்குத்தத்தங்களை தேவன் நிறைவேற்றுவார் என்று உறுதியோடு எதிர்பார்த்து காத்திருப்பதுதான் விசுவாசம். விசுவாசிக்கிறவர்களின் இருதயம் சொல்லி முடியாத சந்தோஷத்தினாலும், பூரண மகிமையினாலும் நிரம்பியிருக்கும்.

விசுவாசமானது காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. நாம் சரீரப்பிரகாரமான கண்களினால் பல காரியங்களைக் காண்கிறோம். கண்டு நம்புகிறோம். நம்முடைய சரீரப்பிரகாரமான கண்களால் காண முடியாதவற்றை, நம்முடைய விசுவாசத்தின் கண்களால் காணலாம். நம்முடைய மனக்கண்களினால் அவற்றைக் காணலாம். விசுவாசத்தின் கண்களால் காண்பவற்றை நிச்சயத்தோடு நம்புவதே விசுவாசம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். நம்முடைய சரீரத்தின் கண்கள் காணமுடியாததைக்கூட, நம்முடைய ஆத்துமாவின் விசுவாசக்கண்கள் கண்டு, அதை நிச்சயமாய் நம்பும் (எபி 11:1).

விசுவாசத்தில் ஜீவிக்கிறவர்கள் பாக்கியவான்கள். தம்மை விசுவாசிக்கிறவர்களை கர்த்தர் கனப்படுத்துகிறார். மெய்யான விசுவாசம் பழைய கிருபையாயிருக்கிறது. விசுவாசம் தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்பு அல்ல. இது மிகவும் பழமையானது. இந்த உலகத்தில் வாழ்ந்த மூத்த குடிமக்களும், நற்குடிமக்களும் விசுவாசிகளாகவே இருந்தார்கள். முன்னோர்கள் தங்கள் விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றார்கள் (எபி 11:2). தங்கள் விசுவாசத்திற்கு அவர்கள் மகிமையாயிருந்தார்கள். அவர்களுடைய விசுவாசமும் அவர்களுக்கு மகிமையாயிருந்தது.

தேவனுடைய வார்த்தையினால் இந்த உலகங்கள் உண்டாக்கப்பட்டது. இதை நாம் விசுவாசத்தில் அறிந்திருக்கிறோம் (எபி 11:3). காணப்படுகிற இந்த உலகங்கள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை என்பதையும், நம்முடைய விசுவாசத்தினால் அறிந்திருக்கிறோம். ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தார்.

விசுவாசத்தின் கிருபை வருங்காலத்தையும் முன்னோக்கிப் பார்க்கும், கடந்தகாலத்தையும் பின்னோக்கிப்பார்க்கும். இந்த உலகத்தின் முடிவு வரையிலும் விசுவாசம் முன்னோக்கிப் பார்க்கும். நம்முடைய விசுவாசம் பின்னோக்கிப் பார்க்கும்போது, இந்த உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்ட காலம் வரையிலும் பின்னோக்கிப் பார்க்கும்.

விசுவாசத்தினாலேயே நாம் இந்த உலகங்களைப்பற்றி அறிந்திருக்கிறோம். இந்த உலகங்கள் நித்தியமானவையல்ல. இவை தாங்களாகவே உண்டாகிவிடவில்லை. தேவனே இந்த உலகத்தை சிருஷ்டித்தவர். தேவன் தம்முடைய வார்த்தையினாலே இந்த உலகத்தை உண்டாக்கினார். இந்த உலகம் தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. தேவன் இந்த உலகத்தை ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து சிருஷ்டித்திருக்கிறார். உலகத்தைப்பற்றிய இந்தச் சத்தியங்களையெல்லாம் நாம் விசுவாசத்தினாலே அறிந்திருக்கிறோம் (எபி 11:3).

ஆபேல்
எபி 11:4

எபி 11:4. விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான், அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்.

நிருபத்தின் ஆசிரியர் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த ஒரு சில பரிசுத்தவான்களைப்பற்றி இங்கு சாட்சியாக எழுதுகிறார். அவர்கள் தங்கள் விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றார்கள். நிருபத்தின் ஆசிரியர் இங்கு விரிவாக எழுதுவதை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. விசுவாச வீரர்களின் பெயர்களும், அவர்களுடைய விசுவாசக் கிரியைகளும் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டவை. 2. விசுவாச வீரர்களின் பெயர்கள் குறிப்பிடப்படாமல், அவர்களுடைய விசுவாசத்தின் பொதுவான கிரியைகள் மாத்திரம் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டவை.

நிருபத்தின் ஆசிரியர் விசுவாச வீரர்கள் அநேகரைப்பற்றி இங்கு எழுதுகிறார். அவர்களில் முதலாவதாக ஆபேலைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆபேல் விசுவாசத்தினால் பிழைத்தவர். விசுவாசத்திற்காக மரித்தவர். எபிரெயர்கள் ஆபேலின் முன்மாதிரியை பின்பற்றவேண்டும்.

ஆபேல் விசுவாசத்தினாலே காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினார். ஆதாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்தார். தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே இருந்த நெருங்கிய ஐக்கியம் ஆதாமின் பாவத்தினால் முறிந்துபோயிற்று. மனுஷர் தங்கள் பாவத்தில் விழுந்து, பாவத்தில் ஜீவித்தார்கள். ஆனாலும் தேவன் தம்முடைய பிள்ளைகள்மீது கிருபையுள்ளவராகயிருக்கிறார். பலிகள் மூலமாக தம்மை ஆராதிப்பதற்கு தேவன் புதிய உபாயத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார். விழுந்து போன மனிதர்கள் தேவனுக்கு பலிகளைச் செலுத்தி, அவருடைய சமுகத்தில் பிரவேசிக்கலாம். பலிகள் செலுத்தப்படுவதினால் இந்தச் சிலாக்கியம் உண்டாயிற்று.

காயீனும் ஆபேலும் சகோதரர்கள். காயீனே மூத்த சகோதரர். ஆனாலும் ஆபேலே தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்தார். பிறப்பினால் யார் மூத்தவர் என்னும் அடிப்படையில் தேவன் யாரையும் ஆசீர்வதிப்பதில்லை. அவர் தம்முடைய கிருபையின்படியும், தம்முடைய சித்தத்தின்படியும், பிரியத்தின்படியும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால் ஒருவரை ஆசீர்வதிக்கும்போது, அவருக்கு கனமும் மேன்மையும் உண்டாகிறது.

ஆபேல் தேவனுடைய சமுகத்தில் பாவநிவாரண பலிகளைச் செலுத்தினார். தன்னுடைய மந்தையிலுள்ள தலையீற்றுக்களைக் கொண்டு வந்து தேவனுக்குப் பலிசெலுத்தினார். காயீனோ பாவநிவாரண பலியைச் செலுத்தாமல் ஸ்தோத்திர பலி மாத்திரமே செலுத்தினார். காயீன் நிலத்தின் கனியை தேவனுக்குப் பலியாகச் செலுத்தினார். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. நிலத்தின் கனியினால் பாவங்கள் மன்னிக்கப்படாது.

ஆபேல் விசுவாசத்தினாலே மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினார். ஆபேல் நீதிமான் என்று தேவனுடைய சமுகத்தில் சாட்சி பெற்றார். ஆபேலின் பலி, காயீனுடைய பலியிலும் மேன்மையானது என்று தேவனே ஆபேலுடைய காணிக்கைகளைக் குறித்து சாட்சி கொடுத்தார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை நீதிமான்களென்று சாட்சி கொடுக்கிறார். நாம் கர்த்தருக்கு செலுத்துகிற காணிக்கைகளை அங்கீகரித்து, அவர் நம்மை நீதிமான்களென்று அறிக்கை செய்கிறார். நம்முடைய காணிக்கைகளைக் குறித்தும் தேவன் சாட்சி கொடுக்கிறார்.

ஆபேல் விசுவாசத்தினாலே காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினார். அதினாலே அவர் நீதிமான் என்று சாட்சி பெற்றார். ஆபேலுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்.

ஆபேல் மரித்தும் இன்னும் பேசுகிறார். ஆபேல் மரித்தாலும், தேவனுக்கு எப்படிப்பட்ட பலிகளைச் செலுத்தவேண்டும் என்பதை சாட்சியாக விட்டுச் சென்றிருக்கிறார். அவர் செலுத்திய பலிகள் இன்றும் நம்மத்தியிலே சாட்சியாக அறிவிக்கப்படுகிறது.

பாவத்தில் விழுந்த மனுஷர்கள் பாவநிவாரணம் பெறவேண்டும். அவர்கள் தேவனை ஆராதிக்கவேண்டும். தேவனுடைய சமுகத்தில் அவர்கள் பலிகளைச் செலுத்துகிறார்கள். தேவன் தங்களை ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையோடு கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய சமுகத்திற்கு முன்பாக பலிகளைச் செலுத்துகிறார்கள்.

தம்முடைய ஜனத்திற்கு விரோதமாக யார் தீங்கு செய்தாலும் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். தம்முடைய பிள்ளைகள் தமக்காக பாடுகளை அனுபவிக்கும்போது கர்த்தர் அவர்களுக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறார். கர்த்தருடைய கண்கள் தம்முடைய பிள்ளைகள்மீது எப்போதும் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஏனோக்கு
எபி 11:5,6

எபி 11:5. விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்.

எபி 11:6. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தார். ஏனோக்கு தன்னுடைய விசுவாசத்தினாலே மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவருடைய சரீரத்தின் ஒரு பகுதியும் பூமியில் காணப்படவில்லை. தேவன் ஏனோக்கை எடுத்துக்கொண்ட படியினால், ஏனோக்கு இந்தப் பூமியில் காணப்படாமல் போனார்.

தேவன் ஏனோக்கை எடுத்துக் கொள்வதற்கு முன்னமே, அவர் தேவனுக்கு பிரியமானவர் என்று சாட்சி பெற்றார். ஏனோக்கினுடைய மனச்சாட்சி தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக சுத்தமாயிருந்தது. தன்னுடைய மனச்சாட்சியில் ஏனோக்கு தேவனுக்குப் பிரியமானவராயிருந்தார். ஏனோக்குடைய ஆவியோடு, பரிசுத்த ஆவியானவரும், அவர் தேவனுக்குப் பிரியமானவர் என்று ஏனோக்கைக் குறித்து சாட்சி கொடுத்தார்.

ஏனோக்கு தன்னுடைய விசுவாசத்தினால் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஏனோக்கு தேவனுக்குப் பிரியமான வராயிருந்தார். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். நாம் தேவனை விசுவாசித்தால் மாத்திரமே, நம்மால் தேவனோடுகூட சஞ்சரிக்க முடியும்.

தேவன் தம்மை மறுபடியும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வெளிப் படுத்துகிறார். தேவனிடத்தில் சேருகிறவர், அவர் உண்டென்று விசுவாசிக்கவேண்டும். மேலும் தம்மைத் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிக்கிறவர் என்றும் விசுவாசிக்கவேண்டும். தம்மை எப்படி கண்டுபிடிப்பது என்பதற்கான உபாயங்களையும், வழிகளையும் தேவன் நியமித்து வைத்திருக்கிறார். கர்த்தரைக் கருத்தாய்த் தேடுகிறவர்கள் மாத்திரமே அவரைக் கண்டுபிடிப்பார்கள். கர்த்தரைக் கண்டுபிடித்த பின்பு, அதற்காக நாம் பட்ட பிரயாசங்களின் களைப்பு நம்மை விட்டு நீங்கிப்போகும். நம்முடைய வேதனைகளெல்லாம் சந்தோஷமாய் மாறும். ஏனெனில் கர்த்தர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவராயிருக்கிறார். கர்த்தர் அளிக்கிற பலன் நம்முடைய எல்லா பிரயாசங்களையும்விட மேன்மையானது.

நோவா
எபி 11:7

எபி 11:7. விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.

நோவா காணாதவைகளைக்குறித்து தேவஎச்சரிப்பு பெற்றார். தேவன் பாவிகளைத் தண்டிப்பதற்கு முன்பாக, அவர்களை எச்சரிக்கிறார். தேவ எச்சரிப்பைப் பெற்றவர்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகிவரவேண்டும். கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவஎச்சரிப்பைப் பெற்றும் மனந்திரும்பாமல், துணிகரமாகப் பாவம் செய்தால் தேவன் அவர்களை நிச்சயமாகவே தண்டிப்பார். தேவனுடைய தண்டனை உக்கிரமமாகயிருக்கும்.

நோவா தேவஎச்சரிப்பைப் பெற்றவுடன் அதைப்பற்றி தன்னுடைய மனதில் சிந்திக்க ஆரம்பித்தார். தன்னுடைய விசுவாசத்தை செயல்படுத்தினார். முதலாவதாக அவர் தேவனிடத்தில் பயபக்தியுள்ளவரானார். நம்மிடத்தில் விசுவாசம் வரும்போது, கர்த்தரிடத்தில் நாம் வைத்திருக்கிற பயபக்தி அதிகரிக்கிறது. அதன்பின்பு நாம் விசுவாசத்தினால் கிரியை செய்கிறோம். நாம் விசுவாசத்தோடும், பயபக்தியோடும் கிரியை செய்யும்போது, நம்முடைய கிரியைகள் பரிசுத்தமாயிருக்கும்.

நோவா காணாதவைகளைக்குறித்து தேவஎச்சரிப்பு பெற்றார். கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவரானார். தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டுபண்ணினார். நம்மிடத்தில் விசுவாசம் இருக்கும்போது தேவனிடத்தில் நாம் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும் என்னும் ஆர்வம் நமக்குள் உண்டாகிறது. கர்த்தர் நம்முடைய பாவத்தைக்குறித்து எச்சரிக்கும்போது, நம்முடைய இருதயத்தில் பயம் நிரம்புகிறது. தேவன் காணாதவைகளைக் குறித்து நோவாவிடம் எச்சரித்தார். தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தையைக் கேட்டவுடன் நோவா பயபக்தியுள்ளவரானார்.

நோவா விசுவாசத்தினால் கிரியை செய்ய ஆரம்பித்தார். தேவனுடைய எச்சரிப்பினால் நோவா பயந்து, பேழையை உண்டுபண்ணினார். நோவா விசுவாசத்தினால் தான் செய்ய வேண்டிய வேலையை கருத்தாய்ச் செய்தார்.

கர்த்தர் நோவாவின் காலத்தில் பாவத்தைக் குறித்து எச்சரித்தார். ஜனங்களோ கர்த்தருடைய எச்சரிப்புக்குச் செவிகொடுக்கவில்லை. தங்கள் பாவத்தில் தொடர்ந்து ஜீவித்தார்கள். நோவாவோ தேவனுடைய எச்சரிப்பைப்பெற்று, பயபக்தியுள்ளவரானார். தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டுபண்ணினார். தேவன் தம்முடைய எச்சரிப்பின்படி உலகத்தை அழித்தார். நோவாவும் அவருடைய குடும்பத்தாருமோ அழிவிலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள்.

நோவா பேழையை உண்டுபண்ணினார். நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் ஜலப்பிரளத்திலிருந்து இரட்சிக்கப் பட்டார்கள். இதனால் நோவா உலகம் ஆக்கினைக்குள்ளானது என்று தீர்த்தார். அவருடைய பயபக்தி உலகத்தாரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது. உலகப்பிரகாரமான ஜனங்கள் வீணான மாயைப்பற்றிக் கொண்டார்கள். தேவனிடத்தில் விசுவாசம் வைக்காமல் அவிசுவாசிகளாக இருந்தார்கள். நோவாவின் விசுவாசம் உலகப்பிரகாரமான ஜனங்களின் அவிசுவாசத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது. நோவாவின் கீழ்ப்படிதல் ஜனங்களுடைய மீறுதல்களை ஆக்கினைக்குள்ளாக்கிற்று.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நற்சாட்சியுடைவர்களாகயிருக்க வேண்டும். நம்முடைய சாட்சியின் மூலமாக பாவிகள் மனந்திரும்புவார்கள். அவர்கள் மனந்திரும்பவில்லையென்றால், நம்முடைய நற்சாட்சி அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும். விசுவாசிகளாகிய நாம் அவிசுவாசிகளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்போது, நாம் துன்மார்க்கமான வார்த்தைகள் எதையும் கோபத்தோடு பேசுவதில்லை. நாம் கர்த்தருடைய சமுகத்தில் பரிசுத்தமாய் ஜீவிக்கிறோம். ஜனங்களுக்கு முன்பாக தேவனுக்குச் சாட்சியாக ஜீவிக்கிறோம். நம்முடைய பரிசுத்த முன்மாதிரியான ஜீவியம் உலகப்பிரகாரமான ஜனங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது.

நோவா தன் விசுவாசத்தினால் அவிசுவாசிகளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். இதனால் விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்கு நோவா சுதந்தரவாளியானார். விசுவாசத்தினால் உண்டாகும் நீதியை நோவா பெற்றுக்கொண்டார். இந்த நீதிக்கு அவர் சுதந்தரவாளியானார்.

ஆபிரகாம்
எபி 11 : 8-10

எபி 11:8. விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்.

எபி 11:9. விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்.

எபி 11:10. ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.

ஆபிரகாம் தேவனுக்குச் சிநேகிதராயிருந்தார். விசுவாசமுள்ளவர்கள் எல்லோருக்கும் அவர் தகப்பனாயிருக்கிறவர். எபிரெயர்கள் ஆபிரகாமைக் குறித்து பெருமை பாராட்டுகிறார்கள். முற்பிதாக்களுடைய விசுவாசத்தைக் குறித்து நிருபத்தின் ஆசிரியர் எழுதும்போது, அவர்களெல்லோருக்கும் முற்பிதாவாயிருக்கிற ஆபிரகாமின் விசுவாசத்தைக் குறித்து விரிவாக எழுதுகிறார். ஆபிரகாமின் விசுவாசத்தைப்பற்றிச் சொல்லும்போது சாராளின் விசுவாசத்தைப்பற்றியும் சொல்லுகிறார்.

தேவன் ஆபிரகாமை அழைத்தார். ஆபிரகாமோ தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் விசுவாசத்தோடு புறப்பட்டுப்போனார். தேவனே ஆபிரகாமை அழைத்தவர். ஆபிரகாமின் முற்பிதாக்கள் விக்கிரகாராதனை செய்தவர்கள். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்கு போ" (ஆதி 12:1) என்று சொன்னார்.

தேவனுடைய கிருபை நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. ஆபிரகாம் விக்கிரகாராதனைக் காரராகயிருந்தாலும், தேவன் அவரையும் தம்முடைய கிருபையினால் அழைத்தார். துன்மார்க்கரில் அநேகரைத் தேவன் தம்முடைய கிருபையினால் அழைக்கிறார். நாம் தேவனிடத்தில் வந்து சேருவதற்கு முன்பாக, தேவன் நம்மிடத்தில் வந்து சேரவேண்டும். நாம் பாவத்தைவிட்டும், பாவம் செய்கிற சூழ்நிலைகளை விட்டும், பாவம் செய்கிறவர்களை விட்டும் விலகிவரவேண்டும்.

தேவன் ஆபிரகாமை அழைத்தபோது அவருக்கு ஒரு வாக்குத்தத்தையும் கொடுத்தார்.

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி 12:2,3).

தேவன் ஆபிரகாமை எந்த இடத்திற்கு அழைக்கிறாரோ, அந்த இடத்திலே ஆபிரகாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக் கொள்வார். தேவன் தம்முடைய ஜனங்களை சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அழைக்கிறார். சுதந்தரம் தேவன் கொடுக்கிற வாக்குத்தத்தம். நாம் பல வேளைகளில் தேவனுடைய வாக்குத்தத்ததை உடனே சுதந்தரிப்பதில்லை. ஆனாலும் தேவனுடைய வாக்குத்தத்தம் நிச்சயமானது. அது உண்மையானது.

ஆபிரகாம் தான் போகுமிடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனார். ஆபிரகாம் தன்னை தேவனுடைய கரத்தில் ஒப்புக்கொடுத்தார். தேவன் தமக்கு பிரியமான இடத்திற்கு தன்னை அனுப்புவார் என்று விசுவாசித்து, ஆபிரகாம் தன்னை கர்த்தருடைய சித்தத்திற்கு அர்ப்பணித்தார். தேவனுடைய சித்தத்தைப்போலவே மனுஷருக்கும் சித்தமுண்டு. தேவனுடைய சித்தமே நம்முடைய சித்தத்தை ஆளுகை செய்யவேண்டும். தேவன் மனுஷருக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய ஞானத்தை தேவனுடைய ஞானத்திற்கு கீழ்ப்படுத்தவேண்டும்.

பல சமயங்களில் நாம் எந்த வழியாகப் போகிறோம் என்பது நமக்குத் தெரியாது. நாம் போகும் பாதை நமக்குத் தெரியாது. ஆனாலும் நம்மை வழிநடத்துகிறவர் இன்னாரென்பதை நாம் அறிந்திருக்கிறோம். நம்மை கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கும் போது, அவரே நம்மைக் கரம்பிடித்து வழிநடத்துகிறார்.

ஆபிரகாம் விசுவாசத்தினாலே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போல சஞ்சரித்தார். விசுவாசத்தினால் கிரியை நடப்பித்தார். ஆபிரகாம் கானான் தேசத்திலே ஒரு சுதந்தரவாளியாகக் குடியிருக்கவில்லை. அங்கு ஒரு பரதேசியைப்போலவே சஞ்சரித்தார். ஆபிரகாமுக்கு ஈசாக்கும் யாக்கோபும் உடன் சுதந்தரவாளிகள். வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் ஆபிரகாம் கூடாரங்களிலே குடியிருந்தார்.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் கொடுக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், நம்முடைய குடும்பத்தாரும் பரலோகத்தின் ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரராக யிருக்கிறோம். இப்பிரபஞ்சத்தில் பெற்றோரும், அவர்களுடைய பிள்ளைகளும் பரதேசியைப்போல சஞ்சரிப்பது அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். நாம் பரலோகத்தின் ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரவாளிகளாகயிருந்தாலும், நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற காலம் வரையிலும், இப்பிரபஞ்சத்தில் பரதேசியைப்போல சஞ்சரிக்கிறோம்.

தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்கு ஆபிரகாம் காத்திருந்தார். இந்த நகரம் தேவனுடைய சர்வவல்லமையினால் கட்டப்பட்டது. தேவன் தாமே தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், தீர்மானத்தின் பிரகாரமாகவும் இந்த நகரத்தை கட்டி உண்டாக்கியிருக்கிறார். ஆபிரகாம் இந்தப் பரலோக நகரத்திற்காகக் காத்திருந்தார். அவர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போல சஞ்சரித்தாலும், பரலோகத்தையே நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

ஆபிரகாம் பரலோகத்திற்காக காத்திருக்கிற வேளையில், விசுவாசத்தினால் கிரியை நடப்பித்தார். தேவன் ஆபிரகாமை அழைத்தபோது, ஆபிரகாம் தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனார். ஆபிரகாம் பிரயாணம் செய்த தேசங்களில் அவருக்கு பல சோதனைகள் உண்டாயிற்று. எல்லா சோதனைகளிலும் ஆபிரகாம் கர்த்தரிடத்தில் தான் வைத்திருக்கிற விசுவாசத்தைக் காத்துக்கொண்டார்.

சாராள்
எபி 11 : 11,12

எபி 11:11. விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்.

எபி 11:12. ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்.

சாராளுடைய விசுவாசத்திற்கு அநேக சோதனைகள் உண்டாயிற்று. கர்த்தருடைய வார்த்தையை அவள் சிறிதுகாலம் விசுவாசியாமற்போனாள். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு நகைத்தாள். தான் வயது சென்றவளாயிருப்பதினாலும், தன்னிடத்தில் கர்ப்பம் தரிக்க பலன் இல்லாமல் இருப்பதினாலும், தேவனால் தனக்கு நன்மை செய்யவே முடியாது என்று அவிசுவாசமாயிருந்தாள். தன்னுடைய கர்ப்பத்தில் ஒரு குமாரன் பிறப்பான் என்பதை சாராளால் ஆரம்பத்தில் நம்பவே முடியவில்லை.

சாராள் சிறிதுகாலம் மாத்திரமே அவிசுவாசியாயிருந்தாள். அதன் பின்பு சாராளும் விசுவாசத்தினால் கிரியை நடப்பிக்க ஆரம்பித்தாள். தனக்கு வாக்குத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்பதை சாராள் விசுவாசித்தாள். சாராளின் அவிசுவாசத்தை கர்த்தர் மன்னித்து மறந்தார். சாராளின் விசுவாசம் ஜெயம் பெற்றது. சாராள் விசுவாசத்தினாலே கர்ப்பம் தரிக்க பெலனடைந்தாள். வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்.

சாராளின் விசுவாசத்தை தேவன் கனப்படுத்தினார். அவளுக்கு கர்ப்பந்தரிக்க பெலனைக் கொடுத்தார். கர்த்தரால் வறண்ட நிலத்தை விளைச்சல் நிலமாக மாற்ற முடியும். கர்த்தரால் வறட்சியான ஆத்துமாவை கனிகொடுக்கிற ஆத்துமாவாக மாற்ற முடியும். கர்த்தரால் பிள்ளை பெறாத கர்ப்பத்தை பிள்ளை பிறக்கும் கர்ப்பமாக மாற்ற முடியும்.

கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரமாகவே, சாராள் கர்ப்பந்தரிக்க பெலனடைந்தாள். வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்.

சாராளுடைய குமாரன் மூலமாய் மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள். அவர்கள் வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும் எண்ணிக்கையில் மிகுதியாயிருந்தார்கள். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஆபிரகாம் சரீரம் செத்தவரென்று எண்ணப்பட்டார். சாராள் கர்ப்பந்தரிக்க பெலனற்றவளாயிருந்தாள். ஆனால் வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தரோ உண்மையுள்ளவர்.

முற்பிதாக்கள்
எபி 11 : 13-16

எபி 11:13. இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்.

எபி 11:14. இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்.

எபி 11:15. தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங் கிடைத்திருக்குமே.

எபி 11:16. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.

முற்பிதாக்களும் கர்த்தரை விசுவாசித்தார்கள். அவர்களுடைய விசுவாசமும் சோதிக்கப்பட்டது. அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையவில்லை. அந்த ஆசீர்வாதத்தை அவர்கள் தூரத்திலே கண்டார்கள். அவற்றை விசுவாசத்தோடு நம்பி அணைத்துக்கொண்டார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய நாம் இப்பிரபஞ்சத்தில் பரிபூரணமான ஆசீர்வாதத்தையோ, அல்லது பரிபூரணமான சந்தோஷத்தையோ பெற்றுக்கொள்ளப் போவதில்லை. நம்முடைய மெய்யான சந்தோஷம் பரலோகத்தில்தான் இருக்கிறது. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியவைகளை பரலோகத்தில்தான் பெற்றுக்கொள்வோம். அது வரையிலும் நாம் அவற்றை விசுவாசத்தோடு எதிர்பார்க்கிறோம்.

பழைய ஏற்பாட்டுக் காலத்து முற்பிதாக்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையவில்லை. ஆனாலும் அவைகளை விசுவாசத்தினாலே தூரத்திலே கண்டார்கள். விசுவாசத்தின் கண் தெளிவாகயிருக்கும். கூர்மையாக பார்க்கும். முற்பிதாக்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனாலும், அவைகளை தூரத்திலே கண்டார்கள். தேவனுடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிருபைகளை அவர்கள் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், அவற்றை தூரத்திலே கண்டார்கள்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகள் மெய்யானவை என்றும், அவை நிச்சயமாய் நிறைவேறும் என்றும் நம்பி, அவற்றை விசுவாசத்தோடு அணைத்துக் கொண்டார்கள். விசுவாசத்தின் கரம் வல்லமையானது. அது நீளமானது. அணைக்க வேண்டிய பொருள் தூரத்திலிருந்தாலும், விசுவாசத்தின் கரம் அதை நம்பி அணைத்துக்கொள்ளும்.

முற்பிதாக்கள் பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டார்கள். பரிசுத்தவான்கள் இப்பிரபஞ்சத்தில் அந்நியராயும் பரதேசிகளாயும் இருக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு இப்பிரபஞ்சம் நிலையான வாசஸ்தலமல்ல. நம்முடைய மெய்யான குடியிருப்பு பரலோகத்தில்தான் இருக்கிறது. பரலோகத்திலுள்ள நம்முடைய வீட்டை நோக்கி பிரயாணம் பண்ணும்போது, வழியிலிருக்கிற இப்பிரபஞ்சத்தில், நாம் பரதேசிகளாய் சஞ்சரிக்கிறோம்.

முற்பிதாக்கள் பூமியின்மேல் தங்களை அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். பரலோகத்திற்குப் போவோம் என்னும் நம்பிக்கையில் அவர்கள் இந்தப் பூமியில் மரித்துப்போனார்கள்.

இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு பரலோகமே அவர்களுடைய சுயதேசம். முற்பிதாக்கள் தங்கள் விசுவாசத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்கு சமயம் கிடைத்திருக்கும். ஆனால் அவர்களோ தாங்கள் விட்டு வந்த தேசத்திற்கு திரும்பிப் போக விரும்பவில்லை. கர்த்தரே அவர்களை அந்தத் தேசத்திலிருந்து அழைத்து வந்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து முற்பிதாக்களை கர்த்தர் அவர்களுடைய தேசத்திலிருந்து அழைத்து வந்து, கானான் தேசத்திலே குடியேறச் செய்தார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மை, நம்முடைய பழைய பாவஜீவியத்திலிருந்து விடுவித்து, பரிசுத்த ஜீவியத்திற்கு அழைத்து வந்திருக்கிறார். முற்பிதாக்கள் இப்பிரபஞ்சத்து தேசத்தைவிட மேன்மையான பரமதேசத்தை விரும்பினார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், நம்முடைய பழைய பாவஜீவியத்தைவிட, இப்போது ஜீவிக்கிற பரிசுத்தமான ஜீவியத்தையே விரும்பவேண்டும். இதுவே மேன்மையான ஜீவியம். பரிசுத்தத்தில் ஜீவிக்கிற நாம் பழைய பாவஜீவியத்திற்கு திரும்பிப்போக வேண்டுமென்று நினைக்கக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பாவம் செய்வதற்கு வாய்ப்பு வந்தாலும், அதை வெறுத்துவிடவேண்டும். பாவத்தை விட்டு விலகிவரவேண்டும். பழைய பாவஜீவியத்திற்குத் திரும்பிப்போக வாய்ப்பு கிடைக்கும்போது, அந்த வாய்ப்பை பயன்படுத்தி பாவம் செய்யக்கூடாது. முற்பிதாக்கள் தாங்கள் விட்டுவந்த தேசத்தை மறுபடியும் நினைக்கவில்லை. அவர்கள் அந்தத் தேசத்திற்குத் திரும்பிப்போக விரும்பவில்லை. அவர்கள் விரும்பியிருந்தால் அவர்கள் விட்டு வந்த தேசத்திற்கு அவர்களால் திரும்பிப்போயிருக்க முடியும். ஆனால் அவர்களோ தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைக்கவில்லை. கர்த்தரை விசுவாசத்தோடு பற்றிக்கொண்டார்கள். கர்த்தரை உறுதியாய்ப் பிடித்துக் கொண்டார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய விசுவாசம் கர்த்தரிடத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்திலும், ஜீவியத்திலும் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் விட்டுவந்த பழைய தேசத்திற்குத் திரும்பிப்போகக்கூடாது என்பதிலும் நாம் உறுதியாயிருக்கவேண்டும். அதேவேளையில் மேன்மையான பரம தேசத்திற்கு போகவேண்டும் என்னும் விசுவாசத்திலும் நாம் உறுதியாயிருக்க வேண்டும்.

மெய்யான விசுவாசிகள் எல்லோருமே மேன்மையான பரம தேசத்தை விரும்புகிறார்கள். நம்முடைய விசுவாசம் எவ்வளவு பெலமுள்ளதாகயிருக்கிறதோ, அந்த அளவுக்கு நம்முடைய விருப்பமும் பெலமுள்ளதாகயிருக்கும். நம்முடைய ஜீவியத்தில் விசுவாசமும் பரிசுத்தமும் இருக்கும்போது, நம்முடைய விருப்பத்திலும் விசுவாசமும் பரிசுத்தமும் நிரம்பியிருக்கும்.

முற்பிதாக்கள் தங்கள் விசுவாசத்தை கடைசிவரையிலும் காத்துக்கொண்டார்கள். இந்தப் பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள். தேவன் அவர்களுடைய விசுவாசத்தைக் கனப்படுத்தினார். கர்த்தர் அவர்களுடைய தேவனென்று அழைக்கப்பட்டார். தேவன் அவர்களுடைய தேவன் என்னப்பட வெட்கப்படவில்லை. முற்பிதாக்கள், தம்மை தங்கள் தேவனென்று அழைப்பதற்கு கர்த்தராகிய தேவன், அனுமதித்தார். அவர்கள் கர்த்தரை தங்கள் தேவனென்று அழைத்தபோது, அதனிமித்தமாக தேவன் வெட்கப்படவில்லை. அந்த அளவுக்கு தேவன் அவர்கள்மீது அன்பு வைத்திருந்தார். அவர்களுடைய விசுவாசத்தைக் கனப்படுத்தினார்.

கர்த்தர் நம்மை தம்முடைய பிள்ளைகள் என்று அழைக்க வெட்கப்படவில்லை. தம்மை நம்முடைய தேவனென்று வெளிப்படுத்தவும் அவர் வெட்கப்படவில்லை. இதினிமித்தமாய் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மிகுந்த கவனத்தோடும் எச்சரிப்போடும் ஜீவிக்கவேண்டும். நம்முடைய வார்த்தையினாலோ கிரியையினாலோ தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவதற்கு இடங்கொடுக்கக்கூடாது. தேவனை வெட்கப்படுத்திவிடக்கூடாது.

முற்பிதாக்கள் இப்பிரபஞ்சத்தை அதிகமாய் விரும்பாமல், அதிலும் மேன்மையான பரமதேசத்தை விரும்பினார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படவில்லை. தம்முடைய பிள்ளைகளினிமித்தமாய், தாம் வெட்கப்படவில்லை என்பதை உறுதிபண்ணுவதற்காக, தேவன் அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினார். முற்பிதாக்கள் பரமதேசத்தை விரும்பினார்கள். கர்த்தர் அந்த தேசத்திலே அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணுகிறார். அந்த நகரத்திலே அவர்களுக்கு பூரண சந்தோஷத்தை நியமித்திருக்கிறார்.

தேவன் கொடுக்கிற சந்தோஷம் இந்த உலகம் கொடுக்கிற சந்தோஷத்தைவிட மேன்மையானதாயிருக்கும். இந்த உலகத்தின் ஆசீர்வாதங்களைவிட கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதங்களே மேன்மையானது. இப்பிரபஞ்சத்திலுள்ள நகரத்தின் மூலமாய் நமக்குக் கிடைக்கிற சந்தோஷத்தைவிட, தேவன் நமக்கு ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிற நகரத்தில் ஏராளமான சந்தோஷம் இருக்கும். கர்த்தர் கொடுக்கிற சந்தோஷமே மெய்யான சந்தோஷம்.

ஆபிரகாமும் ஈசாக்கும்
எபி 11 : 17-19

எபி 11:17. மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்ட போது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்.

எபி 11:18. ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி,

எபி 11:19. தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்.

நிருபத்தின் ஆசிரியர் ஆபிரகாமின் விசுவாசத்தைப்பற்றி ஏற்கெனவே சொல்லிவிட்டு, இங்கு மறுபடியும் சொல்லுகிறார். ஆபிரகாமின் வாழ்க்கையிலே அவருடைய விசுவாசத்திற்கு மிகப்பெரிய சோதனை உண்டாயிற்று. ஆபிரகாமிடம் அவருடைய ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுக்குமாறு கர்த்தர் சொன்னார். ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது, விசுவாசத்தினாலே ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தார்.

ஆபிரகாமுக்கு வந்த சோதனை அவருடைய விசுவாசத்திற்கு வந்த சோதனையாகும். தேவன் ஏற்கெனவே ஆபிரகாமின் விசுவாசத்தைச் சோதித்திருக்கிறார். கர்த்தர் ஆபிரகாமை அழைத்தபோது, அவர் விசுவாசத்தினாலே தான் போகுமிடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனார். ஆபிரகாம் தன் விசுவாசத்தினால் தேவனைப் பிரியப்படுத்தினார். ஆனால் இப்போது வந்திருக்கிற சோதனை எல்லா சோதனைகளையும் விட பெரியது.

ஈசாக்கு ஆபிரகாமுக்கு ஒரே குமாரன். ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் ஈசாக்கு சந்தோஷத்தின் ஆதாரமாகயிருந்தார். ஆனால் கர்த்தரோ ஈசாக்கை மோரியா மலைக்கு அழைத்துக்கொண்டு போகுமாறு சொன்னார். அந்த மலையிலே ஈசாக்கை விட்டுவிட்டு வந்துவிடுமாறு சொல்லவில்லை. மோரியா மலையிலே ஈசாக்கை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாகச் செலுத்துமாறு சொன்னார்.

ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று தேவன் ஆபிரகாமோடே சொல்லியிருந்தார். ஆனால் இப்போதோ அதே ஈசாக்கை தமக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்துமாறு கர்த்தர் ஆபிரகாமிடம் சொல்லுகிறார். ஈசாக்கை தகனபலியாகச் செலுத்திவிட்டால், ஈசாக்கினிடத்தில் ஆபிரகாமின் சந்ததி விளங்குவதற்கு இயற்கையின் பிரகாரம் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஈசாக்கை தகனபலியாகச் செலுத்தியவுடன், ஆபிரகாமின் சந்ததி ஈசாக்கோடு முடிவடைந்துவிடும். ஈசாக்கினிடத்தில் ஆபிரகாமின் சந்ததி விளங்கும் என்று, அவரோடே சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

ஈசாக்கு ஆபிரகாமுக்கும், அவருடைய மனைவியாகிய சாராளும் பிறந்த ஒரே பேறான குமாரன். சாராள் ஈசாக்கை மாத்திரமே பெற்றுக் கொடுத்தாள். அவள் ஏற்கெனவே கர்ப்பந்தரிக்க பெலனில்லதவளாயிருந்தாள். வயது சென்றவளாயிருந்தாள். ஆனாலும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று எண்ணி, ஈசாக்கை பெற்றாள். அவளுடைய சரீரத்தில் இனிமேல் பிள்ளை பிறப்பதற்கு வாய்ப்பில்லை. தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்திற்கு, ஈசாக்கு மாத்திரமே அவருடைய சுதந்தரவாளியாகயிருக்கிறார்.

ஆபிரகாமும் தன் ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கின்மீது மிகுந்த அன்பும், பாசமும், நேசமும் வைத்திருக்கிறார். ஈசாக்கின்மீது பிரியமாயிருக்கிறார். ஆபிரகாமின் எதிர்பார்ப்புக்களெல்லாமே ஈசாக்கினிடத்தில்தான் இருக்கிறது. ஈசாக்கு மரித்துப்போனால் ஆபிரகாமின் நம்பிக்கையெல்லாமே ஈசாக்கோடு மரித்துப்போகும்.

கர்த்தரோ ஆபிரகாமிடம், அவருடைய ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கை, மோரியா மலையிலே சர்வாங்க தகனபலியாக பலியிடுமாறு சொல்லுகிறார். ஆபிரகாமே தன்னுடைய சொந்தக் கைகளினால், தன் குமாரன் ஈசாக்கை பலியிடவேண்டும். ஒருவர் எவ்வளவு திடமனதுள்ளவராகயிருந்தாலும் இப்படிப்பட்ட காரியத்தை செய்வதற்கு துணியமாட்டார். ஆனால் ஆபிரகாமுக்கோ இப்படிப்பட்ட சோதனைதான் வந்திருக்கிறது. ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது, விசுவாசத்தினாலே தன் குமாரன் ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தார்.

ஈசாக்கினிடத்தில் ஆபிரகாமின் சந்ததி விளங்கும் என்று கர்த்தர் அவரோடு சொல்லியிருக்கிறார். ஆபிரகாம் தேவனிடத்திலிருந்து வாக்குத்தத்தங்களைப் பெற்றவர். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்று ஆபிரகாம் நம்புகிறார். மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்றும் ஆபிரகாம் நம்புகிறார். தன்னுடைய குமாரன் ஈசாக்கு மரித்துப்போனாலும், தேவன் ஈசாக்கை உயிரோடு எழுப்ப வல்லவராயிருக்கிறார் என்று நம்பி, ஆபிரகாம் தனக்கு ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தார்.

ஆபிரகாமின் விசுவாசத்திற்கு மிகப்பெரிய சோதனை வந்தது. இந்தச் சோதனையிலும் ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார். கீழ்ப்படிதலோடு தான் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டுமோ அவையெல்லாவற்றையும் ஒவ்வொன்றாகச் செய்தார். ஆபிரகாமின் கிரியைகள் எதையும் தேவன் ஆரம்பத்தில் தடைபண்ணவில்லை. ஆபிரகாம் தம்முடைய வார்த்தைக்கு விசுவாசத்தோடு கீழ்ப்படிவதை தேவன் அனுமதித்தார்.

மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதுதான் ஆபிரகாமின் விசுவாசம். தேவன் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு தம்முடைய உயிர்த்தெழச்செய்யும் வல்லமையை வெளிப்படுத்துவார் என்று ஆபிரகாம் நம்பினார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவன் மெய்யாக மரித்தோரிலிருந்து எழுப்ப வல்லவராயிருக்கிறார். மரித்துப்போன சரீரங்களை தேவனால் எழுப்ப முடியும். மரித்துப்போன ஆத்துமாக்களையும் தேவனால் உயிரோடு எழுப்ப முடியும்.

ஆபிரகாம் விசுவாசத்தினாலே தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கை, கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுப்ப வல்லவராயிருக்கிறார் என்று விசுவாசித்து தன் மகனை சர்வாங்க தகனபலியாக ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் ஆபிரகாமின் விசுவாசத்தை அங்கீகரித்தார். ஆபிரகாம் விசுவாசித்த பிரகாரமாகவே, தன் குமாரன் ஈசாக்கை, மரித்தோரிலிருந்து பாவனையாக திரும்பப் பெற்றுக்கொண்டார். ஆபிரகாம் ஈசாக்கை கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுத்தார். கர்த்தரோ தம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஈசாக்கை, திரும்பவும் ஆபிரகாமிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டார். ஆபிரகாம் ஈசாக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். மரித்தோரிலிருந்து பாவனையாக திரும்பப் பெற்றுக்கொண்டார்.

ஈசாக்கு
எபி 11:20

எபி 11:20. விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்.

யாக்கோபும் ஏசாவும் ஈசாக்குக்கு பிரியமான குமாரர்கள். ஈசாக்கு விசுவாசத்தினாலே வருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தார். யாக்கோபு ஈசாக்கிடத்திலிருந்து மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். இப்பிரபஞ்சத்திற்குரிய ஆசீர்வாதம் யாக்கோபுக்கு தாராளமாய்க் கிடைத்தது. ஆனாலும் ஏசாவும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். யாக்கோபுக்கு இம்மையில் ஆசீர்வாதம் கிடைத்தது. ஏசாவுக்கு மறுமையில் ஆசீர்வாதம் கிடைத்தது.

வருங்காரியங்களைக் குறித்த ஆசீர்வாதங்களை யாக்கோபும் ஏசாவும் பெற்றுக்கொண்டார்கள். இம்மைக்கும் மறுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை தேவனே நமக்கு தெளிவுபடுத்துகிறார். இம்மையில் ஒரு சிலர் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு சிலர் தங்கள் தகுதிக்கு மிஞ்சிய நன்மைகளை அனுபவிக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதமே நித்திய ஆசீர்வாதம். இப்பிரபஞ்சத்திற்குரிய ஆசீர்வாதம் இப்பிரபஞ்சத்தில் மாத்திரமே பயனுள்ளதாயிருக்கும். இம்மைக்குரிய ஆசீர்வாதமே வருங்காரியங்களைக் குறித்த ஆசீர்வாதம். அந்த ஆசீர்வாதமே நித்தியமானது.

ஈசாக்கின் மனைவி ரெபெக்காள் நீண்டகாலமாக மலடியாயிருந்தாள். ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தார். கர்த்தர் ஈசாக்கின் வேண்டுதலைக் கேட்டருளினார். ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள். அவளுடைய கர்ப்பத்தில் இரண்டு பிள்ளைகள் இருந்தன. இரண்டு பிள்ளைகளும் கர்ப்பத்திலே ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன. இதைக்கண்டு ரெபெக்காள் கலங்கினாள். கர்த்தரிடத்தில் இதைப்பற்றி விசாரித்தாள்.

கர்த்தர் ரெபெக்காளிடம் "இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது. இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும். அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள். மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" (ஆதி 25:23) என்று சொன்னார்.

ஆனால் ஈசாக்கோ கர்த்தருடைய வார்த்தையை மறந்துவிட்டார். மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்பதன் அர்த்தம் ஈசாக்குக்கு அப்போது சரியாக விளங்கவில்லை. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமே ஈசாக்கின் வாழ்க்கையில் ஒவ்வொரு காரியமும் நடைபெற்றது. ஈசாக்கு தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் வேளை வந்தது. ஏசா மூத்த குமாரன். இவனே சேஷ்டபுத்திரன். யாக்கோபு இளைய குமாரன். ஏசாவே சேஷ்டபுத்திர ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக, யாக்கோபை ஆசீர்வதித்தார் (ஆதி 27:28-29).

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடிந்தபோது, ஏசாவும் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள ஈசாக்கிடத்தில் வந்து சேர்ந்தார். மூத்த குமாரனுக்கு சொல்ல வேண்டிய ஆசீர்வாதத்தை ஈசாக்கு இளைய குமாரனாகிய யாக்கோபுக்குச் சொல்லிவிட்டார். இதனால் ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கினார். ஏசாவும் தன் தகப்பனாராகிய ஈசாக்கின் வார்த்தையைக் கேட்டு கலங்கினார் (ஆதி 27:33).

யாக்கோபு தந்திரமாய் வந்து ஏசாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாக ஈசாக்கு தன் மூத்த குமாரனாகிய ஏசாவிடம் சொன்னார். தன்னையும் ஆசீர்வதிக்குமாறு ஏசா ஈசாக்கிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். ஈசாக்கு ஏசாவையும் ஆசீர்வதித்தார் (ஆதி 27:39,40). விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தார். ஈசாக்கு தன்னுடைய அவிசுவாசத்தை விசுவாசத்தினால் ஜெயித்தார். ஈசாக்கின் விசுவாசம் கர்த்தருக்குப் பிரியமாயிற்று. ஈசாக்கு ஆசீர்வதித்த பிரகாரமாக, கர்த்தர் யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தார்.

யாக்கோபு
எபி 11:21

எபி 11:21. விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.

யாக்கோபின் ஜீவியமே விசுவாச ஜீவயம் தான். இவருடைய வாழ்க்கை முக்கியமான சம்பவங்கள் ஏராளம் நடைபெற்றிருக்கிறது. எல்லா சம்பவங்களிலும் யாக்கோபு கர்த்தரிடத்தில் உறுதியாய் நம்பிக்கை வைத்திருந்தார். யோசேப்பு யாக்கோபின் குமாரன். யாக்கோபுக்கு மரணகாலம் சமீபித்து வந்தது. அப்பொழுது விசுவாசத்தினாலே யாக்கோபு, யோசேப்பினுடைய இரண்டு குமாரரையும் ஆசீர்வதித்தார். எப்பிராயீம், மனாசே ஆகிய இருவரும் யோசேப்பின் குமாரர்.

யாக்கோபின் குமாரர்கள் ஒவ்வொருவரும் ஒரு கோத்திரத்திற்கு தலைவராகயிருக்கிறார்கள். யாக்கோபின் குமாரருக்கு கிடைத்திருக்கிற அதே ஆசீர்வாதம், யோசேப்பின் குமாரருக்கும் கிடைத்திருக்கிறது. யாக்கோபின் குமாரரைப்போல, யோசேப்பின் இரண்டு குமாரரும், ஒவ்வொரு கோத்திரத்திற்குத் தலைவராகயிருக்கிறார்கள். எப்பிராயீம் எப்பிராயீம் கோத்திரத்திற்கும், மனாசே மனாசே கோத்திரத்திற்கும் தலைவராகயிருக்கிறார்கள். யாக்கோபு, யோசேப்பின் குமாரரை, தன்னுடைய குமாரரைப்போல பாவித்து ஆசீர்வதிக்கிறார்.

ஈசாக்கு மூத்த குமாரனாகிய ஏசாவை ஆசீர்வதியாமல், இளைய குமாரனாகிய யாக்கோபை ஆசீர்வதித்தார். அதுபோலவே இப்போது யாக்கோபு இளைய குமாரனாகிய எப்பிராயீமுக்கு விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். மனாசே யோசேப்புக்கு மூத்த குமாரன். மூத்த குமாரனுக்கு விசேஷித்த ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் என்று நினைத்து, யோசேப்பு மனாசேயை யாக்கோபின் வலது கரத்திற்கு அருகிலும், எப்பிராயீமை யாக்கோபின் இடது கரத்திற்கு அருகிலும் வைத்தார் (ஆதி 48:13). ஆனால் யாக்கோபோ மனமறிய, தன் வலது கையை நீட்டி, இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்த மகனாயிருந்தும், தன் இடது கையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்து ஆசீர்வதித்தார் (ஆதி 48:14).

யாக்கோபு விசுவாசத்தினாலே யோசேப்பினுடைய இரண்டு குமாரரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டார். கர்த்தர் தனக்குச் செய்த நன்மைகளை நினைத்து யாக்கோபு கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார். கர்த்தர் தனக்கு வைத்திருக்கிற மேன்மையான ஆசீர்வாதங்களை யாக்கோபு விசுவாசத்தோடு நோக்கிப் பார்த்து, கர்த்தரைத் துதிக்கிறார்.

யாக்கோபின் சரீரம் பலமிழந்து போயிற்று. அவரால் தன் சுயபலத்தினால் எழுந்து நிற்கமுடியவில்லை. படுக்கையிலிருந்து தன் சொந்தக் கால்களினால் அவரால் நிற்கமுடியவில்லை. அந்தச் சூழ்நிலையிலும் யாக்கோபு தன் கோலின் முனையிலே சாய்ந்து கர்த்தரைத் தொழுதுகொண்டார். தன்னால் எழும்பி நிற்கமுடியாததை, ஒரு சாக்குப்போக்காகச் சொல்லி, கர்த்தரை ஆராதிப்பதை அவர் நிறுத்திவிடவில்லை. தன்னுடைய சரீரம் தனக்கு ஒத்துழைக்காமல் போனாலும், ஒரு கோலை தனக்குத் துணையாக வைத்துக்கொண்டு யாக்கோபு கர்த்தரைத் துதிக்கிறார். யாக்கோபு கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறார். தன்னுடைய சரீரத்திலும் கர்த்தரைத் தொழுதுகொள்கிறார்.

யாக்கோபு விசுவாசத்தினாலே யோசேப்பினுடைய இரண்டு குமாரரையும் ஆசீர்வதித்தார். இந்தச் சம்பவம் நடைபெற்றபோது யாக்கோபு மரணத்திற்கு மிகவும் அருகாமையிலிருக்கிறார். யாக்கோபு விசுவாசத்தினால் ஜீவித்தவர். விசுவாசத்தில் மரித்தவர்.

யோசேப்பு
எபி 11:22

எபி 11:22. விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளைகொடுத்தான்.

யோசேப்பின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திற்கு வந்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருந்தார். ஆனால் அவர்களோ அந்தச் தேசத்தை விட்டுவிட்டு, எகிப்து தேசத்தில் வந்து குடியேறினார்கள். சிறிது காலத்திற்குப் பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு விடுதலை பெறுவோம் என்னும் நம்பிக்கையே இல்லாமற்போயிற்று.

ஆனால் யோசேப்பு கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருந்தார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு புறப்பட்டுப்போவார்கள் என்று யோசேப்பு விசுவாசத்தினாலே சொன்னார். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டதை யோசேப்பு தன் கண்களால் காணவில்லை. அவர் விசுவாசித்தார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு விடுதலை கொடுப்பார் என்று கர்த்தரையே நம்பியிருந்தார். இஸ்ரவேல் ஜனங்கள் விடுதலை பெற்றதை யோசேப்பு தன்னுடைய கண்களால் பார்க்கவில்லை. ஆனாலும் யோசேப்பு அந்த விசுவாசத்தை தன் மனதில் பதியவைத்து, மரித்துப்போனார்.

யோசேப்பு மரண தருவாயிலிருக்கும்போது, தன்னுடைய அந்தியகாலத்தில் தன் ஜனங்களிடத்தில் விசுவாசத்தோடு பேசினார். தன்னுடைய எலும்புகளைக் குறித்து அவர்களுக்குக் கட்டளைகொடுத்தார். தான் மரித்த பின்பு, தன்னுடைய எலும்புகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்றும், தன்னுடைய எலும்புகளை எகிப்து தேசத்திலே அடக்கம் செய்யக்கூடாது என்றும், அதை கானான் தேசத்திலே அடக்கம் செய்யவேண்டும் என்றும் விசுவாசத்தோடு சொன்னார்.

யோசேப்பு எகிப்திலே ஜீவித்தவர். எகிப்திலே மரித்தவர். ஆனால் அந்த தேசத்தில் யோசேப்பு ஒரு எகிப்தியராக ஜீவிக்கவில்லை. ஒரு எகிப்தியராக மரிக்கவில்லை. யோசேப்பு ஒரு இஸ்ரவேலராகவே ஜீவித்தார். இஸ்ரவேலராகவே மரித்தார். எகிப்து தேசத்தில் மரித்தவர்களை மிகப்பெரிய பிரமிடுகளில் அடக்கம்பண்ணுவது வழக்கம். ஆனால் யோசேப்போ உலகப்பிரகாரமான மேன்மையை தன் மரணத்தில்கூட எதிர்பார்க்கவில்லை. கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்திலே தன் எலும்புகளை அடக்கம்பண்ண வேண்டுமென்று இஸ்ரவேல் ஜனங்களுக்கு கட்டளை கொடுத்தார்.

யோசேப்பினுடைய வார்த்தையின் பிரகாரமாக, இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து விடுதலை பெற்று புறப்பட்டுப்போனபோது, யோசேப்பின் எலும்புகளையும் தங்களோடு கூடவே எடுத்துச் சென்றார்கள். யோசேப்பு விசுவாசித்து கட்டளை கொடுத்த பிரகாரம், அவருடைய எலும்புகளை கானான் தேசத்திலே அடக்கம் பண்ணினார்கள்.

மோசேயின் தாய் தகப்பன்மார் எபி 11:23

எபி 11:23. மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள்.

மோசேயின் தாய் தகப்பன்மார், மோசே பிறந்தபோது அவரை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள். மோசே பிறக்கும்போதே உபத்திரவத்தில்தான் பிறக்கிறார். அவர் பிறந்த செய்தியைக்கூட வெளிப்படையாக யாருக்கும் சொல்ல முடியவில்லை. எல்லா ஆண்பிள்ளைகளையும் கொன்றுபோட வேண்டுமென்பது எகிப்து தேசத்து ராஜாவினுடைய கட்டளை. மோசேயின் தாய் தகப்பன்மாரோ ராஜாவின் கட்டளைக்குப் பயப்படவில்லை. மோசே ஆண்பிள்ளையாக இருந்தாலும், ராஜாவின் கட்டளைப்படி, அவர்கள் மோசேயைக் கொன்றுபோடவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் விசுவாசத்தோடு, மோசேயை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே மோசே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்து பிறந்தபோதே அவருக்கு உபத்திரவமுண்டாயிற்று. ஏரோது ராஜா இரண்டு வயதிற்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொன்றுபோடுமாறு கட்டளையிட்டார். இயேசுகிறிஸ்துவின் பெற்றோர், இயேசுவைக் காப்பாற்றுவதற்காக, அவரைத் தூக்கிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போனார்கள். பழையஏற்பாட்டுக் காலத்தில் மோசேக்கும் இப்படிப்பட்ட துன்பங்கள் உண்டாயிற்று.

மோசேயின் பெற்றோர் அவர்மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். மோசே அழகுள்ள பிள்ளையாகயிருக்கிறார். அவரிடத்தில் ஒரு விசேஷித்த அழகை அவருடைய பெற்றோர்கள் காண்கிறார்கள். கர்த்தருடைய அழகு மோசேயின்மீது அமர்ந்திருக்கிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். மோசேக்கு உள்ளேயிருக்கிற அழகை, அவருடைய பெற்றோர், மோசேயின் முகத்தில் கண்டார்கள். இந்த அழகு கர்த்தருடைய கிருபையினால் உண்டாயிற்று.

ஆண்பிள்ளைகளைக் கொன்றுபோட வேண்டுமென்பது ராஜாவின் கட்டளை. இந்தக் கட்டளையினிமித்தம் மோசேயின் பெற்றோருக்கு பயமுண்டாயிற்று. அதேவேளையில் கர்த்தர் தங்களைப் பாதுகாப்பார் என்னும் விசுவாசமும் அவர்களுக்குள் காணப்பட்டது. விசுவாசத்திற்கும் பயத்திற்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தில், விசுவாசமே வெற்றி பெற்றது. அவர்கள் ராஜாவின் கட்டளைக்குப் பயப்படவில்லை. கர்த்தர் தம்முடைய ஜனங்களைப் பாதுகாப்பார் என்று அவர்கள் நம்பினார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் மரித்துப்போகாமல் ஜீவனோடிருக்க வேண்டிய வேளை வந்திருக்கிறது என்பதை மோசேயின் பெற்றோர் விசுவாசித்து அறிந்துகொண்டார்கள். மரித்துப்போவதைவிட உயிரோடிருப்பது இக்காலத்தில் மிகவும் அவசியமானது என்பதை அவர்கள் விசுவாசத்தினால் புரிந்துகொண்டார்கள். தங்களுடைய பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக பெற்றோர் தங்கள் ஜீவனையே பணயமாக வைத்தார்கள். தங்கள் ஜீவனுக்கு ஆபத்து நேரிட்டாலும், தங்கள் பிள்ளைகள் ஜீவனோடிருக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

ஆண்பிள்ளைகளைக் கொல்ல வேண்டுமென்பது ராஜாவின் கட்டளை. ஆனால் அந்த ஆண்பிள்ளைகள் ஜீவனோடிருக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். மோசேயின் பெற்றோர் ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதைவிட, தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். ராஜாவின் கட்டளைக்குப் பயப்படாமல் மோசேயை மூன்றுமாதம் ஒழித்து வைத்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் விசுவாசம் இருக்கவேண்டும். விசுவாசம் நமக்குள் அதிகரிக்கும்போது, நம்மிடத்திலிருக்கிற பயம் நம்மைவிட்டு நீங்கிப்போகும். கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் மாத்திரமே நம்மிடத்தில் காணப்படவேண்டும். மனுஷபயம் நம்மிடத்தில் இருக்கக்கூடாது.

மோசே
எபி 11 : 24-28

எபி 11:24. விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து,

எபி 11:25. அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு,

எபி 11:26. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்.

எபி 11:27. விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்.

எபி 11:28. விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்.

மோசே பார்வோனுடைய அரண்மனையில் வளர்க்கப்பட்டார். பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்று கௌரவப்படுத்தப்பட்டார். ஆனால் மோசேயோ தான் பெரியவனானபோது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்தார். பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்று அழைக்கப்பட்டால் எகிப்து தேசத்திலே மேன்மையான கௌரவம் கிடைக்கும். அவையெல்லாம் நித்தியமான சந்தோஷங்களல்ல. அவை அநித்தியமான பாவசந்தோஷங்கள்.

தான் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை மோசே வெறுத்து, தான் ஆபிரகாமின் குமாரன் என்னப்படுவதையே விரும்பினார். விசுவாசிகளெல்லோருக்கும் ஆபிரகாம் தகப்பனாயிருக்கிறார். விசுவாசிகளெல்லோரும் தங்களை ஆபிரகாமின் சந்ததியிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளலாம். இதுதான் நமக்கு உண்மையான மேன்மை. இதுவே நமக்கு மெய்யான சந்தோஷம். இந்த சந்தோஷமே நித்தியமானது. உலகப்பிரகாரமான மேன்மைகளும், கௌரவங்களும் நிலைத்து நிற்பதில்லை. மோசேயும் அநியத்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிக்க விரும்பவில்லை.

மோசே எகிப்தின் அரண்மனையில் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னும் அந்தஸ்தில் வளர்ந்து வருகிறார். மோசே அரண்மனையின் பாவ சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டுமென்றால், அவர் கர்த்தரையும், இஸ்ரவேல் ஜனங்களையும் மறுதலிக்கவேண்டும். ஆனால் மோசேயோ, எகிப்தின் அரண்மனையில் அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதை தெரிந்துகொள்ளவில்லை. அதற்குப் பதிலாக தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டார். எகிப்தின் அரண்மனையைத் தெரிந்துகொள்வதைவிட அவர் கர்த்தரைத் தெரிந்துகொண்டார்.

மோசே தன்னை இஸ்ரவேல் ஜனங்களில் ஒருவராகக் காண்பித்தால், தனக்கு அநேகத் துன்பங்கள் வரும் என்பது அவருக்குத் தெரியும். அரண்மனையின் சந்தோஷங்களெல்லாம் போய்விடும். இஸ்ரவேல் ஜனங்களோடு துன்பத்தை அனுபவிக்க வேண்டியதுவரும். துன்பம் வந்தாலும் மோசே தேவனுடைய ஜனங்களோடு இருப்பதையே தெரிந்துகொண்டார். மோசேயின் தீர்மானம் விசுவாசத்தினால் உண்டாயிற்று. அரண்மனையின் சந்தோஷம் அநித்தியமானது. அது சீக்கிரத்தில் முடிந்துபோகும். அரண்மனை சந்தோஷத்தில் கர்த்தருக்குப் பிரியமான பரிசுத்தமில்லை. அரண்மனையின் சந்தோஷங்களெல்லாம் பாவ சந்தோஷங்களாயிருக்கிறது. மோசே பாவசந்தோஷங்களை அனுபவிக்க விரும்பவில்லை.

பாவத்தில் பிரியப்படுகிறவர்கள் சீக்கிரத்தில் மனந்திரும்பவேண்டும். மனந்திரும்பாதவர்களுக்கு அழிவு நிச்சயம் வரும். பாவசந்தோஷம் நிலைத்திருப்பதில்லை. இப்பிரபஞ்சத்தின் சந்தோஷங்களெல்லாமே பாவ சந்தோஷங்கள்தான். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. அரண்மனையின் சந்தோஷம் எல்லாவிதத்திலும் மோசமாயிருக்கிறது. அது பாவசந்தோஷம். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் பாவசந்தோஷத்தை விட்டுவிலகி வரவேண்டும். பாவசந்தோஷத்தை அனுபவிப்பதைப் பார்க்கிலும், கர்த்தருக்காக பாடுகளை அனுபவிப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பாவத்தில் தீமை நிரம்பியிருக்கிறது. ஆரம்பத்தில் அது சந்தோஷம் போல் தெரிந்தாலும் அதன் முடிவு அழிவு. கர்த்தரைப் பற்றுகிற நமக்கோ ஆரம்பத்தில் பாடுகளும் வேதனைகளும் இருக்கலாம். விசுவாசத்தினிமித்தம் நமக்கு உபத்திரவங்களும் வரலாம். ஆனாலும் முடிவில் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். தம்மை விசுவாசத்தோடு பின்பற்றுகிற ஜனங்களுக்கு கர்த்தர் நித்திய மகிழ்ச்சியை வெகுமதியாகக் கொடுப்பார்.

மோசே அரண்மனையில் இருக்கும்போது அநித்தியமான பாவசந்தோஷங்களையும், தேவனுடைய ஜனங்களின் துன்பங்களையும் நிதானித்துப் பார்க்கிறார். ஒரு பக்கம் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிக்கவேண்டும். மற்றொரு பக்கம் எகிப்திலுள்ள பொக்கிஷங்களை அனுபவிக்கவேண்டும். இவ்விரண்டில் எதை தெரிந்துகொள்ளவேண்டுமென்று மோசே விசுவாசத்தோடு தீர்மானம் பண்ணுகிறார்.

கர்த்தரை விசுவாசிப்பதினால் நமக்குத் துன்பம் வந்தாலும், உலகப்பிரகாரமான நன்மைகளைவிட, கர்த்தர் நிமித்தம் நாம் அனுபவிக்கிற துன்பங்களே நமக்கு மேன்மையானது. அதுவே அதிக பாக்கியம். எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை மோசே அதிக பாக்கியம் என்று எண்ணினார் (எபி 11:26).

தேவனுடைய ஜனங்கள் எப்போதுமே துன்பம் அனுபவிக்கிற ஜனங்களாகத்தான் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவினிமித்தம் நிந்தையை அனுபவிக்கிறார்கள். நாம் பாடுகளையும் வேதனைகளையும் கிறிஸ்துவினிமித்தமாய் அனுபவிக்கும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாடுகளுக்குப் பங்காளியாயிருக்கிறார். நம்முடைய வேதனைகளிலும், துன்பங்களிலும், நிந்தைகளிலும் கிறிஸ்துவும் பங்குபெறுகிறார். நமக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக கிறிஸ்து தம்மீது சாபங்களை ஏற்றுக்கொண்டார்.

நம்மிடத்தில் விசுவாசம் இருந்தால்தான் கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். கர்த்தர் வாக்குப் பண்ணியிருக்கிற ஆசீர்வாதங்களை சரீரப்பிரகாரமான கண்களால் காணமுடியாது. அவற்றை விசுவாசத்தின் கண்களால் மாத்திரமே காணமுடியும். நம்முடைய மனக்கண்கள் எப்போதுமே கர்த்தருடைய ஆசீர்வாதத்தை காணும் வண்ணமாக பிரகாசமுள்ளதாக இருக்கவேண்டும்.

மோசேக்கு நாற்பது வயதாயிற்று. அதுவரையிலும் அவர் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னும் அந்தஸ்தில், எகிப்து தேசத்து அரண்மனையில் வசித்து வருகிறார். நன்மை தீமை இன்னதென்று நிதானித்து அறிகிற பக்குவம் அவருக்கு வருகிறது. தான் என்ன செய்ய வேண்டுமென்றும், என்ன செய்யக்கூடாது என்றும் தீர்மானிக்கிற தெளிவு மோசேக்கு உண்டாயிற்று. எதை நேசிக்க வேண்டுமென்றும், எதை வெறுக்க வேண்டுமென்றும் மோசே அறிந்து கொள்கிறார்.

மோசே சிறுபிள்ளையாகயிருந்த போது, ராஜாவினுடைய கட்டளையினிமித்தமாய், அவருடைய தாய் தகப்பன்மார் அவரை மூன்று மாதம் ஒழித்து வைத்தார்கள். அவர்கள் விசுவாசத்தோடு இந்தத் தீர்மானம் எடுத்தார்கள். மோசே அப்போது ஒன்றும் தீர்மானிக்கவில்லை. அவர் மூன்றுவயது குழந்தையாகயிருந்தார். ஆனாலும் அவர் பெரியவனானபோது, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் தீர்மானம் எடுக்கிறார். தான் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை, மோசே சிறுபிள்ளையாகயிருந்தபோது வெறுக்கவில்லை. ஆனால் அவர் பெரியவனானபோதோ, அந்த அந்தஸ்தை வெறுத்தார்.

அரண்மனையின் சுகங்களை அனுபவிப்பதற்கு மோசேக்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருந்தது. பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னும் அந்தஸ்தில் அவர் அரண்மனையின் அநித்தியமான பாவசந்தோஷங்களை தாராளமாய் அனுபவித்திருக்கலாம். ஆனால் மோசே பாவசந்தோஷத்தை தெரிந்து கொள்ளவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் கர்த்தர் கொடுக்கிற சந்தோஷத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். உலகப்பிரகாரமான சந்தோஷத்தை அனுபவிப்பதற்கு நமக்கு வாய்ப்புக்கள் இருந்தாலும், உலகத்தின் பாவசந்தோஷங்களை வெறுக்கவேண்டும். கர்த்தர் நிமித்தமாக நமக்குத் துன்பங்கள் வந்தாலும், அதை அனுபவிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

மோசே இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தார். எகிப்து தேசத்து அரண்மனையில் தாராளமாயிருந்த அநித்தியமான பாவசந்தோஷங்களை மோசே நோக்கிப் பார்க்கவில்லை. இப்பிரபஞ்சத்தின் சந்தோஷத்திற்குப் பதிலாக, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும், இப்பிரபஞ்சத்து சந்தோஷத்தின்மீது நோக்கமாயிருக்கக் கூடாது. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருக்கவேண்டும். கர்த்தர் நிமித்தமாக இந்த உலகத்தில் நாம் எதையும் இழப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். நாம் எதை இழந்தாலும், கர்த்தர் அதற்கு ஈடாக, இனிவரும் பலன்களை நமக்கு வெகுமதியாகக் கொடுப்பார்.

இப்பிரபஞ்சத்தின்மேல் நோக்கமாயிராமல், கர்த்தர்மேல் நோக்கமாயிருக்கும்போது, அவரே நம்மை கரம்பிடித்து வழிநடத்துவார். நம்முடைய பாரங்களையெல்லாம் அவர்மீது சுமத்தி வைக்கலாம். நம்முடைய இருதயங்களில் கர்த்தர் வாசம்பண்ணுவார். நமக்கு சந்தோஷமும் சமாதானமும் கொடுப்பார். கர்த்தருடைய சமுகத்தில் நமக்கு மெய்யான ஆறுதலும் இளைப்பாறுதலும் கிடைக்கும்.

மோசே விசுவாசத்தினாலே எகிப்தை விட்டுப்போனார். அவர் இரண்டுமுறை எகிப்தை விட்டுப்போயிருக்கிறார். எகிப்தியரில் ஒருவனை மோசே கொன்றுபோட்டார். இதனால் அவர் ஒரு குற்றவாளியென்று ராஜாவினால் நியாயந்தீர்க்கப்பட்டார். அப்போது ஒருமுறை அவர் எகிப்தை விட்டுப்போனார். அதன்பின்பு தேவனுடைய தூதராக மோசே எகிப்து தேசத்திற்கு மறுபடியும் வந்தார். மோசேயின் மூலமாய் தேவன் பலத்த கிரியைகளை நடப்பித்தார். பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து, அவர்களை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பிவிட்டார். அப்போது மோசே மற்ற இஸ்ரவேல் ஜனங்களோடு எகிப்தை விட்டுப்போனார்.

மோசே தன்னுடைய விசுவாசத்தில் உறுதியாய் நின்றார். ராஜாவின் கோபத்திற்கு மோசே பயப்படவில்லை. மோசேயினுடைய விசுவாசம் அவரைத் தைரியப்படுத்திற்று. எகிப்தை விட்டுப்போகிறவர்கள் ராஜாவின் கோபத்திற்கு ஆளாகவேண்டும். ஆனாலும் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் ராஜாவின் கோபத்திற்கு பயப்படவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தவாகவும் இருக்கிறார். இந்த உலகத்திலுள்ள எந்த ராஜாவையும்விட நம்முடைய ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவே மேன்மையானவர்.

மோசே விசுவாசத்தினாலே அதரிசனமானவரை தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தார். தேவன் அதரிசனமானவர். நம்முடைய மாம்சத்தின் கண்களினால் தேவனைக் காணமுடியாது. ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நம்முடைய விசுவாசக்கண்களினால் அதரிசனமான தேவனை தரிசிக்கமுடியும். தேவன் நிச்சயமாய் இருக்கிறார் என்று நம்மால் பூரணமாய் விசுவாசிக்க முடியும். தேவன் இருக்கிறாரென்று பூரண நிச்சயத்தோடிருக்க முடியும்.

நாம் தேவனை விசுவாசிக்கும்போது அவருடைய கிருபையுள்ள பிரசன்னமும், சர்வவல்லமையுள்ள பிரசன்னமும் நம்மோடு கூடயிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். நாம் கர்த்தரைப்பற்றி விசுவாசத்தோடு தரிசித்தால்தான், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மால் சமாதானமாக ஜீவிக்க முடியும். கர்த்தரைப்பற்றும் விசுவாசம் நம்மிடத்தில் இருக்கும்போதுதான், நம்மால் நீடிய பொறுமையோடு, தேவன் நமக்கு நியமித்து வைத்திருக்கும் ஓட்டத்தை ஓட முடியும். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் மாத்திரமே, கர்த்தருடைய கிருபையினால் முடிவு வரையிலும் விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பஸ்காவை ஆசரிப்பது மிகவும் முக்கியமான நியமங்களில் ஒன்று. பஸ்கா இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளம். எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைகளாகயிருந்தார்கள். எகிப்து தேசத்தின் ராஜா இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க மறுத்துவிட்டான். இதனால் எகிப்தியருக்கு பல வாதைகள் உண்டாயிற்று. கர்த்தர் சங்கார தூதனை அனுப்பினார். எகிப்து தேசத்திலுள்ள முதற்பேறானவைகளை அவன் சங்கரித்தான். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களையோ சங்கார தூதன் தொடவில்லை.

சங்கார தூதன் எகிப்திலுள்ள முதற்பேறானவைகளை சங்கரிக்கிறபோது, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கிருபையினால் பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டார்கள். தேவனுடைய விசேஷித்த சிலாக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். சங்கார தூதன் இஸ்ரவேல் ஜனங்களை தொடாதபடிக்கு, பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. அதன் இரத்தம் வீட்டிலுள்ள நிலைச்சட்டத்தின் மேலும், இரண்டு நிலைக்கால்கள் மேலும் ஈசோப்பினால் தெளிக்கப்பட்டது. ஒவ்வொரு இஸ்ரவேல் குடும்பத்தாரின் வீட்டிற்கு வெளியே இரத்தம் பூசுதல் நடைபெற்றது. வீட்டுக்குள்ளேயோ பஸ்காவை புசிப்பது நடைபெற்றது.

இயேசுகிறிஸ்துவே நமக்கு ஆட்டுக்குட்டியாகயிருக்கிறார். அவரே பஸ்கா ஆட்டுக்குட்டி. அவர் நமக்காக பலியாகச் செலுத்தப்பட்டார். அவருடைய இரத்தம் பாவிகளாகிய நம்மீது தெளிக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் நம்மீது பூசப்பட்டால்தான், அவருடைய இரத்தத்தின் மூலமாய் நமக்கு இரட்சிப்பு உண்டாகும்.

நம்முடைய சுயநீதியினால் நாம் யாரும் நீதிமான்களாவதில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தமே நம்முடைய பாவங்களை போக்குகிறது. கிறிஸ்துவின் இரத்தம் நமக்கு நீதியைத் தருகிறது. கிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் நாம் தேவனுடைய கோபாக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்கிறோம். எங்கெல்லாம் கிறிஸ்துவினுடைய இரத்தம் பூசப்படுகிறதோ, அங்கெல்லாம் ஆத்துமா விசுவாசத்தினால் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்கிறது. விசுவாசிக்கிற ஆத்துமா கிறிஸ்துவை சார்ந்து ஜீவிக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இப்பிரபஞ்சத்தில் ஆவிக்குரிய சிலாக்கியங்கள் அநேகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலாக்கியம் பெற்றிருக்கிற நாம் பரலோகத்திற்குப் போகும் பாதையில் வேகமாய் ஓடவேண்டும். நம்முடைய சோர்வுகளை நீக்கிப்போடவேண்டும். சீக்கிரத்தில் நம்முடைய பரலோக பிரயாணத்தை ஆரம்பிக்கவேண்டும். பரலோகத்திற்குள் சீக்கிரமாய்ப் பிரவேசிப்பதற்கு பிரயாசப்படவேண்டும்.

மோசேயும் இஸ்ரவேலரும் எபி 11:29

எபி 11:29. விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்துபோனார்கள்; எகிப்தியர் அப்படிச் செய்யத் துணிந்து அமிழ்ந்துபோனார்கள்.

எகிப்து தேசத்திலிருந்து மோசே இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்கு வழிநடத்திச் சென்றார். வழியிலே சிவந்த சமுத்திரம் இருந்தது. மோசேயும் இஸ்ரவேல் ஜனங்களும், தங்கள் விசுவாசத்தினால், சிவந்த சமுத்திரத்தை, உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோல கடந்துபோனார்கள்.

எகிப்து தேசத்தின் ராஜா இஸ்ரவேல் ஜனங்களை விடுதலை செய்துவிட்டு, அவர்களை மறுபடியும் அடிமைப்படுத்த வேண்டுமென்று தீர்மானம்பண்ணினான். பார்வோனும் அவனுடைய சேனைகளும் இஸ்ரவேலரை பிடிப்பதற்காக, அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கோ தப்பிப்பதற்கு வழியில்லாமல் போயிற்று. ஒரு புறம் பார்வோனும் அவனுடைய சேனையும், மற்ற பக்கங்களில் பர்வதங்கள். இஸ்ரவேலருக்கு முன்பாக சிவந்த சமுத்திரம். இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகுந்த ஆபத்து உண்டாயிற்று.

தேவனோ தம்முடைய சர்வவல்லமையினால், இஸ்ரவேல் ஜனங்களை, தம்முடைய நாமத்திற்கு மகிமையாக, அற்புதமாய் விடுதலை பண்ணினார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விசுவாசித்தார்கள். தம்மை விசுவாசிக்கிற ஜனங்களை கர்த்தர் ஒருபோதும் கைவிட்டுவிடுவதில்லை. நாம் கர்த்தரை விசுவாசிக்கும்போது அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம். தேவனுடைய கிருபை நம்மைச் சூழ்ந்துகொள்ளும்போது, எல்லா ஆபத்துக்களிலிருந்தும் நமக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது.

நாம் ஆபத்துக்கள் வழியாகக் கடந்துசென்றாலும் கர்த்தரும் நம்மோடு கூடயிருக்கிறார். நாம் பரலோகத்திற்குச் செல்லுகிற பாதையில் பல பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் இருக்கலாம். இவையெல்லாவற்றிற்கும் மத்தியில் நாம் கர்த்தரை விசுவாசிக்கவேண்டும். தம்மை விசுவாசிக்கிறவர்களின் கரங்களை கர்த்தர் பற்றிக்கொள்கிறார். அவர்களை பரலோகத்திற்கு நேராக வழிநடத்துகிறார். கர்த்தருடைய கரங்களில் நாம் இருப்பதுதான் நமக்கு மெய்யான பாதுகாப்பு.

இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையை கடந்துபோவதுபோல கடந்துபோனார்கள். எகிப்தியர்கள் அதைப் பார்த்தார்கள். தாங்களும் அப்படி கடந்து போகவேண்டுமென்று துணிந்தார்கள். சிறிது தூரம் உலர்ந்த தரையில் நடந்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை நம்பவில்லை. தங்கள் சுயபலத்தை நம்பினார்கள். கர்த்தருடைய அநுக்கிரகம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. சிவந்த சமுகத்திரம் அவர்களை மூடிற்று. அவர்களோ சிவந்த சமுத்திரத்தின் ஆழத்தில் அமிழ்ந்துபோனார்கள்.

எகிப்தியருக்கு அழிவு சடுதியில் உண்டாயிற்று. அவர்கள் இஸ்ரவேல் ஜனங்களை விரைவாகப் பின்தொடர்ந்தார்கள். எவ்வளவு விரைவாகப் பின்தொடர்ந்தார்களோ அவ்வளவு விரைவாக அழிந்துபோனார்கள். நாம் கர்த்தரை நம்பும்போது, நமக்கு விரோதமாக வரும் சத்துருக்களை கர்த்தர் சங்காரம்பண்ணுவார். யுத்தம் கர்த்தருடையது. நாம் விசுவாசத்தினால் கர்த்தருடைய கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறோம்.

கர்த்தர் நீதியும் நியாயமுமுள்ளவர். அவர் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். அவரிடத்தில் பட்சபாதமில்லை. பாவிகளுக்கு கடுமையான நியாயத்தீர்ப்பு கொடுப்பார். பாவிகள் தங்கள் பாவத்தினால் அழிந்துபோவார்கள். எகிப்தியர்கள் தங்கள் பாவத்தினாலேயே, சிவந்த சமுத்திரத்தில் அழிந்துபோனார்கள்.

யோசுவாவும் இஸ்ரவேலரும் எபி 11:30

எபி 11:30. விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது.

இஸ்ரவேல் ஜனங்கள் யோசுவாவின் தலைமையின்கீழ் எரிகோ பட்டணத்தின் மதில்களைச் சுற்றிவருகிறார்கள். இந்தச் சம்பவம் யோசுவா 6-ஆவது அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எரிகோ பட்டணத்தின் மதில்களை தரைமட்டமாக்குவதற்கு தேவன் ஒரு உபாயத்தைச் சொல்லுகிறார். அவர்கள் அந்த மதில்களை ஏழுநாள் சுற்றிவரவேண்டும். கர்த்தருடைய ஆலோசனை இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு சோதனையாகவே இருக்கிறது. மதில்களைச் சுற்றிவருவதினால், இயற்கையின் பிரமாணத்தின்படி, அங்கு ஒன்றும் நடைபெறாது. பட்டணத்து மதில்களைத் தரைமட்டமாக்குவதற்கு மதில்களைச் சுற்றிவருவது சரியான உபாயமல்ல என்று இஸ்ரவேல் ஜனங்கள் மாம்ச பிரகாரமாக சிந்தித்திருப்பார்கள். ஆனால் கர்த்தரோ இந்த உபாயத்தைத்தான் சொல்லுகிறார்.

தேவன் எப்போதுமே பெரிய காரியங்களைச் செய்கிறவர். ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தார். மிகவும் சாதாரண கருவிகளைப் பயன்படுத்தி தேவன் மகா பெரிய காரியங்களைச் செய்யக்கூடியவர். நம்முடைய முயற்சியினால் எதுவும் நடைபெறப்போவதில்லை. கர்த்தருடைய பலத்த கரத்தினாலே சகலமும் நடைபெறுகிறது.

தம்முடைய கட்டளைக்கு இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படியவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்கள் விசுவாசத்தினால் கீழ்ப்படிந்தால் கர்த்தருடைய மகிமையைக் காண்பார்கள். தேவனுடைய வார்த்தையில் வல்லமையுள்ளது. கர்த்தர் சொன்ன பிரகாரம் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனங்களும் எரிகோ பட்டணத்தின் மதில்களை ஏழுநாள் சுற்றிவந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தம் எதுவும் செய்யவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையைக் கனப்படுத்துகிறார். கர்த்தர் சொன்னபிரகாரம் எரிகோ பட்டணத்தின் மதில்கள் கீழே விழுந்தது. தேவன் நடத்திய பலத்த செய்கையை இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் கண்களால் பிரத்தியட்சமாகக் கண்டார்கள்.

தேவன் தமக்குச் சித்தமான வேளையிலே எல்லா சத்துருக்களையும் முறியடிக்கிறார். தம்முடைய நாமமகிமைக்காக விரோதிகளை அதம்பண்ணுகிறார். நாம் கர்த்தருடைய வல்லமையை விசுவாசிக்கவேண்டும். அப்போது தேவன் நமக்கு அதிசயங்களை நடைபெறச்செய்வார். எரிகோ பட்டணத்தின் மதில்கள் பலமுள்ளவை. ஆனாலும் கர்த்தருடைய வல்லமைக்கு முன்பாக அந்த மதில்களால் நிலைத்து நிற்கமுடியவில்லை. கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கும்போது, எரிகோ பட்டணத்தின் மதில்கள் கீழே விழுகிறது. யுத்தம் கர்த்தருடையது. தம்முடைய பிள்ளைகளுக்காக கர்த்தர் யுத்தம் பண்ணுகிறார். சத்துருக்களின் பலத்த கோட்டைகளை கீழே விழத்தள்ளுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தீர்மானம்பண்ணும் போது, முதலாவதாக தம்முடைய பிள்ளைகளின் விசுவாசத்தை வர்த்திக்கச் செய்கிறார். நம்முடைய விசுவாசத்தை நிலைத்திருக்கச் செய்கிறார். விசுவாசமில்லாமல் நம்மால் கர்த்தருக்குப் பிரியமாயிருக்க முடியாது. நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது, கர்த்தர் நமக்காக பலத்த காரியங்களைச் செய்கிறார்.

ராகாப்
எபி 11:31

எபி 11:31. விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடே கூடச் சேதமாகாதிருந்தாள்.

ராகாப் ஒரு கானானிய ஸ்திரீ. இவள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவள். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு இவளுக்கு யாரும் சொல்லித் தரவில்லை. ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறுவதற்கு இவளுக்கு யாரும் உபதேசம்பண்ணவில்லை. விசுவாசத்தைக் குறித்த காரியங்களில் ராகாபுக்கு யாரும் உதவிபுரியவில்லை. ஆனாலும் அக்காலத்தில் ராகாபும் கர்த்தரை விசுவாசித்த ஒரு விசுவாசியாகயிருந்தாள். அவள் ஒரு வேசி. அவள் பாவத்தில் ஜீவித்தாள். இயேசுகிறிஸ்துவோ பாவிகளில் பிரதான பாவிகளையும் இரட்சிக்கிறவர். பாவம் எங்கு அதிகரிக்கிறதோ அங்கு தேவனுடைய கிருபையும் பெருகுகிறது.

ராகாப் வேவுகாரரை சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டாள். வேவுகாரரை சத்துருக்கள் தேடி வந்தபோது ராகாப் அவர்களை மறைத்து வைத்தாள். தன்னுடைய விசுவாசத்தை இந்தக் கிரியையினால் அறிக்கை செய்தாள். கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் நற்கிரியைகளைச் செய்வார்கள். அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உதவிகளைச் செய்து கர்த்தரை ஆராதிப்பார்கள்.

தேவனுடைய பிள்ளைகளுக்கு பல வாதைகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் வரலாம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு பல தடைகள் வரலாம். இவையெல்லாவற்றிற்கு மத்தியிலும் நாம் கர்த்தரை விசுவாசிக்கவேண்டும். விசுவாசம் எல்லா தடைகளையும் நீக்கிப்போடும். தடைகள் வழியாக கடந்துபோவதற்கு விசுவாசம் நம்மைப் பலப்படுத்தும். விசுவாசிகள் கர்த்தருக்காகவும், கர்த்தருடைய பிள்ளைகளுக்காகவும் பெரிய காரியங்களைச் செய்வார்கள். மெய்யான விசுவாசி தேவனோடு உடன்படிக்கையிலிருப்பார். அதே வேளையில் அவர் கர்த்தருடைய பிள்ளைகளோடு ஐக்கியமாகவும் இருப்பார்.

எரிகோ கோட்டைக்குள்ளே அவிசுவாசிகள் நிரம்பியிருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே ராகாப் என்னும் வேசி மாத்திரமே கர்த்தரை விசுவாசிக்கிறாள். வேவுகாரரை விசுவாசத்தினாலே சமாதானமாக ஏற்றுக்கொண்டாள். எரிகோ பட்டணத்தில் மதில்களுக்குள்ளே வசிக்கிறவர்கள் அழிந்துபோனார்கள். அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவர்கள். ராகாபோ கர்த்தரை விசுவாசித்ததினால், அழிந்துபோகவில்லை. கீழ்ப்படியாதவர்கள் சேதமானார்கள். ராகாபோ அவர்களோடேகூட சேதமாகாதிருந்தாள்.

எரிகோ பட்டணம் தரைமட்டமாயிற்று. பட்டணத்திலுள்ள மனுஷரும் மிருகங்களும் சங்காரமானார்கள். ராகாபையும் அவளுடைய குடும்பத்தாரையும் சேதப்படுத்தக்கூடாது என்று யோசுவா கட்டளையிட்டிருந்தார். அவருடைய கட்டளையின் பிரகாரம் ராகாபும் அவளைச் சேர்ந்தவர்களும் மாத்திரம் சங்காரம்பண்ணப்படாமல் தப்புவிக்கப்பட்டார்கள்.

எரிகோ பட்டணத்திலே ராகாப் மாத்திரமே கர்த்தரை விசுவாசித்தாள். அவளுடைய விசுவாசத்தினிமித்தமாய், அந்தப் பட்டணத்திலுள்ள அவிசுவாசிகளில் சிலரும் சேதமாகாமல் தப்பித்தார்கள். கர்த்தருடைய கோபம் ராகாபுக்கும் அவளுடைய குடும்பத்தாருக்கும் விரோதமாக வரவில்லை. ராகாபினுடைய விசுவாசத்தினிமித்தம், அவளுடைய குடும்பத்தாரும் அவளோடேகூட அழிவிலிருந்து தப்பித்தார்கள்.

கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல், தீர்க்கதரிசிகள்
எபி 11:32

எபி 11:32. பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையும் குறித்து நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, யோசுவா ஆகியோரைப்போல மேலும் அநேக பரிசுத்தவான்கள் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருந்தார்கள். இவர்களைப்பற்றி, "நான் என்ன சொல்லுவேன்" என்று நிருபத்தின் ஆசிரியர் கேட்கிறார். இவர்களெல்லோரையும் குறித்து விவரமாகச் சொல்லவேண்டுமானால் காலம் போதாது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஏராளமான பரிசுத்தவான்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொண்டார்கள். அவர்கள் கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கிற நமக்கோ தேவனுடைய வார்த்தை பிரத்தியட்சமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை மாம்சத்தில் பிரத்தியட்சமாக வெளிப்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் உபதேசமும் நமக்கு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசத்தின் கிரியை பூரணமாயும் தெளிவாயும் இருக்கிறது. ஆனால் விசுவாசிகளின் எண்ணிக்கை பழைய ஏற்பாட்டுக்காலத்தைவிட புதிய ஏற்பாட்டுக்காலத்தில் குறைவாகவே உள்ளது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளின் விசுவாசம் பலவீனமாக உள்ளது.

நிருபத்தின் ஆசிரியர் பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் சிலரை இங்கு வரிசையாகச் சொல்லுகிறார்.

1. கிதியோன். இவருடைய காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களை மீதியானியர் ஒடுக்கினார்கள். மீதியானியரின் கையிலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவிப்பதற்காக தேவன் கிதியோனை தெரிந்தெடுத்து, அவரை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். மீதியானியரின் எல்லா சேனையையும் கர்த்தர் குழப்பினார். அவர்கள் அழிந்துபோனார்கள். கிதியோன் கர்த்தரை விசுவாசித்தார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்காக யுத்தம்பண்ணினார். மீதியானியர் தங்களுக்குள்ளே குழப்பத்தில் சண்டையிட்டு, தங்களைத் தாங்களே சங்காரம்பண்ணிக்கொண்டார்கள்.

2. பாராக். பாராக் விசுவாசத்தினால் வெற்றி பெற்றார். சிசராவின் சேனை பெரியதாயிருந்தாலும், பாராக் கர்த்தருடைய கிருபையினால் யுத்தத்தில் ஜெயம் பெற்றார்.

3. சிம்சோன். சிம்சோன் விசுவாசத்திலும் சரீரத்திலும் பெலமுள்ளவராகயிருந்தார். இவருடைய வாழ்க்கையில் பல தோல்விகள் உண்டாயிற்று. தோல்விகள் மத்தியிலும் சிம்சோன் கர்த்தரை விசுவாசித்தார். கர்த்தர் நம்முடைய உண்மையான விசுவாசத்தை எப்போதும் அங்கீகரிக்கிறவர். நாம் பல சமயங்களில் தோற்றுப்போனாலும், கர்த்தர் நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்தி, நம்மை உற்சாகப்படுத்துகிறார். நம்மைப் புறம்பே தள்ளிவிடாமல் ஏற்றுக்கொள்கிறார்.

விசுவாசிகள் முடிவுபரியந்தம் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். நாம் மரித்தாலும் கர்த்தரைக் கனப்படுத்தவேண்டும். சிம்சோன் மரிக்கும்போது, தன் சத்துருக்களில் அநேகர் மரித்துப்போவதற்கு காரணமாயிருந்தார். சிம்சோன் உயிரோடிருந்து சத்துருக்களை ஜெயித்ததைவிட, அவர் மரித்து அநேக சத்துருக்களை ஜெயித்தார். விசுவாசத்தினால் ஜெயம் பெற்றார்.

4. யெப்தா. இவருடைய காலத்தில் தேவனுடைய ஜனத்திற்கு விரோதமாக புதிய சத்துருக்கள் தோன்றினார்கள். இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக புதிய தேசங்கள் உருவாயிற்று. சத்துருக்கள் பெருகும்போது இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனுடைய கிருபையும் பெருகிற்று. தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு இஸ்ரவேல் ஜனங்கள் தகுதியில்லாதவர்களாகயிருந்தார்கள். ஆனால் தேவனோ தம்முடைய கிருபையை அவர்களுக்கு மறைக்கவில்லை.

யெப்தா ஒரு வேசியின் மகன். ஆனாலும் கர்த்தர் யெப்தாவை புறக்கணித்துவிடவில்லை. யெப்தா கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்திருந்தார். கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணினார். தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்ட பின்பு, தான் செய்த பொருத்தனையை உண்மையோடு நிறைவேற்றினார். யெப்தா செய்த பொருத்தனையினால் அவருக்கு மிகுந்த துக்கமுண்டாயிற்று. அவருடைய மகள் மரிக்க வேண்டியதாயிற்று. ஆனாலும் யெப்தா தான் கர்த்தரிடத்தில் செய்துகொண்ட பொருத்தனையை உண்மையாய் நிறைவேற்றினார்.

5. தாவீது. தாவீது தேவனுடைய இருதயத்திற்குகேற்ற மனுஷன். தன்னுடைய வாழ்க்கையில் தாவீது ஏராளமான துன்பங்களைச் சந்தித்தார். அவருக்கு அநேக பாடுகளும் உபத்திரவங்களும், வேதனைகளும் உண்டாயிற்று. எல்லாவற்றையும் விசுவாசத்தோடு சந்தித்தார். தாவீதின் ஜீவியமே விசுவாச ஜீவியமாயிற்று.

தாவீது விசுவாசத்தினால் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவானார். நீண்ட ஆயுசைப் பெற்றுக்கொண்டார். தாவீதின் ஜீவியத்தில் பாவக்கறைகள் உண்டாயிற்று. ஆனாலும் கர்த்தரிடத்தில் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு, தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக் கொண்டார். தாவீது விசுவாசத்தோடு ஜீவித்தார். விசுவாசத்தில் மரித்தார்.

தாவீது இயற்றிய சங்கீதங்கள் அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற பல சம்பவங்களை நமக்கு விரிவாக எடுத்துச் சொல்லுகிறது. ஒவ்வொரு சங்கீதத்திலும் அவருடைய ஆழமான விசுவாசம் நமக்கு அறிவிக்கப்படுகிறது. சோதனைக்காலங்களில் தாவீது எவ்வாறு விசுவாசத்தோடு கிரியை நடப்பித்தார் என்பதை சங்கீதங்களின் மூலமாக நாம் தெரிந்துகொள்கிறோம்.

6. சாமுவேல். சாமுவேல் ஒரு தீர்க்கதரிசி. இஸ்ரவேல் ஜனங்களுக்கு சாமுவேல் கர்த்தருடைய வார்த்தையை அறிவித்தார். அவர் தீர்க்கதரிசியாக ஊழியம் செய்தபோது, இஸ்ரவேல் ஜனங்களை ஆளுகை செய்கிற நியாயாதிபதியாகவும் இருந்தார். சாமுவேல் சிறுபையனாகயிருக்கும்போதே கர்த்தர் தம்மை அவருக்கு வெளிப்படுத்தினார். சாமுவேல் மரிக்கும் வரையிலும் கர்த்தருடைய பிரசன்னம் அவரோடு கூடயிருந்தது.

7. தீர்க்கதரிசிகள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்முடைய செய்தியைச் சொல்லுவதற்காக கர்த்தர் தீர்க்கதரிசிகளைத் தெரிந்தெடுத்தார். அவர்கள் சில சமயங்களில் ஜனங்களிடம் தேவனுடைய நியாயத்தீர்ப்பை அறிவித்தார்கள். வேறு சில சமயங்களில் அவர்கள் கர்த்தருடைய இரக்கத்தையும் கிருபையையும் வாக்குத்தத்தமாகச் சொன்னார்கள். தீர்க்கதரிசிகள் எப்போதுமே மனுஷருடைய பாவங்களை கண்டித்து உணர்த்தினார்கள். இனிமேல் நடைபெறப்போகும் சம்பவங்களை தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள். விசுவாசமில்லாமல் தீர்க்கதரிசன ஊழியம் செய்யமுடியாது. கர்த்தர் சொல்லச் சொல்லுகிற செய்தியை தீர்க்கதரிசிகள் விசுவாசத்தோடும் உண்மையோடும் சொல்லவேண்டும்.

விசுவாசத்தின் கிரியைகள்
எபி 11 : 33,34

எபி 11:33. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்.

எபி 11:34. அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே நியாயாதிபதிகளும், தீர்க்கதரிசிகளும், ராஜாக்களும் விசுவாசத்தினாலே அநேகக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தக் காரியங்களில் சிலவற்றை நிருபத்தின் ஆசிரியர் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். அவையாவன:

1. "விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள்". பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருக்கும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் விரோதமாக அநேக ராஜ்யங்கள் எழும்பிற்று. தமக்கு விரோதமாக எழும்புகிற எல்லா ராஜாக்களையும், ராஜ்யங்களையும் கர்த்தர் அதம்பண்ணினார். கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள்.

2. "நீதியை நடப்பித்தார்கள்". அவர்கள் தேவனை விசுவாசித்தார்கள். அது அவர்களுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அற்புதங்களை நடப்பிப்பதைவிட, நாம் நீதியை நடப்பிக்கும்போது நமக்கு அதிக சந்தோஷமாயிருக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் நீதியை நடப்பிக்கவேண்டும். இதுவே நமக்கு மெய்யான சந்தோஷம்.

3. "வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள்". பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் விசுவாசத்தினாலே வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். பொறுமையோடு காத்திருந்தார்கள். ஏற்ற காலத்திலே வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

4. "சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்". கர்த்தருடைய பிள்ளைகள் தேவனை விசுவாசிக்கும் போது, தேவன் தம்முடைய வல்லமையை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். தம்மை விசுவாசிக்கிறவர்களுக்காக கர்த்தர் பலத்த காரியங்களைச் செய்கிறார். தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்காக தேவன் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் விசுவாசத்தினாலே சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். கொடிய மிருகங்களை மேற்கொண்டார்கள். மிருக குணமுள்ள சத்துருக்களை ஜெயித்தார்கள்.

5. "அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள்". சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்று எபிரெய வாலிபர்களும், நேபுகாத்நேச்சார் எழுப்பிய பொற்சிலையை வணங்க மறுத்தார்கள். ராஜா மூன்று வாலிபர்களையும் எரியும் அக்கினி சூளையிலே தூக்கிப்போட்டார் (தானி 3:17-27). மூன்று எபிரெய வாலிபரும் கர்த்தரை விசுவாசித்தார்கள். இவர்களுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டது. கர்த்தர் இவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கச் செய்தார். புறஜாதி ராஜாவுடைய அரண்மனையிலே தேவன் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார். எரியும் அக்கினிசூளையிலிருந்து கர்த்தர் மூன்று வாலிபர்களையும் பாதுகாத்தார். அக்கினி அவர்களுக்கு ஒரு சேதமும் செய்யவில்லை.

6. "பட்டயக்கருக்குக்கு தப்பினார்கள்". மனுஷருடைய கரங்களிலுள்ள பட்டயங்களை கர்த்தரே தம்முடைய பலத்த கரத்தினால் ஆளுகை செய்கிறார். கர்த்தருடைய சித்தத்தின்படி தான் மனுஷருடைய பட்டயங்கள் இயங்கும். தேவன் மனுஷருடைய பட்டயங்களைப் பிடித்திருக்கும்போது, கர்த்தருடைய பிள்ளைகளோ விசுவாசத்தினால், கர்த்தருடைய கரங்களைப் பற்றிக்கொள்கிறார்கள். தம்மை நம்பியிருக்கிற ஜனங்களை கர்த்தர் பட்டயக்கருக்குக்கு தப்பிக்கச் செய்கிறார். விசுவாசத்தினாலே கர்த்தருடைய பிள்ளைகள் பிழைக்கிறார்கள்.

7. "பலவீனத்தில் பலன்கொண்டார்கள்". கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் ஆவிக்குரிய காரியங்களில் பலவீனராயிருக்கிறார்கள். விசுவாசத்தினாலே கர்த்தருடைய பிள்ளைகளின் பெலன் புதுப்பிக்கப்படுகிறது. விசுவாசத்தினாலே அவர்கள் தங்கள் பலவீனத்திலிருந்து திரும்பி, பெலனைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

8. "யுத்தத்தில் வல்லவர்களானார்கள்". நம்மிடத்தில் விசுவாசம் உண்மையாயிருக்கும்போது, நம்மிடத்தில் பொறுமையும் தைரியமும் இருக்கும். கர்த்தர் தம்மை விசுவாசிக்கிறவர்களை பலப்படுத்துகிறார். கர்த்தருடைய வல்லமையே அவரை விசுவாசிக்கிற நமக்கு பெலனாயிருக்கிறது. கர்த்தருடைய பெலன் அவருடைய சத்துருக்களை பலவீனப்படுத்துகிறது. நம்முடைய சத்துருக்கள் பலவீனமாகும் போது, நாம் யுத்தத்தில் அவர்களை எளிதாக மேற்கொள்கிறோம். கர்த்தரை நம்புகிறவர்கள் யுத்தத்தில் வல்லவர்களாகிறார்கள். ஜெயம் பெறுகிறார்கள். கர்த்தர் நம்முடைய விசுவாசத்தைக் கனப்படுத்துகிறார். நம்முடைய விசுவாசத்திற்கேற்ற பலனைத் தருகிறார். நாம் கர்த்தரை விசுவாசிக்கும் போது, கர்த்தருடைய பலத்தினால் யுத்தத்தில் வல்லவர்களாகிறோம். கர்த்தருடைய பலத்தினால் நாம் அந்நியருடைய சேனைகளை முறியடிக்கிறோம்.

9. "ஸ்திரீகள் சாகக் கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்". ஸ்திரீகள் மாம்சப்பிரகாரமாக பலவீனமானவர்கள். ஆனால் அவர்களோ விசுவாசத்தில் பலமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். கர்த்தர் ஸ்திரீகளுடைய விசுவாசத்தைக் கனப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்திலும், புதிய ஏற்பாட்டுக்காலத்திலும், அநேக ஸ்திரீகள், மரித்துப்போன தங்களுடைய பிள்ளைகளை, விசுவாசத்தினால் உயிரோடெழுந்திருக்கப் பெற்றிருக்கிறார்கள்.

வேறு சில ஸ்திரீகள் தங்கள் விசுவாசத்தில் இன்னும் பெலமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலை எதிர்பாராமல், மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு நாடுகிறார்கள். இதற்காக இந்த ஸ்திரீகள் விசுவாசத்தினாலே தங்கள் பிள்ளைகளையும் சாகக் கொடுக்கிறார்கள். தங்கள் பிள்ளைகள் விடுதலை பெற சம்மதியாமல், அவர்கள் வாதிக்கப்படுவதற்கு ஒப்புக் கொடுக்கிறார்கள்.

விசுவாசிகளின் பாடுகள்
எபி 11 : 35-38

எபி 11:35. ஸ்திரீகள் சாகக் கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடேழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்;

எபி 11:36. வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்;

எபி 11:37. கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்;

எபி 11:38. உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள், பல பாடுகளை அனுபவித்து, தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொண்டார்கள். மேன்மையான உயிர்த்தெழுதலை அடைய வேண்டுமென்பதே அவர்களுடைய விருப்பம். விசுவாசத்தை மறுதலித்துவிட்டு விடுதலை பெற அவர்கள் சம்மதிக்கவில்லை. அவர்களுடைய விசுவாசத்தினிமித்தமாய் அவர்கள் வாதிக்கப்பட்டார்கள். இப்பிரபஞ்சத்தில் சரீரப்பிரகாரமாக அவர்களுக்கு வாதைகளும் வேதனைகளும் உண்டாயிற்று. மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு நாடி, அவர்கள் இந்தப் பூமியிலே எல்லா வாதைகளையும் பொறுமையோடு சகித்துக்கொண்டார்கள்.

விசுவாசிகளில் சிலர் நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும், காவலையும் அனுபவித்தார்கள். விசுவாசிகளுடைய மனது புண்படும்படியாக அவர்கள் நிந்திக்கப்பட்டார்கள். பரியாசம் பண்ணப்பட்டார்கள். வாரினால் அடிக்கப்பட்டார்கள். வாரினால் அடிப்பது அடிமைகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனை. விசுவாசிகளோ கர்த்தருக்குள் சுயாதீனராகயிருந்தாலும், இப்பிரபஞ்சத்து ஜனங்களினால் அடிமைகளைப்போல நடத்தப்பட்டார்கள்.

இப்பிரபஞ்சத்தின் ஜனங்கள் சாத்தானுக்கு அடிமைப்பட்டவர்கள். ஆனால் அவர்களோ கர்த்தருடைய பிள்ளைகளை கட்டுகளிலும் காவலிலும் அடைத்துப் போட்டார்கள். விசுவாசத்தினிமித்தமாய், கர்த்தருடைய பிள்ளைகள் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள். தங்களுக்கு நிலையான நகரம் இங்கு இல்லை என்றும், பரலோகமே தங்களுடைய நித்திய நகரம் என்றும் விசுவாசத்தோடு எதிர்பார்த்து, கட்டுகளையும் காவலையும் சகித்துக்கொண்டார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கொடூரமான மரணமுண்டாயிற்று. இவை இயற்கையாக வரும் மரணமல்ல. அவர்கள் கொலைசெய்யப்பட்டார்கள். விசுவாசிகளை எப்படியெல்லாம் கொடூரமாய் கொலை செய்ய முடியுமோ, அப்படியெல்லாம் அவர்களை கொடூரமாய்க் கொலைசெய்தார்கள். சத்துருக்கள் தங்களை எப்படி கொன்றுபோட்டாலும், கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். சித்திரவதைகளையும், கொடூர மரணங்களையும் சகித்துத் தாங்கிக்கொண்டார்கள். பட்டயங்களுக்கு முன்பாக பயந்து நடுங்காமல், விசுவாசத்தோடு தைரியமாய் நின்றார்கள்.

விசுவாசிகள், தங்கள் விசுவாசத்தினிமித்தமாய் கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள். பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள். விசுவாசிகளில் அநேகருக்கு இப்படிப்பட்ட கொடூர மரணம் நேரிட்டது. ஒரு சில விசுவாசிகள் இந்த மரணத்திலிருந்து தப்பித்துக்கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு ஜீவன் மிகுந்த கசப்பாயிற்று. அவர்களால் எங்கும் சுதந்தரமாகப் போகமுடியவில்லை. காடுகளிலும், வனாந்தரங்களிலும், குகைகளிலும், பூமியின் வெடிப்புகளிலும் சிதறுண்டு அலைந்தார்கள்.

சத்துருக்கள் தங்களை அடையாளம் கண்டுகொள்ளக்கூடாது என்பதற்காக, செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு, மறைந்து திரிந்தார்கள்.

சத்துருக்களும் விசுவாசிகளை உடனே கொன்றுபோடாமல் இப்படி தப்பவைத்தார்கள். தப்பிப் போனவர்களுக்கோ, மரணத்தைவிட ஜீவனே கசப்பாயிற்று. விசுவாசிகள் இப்பூமியில் ஜீவிக்க பிரியப்படவில்லை. ஆனாலும் இவர்களுக்கு மரணம் உடனே நேரிடவும் இல்லை. இவர்கள் சாகும் வரையிலும் துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவித்தார்கள்.

இந்த உலகம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பாத்திரமாயிருக்கவில்லை. உலகப்பிரகாரமான ஜனங்கள் விசுவாசிகளைத் தேடிக்கண்டுபிடித்து, அவர்களைச் சித்திரவதை செய்தார்கள். விசுவாசிகளும் அவர்களைவிட்டு தப்பி வனாந்தரங்களிலும், மறைவிடங்களிலும் சிதறுண்டு அலைந்தார்கள். அவர்கள் இவையெல்லாவற்றையும் கர்த்தர்மீது வைத்திருக்கிற விசுவாசத்தினிமித்தமாய் சகித்துக் கொண்டார்கள். விசுவாசத்தினாலே பாடுகளை சந்தோஷமாய் அனுபவித்தார்கள். விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு, பாடுகளையும் வேதனைகளையும் சகித்தார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உலகப்பிரகாரமான ஜனங்களிடமிருந்து உபத்திரவம் வரலாம். ஏனெனில் இந்தப் பிரபஞ்சம் நமக்கு ஒருபோதும் பாத்திரமாயிருக்காது. உலகத்திலிருந்து நமக்கு உபத்திரவம் வந்தாலும், கர்த்தரிடமிருந்து நமக்கு மகத்துவமான கிருபை வருகிறது. தேவனுடைய கிருபை நம்மைப் பலப்படுத்துகிறது. எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருக்கு சாட்சியாக நிற்க நம்மை நிலைநிறுத்துகிறது.

உபத்திரவங்களையும் வேதனைகளையும், நாம் விசுவாசத்தினாலும் சகித்துக் கொள்கிறோம். பாடுகள் வழியாக கடந்து செல்கிறோம். கர்த்தரே நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறார். உபத்திரவத்தினால் நமக்கு மரணம் வந்தாலும், கர்த்தர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். இந்த நம்பிக்கையை மனதில் வைத்து கர்த்தருடைய பிள்ளைகள் சோதனைகளை எதிர்கொள்ளவேண்டும். பாடுகளை சகித்து அவற்றை மேற்கொள்ளவேண்டும்.

விசேஷித்த நன்மையானதொன்று
எபி 11 : 39,40

எபி 11:39. இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.

எபி 11:40. அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள். தேவன் இவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து நற்சாட்சி சொன்னார். உலகம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பாத்திரமாயிருக்கவில்லை என்று அறிவித்தார். தேவனுடைய தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த உலகம் தகுதியுடையதாயில்லை. துன்மார்க்கமான இந்த உலகத்தில், நீதிமான்கள் ஜீவிப்பதற்கு தகுதியுள்ளவர்களாயில்லை. நீதிமான்களை ஏற்றுக்கொள்ள இந்த உலகமும் தகுதியுள்ளதாயில்லை. இந்த உலகம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பாத்திராமாயிருக்கவில்லை.

பழைய ஏற்பாட்டுக்காலத்து கர்த்தருடைய பிள்ளைகள் எல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள். கர்த்தர் அவர்களுடைய நற்குணங்களைக் குறித்து சாட்சி சொன்னார். அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து நற்சாட்சி சொன்னார். ஆனாலும் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது முழுவதையும் அடையாமற் போனார்கள். வாக்குத்தத்தத்தில் ஒரு பகுதியை மாத்திரமே அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். விசுவாசத்தினாலே அவர்கள் நற்சாட்சி பெற்றபோதிலும், வாக்குத்தத்தத்தின் மேன்மையான பகுதிகளை அவர்கள் அடையாமற் போனார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் வாக்குத்தத்தத்தம் பண்ணப்பட்டதன் நிழலை மாத்திரம் அடைந்தார்கள். அதன் பொருளை அடையவில்லை. பழைய ஏற்பாட்டுக்காலம் பரிபூரணமான காலமல்ல. அது குறைவுள்ள காலம். அக்காலத்தில் அவர்கள் மேன்மையான விசுவாசத்தைக் கண்டுகொண்டார்கள். ஆனால் கர்த்தர் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியதை அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

கர்த்தர் நமக்கென்று விசேஷித்த நன்மையானதொன்றை முன்னதாக நியமித்திருக்கிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கிற விசுவாசிகளுக்கு இது மிகப்பெரிய சிலாக்கியமாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளில்லாமல் பூரணராக முடியாது. அவர்கள் நம்மூலமாக விசேஷித்த நன்மையானவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எபிரெயர் - விரிவுரை

HEBREWS - COMMENTARY

பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் விசுவாசத்தினாலே பல பாடுகளை அனுபவித்தார்கள். ஆனாலும் அவர்களுடைய விசுவாசத்தைவிட, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே ஜீவிக்கிற நம்முடைய விசுவாசமே பூரணமானது. அவர்கள் நம்மையல்லாமல் பூரணராவதில்லை. நாம் கிருபையின் காலத்தில் ஜீவிக்கிறோம். கிருபையின் காலம் நியாயப்பிரமாணத்தின் காலத்தைவிட மேன்மையானது. நியாயப்பிரமாணத்தைவிட சுவிசேஷமே பரிபூரணமானது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்து சுவிசேஷமாகிய விசேஷித்த நன்மையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

12 அதிகாரம்

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடவேண்டும் (எபி 12:1-3). கர்த்தருடைய சிட்சையை நாம் அற்பமாக எண்ணக்கூடாது (எபி 12:4-17). பூமியிலுள்ள சுவிசேஷ சபைக்கும் பரலோகத்திலுள்ள கர்த்தருடைய சபைக்கும் இடையிலுள்ள தொடர்புகள் (எபி 12:18-29).

பொறுமையோடே ஓடக்கடவோம் எபி 12:1-3

எபி 12:1. ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிற வரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

எபி 12:2. அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

எபி 12:3. ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஆவிக்குரிய கடமைகள் உண்டு. நிருபத்தின் ஆசிரியர் இந்தக் கடமைகளை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறார். அவையாவன : 1. கடமைகளை நிறைவேற்ற நாம் நம்மை ஆயத்தப்படுத்தவேண்டும். 2. நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்திலே நாம் இயேசுவை நோக்கி பொறுமையோடு ஓடவேண்டும்.

கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆவிக்குரிய ஓட்டத்தை நியமித்திருக்கிறார். நாம் ஆயத்தமாயிருந்தால்தான் ஓட்டத்திலே ஓடமுடியும். நம்மை ஓடுவதற்கு ஆயத்தப்படுத்தும்படி, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிடவேண்டும். சரீரப்பிரகாரமான கவலைகள் நம்மிடத்தில் இருக்கக்கூடாது. சரீரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை. நம்மிடத்தில் உலக சிநேகமும் காணப்படக்கூடாது. இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து, பரலோகத்தின் ஆசீர்வாதங்களை இழந்துபோய்விடக் கூடாது.

நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தைத் தள்ளிவிடவேண்டும். பாவத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்தால், பாவம் நம்மை ஆளுகை செய்யும். அது நம்மை சுற்றி நெருக்கும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பாவத்தைக் குறித்து மிகுந்த எச்சரிப்போடிருக்க வேண்டும். பாவம் செய்ய சாதகமான சூழ்நிலைகளை விட்டு விலகி வரவேண்டும். நம்முடைய சிநேகிதர்கள் ஆவிக்குரிய சிநேகிதர்களாகயிருக்க வேண்டும். அவர்கள் நம்முடைய விசுவாசத்தின் வளர்ச்சிக்கும், பக்தி விருத்திக்கும் உதவிபுரியக் கூடியவர்களாக இருக்கவேண்டும். துன்மார்க்கரோடு ஐக்கியம் வைத்துக்கொண்டு கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே ஓடுவது கடினம்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஓட்டத்தை நியமித்திருக்கிறார். நாமெல்லோருமே நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை ஓடவேண்டும். கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர் நமக்கு முன்பாக, அவர்களுக்கு நியமித்திருந்த ஓட்டங்களிலே பொறுமையோடு ஓடிமுடித்திருக்கிறார்கள். அவர்கள் மேகம் போன்ற திரளான சாட்சிகளாக நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஓட்டத்தை நாம் நினைவுகூரவேண்டும். அவர்கள் தங்கள் விசுவாசத்தை எப்படி காத்துக்கொண்டார்கள் என்பதை தியானிக்கவேண்டும். கர்த்தருக்காக அவர்கள் எப்படியெல்லாம் பாடுகளை அனுபவித்தார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கர்த்தர் நியமித்திருக்கிற ஓட்டத்திலே ஓடுகிற விசுவாசிகள் பொறுமையோடு ஓடவேண்டும். விசுவாசமும் பொறுமையும் எப்போதுமே இணைந்திருக்கவேண்டும். தேவனுடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நமக்கு விசுவாசமும் பொறுமையும் தேவை. நம்மிடத்திலிருக்கிற விசுவாசத்தையும் பொறுமையையும் வளர்க்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஏராளமான விசுவாசிகள் முன்மாதிரிகளாகயிருக்கிறார்கள். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடு ஓடுவதற்கு அவர்களுடைய சாட்சிகள் நம்மை உற்சாகப்படுத்தும். மனுஷருடைய முன்மாதிரியைவிட இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியே மேன்மையானது. நம்முடைய ஓட்டத்திலே நாம் இயேசுவை நோக்கிப் பார்த்து, பொறுமையோடு ஓடவேண்டும்.

இயேசுகிறிஸ்துவே நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவராகவும், முடிக்கிறவராகவும் இருக்கிறார். அவரே நமக்கு பூரண கிருபையைத் தருகிறார். நாம் விசுவாசத்தின் கிரியைகளை நடப்பிப்பதற்கு கர்த்தரே நம்மைப் பலப்படுத்துகிறார். நம்முடைய விசுவாசத்தை கர்த்தரே நியாயந்தீர்த்து, நம்முடைய விசுவாசத்திற்கேற்ற வெகுமதிகளையும் கொடுக்கிறார். நம்முடைய விசுவாச ஜீவியத்திற்கு இயேசுகிறிஸ்துவே ஆரம்பமும் முடிவுமாக இருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு பல அவமானங்கள் உண்டாயிற்று. ஆனால் அவரோ அந்த அவமானங்களை எண்ணவில்லை. கிறிஸ்துவானவர் சிலுவையின் வேதனையை சுமக்க வேண்டியதாயிற்று. அவர் அந்த சிலுவையைச் சகித்துக் கொண்டார். கிறிஸ்துவானவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணவில்லை, சிலுவையைச் சகித்துக்கொண்டார்.

இயேசுகிறிஸ்து பிறந்தபோதே அவருக்கு பாடுகள் உண்டாயிற்று. அவர் மரிக்கும் வரையிலும் பாடுகள் வழியாகத்தான் கடந்துசென்றார். பாடுகளும் வேதனைகளும், உபத்திரவங்களும் கிறிஸ்துவுக்குப் புதியதல்ல. கிறிஸ்து அனுபவியாத பாடுகள் எதையும் நாம் அனுபவிக்கப்போவதில்லை. அவர் சிலுவையைச் சகித்தார். தமக்கு வந்த எல்லா அவமானத்தையும் பொறுமையோடு தாங்கிக்கொண்டார். இயேசுகிறிஸ்துவிடம் நீடியபொறுமை இருந்தது. பிதாவாகிய தேவனுக்கு பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டும் என்னும் விருப்பம் இருந்தது. இயேசுகிறிஸ்து

தம்முடைய சித்தத்தையும் விருப்பத்தையும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்து பிறந்தபோதும் அவருக்கு அவமானமுண்டாயிற்று. அவர் மரிக்கும்போதும் அவருக்கு அவமானமுண்டாயிற்று. இந்த அவமானங்களையெல்லாம் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, எண்ணாமல், சிலுவையை பொறுமையோடு சகித்துக்கொண்டார்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே மனுஷத்துவம் உள்ளவராகயிருந்தார். கிறிஸ்துவின் மனுஷ ஆத்துமா, தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தை நோக்கிப் பார்த்தது. தம்முடைய பாடுகளினிமித்தமாய், தமக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு, கிறிஸ்துவானவர் அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார்.

மனுஷருடைய பாவத்தினால், மனுஷருக்கும் தேவனுக்கும் இடையிலுள்ள ஐக்கியம் முறிந்துபோயிற்று. இயேசுகிறிஸ்துவோ கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனையே பலியாகச் செலுத்தினார். மனுஷருடைய பாவங்களை போக்குவதற்காக, தம்முடைய சொந்த இரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தினார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவில் கிறிஸ்துவானவர் மத்தியஸ்த ஊழியம் செய்து சமாதானத்தை உண்டுபண்ணுகிறார். பாவத்தின் அடிமைத்தனத்தில் சிக்கியிருக்கிற ஜனங்களுக்கு, கிறிஸ்துவானவர் தம்முடைய சிலுவை மரணத்தின் மூலமாய், இரட்சிப்பின் பாதையைத் திறந்துகொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்ததினால், பிதாவானவர் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் கனப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் சிலுவையைச் சகித்ததினால், தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக, இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்காக, பிதாவினிடத்தில் எப்பொழுதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு தேவன் சில கடமைகளைக் கொடுத்திருக்கிறார். நாம் இவற்றை பயபக்தியோடு நிறைவேற்றவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் எப்போதும் இயேசுகிறிஸ்துவையே நினைத்துக்கொள்ளவேண்டும். அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்துவே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். அவருடைய வசனங்களைத் தியானிக்கவேண்டும். அவருடைய வாழ்க்கையைத் தியானிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகித்தார். கிறிஸ்துவானவர் நம்மைவிட அதிகமான பாடுகளை அனுபவித்தவர். அவர் எல்லா பாடுகளிலும் நீடிய பொறுமையோடிருந்தார். விபரீதங்களையெல்லாம் பொறுமையோடு சகித்துக்கொண்டார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவினுடைய நீடிய பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் தியானிக்கவேண்டும்.

கர்த்தரை நோக்கிப் பார்க்கும்போது நம்முடைய ஆத்துமாவுக்கு உற்சாகம் உண்டாகும். நாம் இளைப்புள்ளவர்களாய் நம்முடைய ஆத்துமாக்களில் சோர்ந்துபோகமாட்டோம். மனுஷருக்குப் பாடுகளும் உபத்திரவங்களும் வரும்போது சோர்ந்துபோவது இயல்பு. இந்த சோர்விலிருந்து நாம் தப்பிக்க வேண்டுமென்றால், நமக்காக பாடுகளையும் விபரீதங்களையும் சகித்த இயேசுவையே நாம் நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தரைப்பற்றும் விசுவாசமும், கர்த்தரைப்பற்றிய தியானமும் நமக்கு ஆறுதலைக் கொடுக்கும். நம்மை சோர்ந்துபோகவிடாமல் உற்சாகப்படுத்தும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மைப் பலப்படுத்தும்.

பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறது
எபி 12:4

எபி 12:4. பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

ஒவ்வொரு விசுவாசிக்கும் பாடுகளும் போராட்டங்களும் உண்டு. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறோம். நம்முடைய போராட்டங்கள் மிகவும் மென்மையானது. நம்மால் தாங்கிக்கொள்ளக்கூடியது. பாவத்திற்கு விரோதமாக நாம் எதிர்த்து நிற்கும்போது நமக்குப் போராட்டங்கள் வருகிறது. அதிகமாய் எதிர்த்து நிற்கும்போது அதிகமான போராட்டம் வரும்.

சில சமயங்களில் பாவத்திற்கு விரோதமாக நாம் போராடும்போது, நமக்கு இரத்த சேதாரம்கூட ஏற்படலாம். இரத்தசாட்சியாக மரிக்க வேண்டியதுகூட வரலாம். ஒரு சிலர் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் அதிகப் போராட்டம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். தாங்கள் பாவத்திற்கு விரோதமாய் அதிகமாய்ப் போராடுவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இவர்கள் யாரும் பாவத்திற்கு விரோதமாக போராடுகிறதில், இரத்தம் சிந்தப்படத்தக்கதாக இன்னும் எதிர்த்து நிற்கவில்லை. கர்த்தர் தேவையில்லாமல் நமக்கு உபத்திரவத்தை அனுமதிக்கமாட்டார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளின் விசுவாசத்தைச் சோதிக்கிறார். ஆரம்பத்திலேயே பெரிய சோதனைகளைக் கொடுத்து நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கமாட்டார். தம்முடைய தெய்வீக ஞானத்தினால் பாடுகளைச் சகித்துக்கொள்வது எப்படி என்று பயிற்சி கொடுப்பார். பாவத்திற்கு விரோதமாய் நாம் போராடும்போது, ஆரம்பத்தில் சிறிய போராட்டங்களை மாத்திரமே கர்த்தர் நமக்கு அனுமதிப்பார். நாம் அதில் பயிற்சி பெறவேண்டும். பெரிய போராட்டத்தை எதிர்த்து நிற்பதற்கு நாம் ஆயத்தமாகவேண்டும். ஏற்றவேளை வரும்போதுதான் நம்முடைய போராட்டத்தில், நமக்கு இரத்த சேதாரத்தை கர்த்தர் அனுமதிப்பார்.

நம்முடைய விசுவாசத்தினிமித்தமாய் நாம் போராடும்போது கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மை பெலப்படுத்துகிறார். நாம் சோதிக்கப்படும்போது, சோதனைகளைத் தாங்கிக்கொள்ளக்கூடிய பெலத்தையும் அவர் நமக்குக் கொடுப்பார். அவர் ஒருபோதும் நம்மை கைவிடுவதில்லை. நாம் பாடுகளை அனுபவிக்கும்போது நம்முடைய பாடுகளை மிகைப்படுத்திச் சொல்லக்கூடாது. தேவனுடைய கிருபையை மாத்திரமே நாம் சாட்சியாக அறிவிக்கவேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் தேவகிருபை நமக்குப் போதுமானதாயிருக்கிறது.

தேவகிருபையில்லாமல் நம்மால் பாவத்திற்கு விரோதமாகப் போராட முடியாது. நம்முடைய போராட்டத்தில் சத்துருவுக்கு விரோதமாக நம்மால் எதிர்த்து நிற்கவும் முடியாது. நம்முடைய பாடுகளிலும் வேதனைகளிலும் தேவன் நமக்குக் காண்பிக்கும் கிருபையைத் தியானித்துப் பார்க்கவேண்டும். தேவகிருபைக்காக அவரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

கர்த்தருடைய சிட்சை
எபி 12 : 5-10

எபி 12:5. அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும் போது சோர்ந்துபோகாதே.

எபி 12:6. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.

எபி 12:7. நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?

எபி 12:8. எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே.

எபி 12:9. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?

எபி 12:10. அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி, கொஞ்சக் காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

விசுவாசிகளுக்கு பலவிதமான சோதனைகள் வருகிறது. பாவத்திற்கு விரோதமாய் நமக்குப் போராட்டமுண்டு. நாம் பாவத்திற்கு எதிர்த்து நிற்கவேண்டும். கர்த்தர் பல சமயங்களில் நமக்கு சோதனைகளையும் போராட்டங்களையும் அனுமதிக்கிறார். இவையெல்லாம் கர்த்தருடைய தெய்வீக சிட்சைகள். நம்முடைய எல்லா சிட்சைகளிலும் தேவனுடைய கரம் நம்மோடு கூடயிருக்கிறது. கர்த்தருடைய சிட்சையை நாம் அற்பமாக எண்ணக்கூடாது. அவரால் கடிந்துகொள்ளப்படும்போது நாம் சோர்ந்துபோகக்கூடாது.

கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது, புறஜாதியாரின் பார்வைக்கு அது உபத்திரவம் போல தெரியும். கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறார். தாம் சேர்த்துக்கொள்கிற எந்த மகனையும் அவர் தண்டிக்கிறார். நம்மைத் திருத்துவதற்காகவும், தம்முடைய சித்தத்தின் பிரகாரம் நம்மை உருவாக்குவதற்காகவும் கர்த்தர் நம்மை சிட்சிக்கிறார், நம்மைத் தண்டிக்கிறார்.

கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது, அவருடைய சிட்சையை அற்பமாக எண்ணக்கூடாது. கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணுகிறவர்கள், பாவத்தையும் அற்பமாக எண்ணுவார்கள். தங்களுடைய ஆத்துமாவுக்கு பாவத்தினால் ஒரு ஆபத்தும் இல்லையென்று அசட்டையாயிருப்பார்கள். கர்த்தர் நம்மைக் கடிந்துகொள்ளும்போது, நாம் சோர்ந்துபோகக்கூடாது. அவர் நம்முடைய ஆவிக்குரிய பிரயோஜனத்திற்காகவே நம்மை சிட்சிக்கிறார். நம்மைக் கடிந்துகொள்கிறார்.

கர்த்தர் பாவிகளிடத்தில் பிரியப்படுவதில்லை. அவர்களுடைய பாவத்தினிமித்தமாய், கர்த்தர் அவர்களைக் கண்டிக்கிறார். பாவிகளுக்கு தண்டனை வருவதுபோல, பல சமயங்களில், கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கும் அவரிடத்திலிருந்து தண்டனை வருகிறது. விசுவாசிகளாகிய நாமோ கர்த்தர் நம்மை தண்டிப்பதை, “தண்டனை” என்று சொல்லாமல், அதை “தெய்வீக சிட்சை” என்று சொல்லவேண்டும். கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை மாத்திரமே அவர் சிட்சிக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலம் வரையிலும் தப்பிதங்களைச் செய்வார்கள். நம்முடைய தப்பிதங்களெல்லாம் திருத்தப்படவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை சிட்சித்து திருத்துகிறார். நம்முடைய பாவங்களினிமித்தமாய் நம்மைக் கடிந்துகொள்கிறார். நாம் கர்த்தருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நம்முடைய குடும்பத்தில் கர்த்தர் ஒரு தகப்பனைப்போல நடந்துகொள்கிறார். தேவன் நம்மை புத்திரராய் எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரன் ஒருவனுமில்லை.

ஒரு நல்ல தகப்பன் தன்னுடைய பிள்ளைகள் செய்த தப்பிதங்களையும், பாவங்களையும் சகித்துக்கொள்ளமாட்டார். பாவம் செய்யட்டும் என்று அவர்களை விட்டுவிடவும் மாட்டார். தகப்பன் சிட்சியாத புத்திரர் யாரும் இருக்க முடியாது. தகப்பன் தன்னுடைய பிள்ளைகளிடத்தில் அன்பு கூருவதினால்தான் அவர்களை சிட்சிக்கிறார். பிள்ளைகள் பாவம் செய்யும்போது, அவர்களை சிட்சிக்காத பெற்றோர், பிள்ளைகளுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பாவம் செய்யும்போது, கர்த்தர் நம்மை சிட்சிக்கிறார். நம்மைத் தண்டிக்கிறார். கர்த்தருடைய சிட்சையை நாம் அற்பமாக எண்ணக்கூடாது. அவர் நம்மைக் கடிந்துகொள்ளும்போது சோர்ந்து போகக்கூடாது. நம்முடைய பாவங்கள் கடிந்துகொள்ளப்படவில்லையென்றால், நாம் தேவனை விட்டு தூரவிலகிப்போய்விடுவோம். தேவன் நம்மை புத்திரராக எண்ணியே நம்மை சிட்சிக்கிறார். நாம் கர்த்தருடைய சிட்சையை சகிக்கிறவர்களாக இருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், அன்பினாலும் நம்மை சிட்சிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கவேண்டும்.

தம்முடைய பிள்ளைகள் எத்தனைபேர் பாவம் செய்கிறார்களோ, அத்தனை பேர்களையுமே நம்முடைய கர்த்தர் சிட்சிக்கிறார். நாம் பாவம் செய்யும்போது எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை நமக்கும் கிடைக்கிறது. நாம் பாவம் செய்தும் கர்த்தர் நம்மை சிட்சிக்கவில்லையென்றால், நாம் கர்த்தருக்கு புத்திரராகயில்லை என்பதுதான் பொருள். நாம் கர்த்தருடைய புத்திரராகயில்லையென்றால், அந்நியருடைய புத்திரராகயிருப்போம். இந்தச் சத்தியத்தை நிருபத்தின் ஆசிரியர் சொல்லும்போது, “எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே” (எபி 12:8) என்று சொல்லுகிறார்.

நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, நாம் அவர்களுக்கு அஞ்சி நடக்கிறோம். சிட்சைக்குப் பயந்து தப்பு செய்யாமல் ஒழுக்கமாக இருக்கிறோம். உலகப்பிரகாரமான தகப்பன்மார்கள் நம்மைக் கண்டித்து திருத்துகிறார்கள். நாம் அவர்களுக்கு அஞ்சி அடங்கி நடக்கிறோம். நாம் கீழ்ப்படியாமல் ஜீவிப்போமென்றால் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிப்பார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்களைவிட மேலானவர். இவர்கள் சரீரத்தின் தகப்பன்மார்கள். நம்முடைய கர்த்தரோ ஆவிகளின் பிதாவாகயிருக்கிறார். நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்களுக்கு நாம் அஞ்சி நடக்கிறோம். அப்படிப்பட்ட நாம், ஆவிகளின் பிதாவாகிய கர்த்தருக்கு வெகுஅதிகமாய் அஞ்சி நடக்கவேண்டும். பயபக்தியோடு கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது நம்மிடத்தில் தாழ்மையும் கீழ்ப்படிதலும் காணப்படவேண்டும்.

உலகத்திலுள்ள தகப்பன்மார்கள் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்களாயிருக்கிறார்கள். நம்முடைய தேவனோ ஆவிகளின் பிதாவாயிருக்கிறார். இப்பிரபஞ்சத்தில், நாம் நம்முடைய சரீரத்தில் பிறப்பதற்கு, நம்முடைய தகப்பன்மார் கருவிகளாக செயல்பட்டார்கள். நம்முடைய சரீரம் மாம்ச சரீரமேயல்லாமல் வேறொன்றுமில்லை. நம்முடைய கர்த்தரோ நம்முடைய ஆவிக்குப் பிதாவாகயிருக்கிறார். சரீரத்தின் பிதாவுக்கு நாம் அஞ்சி நடப்பதைவிட, நம்முடைய ஆவியின் பிதாவுக்கு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டும் (எபி 12:9).

நம்முடைய உலகப்பிரகாரமான பெற்றோர், தங்களுக்கு நலமென்று தோன்றினபடி, கொஞ்சக்காலம் நம்மைச் சிட்சித்தார்கள். சில சமயங்களில் தங்களுடைய கோபத்தை தணித்துக்கொள்வதற்காக பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சிட்சிப்பதுண்டு. பிள்ளைகள் திருந்தவேண்டுமென்பதைவிட தங்களுடைய கோபம் குறையவேண்டும் என்பது பெற்றோரின் நோக்கமாயிருக்கலாம். அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி தங்கள் பிள்ளைகளை சிட்சிக்கிறார்கள். பிள்ளைகளின் பிரயோஜனத்தைவிட தங்களுடைய நலமே பெற்றோருக்கு முக்கியமானதாயிருக்கிறது. நம்முடைய சரீரத்தின் பெற்றோர் மாம்சப்பிரகாரமாக பலவீனமாயிருக்கிறார்கள். அவர்களும் தங்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமைப்பட்டிருக்கிறவர்கள் தான். மாம்சத்தில் கோபம் வரும்போது, அந்தக் கோபத்தை தங்கள் பிள்ளைகளின்மீது வெளிப்படுத்திவிடுகிறார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ, நம்முடைய ஆவிக்குப் பிதாவாகயிருக்கிறார். அவர் நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். நாம் கர்த்தருடைய பரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாக வேண்டும். நாம் தேவனுடைய சாயலைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தரிடத்தில் காணப்படுகிற நல்ல சுபாவங்கள் நம்மிடத்திலும் காணப்படவேண்டும். இவையெல்லாம் நம்முடைய பிரயோஜனத்திற்குரியவை. கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது, நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை கொஞ்சக்காலம் சிட்சிப்பார்கள். நாம் சிறுபிள்ளையாக இருக்கும் காலம் வரையில்தான் நம்முடைய பெற்றோர் நம்மை சிட்சிப்பார்கள். நாம் பெரியவர்களாக வளர்ந்த பின்பு நம்முடைய பெற்றோர் நம்மைச் சிட்சிக்கமாட்டார்கள். ஆனாலும் நாம் பெரியவர்களாக வளர்ந்த பின்பு, நம்முடைய பெற்றோர் நம்மை சிட்சித்து நல்ல பிள்ளைகளாக உருவாக்கியதற்காக, நாம் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருப்போம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் எப்போதுமே நம்முடைய ஆவியின் பிதாவாகிய கர்த்தருக்கு பிள்ளைகளாகவே இருக்கிறோம். அவர் நம்மை கொஞ்சக்காலம் மாத்திரம் சிட்சிக்காமல், நம்முடைய ஜீவியக்காலம் முழுவதிலும், தேவை ஏற்படும்போதெல்லாம் சிட்சிக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பரிபூரண நிலைமையை அடையும்போது நமக்குச் சிட்சை தேவைப்படாது. நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும் நாம் பரிபூரணமடைவதில்லை. பரலோகத்தில் தான் நமக்கு பரிபூரணம் உண்டு. ஆகையினால் நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற காலம் வரையிலும், கர்த்தர் நம்மை, தம்முடைய பிள்ளையாகப் பாவித்து சிட்சிக்கிறார். நாமும் பிழைக்கத்தக்கதாக, நம்முடைய ஆவிகளின் பிதாவாகிய கர்த்தருக்கு, வெகுஅதிகமாய் அடங்கி நடக்கவேண்டும்.

கர்த்தருடைய சிட்சை நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு அல்ல. கர்த்தர் நம்மை சிட்சிப்பதினால் அவர் நம்மை சபிப்பதில்லை. நம்முடைய ஆத்துமா அழிந்துபோகக்கூடாது, அது மரித்துப்போகக்கூடாது என்பதில் நம்முடைய ஆவிகளின் பிதாவாகிய தேவன் அதிக அக்கரையோடிருக்கிறார். நம்முடைய ஆத்துமாவை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக கர்த்தர் நம்மைச் சிட்சிக்கிறார். நாம் தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக ஜீவிக்க வேண்டும். தேவனுடைய சுபாவங்களை நாம் நம்முடைய ஜீவியத்தில் வெளிப்படுத்தவேண்டும். நாம் தேவனுடைய சாயலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் தேவனோடு நித்தியகாலமாக ஜீவிக்கவேண்டும். இவையெல்லாம் நம்மைக்குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

தேவனுடைய சித்தத்திலிருந்து நாம் வழிவிலகிச் செல்லும்போது, கர்த்தர் நம்மைச் சிட்சித்து, சரியான பாதையில் வழிநடத்துகிறார். கர்த்தருடைய சிட்சை நமக்கு சாபமானதல்ல. அது நமக்கு ஆசீர்வாதமானது. நாம் கர்த்தருடைய சிட்சையை சகிக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவர் நம்மை தம்முடைய பிள்ளைகளாகப் பாவித்து, சிட்சித்து நடத்துகிறார் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அடங்கி நடக்கவேண்டும் (எபி 12:10).

நீதியாகிய சமாதான பலன்
எபி 12 : 11-14

எபி 12:11. எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.

எபி 12:12. ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி,

எபி 12:13. முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்.

எபி 12:14. யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்த முள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.

கர்த்தர் நம்மைச் சிட்சிக்கும்போது நமக்கு வேதனை உண்டாகும். சிட்சை நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்காது. நாம் சிட்சிக்கப்படும்போது துக்கமாயிருப்போம். கர்த்தர் நம்மைச் சிட்சிக்கும்போது, இப்போது நமக்கு உண்டாயிருக்கிற மனநிலையை வைத்து, கர்த்தருடைய சிட்சையை நிதானிக்கக்கூடாது. கர்த்தருடைய சிட்சையை விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். சிட்சையினால் உண்டாகும் ஆசீர்வாதங்களை நாம் விசுவாசத்தோடு நோக்கிப்பார்க்க வேண்டும்.

எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் (எபி 12:11). சிட்சையினால் சாமாதானம் உண்டாகும். நாம் சிட்சிக்கப்படும்போது அதிக நீதியை வெளிப்படுத்துவோம். நீதியின் கனி சமாதானம். கர்த்தர் நம்மைச் சிட்சிக்கும்போது, அவருடைய சிட்சையை பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண்டும். கர்த்தர் நம்மைச் சிட்சிப்பதினால் நம்முடைய பரிசுத்தம் விருத்தியடையும். கர்த்தருடைய சிட்சையில் நாம் பழகவேண்டும். கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது, சரீரப்பிரகாரமாக சிந்தித்து துக்கப்படக்கூடாது. கர்த்தருடைய சிட்சையை ஆவிக்குரிய ரீதியாக தியானித்துப் பார்த்து சந்தோஷமடையவேண்டும். கர்த்தருடைய சிட்சையில் நாம் பழகும்போது, அது நமக்கு நீதியாகிய சமாதான பலனைத்தரும் என்று விசுவாசிக்கவேண்டும் (எபி 12:11).

கர்த்தர் நம்மைச் சிட்சிக்கும்போது அதை பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். சிட்சை அதிகமாகும்போது நம்முடைய கைகள் நெகிழ்ந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. நம்முடைய முழங்கால்கள் தளர்ந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. துக்கம் அதிகமாகும்போது நமக்குள் சோர்வும் அதிகமாகும். ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ கர்த்தருடைய சிட்சையை பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். நெகிழ்ந்த கைகளையும், தளர்ந்த முழங்கால்களையும் மறுபடியும் திரும்ப நிமிர்த்தவேண்டும் (எபி 12:12).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய ஓட்டத்தை நியமித்து வைத்திருக்கிறார். நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் நாம் பொறுமையோடு ஓடவேண்டும். கர்த்தர் நம்மைச் சிட்சிக்கும்போது, அவருடைய சிட்சையை பொறுமையோடு சகித்துக்கொண்டால், நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் நம்மால் நன்றாக ஓடமுடியும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசம், பொறுமை, பரிசுத்தமான தைரியம், பரிசுத்தமான உறுதி ஆகியவை இருக்கவேண்டும். நம்மிடத்தில் இந்த நற்குணங்கள் நிரம்பியிருக்குமென்றால் நம்மால் சீராக நடக்க முடியும். நம்முடைய நடை தள்ளாடாது.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் மற்றவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். மற்ற விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் சோர்ந்து போயிருக்கும்போது, நாம் அவர்களை பயமுறுத்திவிடக்கூடாது. அவர்களை அதிகமாக சோர்வடையச் செய்துவிடக்கூடாது. முடிந்த வரையிலும் அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் சிலருடைய கைகள் நெகிழ்ந்திருக்கலாம். அவர்களுடைய முழங்கால்கள் தளர்ந்திருக்கலாம். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்களால் திடமாக நடக்க முடியாமல் போகலாம். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் உதவிபுரியவேண்டும். அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும்.

நம்முடைய பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்தவேண்டும். முடமாயிருக்கிறது பிசக்கிப்போய்விடக் கூடாது. அது சொஸ்தமடையவேண்டும். வழிகள் செவ்வையாயில்லையென்றால் முடமாயிருக்கிற பாதங்கள் பிசகிப்போய்விடும். பிசகிப்போன பாதங்களால் நமக்கு நியமித்து வைத்திருக்கிற ஓட்டத்தில் ஓட முடியாது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே பரலோகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம். இந்த ஓட்டத்தில் விசுவாசிகளாகிய நாமெல்லோரும் ஒருவருக்கொருவர் உதவியாயும், ஒத்தாசையாயும் இருக்கவேண்டும். நம்முடைய பாதங்களுக்கும், மற்ற விசுவாசிகளுடைய பாதங்களுக்கும் வழிகளைச் செவ்வைப்படுத்தவேண்டும் (எபி 12:13).

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசமும் பொறுமையும் நிரம்பியிருக்கவேண்டும். நம்மிடத்தில் இவை இரண்டும் தாராளமாய் இருக்கும்போது நமக்குள் பரிசுத்தமிருக்கும். நாம் மற்றவர்களோடு சமாதானமாயிருப்போம். நாம் பாடுகளை அனுபவிக்கும்போது நம்முடைய பொறுமை வலுவடைகிறது. நம்முடைய நெகிழ்ந்த கைகளும் தளர்ந்த முழங்கால்களும் நீடியபொறுமையினால் திரும்ப நிமிர்த்தப்படுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் யாவரோடும் சமாதானமாயிருக்கும்படி நாடவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படிக்கும் நாடவேண்டும். சமாதானமும் பரிசுத்தமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருமே சமாதானத்தை விரும்பவேண்டும். நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாகத்தான் இருக்க வேண்டும். சண்டையிடுகிறவர்களாகயிருக்கக் கூடாது. சமாதானத்தையும் பரிசுத்தத்தையும் வேறுபிரிப்பது கடினம். இவ்விரண்டும் சேர்ந்தேயிருக்கும். பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிக்க முடியாது.

ஏசாவைப்போல சீர்கெட்டவன் எபி 12 : 15-17

எபி 12:15. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர்முளைத் தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்,

எபி 12:16. ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

எபி 12:17. ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்.

நாம் கர்த்தரால் சிட்சிக்கப்படும்போது நமக்குத் துக்கமுண்டாகும். வேதனையாக இருக்கும். பாடுகளை அனுபவிப்பதுபோல இருக்கும். நம்முடைய பரலோகப்பிதா நம்மீது அன்புகூர்ந்து நம்மைச் சிட்சிக்கிறார் என்று நாம் விசுவாசிக்கவேண்டும். நாம் சிட்சிக்கப்படுவதினால் அது பிற்காலத்தில் நீதியான சமாதான பலனை நமக்குத் தரும் என்றும் நாம் அறிந்திருக்கவேண்டும். உலகப்பிரகாரமான பார்வையில் பார்க்கும்போது நமக்கு உண்டாயிருக்கிற தெய்வீக சிட்சை, அவர்களுக்கு “உபத்திரவம்” போல தெரியும். இப்பிரபஞ்சத்து ஜனங்களைப் போலவே நாமும் நினைத்தால், நாம் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போய் விடுவோம். கர்த்தருடைய சிட்சைக்கும் உபத்திரவத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் விசுவாசத்தில் நிலைத்து நிற்கமாட்டார்கள்.

தேவனுடைய கிருபையை இழந்துபோவதும் கர்த்தரைவிட்டு விலகிப்போவதும் ஒன்றுதான். நம்முடைய ஆத்துமாவில் தேவனுடைய மெய்யான கிருபை இல்லையென்றால் நம்மிடத்தில் விசுவாசமும் இருக்காது. தேவனுடைய அன்பும், தேவனுடைய இரக்கமும் நமக்குள் காணப்படாது. தேவனுடைய கிருபையில்லாதவர்கள் அவரை மறுதலித்துவிடுவார்கள். நாம் தேவனுடைய கிருபையை இழந்துவிட்டோமென்றால், நமக்குள் கசப்பான வேர் முளைத்து எழும்பும். நம்முடைய ஜீவியம் அசுத்தமாகிவிடும்.

நமக்குள் கசப்பான வேர் முளைத்து எழும்பினால் நாம் சமாதானம்பண்ணுகிறவர்களாயிருக்கமாட்டோம். சண்டைபண்ணுவோம். கலக்கமுண்டாக்குவோம். இதனால் அநேகர் தீட்டுப்படுவார்கள். நம்முடைய ஜீவியமும் அசுத்தமாயிருக்கும். நம்முடைய சிந்தையும் அசுத்தமாயிருக்கும். நம்முடைய கிரியைகளும் அசுத்தமாயிருக்கும். நமக்குள் கசப்பான வேர் முளைத்து எழும்பினதே இந்தத் தீட்டுக்குக் காரணம்.

நிருபத்தின் ஆசிரியர் ஏசாவின் பாவத்தை இங்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். ஏசா ஒருவேளை போஜனத்திற்காக தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்டான். சேஷ்டபுத்திர பாகத்தினால் வரக்கூடிய எல்லா ஆசீர்வாதங்களையும் இழந்துவிட்டான். கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போகிறவர்களும், ஏசாவைப்போலவே, தேவனுடைய கிருபையை இழந்துபோவார்கள்.

பிற்பாடு ஏசா தன்னுடைய பாவத்தை உணர்ந்தான். தான் இழந்துபோன ஆசீர்வாதத்தை மறுபடியும் சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினான். ஆனால் அவனால் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள முடியவில்லை. தாமதமாக மனந்திரும்பினான். அவன் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவன் என்று தள்ளப்பட்டான். ஏசா கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும், மனமாறுதலைக் காணாமற்போனான்.

ஏசா துணிகரமாகப் பாவம் செய்தான். சேஷ்டபுத்திர பாகத்தின் ஆசீர்வாதத்தைவிட அவனுக்கு ஒருவேளை போஜனமே மேன்மையானதாகத் தெரிந்தது. கர்த்தரோ அவனுடைய பாவத்தினிமித்தம் அவனை நீதியாய் நியாயந்தீர்த்தார். அவனை ஆகாதவன் என்று தள்ளிவிட்டார். கர்த்தரைப்பற்றிக் கொண்டிருக்கிற நாம் அவரை விட்டு விலகிப்போய்விடக்கூடாது. ஏசாவைப்போல நாம் சீர்கெட்டவர்களாக இருக்கக்கூடாது. மிகவும் எச்சரிக்கையாய் ஜீவிக்கவேண்டும்.

தேவனுடைய ஆசீர்வாதத்தைவிட, தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்ற விரும்புகிறவர்கள் தேவனை விட்டு விலகிப்போய்விடுவார்கள். இது கிருபையின் காலம். இந்தக் காலத்தில் நாம் கண்ணீர்விட்டு, மனந்திரும்பி, தேவனுடைய சமுகத்தில் வந்தால், நாம் மனமாறுதலைக் கண்டுகொள்ளலாம். கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மை இரட்சிப்பார். கிருபையின் காலத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கிருபையின் காலத்திற்குப் பின்பு நியாயத்தீர்ப்பின் காலம் வரும். கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பின் காலத்தில், தம்முடைய நீதியை மாத்திரமே வெளிப்படுத்துவார். அப்போது தம்முடைய கிருபையை நமக்குக் காண்பிக்கமாட்டார்.

கிருபையின் இந்தக்காலத்தில் தேவன் நமக்கு வைத்திருக்கிற ஆசீர்வாதத்தை விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாய் ஜீவிக்கவேண்டும். மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுக்காமல், தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ஜீவிக்க நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். கிருபையின் காலத்தில் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை சிட்சிக்கிறார். தம்முடைய நியாயத்தீர்ப்பின் காலத்திலோ கர்த்தர் துன்மார்க்கரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார். கர்த்தருடைய சிட்சையை விரும்பாதவர்கள், நியாயத்தீர்ப்பு நாளிலே கர்த்தருடைய ஆக்கினையைப் பெறுவார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பாடுகளை அனுபவிக்க பயப்படக்கூடாது. நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் வரும்போது, அவற்றை விசுவாசத்தோடும் பொறுமையோடும் சகித்துக்கொள்ளவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையே நோக்கிப் பார்த்து, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடவேண்டும். பாடுகளை அனுபவிப்பதற்குப் பதிலாக, இப்பிரபஞ்சத்தின் சந்தோஷங்களை அனுபவிக்கவேண்டுமென்று விரும்பக் கூடாது. ஏசா ஒருவேளை போஜனத்தை விரும்பினான். அதற்காக சேஷ்டபுத்திர பாகத்தையே விற்றுப்போட்டான். சீர்கெட்டவனானான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஏசாவைப்போல சீர்கெட்டவர்களாயிராதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

சீனாய் மலை
எபி 12 : 18-21

எபி 12:18. அன்றியும், தொடக் கூடியதும், அக்கினி பற்றி யெரிகிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம் இருள் பெருங்காற்று ஆகிய இவைகளினிடத்திற்கும்,

எபி 12:19. எக்காள முழக்கத்தி னிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும் நீங்கள் வந்து சேரவில்லை; அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள்.

எபி 12:20. ஏனெனில் ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால், அது கல்லெறியுண்டு, அல்லது அம்பினால் எய்யுண்டு சாகவேண்டுமென்று சொல்லப்பட்ட கட்டளையைச் சகிக்க மாட்டாதிருந்தார்கள்.

எபி 12:21. மோசேயும்: நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே, யூதர்கள் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்து முறைமையின்படி சபையாகக் கூடிவந்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்திலுள்ள நாமோ சுவிசேஷத்தினுடைய பிரமாணத்தின்படி சபையாகக் கூடிவருகிறோம். இவ்விரண்டு சபைகளுக்கும் வித்தியாசமுண்டு. நியாயப்பிரமாண சபையைவிட சுவிசேஷ சபையே மேன்மையானது.

பழைய ஏற்பாட்டுக்காலத்து சபையாகிய சீனாய் மலை உலகப்பிரகாரமானது. அதைத் தொட முடியும். புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையோ சீயோன் மலையிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது ஆவிக்குரியது.

பழைய ஏற்பாட்டுக் காலத்து சபையின் காலம் இருளின் காலம். சீனாய் மலையிலே அக்கினி பற்றியெரிந்தது. அங்கு மந்தாரம், இருள், பெருங்காற்று, ஆகியவை காணப்பட்டது. புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையின் காலம் வெளிச்சத்தின் காலம். இயேசுகிறிஸ்துவே நமக்கு ஒளியாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறார். இக்காலத்தில் தேவனைப்பற்றிய சத்தியம் நமக்குத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்து சபை இருளிலிருந்ததினால், தேவனைப்பற்றிய சத்தியம் அவர்களுக்கு நிழலாகவே இருந்தது (எபி 12:18).

பழைய ஏற்பாட்டு சபையின் காலம் பயமும் நடுக்கமும் மிகுந்த காலம். யூதர்களினால் அந்த நடுக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சீனாய் மலையிலே எக்காள முழக்கமுண்டாயிற்று. வார்த்தைகளுடைய சத்தமுண்டாயிற்று. ஜனங்கள் அந்த முழக்கத்தைக் கேட்டு பயந்தார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள், பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள். ஒருவரும் அந்தச் சத்தத்தினிடத்திற்கு வந்து சேரவில்லை. அங்கு வருவதற்குப் பயந்தார்கள். மோசேயும் அந்தச் சத்தத்தைக் கேட்டு பயந்து நடுங்கினார். சுவிசேஷத்தின் காலமோ மென்மையான காலம். அன்பு நிறைந்த காலம். நம்மைப்போன்ற பலவீனருக்கு சுவிசேஷத்தின் காலமே ஏற்றகாலம் (எபி 12:19).

சீனாய் மலையில் எல்லோரும் வருவதற்கு அனுமதியில்லை. ஒரு சிலர் மாத்திரமே அனுமதிக்கப்பட்டார்கள். பழைய ஏற்பாட்டு சபையின் காலம் ஒரு வரையறைக்குட்பட்ட காலமாகயிருந்தது. ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால் அது கல்லெறியுண்டு சாகவேண்டும். அல்லது அது அம்பினால் எய்யுண்டு சாகவேண்டும். இந்தக் கட்டளையை யூதர்களால் சகிக்க முடியவில்லை. சீனாய் மலைக்குப் போவதற்கே பயந்தார்கள் (எபி 12:20).

மோசேகூட "நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன்" என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது (எபி 12:21). சுவிசேஷத்தின் காலமோ விஸ்தாரமான காலம். வரையறையில்லாத தாராளமான காலம் கர்த்தருடைய கிருபாசனத்திற்கு முன்பாக நாமெல்லோருமே தைரியமாகக் கிட்டிச் சேரலாம். கிருபாசனத்திற்கு முன்பாக நாம் பயந்து நடுங்கவேண்டியதில்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்து சபையை தேவனுடைய நீதி ஆளுகை செய்தது. புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையை கிறிஸ்துவின் கிருபை ஆளுகை செய்கிறது.

பரம எருசலேம்
எபி 12 : 22-24

எபி 12:22. நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவ தூதர்களினிடத்திற்கும்,

எபி 12:23. பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப் பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்,

எபி 12:24. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.

சுவிசேஷ சபையானது பரலோகத்திலுள்ள மகிமையான சபைக்கு ஒப்புமையாயிருக்கிறது. சுவிசேஷ சபை சீயோன் மலையென்றும், பரம எருசலேமென்றும் அழைக்கப்படுகிறது. விசுவாசிகள் சீயோன் மலைக்கு வரும்போது அவர்கள் பரலோக ஸ்தானத்திற்கே வருகிறார்கள். பரலோக சபையாரோடு ஐக்கியமாகயிருக்கிறார்கள்.

பரமஎருசலேம் ஜீவனுள்ள தேவனுடைய நகரம். சுவிசேஷ சபையில் தேவன் வாசம்பண்ணுகிறார். அவருடைய வாசஸ்தலம் விசுவாசிகள் மத்தியிலிருக்கிறது. எங்கே இரண்டுபேர் மூன்றுபேர் தேவனுடைய நாமத்தினால் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் மத்தியிலே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாசம்பண்ணுகிறார். புதிய ஏற்பாட்டு சுவிசேஷ சபையானது ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரமஎருசலேமுக்கு ஒப்புமையாகயிருக்கிறது (எபி 12:22).

பரலோகத்திலே ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள் இருக்கிறார்கள். விசுவாசத்தினாலே புதிய ஏற்பாட்டு சபையில் சேருகிறவர்கள், தேவதூதர்களோடும் ஐக்கியமாகயிருக்கிறார்கள். விசுவாசிகள் தேவதூதர்களுக்கு ஒப்பாகவும் இருக்கிறார்கள்.

பரலோகத்திலே பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையார் இருக்கிறார்கள் (எபி 12:23). இவர்கள் பூமியின் பல பாகங்களிலிருந்தும் பரலோகத்திற்கு வந்திருக்கிற பரிசுத்தவான்கள். பரலோகத்திலுள்ள சபை உலகம் முழுவதற்கும் பொதுவான சபை. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு ஸ்தல சபையிலிருக்கிறோம். பரலோகத்திற்குப் போகும்போது அங்கு சர்வசங்கமாகிய சபையில் அங்கமாகி கர்த்தரை ஆராதனை செய்வோம்.

புதிய ஏற்பாட்டு சபையின் விசுவாசிகள், விசுவாசத்தினாலே, சர்வசங்கமாகிய சபைக்கு வந்திருக்கிறார்கள். பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களோடு ஐக்கியமாயிருப்பதற்காக விசுவாசத்தினால் வந்திருக்கிறார்கள். சர்வசங்கமாகிய சபையிலுள்ள பரிசுத்தவான்கள் பரிசுத்தத்தில் நடக்கிறார்கள். அவர்களைப் போல சுவிசேஷ சபையிலுள்ளவர்களும், தங்கள் விசுவாசத்தினாலே பரிசுத்தத்தின் பாதையில் நடக்கிறார்கள். அவர்களிடத்தில் ஆனந்தபாக்கிய நம்பிக்கையிருப்பது போலவே, சுவிசேஷ சபையிலுள்ள நம்மிடத்திலும் ஆனந்தபாக்கிய நம்பிக்கையிருக்கிறது.

பரலோகத்திலுள்ள சர்வசங்கமாகிய சபையில் பரலோகத்தில் பெயரெழுதியிருக்கிற முதற்பேறானவர்கள் ஐக்கியமாயிருக்கிறார்கள். இவர்கள் ஆதிகாலத்து விசுவாசிகள். இவர்கள் முற்பிதாக்களின் காலத்திலிருந்த பரிசுத்தவான்கள். இவர்கள் நமக்கு முந்தியவர்கள். இவர்களுடைய பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய வீட்டில் இவர்கள் பெயர்கள் இருக்கிறது. ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவப்புஸ்தகத்திலே இவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறது (எபி 12:23).

பரலோகத்திலே யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவன் இருக்கிறார். சுவிசேஷ சபையிலுள்ள விசுவாசிகள் நியாயாதிபதியாகிய தேவனிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள். தேவன் தம்முடைய நீதியின் பிரகாரம் யூதரையும் புறஜாதியாரையும் நீதியாய் நியாயந்தீர்க்கிறார். அவர் யாவருக்கும் நியாயாதிபதியாயிருக்கிறார் (எபி 12:23).

பரலோகத்திலே பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள் இருக்கிறார்கள். இவர்கள் பூமியிலே நீதிமான்களாக ஜீவித்தவர்கள். நீதியை நடப்பித்தவர்கள். உத்தமர்கள். இவர்களுடைய ஆவிகள் பரலோகத்திலுள்ளது. இங்கு இவர்கள் பரிபூரண நிலைமையை அடைந்திருக்கிறார்கள். சுவிசேஷ சபையிலுள்ள விசுவாசிகள் பரலோகத்திலிருக்கிற பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கு வந்துசேர்ந்திருக்கிறார்கள் (எபி 12:23).

பரலோகத்திலே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து இருக்கிறார். இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்த ஊழியம் செய்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நன்மையானவைகளைப் பேசுகிறது. ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தம் நன்மையானவைகளைப் பேசுகிறது. பரலோகத்திலே இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுகிறது. சுவிசேஷ சபையிலுள்ள விசுவாசிகள் பரலோகத்திலுள்ள புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திற்கும், அவருடைய தெளிக்கப்படும் இரத்தத்திற்கும் வந்து சேர்ந்திருக்கிறார்கள் (எபி 12:24).

நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்தில் நாம் பொறுமையோடு ஓடவேண்டும். விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போய்விடக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஏராளமான ஆசீர்வாதங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. இந்த ஆசீர்வாதங்களெல்லாமே நமக்கு உற்சாகத்தை கொடுக்கக்கூடியவை. நிருபத்தின் ஆசிரியர் இந்த ஆசீர்வாதங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறார். அவையாவன:

1. சுவிசேஷத்தின் உடன்படிக்கை புதுஉடன்படிக்கையாயிருக்கிறது. இது கிருபையின் உடன்படிக்கை. நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை கிரியையின் உடன்படிக்கை. கிருபையின் உடன்படிக்கைக்கும், கிரியையின் உடன்படிக்கைக்கும் வித்தியாசமுண்டு. பழையஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் நியாயப்பிரமாணத்திற்குட்பட்ட பழைய உடன்படிக்கையிலிருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ சுவிசேஷத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற புதிய உடன்படிக்கையைப் பெற்றிருக்கிறோம்.

2. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். மனுஷர் பாவத்தினால் தேவனைவிட்டுப் பிரிந்துபோய்விட்டார்கள். தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை இழந்துவிட்டார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராகயிருந்து, மத்தியஸ்த ஊழியத்தைச் செய்கிறார்.

3. புதிய உடன்படிக்கையின்மீது இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுகிறது. நம்முடைய மனச்சாட்சியில் கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இரத்தம் புதுஉடன்படிக்கையை உறுதிபண்ணுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் தேவனுடைய கோபம் தணிகிறது. மனுஷருடைய மனச்சாட்சி சுத்திகரிக்கப்படுகிறது.

4. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் பேசுகிற இரத்தம். இது நன்மையானவைகளைப் பேசுகிறது. ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும், கிறிஸ்துவின் இரத்தம் நன்மையானவைகளைப் பேசுகிறது. தேவனோடு பேசுகிறது. கிறிஸ்துவின் இரத்தம் பாவிகளுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுகிறது. நம்முடைய பாவத்தினிமித்தம் தேவன் நம்மை பழிவாங்கவேண்டுமென்று கிறிஸ்துவின் இரத்தம் ஒருபோதும் பேசுவதில்லை. நமக்கு தேவனுடைய இரக்கமும் கிருபையும் கிடைக்கவேண்டுமென்று, கிறிஸ்துவின் இரத்தம் நமக்காகப் பரிந்துபேசுகிறது.

கிறிஸ்துவின் இரத்தம் பாவிகளோடும் பேசுகிறது. தேவனுடைய நாமத்தில் கிறிஸ்துவின் இரத்தம் மனுஷரோடு பேசுகிறது. கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பை அறிவிக்கிறது. கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய ஆத்துமாக்களுக்கு சமாதானம் சொல்லுகிறது.

பரலோகத்திலிருந்து பேசுகிறவர் எபி 12 : 25-29

எபி 12:25. பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்?

எபி 12:26. அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான்பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார்.

எபி 12:27. இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத் தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப் பட்டவைகள் போல் மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது.

எபி 12:28. ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்.

எபி 12:29. நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே தேவன் பூமியிலிருந்து பேசினார். சீனாய் மலையில் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. ஆனால் அந்தச் சத்தத்தைக் கேட்டவர்களோ, தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை. பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லாதபடிக்கு வேண்டிக் கொண்டார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்திலே பூமியிலிருந்து பேசின தேவன் இப்போது பரலோகத்திலிருந்து பேசுகிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்திலே கர்த்தர் பூமியிலிருந்து தம்முடைய ஜனங்களோடு பேசினார். ஆனால் அவர்களோ பேசுகிறவருக்கு செவிகொடுக்கமாட்டோம் என்று விலகிப்போய்விட்டார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டோம் என்று விலகினவர்கள், தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும், அவருடைய ஆக்கினைத்தீர்ப்புக்கும் தப்பிக்க மாட்டார்கள். கர்த்தரோ இப்போது பரலோகத்திலிருந்து பேசுகிறார். நாம் அவரை விட்டு விலகினால், அவருடைய நியாயத்தீர்ப்புக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் தப்பிப்பதற்கு வழியே இல்லை (எபி 12:25).

தேவன் மனுஷரோடு அற்புதமான வழிகளில் பேசுகிறார். மிகவும் மேன்மையான உபாயங்களைத் தெரிந்தெடுத்து மனுஷரோடு பேசுகிறார். தேவன் மனுஷரோடு பேசும்போது மனுஷர் தம்முடைய சத்தத்திற்கு கவனமாய்ச் செவிகொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். தேவனுடைய எதிர்பார்ப்பு நீதியானது. பழைய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தர் சீனாய் மலையிலே பேசினார். அவர் பூமியிலிருந்து பேசினார். இப்போதோ அவர் உயரமும் உன்னதமும், மகிமையும் நிறைந்த சிங்காசனத்திலிருந்து பேசுகிறார். பரலோகமே கர்த்தருடைய சிங்காசனம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தர் ஜனங்களோடு பேசியதைவிட இப்போது அதிக வல்லமையோடு பேசுகிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய சத்தம் பூமியை அசையப்பண்ணிற்று. கர்த்தர் இப்போது பரலோகத்திலிருந்து பேசுகிறார். அவருடைய சத்தம் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுகிறது. இது கர்த்தருடைய வாக்குத்தத்தம். வானத்திலிருந்து வந்த சுவிசேஷத்தினாலே தேவன் யூதருடைய தேசத்தை அசைத்தார். பழைய ஏற்பாட்டுக்காலத்து சபைக்குப் பதிலாக, இந்தப் பூமியிலே சுவிசேஷத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் சபையை ஸ்தாபித்தார் (எபி 12:26).

தேவன் நம்மோடு பேசும்போது நாம் அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் செவிகொடுக்கவில்லையென்றால் குற்றம் நம்மீது சுமரும். பழைய ஏற்பாட்டுக் காலத்திலே யூதர்கள் தங்களோடு பேசின கர்த்தருக்கு செவிகொடுக்கமாட்டோம் என்று விலகி ஓடினார்கள். அப்படிப்பட்ட தப்பிதத்தை புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கிற நாம் செய்யாதவாறு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். தேவன் மேன்மையான வழியில் நம்மோடு பேசும்போது, நாம் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை யென்றால், நம்முடைய பாவமும் மீறுதலும் மிகவும் அதிகமாயிருக்கும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே தேவன் சுவிசேஷத்தின் மூலமாய்ப் பேசுகிறார். சுவிசேஷத்தின் வார்த்தை தேவனுடைய வார்த்தை. சுவிசேஷத்தின் மூலமாய் தேவன் தம்முடைய பரிசுத்த எக்காளத்தை ஊதுகிறார். தேவன் இந்தப் பூமியிலே சுவிசேஷத்தினால் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். தேவனுடைய ராஜ்யம் புதியது. இது உலகப்பிரகாரமான ராஜ்யமல்ல. இது ஆவிக்குரிய ராஜ்யம். தேவனுடைய ராஜ்யத்தை எந்த வல்லமையாலும் அசைக்கவோ, அழிக்கவோ முடியாது.

"இன்னும் ஒரு தரம் நான் பூமியை மாத்திரமல்ல வானத்தையும் அசையப்பண்ணுவேன்" என்று தேவன் இப்பொழுது வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (எபி 12:26). அசையாதவைகள் நிலைத்திருக்கும். அசைவுள்ளவைகள் மாறிப்போகும். தேவனுடைய ராஜ்யம் அசையாதது. அது நிலைத்திருக்கும். யூதருடைய ராஜ்யமோ அசைவுள்ளது. அது மாறிப்போகும் (எபி 12:27).

நிருபத்தின் ஆசிரியர் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள் சிலவற்றைச் சொல்லுகிறார். அவையாவன :

1. நாம் தேவனுடைய கிருபையைப் பற்றிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நம்மால் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யமுடியும். நம்முடைய ஆராதனையும் ஊழியமும் தேவனுக்குப் பிரியமாயிருக்கவேண்டும். தேவன் இவற்றை அங்கீகரிக்கவேண்டும். தேவனுக்குப் பிரியமில்லாத எல்லா காரியங்களும் வீணானவையே. தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை நாம் எவ்வளவு செய்தாலும் அதனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

2. நாம் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யவேண்டுமென்றால், அவரை பயத்தோடும் பக்தியோடும் ஆராதிக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவில் விசுவாசமும் பயபக்தியும் இருக்கவேண்டும். கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் நடுக்கத்தோடு வந்து, அவரை பயபக்தியோடு தொழுதுகொள்ளவேண்டும்.

3. தேவனுடைய கிருபை இருந்தால் மாத்திரமே, நம்மால் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யமுடியும். தேவனுடைய கிருபையில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளவேண்டும் (எபி 12:28).

4. தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் எக்காலத்திலும் நீதியும் நியாயமும் உள்ளவர். நியாயப்பிரமாணத்தின் காலத்தில் கர்த்தர் நீதியுள்ளவராயிருந்தது போல, சுவிசேஷத்தின் காலத்திலும் அவர் நீதியுள்ளவராகவே இருக்கிறார். தேவனுடைய நீதி ஒருபோதும் மாறுவதில்லை. நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார் (எபி 12:29). தேவன் எக்காலத்திலும் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர்.

13 அதிகாரம்

கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தின் கனிகளைக் கொடுக்கவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்து வைத்திருக்கிற ஆவிக்குரிய கடமைகளெல்லாமே விசுவாசத்தின் கனிகளாகும் (எபி 13:1-17). நிருபத்தின் ஆசிரியர் எபிரெயருக்காக தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். தீமோத்தேயுவும், நிருபத்தின் ஆசிரியரும் எபிரெயரை காண வாஞ்சையோடிருக்கிறார்கள். அவர்களைக் காண்பதற்கு தங்களுக் வாய்ப்பு உண்டாகும் என்று நம்புகிறார்கள் (எபி 13:18-25).

சகோதர சிநேகம் எபி 13 : 1,2

எபி 13:1. சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது.

எபி 13:2. அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு.

கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற ஆவிக்குரிய கடமைகளை எபிரெயர்கள் நிறைவேற்றவேண்டும். நிருபத்தின் ஆசிரியர் இங்கு இரண்டு முக்கியமான கடமைகளை ஆலோசனையாகச் சொல்லுகிறார். அவையாவன : 1. சகோதர சிநேகம் 2. அந்நியரை உபசரிப்பது.

கிறிஸ்தவமார்க்கத்தின் உபதேசம் அன்பின் உபதேசமாகும். விசுவாசம் அன்பினால் கிரியை நடப்பிக்கிறது. கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் கர்த்தரிடத்திலும் மனுஷரிடத்திலும் அன்புகூரவேண்டும். பிறரோடு நாம் சகோதர சிநேகத்தோடிருக்கவேண்டும். சகோதர சிநேகம் எப்போதும் நிலைத்திருப்பதில்லை. சில சமயங்களில் சகோதர சிநேகம் நம்மைவிட்டுக் காணாமல் போய்விடும். நாம் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது நமக்கு பிறருடைய சகோதர சிநேகம் அதிகமாய்த் தேவைப்படுகிறது. மற்றவர்கள் நம்மிடத்தில் அன்புகூரவேண்டுமென்று எதிர்பார்ப்போம். ஆனால் நாம் உபத்திரவப்படும்போது, மற்றவர்மீது சகோதர சிநேகமாயிருக்க மறந்துவிடுவோம்.

விசுவாசிகள் எல்லோருமே சகோதர சிநேகத்தோடு ஜீவிக்கவேண்டும். ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். நம்முடைய கர்த்தராகிய தேவன் நமக்கு பரலோகப்பிதாவாகயிருக்கிறார். நாம் தேவனிடத்தில் அதிகமாய் அன்புவைத்து, ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறும்போது, நாம் மனுஷரிடத்திலும் அன்பு வைத்து வளர்ச்சி பெறவேண்டும். கிறிஸ்துவினிமித்தமாய் நாம் ஒருவருக்கொருவர் அன்புள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மிடத்தில் அன்பு இல்லையென்றால் நமக்கு ஒன்றுமில்லை (எபி 13:1).

நாம் அந்நியரை உபசரிக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில், சகோதர சிநேகத்தோடு, அந்நியரை உபசரிக்கும் சுபாவமும் இருக்கவேண்டும். விசுவாசிகளாகிய நாம், நமக்கு வேண்டியவர்களை மாத்திரம் உபசரித்தால் போதாது. உலகப்பிரகாரமான ஜனங்கள் தங்களுக்கு வேண்டியவர்களை அன்பாய் உபரிசக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, நமக்கு வேண்டிவர்களையும் உபசரிக்கவேண்டும், அந்நியர்களையும் உபரிக்கவேண்டும்.

அந்நியர்களில் சிலர் தங்குவதற்கு எந்தவிதமான வாசஸ்தலமுமில்லாமல் பரிதாபமான நிலமையிலிருக்கலாம். அவர்களுக்கு நம்முடைய இருதயத்தில் முதலாவது இடங்கொடுக்கவேண்டும். நமக்கு வாய்ப்பு இருக்குமென்றால் நம்முடைய வீடுகளில் அவர்கள் தங்குவதற்கு இடங்கொடுக்கலாம். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற வாய்ப்புக்களுக்கும், வசதிகளுக்கும் ஏற்ற பிரகாரம், நாம் அந்நியரை நம்முடைய வீடுகளில் தங்கவைக்கலாம்.

ஒரு சிலர் அந்நியரை உபசரிக்கும்போது, தங்களுக்கே அறியாமல், தேவதூதரையும் உபசரித்திருக்கிறார்கள். அந்நியரை உபசரிக்கிற தம்முடைய பிள்ளைகளை கர்த்தர் கனப்படுத்துகிறார். அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு மேன்மையான சிலாக்கியங்களைக் கொடுக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், இயேசு கிறிஸ்துவினிமித்தம், அந்நியரை உபசரிக்கிற ஊழியக்காரராயிருக்க வேண்டும். அப்போது கர்த்தருடைய ஆசீர்வாதம் நமக்கு விசேஷித்த வழிகளில் வரும். சில சமயங்களில் நாம் நினைப்பதற்கும் அதிகமாக கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். சில வேளைகளில் நாம் மனுஷரை உபசரிப்பதாக நினைப்போம். ஆனால் நாம் அறியாமலேயே, தேவதூதரை உபசரித்துக்கொண்டிருப்போம்.

கட்டப்பட்டவர்கள்
எபி 13:3

எபி 13:3. கட்டப் பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்களும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு சிலர் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினிமித்தமாய் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார்கள். ஒருவேளை அவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கலாம். கிறிஸ்துவினிமித்தம் சிலர் தீங்கநுபவிப்பார்கள். இவர்களையெல்லாம் நாம் மறந்துவிடக்கூடாது. அவர்களை நம்முடைய ஜெபங்களிலும், நம்முடைய உதவிகளிலும், உபசரிப்புக்களிலும் நினைத்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், தேவனுடைய பெரிதான கிருபையினால், கட்டப்படாமல் விடுதலையோடிருக்கிறோம். தேவனுடைய அதே கிருபையினாலேயே நாம் தீங்கநுபவியாமல் ஆறுதலடைந்திருக்கிறோம்.

நாம் கட்டப்பட்டவர்களை நினைத்துக்கொள்ள வேண்டும். கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நாமும் கட்டப்பட்டவர்கள்போல அவர்களை நினைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் எந்த சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிறார்களோ, அதே சங்கிலிகளால் நாமும் கட்டப்பட்டிருப்பதாக நம்மைப் பாவித்துக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சரீரத்தோடிருக்கிறோம். நமக்கு சரீரம் இருப்பதுபோலவே கட்டப்பட்டிருக்கிறவர்களுக்கும் சரீரம் இருக்கிறது. நாம் கட்டப்படும்போது நம்முடைய சரீரத்திற்கு வேதனை உண்டாகும். அதுபோலவே அவர்களுக்கும் வேதனை உண்டாயிருக்கிறது. அவர்கள் தீங்குகளை அநுபவிக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும்.

விவாகம்
எபி 13:4

எபி 13:4. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.

கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தமுள்ளவர்களாகவும், கற்புள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கர்த்தர் விவாக உறவை கனப்படுத்துகிறார். விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது. விவாகமஞ்சம் அசுசிப்படாததாக இருக்கவேண்டும். விவாகத்தில் இணைக்கப்படுகிறவர்கள் விவாக உறவை தீட்டுப்படுத்தக்கூடாது. விவாகம்பண்ணுகிறவர்கள் பரிசுத்த முள்ளவர்களாயும், கற்புள்ளவர்களாயும் இருக்கவேண்டும்.

வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். தேவன் பாவிகளை பெயர் சொல்லி அழைக்கமாட்டார். அவர்கள் செய்த பாவங்களை வைத்தே, அவர்களை அழைப்பார். வேசித்தனம் பண்ணுகிறவர் வேசிக்கள்ளராயிருக்கிறார். விபசாரம் பண்ணுகிறவர் விபசாரக்காரராயிருக்கிறார். உலகப்பிரகாரமாக இவர்களுக்கு எப்படிப்பட்ட பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய பார்வையில் இவர்கள் வேசிக்கள்ளராகவும், விபசாரக்காரராகவும் தான் இருக்கிறார்கள். கர்த்தர் இவர்களை நியாயந்தீர்ப்பார். நீதியாய்த் தண்டிப்பார். ஆக்கினைக்குட்படுத்துவார்.

கர்த்தர் எனக்கு சகாயர்
எபி 13 : 5,6

எபி 13:5. நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.

எபி 13:6. அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே.

பணஆசை தேவனுடைய கிருபைக்கு விரோதமான பாவம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் பேராசையுள்ளவர்களாக இருக்கக்கூடாது. நமக்கு இருக்கிறவைகள் போதும் என்று நாம் எண்ணவேண்டும். கர்த்தருடைய கிருபை தான் நமக்குத் தேவை. அவருடைய பரிசுத்தமான பிரசன்னம் நமக்குத் தேவை. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பணஆசை இருக்கக் கூடாது. நம்முடைய ஆத்துமாவில் பணஆசை இருக்குமென்றால் அதை வேரோடு களைந்துபோடவேண்டும்.

நமக்கு இருக்கிறவைகள் போதுமென்று நாம் எண்ணவேண்டும். இப்படிப்பட்ட சிந்தனை இருக்கும்போது நம்மிடத்தில் பணஆசை இருக்காது. ஒவ்வொரு நாளும் கர்த்தர் நமக்கு எதைக் கொடுக்கிறாரோ, அதில் நாம் திருப்தியோடிருக்க வேண்டும். பேராசைப்படக்கூடாது. அந்தந்த நாளுக்கு கர்த்தருடைய கிருபை போதுமானதாயிருக்கிறது. நம்முடைய சிந்தைகளெல்லாம் இன்றைய தினத்தைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும். நாளைய தினத்திற்காகக் கவலைப்படக்கூடாது.

நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்தாலும் சந்தோஷமாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இவையெல்லாம் இருந்தால்தான் நமக்கு சந்தோஷம் கிடைக்கும் என்று நினைத்தால், நமக்கு ஒருபோதும் சந்தோஷம் உண்டாகாது. சந்தோஷம் இருந்தாலும் அது நிலைக்காது. தேவனுடைய கிருபையில் நாம் போதுமென்ற மனதுடன் இருக்கவேண்டும். போதுமென்ற திருப்தியில்லாதவர்கள் எப்போதுமே பேராசையோடிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை திருப்திப்படுத்துவது இயலாத காரியம்.

அப்போஸ்தலர் பவுல் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாகயிருக்கக் கற்றுக்கொண்டார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பவுல் முன்மாதிரியாக ஜீவித்தார். பவுலைப்போலவே நாமும், எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். போதுமென்ற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

கர்த்தர் நம்மைவிட்டு விலகுவதில்லையென்றும், நம்மைக் கைவிடுவதில்லையென்றும் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார் (எபி 13:5). இந்த வாக்குத்தத்தம், கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் சாரமாக இருக்கிறது. இந்த வாக்குத்தத்தமே நமக்குப் போதுமானது. நம்முடைய ஜீவியத்தில் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறும்போது, நாம் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் நம்மை விட்டு விலகாமலும், நம்மை அவர் கைவிடாமலும் இருப்பதினால் நாம் கர்த்தருக்குள் தைரியங்கொள்ளவேண்டும். "கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்" என்று விசுவாசத்தோடு தைரியமாய்ச் சொல்லவேண்டும். தேவனுக்கு விரோதமாக மனுஷனால் ஒன்றும் செய்யமுடியாது. மனுஷர் நமக்கு தீமை செய்தாலும், அந்தத் தீமைகளை கர்த்தர் நமக்கு நன்மைகளாக மாற்றித் தருவார். கர்த்தரே நம்முடைய சகாயர் (எபி 13:6).

போதித்து நடத்தினவர்கள் எபி 13 : 7,8

எபி 13:7. தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.

எபி 13:8. இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு பல ஊழியக்காரர்கள் தேவனுடைய வசனங்களைப் போதித்திருக்கிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மை வழிநடத்தியிருக்கிறார்கள். அவர்களில் சிலர் இப்போது உயிரோடிருக்கலாம். மற்றவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்திருக்கலாம். ஊழியக்காரர்கள் உயிரோடிருந்தாலும், மரித்துப்போயிருந்தாலும் அவர்களை நாம் மறந்துவிடாமல் நினைக்கவேண்டும். அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாகச் சிந்திக்கவேண்டும். அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றவேண்டும் (எபி 13:7).

நமக்கு வசனத்தைப் போதித்த ஊழியக்காரர்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஓட்டத்தை விசுவாசத்தோடு ஓடி முடித்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் விசுவாசத்தை காத்துக்கொண்டார்கள். அவர்கள் இப்பிரபஞ்சத்தில் உயிரோடிருந்த காலத்தில் கர்த்தருக்காக நன்றாக ஊழியம் செய்தார்கள். அவர்களுடைய நடக்கையின் முடிவை நாம் நன்றாகச் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

நமக்கு ஊழியம் செய்த ஊழியக்காரர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றவேண்டும். அவர்களிடத்தில் காணப்பட்ட விசுவாசம் நம்மிடத்திலும் காணப்படவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நமக்கு தேவவசனத்தைப் போதித்து வழிநடத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் உபதேசத்தையும் அவருடைய ஜீவியத்தையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். அவருடைய முடிவை தியானம்பண்ணவேண்டும். கிறிஸ்துவின் விசுவாசத்தை நாம் பின்பற்றவேண்டும்.

கிறிஸ்துவே சபைக்குத் தலையாகயிருக்கிறார். அவர் நித்தியமானவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவருடைய சுபாவம் ஒருபோதும் மாறுவதில்லை. அவருடைய அன்பு மாறுவதில்லை. அவருடைய கிருபை மாறுவதில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் பின்வாங்கிப் போய்விடக்கூடாது. விசுவாசத்தில் மாறாதவர்களாக நிலைத்திருக்கவேண்டும் (எபி 13:8).

அந்நிய போதனைகள் எபி 13:9

எபி 13:9. பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். போஜனபதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது; போஜனபதார்த்தங்களில் முயற்சி செய்கிறவர்கள் பலனடையவில்லையே.

இக்காலத்தில் ஏராளமான ஊழியக்காரர்கள் ஊழியம் செய்கிறார்கள். அநேக ஊழியக்காரர்கள் தேவ வசனத்தை நமக்குப் போதிக்கிறார்கள். ஒரு சிலரோ பலவிதமான அந்நிய போதனைகளை போதிக்கிறார்கள். அந்நிய போதனைகளைக் குறித்து நாம் எச்சரிப்போடிருக்கவேண்டும். அந்நிய போதனைகளால் நாம் அலைப்புண்டு திரியக்கூடாது. அந்நிய போதனைகளை விட்டு விலகிவந்துவிடவேண்டும்.

நமக்கு ஏற்கெனவே தேவவசனம் போதிக்கப்பட்டிருக்கிறது. அந்நிய போதனைகள் தேவவசனத்திற்குப் புறம்பானது. தேவவசனத்திலிருந்து அந்நிய போதனைகள் மாறுபட்டிருக்கிறது. அந்நிய போதனைகளை போதிக்கிறவர்களிடத்திலும் ஒற்றுமையில்லை. அவர்கள் பலவிதமான அந்நிய போதனைகளைப் போதிக்கிறார்கள். அந்நிய போதனைகள் நுதன உபதேசம்.

அந்நிய போதனைகள் தேவனுடைய கிருபைக்கு விரோதமானது. நம்முடைய இருதயத்தில் தேவனுடைய கிருபை நிரம்பியிருக்கவேண்டும். தேவனுடைய கிருபை நம்முடைய இருதயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டும். அந்நிய போதனைகளுக்கு நம்முடைய இருதயத்தில் இடங்கொடுக்கக்கூடாது. கர்த்தருடைய வசனம் எக்காலத்திலும் நிலைத்திருக்கும். அந்நிய போதனைகளோ நிலைத்திருப்பதில்லை.

அந்நிய போதனைகளில் போஜனபதார்த்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இவற்றினால் நம்முடைய ஆத்துமாவுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. அந்நிய போதனைகள் ஆத்துமாவுக்குப் புறம்பானது. இது நிலைத்திருப்பதில்லை. அழிந்துபோகக்கூடியது. அந்நிய போதனைகளினால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. போஜன பதார்த்தங்களில் முயற்சி செய்கிறவர்கள் ஒரு பலனும் அடையவதில்லை. போஜனபதார்த்தங்கள் நம்மைப் பரிசுத்தப்படுத்தாது. இது நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லாது. போஜனபதார்த்தங்கள் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனமில்லாதது.

நம்முடைய இருதயம் தேவகிருபையினாலே ஸ்திரப்பட்டிருக்க வேண்டும். இதுதான் நமக்கு நல்லது. நம்முடைய இருதயம் போஜன பதார்த்தங்களினால் ஸ்திரப்படும்போது நமக்கு ஒரு பயனும் உண்டாகப்போவதில்லை.

பலிபீடம்
எபி 13 : 10-12

எபி 13:10. நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளை புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை.

எபி 13:11. ஏனென்றால், எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டுவரப் படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்.

எபி 13:12. அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒரு பலிபீடம் உண்டு. நம்முடைய சபையில் ஒரு பலிபீடம் இருக்கிறது. இது பிரத்தியட்சமான பொருளால் செய்யப்பட்ட பலிபீடமல்ல. கிறிஸ்துவே நம்முடைய பலிபீடம். கிறிஸ்து ஆள்தத்துவமுள்ளவர். நம்முடைய சபையிலுள்ள பலிபீடமும் ஆள்தத்துவமுள்ளது. கிறிஸ்துவே நம்முடைய பலிபீடமாகவும், நம்முடைய பலியாகவும் இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவை மெய்யாகவே விசுவாசிக்கிறவர்களுக்கு, பலி பீடத்திலிருந்து ஒரு விருந்து ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பந்தி நமக்கு சுவிசேஷத்தின் பஸ்கா விருந்தாகக் கொடுக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே பிரவேசித்து கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள். பலிபீடத்திற்குரியவைகளைப் புசிக்கிறதற்கு, கூடாரத்தில் ஆராதனை செய்த ஆசாரியர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இவர்கள் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டார்கள் (எபி 13:10).

ஆசரிப்புக்கூடாரத்தில் பிரதான ஆசாரியர், மனுஷருடைய பாவங்களினிமித்தமாய், மிருகங்களுடைய இரத்தத்தை பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு வருவார். அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும் (எபி 13:11). பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட மிருகத்தின் மாம்சத்தைப் புசிப்பதற்கு பிரதான ஆசாரியருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. பலியாகச் செலுத்தப்பட்ட மிருகங்களின் உடல்கள் பாளையத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட்டது.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களைப் போக்குவதற்கு, கல்வாரி சிலுவையிலே பாவநிவாரண பலியாகச் செலுத்தப்பட்டார். தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களை நீக்கி நம்மை பரிசுத்தம் செய்தார். இதற்காக அவர் நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார் (எபி 13:12).

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசாரியர்களுக்கு, ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பலிபீடத்தினால் எந்த சிலாக்கியமும் கிடைக்கவில்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஜீவிக்கிற கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ, இயேசுகிறிஸ்துவின் மூலமாய், தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக வரும் சிலாக்கியம் உண்டாயிருக்கிறது. நமக்காக பாவநிவாரண பலியாகச் செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் மூலமாய் நாம் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறோம்.

BELLWETHER INTERNATIONAL

எபிரெயர் - விரிவுரை

HEBREWS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

யூதமார்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு சுவிசேஷத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பலிபீடத்தின் சிலாக்கியங்கள் கிடைக்கவில்லை. இந்தச் சிலாக்கியங்களை யூதர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும். நம்முடைய பாவங்களைப் போக்குவதற்காக, இயேசுகிறிஸ்து பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்டார் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அவர்கள் தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தோடு வரவேண்டும். அப்போது கிறிஸ்துவினுடைய பலியின் கனியாக, அவர்களுக்கும் சுவிசேஷ விருந்து பரிமாறப்படும். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக பலியாகச் செலுத்தப்பட்டார் என்பதை விசுவாசிக்காதவர்களுக்கு, கர்த்தருடைய பந்தியில் பங்குமில்லை. பாத்தியமுமில்லை. கிறிஸ்துவினுடைய பலியினால் அவர்களுக்கு ஒரு சிலாக்கியமும் கிடைக்கப்போவதில்லை.